# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA:3.64)
தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின்
முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது



**காரைக்குடி– 630003.**

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

# HISTORY

# (CONTEMPORARY TAMILNADU SINCE 1945 AD)

## சமகால தமிழ்நாடு கி.பி 1945 முதல்

**Copy Right Reserved** **For Private Use Only**

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

# SYLLABI-BOOK MAPPING TABLE

## சமகால தமிழ்நாடு கி.பி 1945 முதல்


| Syllabi | Mapping in Book |
|---|---|
| **தொகுதி I சுதந்திரத்திற்குப் பிறகு** | |
| **அலகு-1** சுதந்திர தமிழ்நாடு - காங்கிரஸ் அமைச்சகம் - ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்- பி.எஸ்.குமாரசாமி ராஜா. | **1-13** |
| **அலகு-2** ராஜாஜி- தமிழ்நாட்டில் மாநில மறுசீரமைப்பு. | **14-30** |
| **அலகு-3** வடக்கு, தெற்கு எல்லை போராட்டங்கள் - மெட்ராஸ் மாநிலம் உருவாக்கம். | **31-44** |
| **தொகுதி II காமராஜ் திட்டங்கள்** | |
| **அலகு-4** காமராஜ் மற்றும் அவரது அமைச்சகம்-வளர்ச்சித் திட்டங்கள்- சமூக பொருளாதாரம். | **45-54** |
| **அலகு-5** கல்வி- திட்டங்கள்- தொழில்துறை மேம்பாடு- கே. திட்டம். | **55-61** |
| **அலகு-6** எம்.பக்தவத்ஸலம்-இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி-காங்கிரஸ் அமைச்சரவையின் சாதனைகள் 1947-1967. | **62-80** |
| **தொகுதி III கட்சிகளின் நலத்திட்டங்கள்** | |
| **அலகு-7** தி.மு.க - சி.என்.அண்ணாத்துரை மற்றும் அவரது அமைச்சரவை உருவாக்கம் -எம்.கருணாநிதி மற்றும் அவரது அமைச்சரவை | **81-91** |
| **அலகு-8** தி.மு.க ஆட்சியின் போது நலத்திட்டங்கள் - சமூக-பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றங்கள். | **92-101** |
| **அலகு-9** அ.இ.அ.தி.மு.க-எம்.ஜி.ராமச்சந்திரன் மற்றும் அவரது அமைச்சகம் -ஜெ.ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சகம் - மேம்பாட்டுத் திட்டங்கள். | **102-119** |
| **அலகு-10**அ.இ.அ.தி.மு.க ஆட்சியின் போது-சமூக-பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றங்கள். | **120-138** |

**தொகுதி IV உலகத் தமிழ்மாநாடுகள்**


**அலகு-11** மைய மற்றும் மாநில உறவுகள் 1947 முதல். **139-151**

**அலகு-12** உலக தமிழ் மாநாடு- தமிழ் மொழியின் வளர்ச்சி. **152-170**

**அலகு-13** ஐந்தாண்டு திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு-நீர்ப்பாசனம்-விவசாயம்-தொழில்துறை வளர்ச்சி. **171-195**

**அலகு-14** இடஒதுக்கீட்டு கொள்கை மற்றும் சமூக நீதி. **196-212**

## உள்ளடக்கம்

### தொகுதி I சுதந்திரத்திற்குப் பிறகு

**அலகு-1 சுதந்திர தமிழ்நாடு - காங்கிரஸ் அமைச்சகம்-ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்- பி.எஸ்.குமாரசாமி ராஜா. 1-13**

1.0 அறிமுகம்

1.1 ஓமந்Àர் பெ.இராமசாமி அமைச்சரவை

1.1.1 இந்து அறநிலையச்சட்டம் 1947

1.1.2 பிற சீர்திருத்தங்கள

1.2 குமாரசாமி ராஜா அமைச்சரவை

1.2.1 பிறப்பு

1.2.2 காந்தியடிகளுடன் சந்திப்பு

1.2.3 கூட்டுறவு இயக்கம்

1.2.4 பண்பு நலன்கள்

1.2.5 உணவுப்பரச்சினை

1.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1.4 சுருக்கம்

1.5 முக்கிய கருத்துப்படிமங்கள

1.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

1.7 மேலும் படிக்க

**அலகு-2 ராஜாஜி- தமிழ்நாட்டில் மாநில மறுசீரமைப்பு 14-30**

2.0 அறிமுகம்

2.1 ராஜாஜி

2.1.1 தமிழக அரசியலும் அரசாங்கத்திலும் ராஜாஜியின் பங்கு

2.1.2 தமிழக காங்கிரசில் சத்தியமூர்த்தியும் ராஜாஜியும்

2.1.3 தமிழக காங்கிரசும் ராஜாஜியும்

2.1.4 ராஜாஜி - அவரது அமைச்சரவை - கொள்கைகள்

2.2 மாநில மறுசீரமைப்பு

2.2.1 தார் கமிட்டி

2.2.2 ஆந்திர மாநிலம் அமைக்க படுதல் 1953

2.2.3 தனி மாநில கோரிக்கை கிளர்ச்சிகளும் உண்ணாவிரதமும்

2.2.4 மொழிவாரி மாநில மறுசீரமைப்பு கமி‘ன்

2.2.5 மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956

2.2.6 தமிழ்நாடு உருவாதல்

2.2.7 தமிழகத்தின் வட எல்லை பிரச்சனை

2.2.8 தமிழ்நாடு பெயர் சூட்டப்படல்

2.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

2.4 சுருக்கம்

2.5 முக்கிய கருத்துப்படிமங்கள

2.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

2.7 மேலும் படிக்க

**அலகு-3 வடக்கு, தெற்கு எல்லை போராட்டங்கள்- மெட்ராஸ் மாநிலம் உருவாக்கம். 31-44**

3.0 அறிமுகம்

3.1 வடக்கு, தெற்கு எல்லை போராட்டங்கள்

3.1.1 விடுதலைப் போரில் தமிழகம்

3.2 காந்தியடிகளுக்கு முன்

3.2.1 மெட்ராஸ் நேடிவ் அசோசியே‘ன்

3.2.2 சென்னை மகாஜன சபை

3.2.3 இந்திய தேசிய காங்கிரசு

3.2.4 தேசாபிமானச் சங்கம்

3.2.5 ஹோம்ரூல்) தன்னாட்சி இயக்கம்

3.3 காந்தியடிகளின் தலைமையில் ஒத்துழையாமை இயக்கம்

3.3.1 சுயராஜ்ஜி கட்சி

3.3.2 நீல் சிலை நீக்கப் போராட்டம்

3.3.3 ஆயுதமேந்தும் போராட்டம்

3.3.4 சைமன்குழு புறக்கணிப்பு

3.3.5 உப்பு அறப்போர்

3.4 விடுதலை இயக்கத்தலைவர்கள்

3.4.1 வ.உ.சி. சிதம்பரனார்

3.4.2 சுப்பிரமணிய சிவா

3.4.3 வ.வே.சு

3.4.4 சுப்பிரமணிய பாரதி

3.4.5 திரு.வி.கல்யாண சுந்தரனார்

3.4.6 சத்தியமூர்த்தி

3.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

3.6 சுருக்கம்

3.7 முக்கிய கருத்துப்படிமங்கள

3.8 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

3.9 மேலும் படிக்க

**தொகுதி II காமராஜ் திட்டங்கள்**

**அலகு-4 காமராஜ் மற்றும் அவரது அமைச்சகம்-வளர்ச்சித் திட்டங்கள்- சமூக பொருளாதாரம். 45-54**

4.0 அறிமுகம்
4..1 முதலமைச்சராக காமராஜ்

4..2 காமராஜரின் அமைச்சரவை

4..3 வளர்ச்சி திட்டங்கள்-சமூக மற்றும் பொருளாதாரம்

4.3.1 தமிழக எல்லைப் பிரச்சனையை தீர்த்து வைத்தல்

4.3.2 காமராஜர் அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டம்

4.3.3 காமராஜரின் நீர்ப்பாசனத் திட்டங்கள்

4.3.4 காமராஜர் காலத்தில் ஏற்பட்ட மின்சார புரட்சி

4..3.5 காமராஜரின் நிலச்சீர்திருத்த சட்டங்கள்

4.3.6 காமராஜரின் பஞ்சாயத்து சீர்திருத்தங்கள்

4.4.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

4.16 சுருக்கம்

4.17 முக்கிய கருத்துப்படிமங்கள்

4.18 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

4.19 மேலும் படிக்க

**அலகு-5 கல்வி- திட்டங்கள்- தொழில்துறை மேம்பாடு- கே. திட்டம். 55-**

5.0 அறிமுகம்

5.1 கல்வி திட்டங்கள்

5.1.1 கல்விக்கு கண் திறந்த காமராஜர்

5.1.2 காமராஜர் காலத்தில் தமிழ் வளர்ச்சி

5.2 காமராஜரின் ஆட்சிக் காலத்தில் தொழி வளர்ச்சி

5.2.1 மத்திய அரசுத் துறை

5.2.2 மாநில அரசுத் துறை தொழில்கள்

5.3 காமராஜர் திட்டம்

5.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

5.5 சுருக்கம்

5.6 முக்கிய கருத்துப்படிமங்கள்

5.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

5.8 மேலும் படிக்க

**அலகு-6 எம்.பக்தவத்ஸலம் - இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி-காங்கிரஸ் அமைச்சரவையின் சாதனைகள் 1947-1967.** **62-80**

6.0 அறிமுகம்

6.1 மீ.பக்தவத்சலம்

6.2 இந்தி எதிர்ப்புப் போராட்டம்

6.2.1 சுதந்திரத்துக்கு முன் இந்தித் திணிப்பும், இந்தி எதிர்ப்பு போராட்டமும்

6.2.2 சுதந்திரத்திற்குப் பிறகு இந்தி எதிர்ப்புப் போராட்டம்

6.3 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சகட்டம்: 1965

6.3.1 பக்தவத்சலம் பதவி ஏற்றதும், போராட்டத்தின் புதிய வேகமும்

6.3.2 குடியரசு தினமும் துக்க தினமும்

6.3.3 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள்

6.4உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

6.5 சுருக்கம்

6.6 முக்கிய கருத்துப்படிமங்கள்

6.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

6.8 மேலும் படிக்க

**தொகுதி III கட்சிகளின் நலத்திட்டங்கள்**

**அலகு-7 தி.மு.க - சி.என்.அண்ணாத்துரை மற்றும் அவரது அமைச்சரவை உருவாக்கம்-எம்.கருணாநிதி மற்றும் அவரது அமைச்சரவை** **81-91**

7.0 அறிமுகம்

7.1 கா.ந.அண்ணாதுரை (அண்ணா)

7.1.1 தமிழக முதல்வர் அண்ணா

7.1.2 அண்ணா அமைச்சரவையின் பணிகள்

7.2 மு. கருணாநிதி ஆட்சி

7.2.1 அமைச்சரவை

7.2.2 சாதனைகள்

7.2.3 மாவட்டத் தலைநகர்கள்

7.2.4 சமத்துவபுரம், 1997- 98

7.2.5 உழவர்களுக்கான திட்டம்

7.2.6 திருவள்ளுவர் சிலை திறப்பு, 2000

7.2.7 சரித்திரச் சாதனைகள், 1996 – 2001

7.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

7.4 சுருக்கம்

7.5 முக்கிய கருத்துப்படிமங்கள்

7.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

7.7 மேலும் படிக்க

**அலகு-8 தி.மு.க ஆட்சியின் போது நலத்திட்டங்கள்-சமூக-பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றங்கள்.** **92-25**

8.0 அறிமுகம்

8.1 கல்வி முன்னேற்றங்கள்.

8.1.1 தமிழ்மொழி வளர்ச்சி

8.1.2 கல்வி வளர்ச்சி

8.2 சமூக நலத்திட்டங்கள்

8.2.1 சமூக நலத்திட்டங்கள்

8.2.2 சென்னை அழகுபடுத்தப்படல்

8.2.3 வரலாற்று இடங்களுக்கு முக்கியத்துவம்

8.3 கழக ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி

8.3.1 பணத்தோட்டம்

8.3.2 பொருளாதார ஏற்றத்தாழ்வு

8.3.3 பொருளாதாரப் போக்கு

8.3.4 தொழிற்வளர்ச்சி

8.3.5 வேளாண்மைத் துறையில் வளர்ச்சி

8.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

8.5 சுருக்கம்

8.6 முக்கிய கருத்துப்படிமங்கள்

8.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

8.8 மேலும் படிக்க

**அலகு-9 அ.இ.அ.தி.மு.க-அமைச்சகம்** **102-119**

9.0 எம்.ஜி.ஆர்

9.1 அறிமுகம்

9.1.1 அரசியல் நுழைவு

9.1.2 சினிமா உலகம்

9.1.3 கழகத்தில் கருத்து வேறுபாடு – அ.இஅ.தி.மு.க. வின் தோற்றம்

9.1.4 தேர்தல் பிரவேசம்

9.1.5 11 ஆண்டு கால சாதனைகள்

9.1.6 கழகத்தில் பிளவு

9.2 செல்வி. ஜெயலலிதா

9.2.1 அறிமுகம்

9.2.2 வாழ்க்கை வரலாறு மற்றும் ஓராண்டு கால ஆட்சி

9.2.3 ஜெயலலிதாவின் நான்காவது ஆட்சிகாலம்

9.2.4 ஜெயலலிதாவின் ஐந்தாவது ஆட்சிகாலம்

9.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

9.4 சுருக்கம்

9.5 முக்கிய கருத்துப்படிமங்கள்

9.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

9.7 மேலும் படிக்க

**அலகு-10 அ.இ.அ.தி.மு.க ஆட்சியின் நலத்திட்டங்கள் 120-138**

10.0அறிமுகம்

10.1 ஜெயலலிதா ஆட்சி

10.1.1 வரலாற்று சாதனைகள்

10.1.2 பதவி விலகல்

10.2 பன்னீர்செல்வம் ஆட்சி 2001-2002

10.3 ஜெயலலிதா ஆட்சி 2002-2006

10.3.1 இடைத்தேர்தலில் வெற்றி

10.3.2 மீண்டும் முதலமைச்சர்

10.3.3 அரசாணைகள்

10.3.4 காவிரி நீர் பிரச்சனை

10.3.5 ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு

10.4 தகவல் தொழில்நுட்ப கொள்கை 2002

10.4.1 நோக்கம்

10.4.2 மின் ஆட்சி

10.4.3 புதிய தொழில் கொள்கை

10.4.4 கிராமத் திட்டம்

10.4.5 சுனாமி சீரமைப்பு நடவடிக்கை

10.4.6 வீராணம் குடிநீர்த் திட்டம்

10.5 வரவு செலவுத்திட்டம் 2005-2006

10.6 பொருளாதார வளர்ச்சி

10.6.1 சுய உதவிக்குழுக்கள்

10.6.2 சாதனைகள்

10.6.3 பொருளாதார வளர்ச்சியும் வறுமை ஒழிப்பும்

10.7 விடுதலைக்குப்பின் கல்வி வளர்ச்சி

10.7.1 மாபெரும் மாற்றம்

10.7.2 கல்வி கமி'ன்கள்

10.7.3 கல்வி குறிக்கோள்கள்

10.8 பள்ளிக் கல்வி

10.8.1 துவக்கக் கல்வி

10.9 இடை நிலைக் கல்வி

10.9.1 முக்கியத்துவம்

10.9.2 மாணவர் நலத்திட்டங்கள்

10.10 நவோதயப் பள்ளிகள்

10.11 சமச்சீர் கல்வி

10.12 உயர்கல்வி

10.13 கல்வி வளர்ச்சித் திட்டங்கள்

10.14 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

10.15 சுருக்கம்

10.16 முக்கிய கருத்துப்படிமங்கள்

10.17 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

10.18 மேலும் படிக்க

**தொகுதி- IV உலகத் தமிழ் மாநாடுகள்**

**அலகு-11 மைய மாநில உறவுகள் 139-**

11.0 அறிமுகம்

11.1 சட்ட உறவுகள்

11.1.1 மையப் பட்டியல்

11.1.2 மாநிலப் பட்டியல்

11.1.3 இருதிறத்திற்கும் உரிய பட்டியல்

11.2 ஆட்சிமுறை உறவுகள்

11.3 நிதி உறவுகள்

11.4 காவிரி நீர்

11.5 இன்றைய நிலை

11.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

11.7 சுருக்கம்

11.8 முக்கிய கருத்துப்படிமங்கள

11.9 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

11.10 மேலும் படிக்க

**அலகு-12 உலக தமிழ் மாநாடு 152-**

12.0 அறிமுகம்

12.1 உலக தமிழ் மாநாடுகள்

12.1.1 முதல் மாநாடு

12.1.2 இரண்டாம் மாநாடு

12.1.3 மூன்றாவது மாநாடு

12.1.4 நான்காவது மாநாடு

12.1.5 ஐந்தாவது மாநாடு

12.1.6 ஆறாவது மாநாடு

12.1.7 ஏழாவது,எட்டாவது மற்றும் ஒன்பதாவது மாநாடு

12.1.8 பத்தாவது மாநாடு

12.2 தமிழ் மொழியின் வளர்ச்சி

12.2.1 முன்னுரை

12.2.2 அரசின் மொழி வளர்ச்சிப் பணிகள்

12.2.3 தமிழ் ஆட்சி மொழிச் சட்டமும் - நடவடிக்கைகளும்

12.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

12.4 சுருக்கம்

12.5 முக்கிய கருத்துப்படிமங்கள

12.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

12.7 மேலும் படிக்க

**அலகு-13 ஐந்தாண்டு திட்டங்கள்** **171-195**

13.0அறிமுகம்

13.1 ஐந்தாண்டுத் திட்டங்கள்

13.1.1 முதல் ஐந்தாண்டுத் திட்டம்

13.1.2 இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

13.1.3 மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

13.1.4 நான்காவது ஐந்தாண்டு திட்டம்

13.1.5 ஐந்தாது ஐந்தாண்டு திட்டம்

13.1.6 ஆறாவது ஐந்தாண்டு திட்டம்

13.1.7 எழாவது ஐந்தாண்டு திட்டம்

13.1.8 எட்டாவது ஐந்தாண்டு திட்டம்

13.1.9 ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம்

13.1.10 பத்தாவது ஐந்தாண்டு திட்டம்

13.1.11 பதினொறாவது ஐந்தாண்டு திட்டம்

13.1.12 பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டம்

13.2 தமிழ்நாடு-நீர்ப்பாசனம்-விவசாயம்-தொழில்துறை வளர்ச்சி

13.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

13.4 சுருக்கம்

13.5 முக்கிய கருத்துப்படிமங்கள

13.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

13.7 மேலும் படிக்க

**அலகு-14 இட ஒதுக்கூட்டு கொள்கை** **196-212**

14.0 அறிமுகம்

14.1 சமூகநீதி

14.1.1 சமூக நீதி இயக்கம்

14.1.2 நீதி கட்சியும் சமூக நீதியும்

14.1.3 அரசியலமைப்பு சட்டத்தின் சமூகநீதி

14.2 சமூக நலத் திட்டங்கள்

14.2.1 மாநில சமூக நல வாரியம்

14.3 நலத்திட்டங்கள்

14.3.1 பெண்கள் நலத்திட்டங்கள்

14.3.2 பெண்கள் முன்னேற்ற கழகம 1986

14.3.3 பெண்கள் காவல் நிலையங்கள்

14.3.4 பெண்களுக்கு சட்டங்கள் பாதுகாப்பு

14.4 முதியோர் சமுதாய பாதுகாப்பு

14.4.1 ஐவகை திட்டங்கள்

14.4.2 மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு திட்டம்

14.5 இட ஒதுக்கீடு கொள்கை நினைப்பும், நடைமுறையும்

14.5.1 இட ஒதுக்கீடு கொள்கை

14.6 தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு கொள்கை

14.6.1 தி.மு.க அரசு

14.6.2 அ.இ.அ.தி.மு.க அரசு

14.6.3 வன்னியர் போராட்டம்

14.6.4 பாலேடு அடுக்கு

14.7 இட ஒதுக்கீட்டுக் எதிர்ப்பு

14.7.1 இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவு

14.7.2 சாதிக் கட்சிகள்

14.8 சாதி ஒழிப்பா? தீண்டாமை ஒழிப்பா?

14.8.1 சாதி அரசியல்

14.8.2 சாதி ஒழிப்பு

14.8.3 தீண்டாமை ஒழிப்பு

14.9 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

14.10 சுருக்கம்

14.11 முக்கிய கருத்துப்படிமங்கள்

14.12 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

14.13 மேலும் படிக்க

# தொகுதி I சுதந்திரத்திற்குப் பிறகு

# அலகு-1 சுதந்திர தமிழ்நாடு - காங்கிரஸ் அமைச்சகம்-ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்- பி.எஸ்.குமாரசாமி ராஜா.

**அமைப்பு**


1.0 அறிமுகம்

1.1 ஓமந்தூர் பெ.இராமசாமி அமைச்சரவை

1.1.1 இந்து அறநிலையச்சட்டம் 1947

1.1.2 பிற சீர்திருத்தங்கள

1.2 குமாரசாமி ராஜா அமைச்சரவை

1.2.1 பிறப்பு

1.2.2 காந்தியடிகளுடன் சந்திப்பு

1.2.3 கூட்டுறவு இயக்கம்

1.2.4 பண்பு நலன்கள்

1.2.5 உணவுப்பரச்சினை

1.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1.4 சுருக்கம்

1.5 முக்கிய கருத்துப்படிமங்கள

1.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

1.7 மேலும் படிக்க


## 1.0 அறிமுகம்

## 1.1 ஓமந்தூர் பெ.இராமசாமி அமைச்சரவை

பிப்ரவரி 28, 1947 –ல் ஓமந்தூரார் முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மார்ச் 23, 1947-ல் அமைச்சரவை அமைத்தார். ஆங்கிலப் புலமை இல்லையெனினும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கோப்புகளைப் படித்துக் குறிப்பு எழுதும் திறமை மிக்கவராக விளங்கினார். கோப்புகள் முதலில் தலைமைச் செயலாளருக்கு அனுப்பப் பெற்றுப் பின்னர் அமைச்சர்களுக்கு அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டதால், கோப்புகளை அமைச்சர்களுக்கே செயலாளர்கள் நேரடியாக அனுப்பும் முறையைப் பின்பற்றினர். பொதுப்பணத்தைச் சிக்கனமாகச் செலவிடவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். பதவியேற்ற சில மாதங்களில் இந்தியா விடுதலை பெற்றதும், இவர் ஆகஸ்டு 15, 1947-ல் கைதிகளை விடுதலை செய்தும், கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைத்தும் சிலரைச் சேவாசதனத்திற்கும் அனுப்பியும் நடவடிக்கை மேற்கொண்டார்.

1947 ஆம் ஆண்டு சென்னை இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தினைப் பெண்டிருக்கு உதவிட நிறைவேற்றினார். இறந்த கணவனின் சொத்தில் மகளைப் போல விதவை மனைவிக்கும் சமபங்கு இருந்தது. கூட்டுக் குடும்பமாயிருந்தாலும் கணவனின் பங்கைப் பெற உரிமையிருந்தது. பெண்களின் சமூக, பொருளாதார நிலையை முன்னேற்றப் பெண்கள் நலத்துறையினை உருவாக்கினர்.

1947ஆம் ஆண்டு மதுவிலக்குச் சீர்திருத்தச் சட்டம் பொது இடங்களில் போதையில் இருந்தோரைத் தண்டிக்க வகை செய்தது. இத்தகு சட்டத்தினால் 17 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. மதுவிலக்குப் பணிக்கு ஒரு கோடி நிதி ஒதுக்கியது. ஆக்டோபர் 1948 இல் சென்னை மாநிலம் முழுமையும் மது விலக்கு அறிமுகமாயிற்று. இம் மதுவிலக்கு 163.100 மது இறக்குவோர் பணியைப் பாதித்தது. வேலையின்மையை ஒழிக்க அரசுவெல்லம், பால் உற்பத்தி, சிறுதொழில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியது. மதுவிலக்கு அற, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியது.

பத்து ஆண்டுகளுக்குத் தொடக்கக் கல்வியை ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயமாக்க வகை செய்தது. 1945இல் தொடங்கிய கட்டாயக் கல்வி 1948 வரை தொடர்ந்தது. மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்தது. மதிய உணவுத்திட்டம் செலவு குறைக்க நிறுத்தப்பட்டது. உடற்குறையுடையோர் கல்விக்கு ஊக்கமளித்தார். 1948இல் வயது வந்தோர் பள்ளிகள் தொடங்கினார்.

வேளாண்மைத் துறையில் உற்பத்தியைப் பெருக்க விதைகள், இயந்திரப் பயன்பாடு ஊக்குவித்தார். உறை நிலையை முன்னேற்ற அதிகமான உணவு உற்பத்தி கிணறு வெட்ட மாணியம் தீவிரப் பயிரிடும் திட்டம், பொது சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றைப் பின்பற்றினார்.

1947இல் துங்கபத்திரா திட்டம் தொடங்கப் பெற்றது. கிராம மக்களின் முன்னேற்றத்திற்கென பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி உழவர்களை ஈட்டிக்காரரின் வட்டிக் கொடுமையிலிருந்து காத்தார். 1949இல் மூன்றாண்டு தீவிரப் பயிரிடும் திட்டம் அறிமுகமாயிற்று.

1947இல் சென்னை மாநிலம் தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட மாநிலமாக விளங்கியது. புதிய தொழில்களைத் தொடங்கினாலே தனிநபர் வருவாயை பெருகும் சிறுதொழில் குடிசைத் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தார். தொழிற்பயிற்சிப் பள்ளிகள் தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கினார். தொழில் வளர்ச்சிக்கு உதவிட தொழில் முதலீட்டு நிறுவனம் 51 விழுக்காடு அரசு பங்குடன் தொடங்கியது.

தொழில், வேளாண்மை வளர்ச்சிக்கு மின் சக்தியின் பயனை உணர்ந்தார். பல்வேறு மின் திட்டங்களைத் தொடங்கினார்.

அரசியல் சூழ்நிலை சரியில்லாத போது, அரசியல் மோசமாவது கண்டு வருந்திய ஞானியான அவர் தொடர்ந்து நீடிக்க விரும்பவில்லை. எனவே

தொடர்ந்து பதவியில் நீடிக்காது பதவி விலகிட முடிவு செய்தார். விடுதலையின் போது முதல் முதலைச்சரான இவர் பதவி விலகினார். குழு மனப்பான்மை காங்கிரஸ் இயக்கத்தில் வேரூன்றியிருப்பதைக் கண்டு உள்ளம் வருந்தினார். ஆதைப்பற்றி வருந்திக் கூறிய அவர் இறுதியில் பதவி விலகினார்.

ஐதராபாத் - இரசாக்கர் பிரச்சினை:

காசிம் இரஜ்வி என்பவர் இட்டிகத்-உல-முசுலிம் என்னும் அமைப்பை நிறுவி ஐதராபாத்தில் முசுலிம் அரசை நிறுவிட முயன்றார். இவ்வமைப்பினர் இரசாக்கர்கள் எனப்பட்டனர். இரசாக்கர்கள் சென்னை எல்லையைத்தாக்க முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தகவல் வந்தபோது காவல் படையை அனுப்பினார். இரசாக்கர்ளுக்கு எதிராகச் சோசலிஸ்ட் தலைவர் ஆச்சுத்பட்வர்த்தன் தலைமையில் ஐதராபாத்தினுள் நுழைய முயற்சி மேற்கொண்டபோது, சென்னைக் காவல் துறையினரை அவர்களைக் கைது செய்யவேண்டாம் என ஆணையிட்டார்.

டாக்டர் சுப்பராயன் பிரச்னை:

ஐதராபாத்தில் இரசாக்கர்களுடன் இணக்கமாகப் பொதுவுடமையினர் வெயல்பட்டனர். எனவே இந்திய அரசு பொதுவுடைமைக் கட்சியைத் தடைசெய்ய முடிவுசெய்தது. ஆனால் இந்த முடிவு வெளிவரும் முன் பொதுவுடமையினர் தலைமறைவாயினர். அப்போதும் காவல்துறையும் பொறுப்பில் இருந்த அமைச்சர் சுப்பராயனிடமிருந்து அத்துறையைத் தாமே வைத்துக்கொண்டார். காமராஜ், இராஜாஜி, நேரு முதலானவர்கள் சுப்பராயனிடம் அத்துறையை ஒப்படைக்கும்படி வேண்டியும் மறுத்துவிட்டார். மேஜர் ஜெனரல் சௌத்ரி ஐதராபாத்தைக் கைப்பற்றிய மறுநாளே அப்பொறுப்பை மீண்டும் டாக்டர் சுப்பராயனிடம் அளித்தார்.

என்.ஜி.ஓ. வேலை நிறுத்தம்:

என்.ஜி.ஓக்கள் வேலை நிறுத்தம் செய்தனர். என்.ஜி.ஓக்களில் இன்னும் இரண்டாண்டுகளில் ஓய்வு பெறுவோர் எவ்வளவு பேர் என்று புள்ளி விவரம் கேட்டார். மூன்றில் இரண்டு பங்கினர் ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர் என்று தகவல் அறிந்து, வேலையற்றோரிடமிருந்து விண்ணப்பம் கேட்டுப் பத்திரிக்கையில் விளம்பரம் செய்தார். 24 மணி நேரத்தில் வேலை நிறுத்தம் நின்றது. நான்கு நாட்களில் இதனை நிறைவேற்றும் மனஉறுதி அவருக்கு இருந்தது. கல்லூரிகளில் வேலை நிறுத்தம் நடைபெற்றபோது அரசு அதனை முடிவிற்குக் கொண்டு வந்தது. ப.ஆண்டு சிமில் வேலை நிறுத்தம் திரு.வி.க. தலைமையில் நடைபெற்றபோத திரு.வி.க. வைக் கைது செய்யாமல் திறமையாக அதனை முடிவிற்குக் கொண்டு வந்தார். இதுபோலவே கோவை வேலைநிறுத்தத்தைத் தொழிற் சங்கத்தலைவரை அமைத்துப் பேசி முடிவிற்குக்

கொண்டு வந்தார். தபால் தந்தி வேலைநிறுத்தம், காவல் துறையினர் வேலை நிறுத்தம் ஆகியவற்றைத் திறமையாகச் சமாளித்தார். அரசு ஊழியர்களின் குற்றங்களை விசாரிக்க ஒருங்குமுறை விசாரணை மன்றத்தை ஏற்படுத்தினார். டீ.அனந்தாச்சாரி என்பவர் தலைமையில் ஒரு நபர் குழுவை லஞ்சத்தை ஒழிக்க நியமித்தார். ஆளுங்கட்சியினரைத் தலைமைச் செயலக வளாகத்தில் பரிந்துரைக்காக அனுமதிக்க மறுத்தார். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவே விசாரணை நடத்தவும் அவர் தயங்கவில்லை.

மார்ச் 23, 1947 இல் ஓ.பி.இராமசாமி அமைச்சரவை பதவியேற்றது. அமைச்சரவையில் 13 அமைச்சர்கள் இருந்தனர். பிரகாசம் போல அவ்வளவு எதிர்ப்பினைச் சந்திக்கவில்லை. அரசியலில ஞானியாக ஓ.பி.ஆர். கருதப் பெற்றார். அவருடைய இனாம் நிலங்கள் ஒழிப்பை இராஜாஜி அணியினர் எதிர்த்தனர். சென்னைப் பட்டப் பேரவையில் கோயில், இனாம் நிலங்களையும் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தில் சேர்க்க வகை செய்தது. சிலர் சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை விட்டு விலகினர்.

பிற்பட்டோர் நலனுக்கு அவர் வெளியிட்ட ஆணைக்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. சுழற்சிமுறையையும், பதவி நியமனங்களையும் கீழ்க்கண்ட வகையில் மாற்றியமைத்தார். ஆவ் ஏற்கெனவே இருந்த முறை உருவாகி இருபதாண்டுகள் ஆனமையால் மாற்றிட வழைந்தார். அவர் உருவாக்கிய மாறுதல்கள் இவை.

| | | |
|---|---|---|
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் | - | 14 பேருக்கு 6 பேர் |
| பிராமணர்கள் | - | 14 பேருக்கு 2 பேர் |
| ஆங்கில அந்தியர், கிறித்தவர் | - | 14 பேருக்கு ஒருவர் |
| தாழ்த்தப் பெற்றோர் | - | 14 பேருக்கு ஒருவர் |

இந்த சுழற்சியில் ஆங்கிலோ இந்தியர், முசுலிம்களின் பங்கு குறைந்தது. இது ஓ.பி. ஆருக்கு பெரும் பாராட்டைத் தேடித் தந்தது. ஜமீன்தாரி ஒழிப்பை இந்தியாவிலேயே கொண்டு வந்த முதல் அமைச்சரவை ஓ.பி.ஆர் அமைச்சரவையே. மார்ச் 1948இல் மீண்டும் பிரதமராக ஓ.பி.ஆர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தாழ்த்தப்பெற்றோர் முன்னேற்றத்திற்கு சென்னைக் கோவில் நுழைவு ஏறபுச்சட்டம், சென்னை சீரியல் குறைபாடு நீக்குதல் சட்டம் ஆகியன துணைபுரிந்தன. 1947இல் தேவதாசிச் சட்டம் கொணர்ந்து பெண்களை ஆலயத்திற்கு ஒப்படைப்பதற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

### 1.1.1 இந்து அறநிலையச்சட்டம் 1947

இந்து அறநிலையத்துறையில் நிழவிய ஊழல்களை ஒழித்திட இச்சட்டம் கொண்டுவந்தார். இந்த மசோதாவிற்கு தீவரமான எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே அலயங்களின் நிருவாகிகள், அறங்காவலர் மாநாடு கூட்டி அச்சட்டம் குறித்த கருத்தினை அறிந்தார்.

### 1.1.2 பிற சீர்திருத்தங்கள்:

நீதித்துறையைச், செயல்துறை அலலது நிருவாகததுறையிலிரந்து பிரித்தார். இது அக்டோபர் 2, 1949-ல் குமாரசாமி ராஜா காலத்தில் நடைமுறைக்கு வந்தது. ஜமீன்தாரி முறை, இனாம் தாரி முறையை ஒழித்தார். எண்ணிறந்த நீர்ப்பாசனத்திட்டங்களை நிறைவேற்றினாலும் கீழ்ப்பவானி அணைக்கட்டுத்திட்டம் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். தமது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துறைகளை ஏற்று செயல்படவேண்டாம் எனறு அரசு அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பும் துணிவு அவருக்கு இருந்தது. ஓமந்தூராரின் ஆட்சிக்காலம் பொற்காலம் என்றும் கூறுவர்.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு முதலமைச்சர் பதவியில் இருந்தபோதும் இல்லாதபோதும் உழைத்த சீர்திருத்தவாதி அவர். முதலமைச்சர் பொறுப்பேற்றதும் அரிசன நலத்துறையைப் பொதுப்பணித்துறையிலிருந்து பிரித்து, அரிசன நலத்துறை என தனித்துறை ஒன்றை உருவாக்கினார். மாநில அளவில் அத்துறைக்கு இயக்குநரும், மாவட்ட நல அலவலர்களும் நியமித்தார்.

இவர் பதவியேற்கும் முன் அரிசன நலத்திற்கு என குழு ஒன்று நியமிக்கப் பெற்று அக்குழு அறிக்கை ஒன்றினை அளித்தது. ஆனால் அக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த ஏதும் செய்ப்படாலிருந்தது. ஓமந்தூரர் அந்த அறிக்கைக்குச் செயல்வடிவம் அளித்தார். அரசு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு வழங்கும்போது தாழ்த்தப்பட்டோருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்பது பரிந்துரைகளில் ஒன்றாகும்.

ஓமந்தூரார் முதலமைச்சரானதும் சென்னை ஆலய நுழைவு ஏற்புச்சட்டம், ஜீன் 2, 1947 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தாழ்த்தப்பட்டவர் மாநிலத்தின் பொதுவழிபாட்டுக்குரிய எந்தக் கோயிலிலும் நுழைந்து வழிபடலாம். யாராவது அவ்வாறு வழிபடுவோரை தடுத்தால் சட்டப்படி அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதுபோலவே பொதுக்குளியல் குளங்களில் குளிக்க, தண்ணீர் எடுக்கவும் இசைவு அளிக்கப் பெற்றது.

1947-ல் நிறைவேற்றிய மனித உரிமைத்தடை நீக்கல்

குறிப்பிடத்தக்கதாகும். ஏந்தச் சமயச் சார்பற்ற நிறுவனத்தினையும் உரிமை கொண்டிருப்பவர், அல்லது பொறுப்பு ஏற்றிருப்பவர் யாருக்கும் தடை விதிக்க உரிமையில்லை என இச்சட்டம் கூறியது. இதில் சமயச் சார்பற்ற நிறுவனம் என்பதில் சிற்றுண்டிச் சாலைகள், உணவு விடுதிகள், காபி, கிளப்புகள், உணவுக்கூடங்கள், தங்குமிடங்கள், மாணவர் விடுதிகள், விடுதிகள் முதலியன அடங்கின.

ஜீன் 15, 1947-ல் தாழ்த்தப்பட்டோர் திருப்பதி வெங்கடேசப் ருெமாளின் ஆலயத்தினுள் கூப்பிய கரங்களுடன், ஓமந்தூராருடன் நுழைந்தனர். அதுவலையில் வாயிலில் இருந்து பொருமானை வணங்கியவர்கள் சட்டப்படி உள்ளே சென்று சம்ரோக்'ணம் செய்தனர் என்று கேள்விப்பட்டபோது அவ்வாறு செய்தால் சட்டம் தண்டனை அளிக்கும் என எச்சரித்தார்.

தாழ்த்தப்பட்டோரை ஆலய நுழைவுடன் நிறுத்திவிடாது அறங்காவலர்களாகவும் நியமனம் பெற வகை செய்தார். திண்டிவனம் சட்டசபை உறுப்பினரும் தாழ்த்தப் பெற்ற இனத்தவரும் ஆன குலசேகரதாசு என்பவர் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் முதல் தாழ்த்தப்பட்ட இன அறங்காவலர் அனார். 1947-ல் திருக்கோவிலூரில் தாழ்த்தப்பட்ட மாணவருக்கு விடுதி ஒன்று அமைக்கப் பெற்றது. தாம் பிறந்த ஓமந்தூரில் தாழ்த்தப்பட்டோரை அலயத்தினுள் நுழைந்திட இசைவு அளிக்காத வரை ஆலயத்தினுள் தாம் நுழைவதில்லை என்று அறிவித்தார்

மதுவிலக்கை நிறைவேற்றுவதில் புதுமையைக் கடைபிடித்தார். இந்தியத் தேயிலைக் கழகத்தின் வாயிலாக மது ஆரந்தியவர்களின் பழக்கத்தை மாற்ற இலவசமாகத் தேயிலை வழங்கச் செய்தார். மதுவிலக்கிற்கு எதிராகச் சதாசாலட்சேபம், பஜனைகள், கூட்டங்கள் நடத்தினார். ஆதாரக் கல்வியில் ஆர்வம் கொண்ட அவர் ஆதாரக் கல்வி மாநாட்டை நடத்தினார். தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் ஆர்வம் செலுத்தினார். தொழுநோய் தடுப்பு, உதவி ஆகியவற்றிற்கு இயக்குநரை நியமித்தார். தொழுநோய் ஆராய்ச்சி நிலையமாக உளுந்தூர்பேட்டை விமான தளத்தை மாற்றினார்.

## 1.2 குமாரசாமி ராஜா அமைச்சரவை

### 1.2.1 பிறப்பு:

1898-ஆம்அண்டு இராமநாதபுரம் மாவட்டம் (இன்றைய காமராசர் மாவட்டம்) இராசபாளையத்தில் பூசப்பாடி சஞ்சீவி ராசா என்பவரின் மகனாகப் பிறந்தார். இவர் பிறந்த எட்டாம் நாளிலேயே தாய் இறந்தவிட்டார். அவருடைய மன்னோர்கள் 400 ஆண்டுகளுக்கு முன்னெ ஆந்திராவிலிருந்து தழமிழகத்தில் குடியேறியவர்கள். மூன்று வயதிலேயே தந்தையாரையும் இழந்தார். அவரை

அன்பு காட்டி வளர்த்தவர் தந்தைவழிப்பாட்டி. 1990-இல் ருக்குமணி அம்மையாரை மணம் செய்து கொண்டார். 1916-இல் பதினெட்டாம் வயதிலேயே வளர்த்த, பாட்டியையும் இழந்தார். உயர்பள்ளிப் படிப்பு வரை படித்துள்ள அவருக்கு மகப்பேறு இல்லை. புதுப்பாளையம் ஆரம்பப்பள்ளி, ஆங்கிலோ-வெர்ணாகுலர் பள்ளி ஆகியவற்றிலம் பயின்றார். பின்னர் சி.எம்.எசு.இந்து உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார். பள்ளியிறுதி சகுப்புத் தேர்வை எழுதும் நுழைவுத் தேர்வில் தோல்வியுற்றதால் பள்ளியிறுதித் தேர்வு எழுத இயலாமல் போயிற்று.

1.2.2 காந்தியடிகளுடன் சந்திப்பு:

1919-ல் காந்தியடிகளின் தமிழகச் சுற்றுப் பயணத்தின்போது அவரைச் சந்தித்துக் காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்தார். 1931-ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று ஓராண்டுச் சிறை தண்டனை பெற்றார். விடுதலைப் போராட்டக்காலத்தில் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் கூட்டுறவு ஆகியவற்றில் தீவிரப் பங்கேற்றார்.

1.2.3 கூட்டுறவு இயக்கம்:

இவ்வியக்கத்தின் மிகப் புகழ்ப்பெற்ற தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்ததோடு பல நிறுவனங்களின் தலைவராகவும் விளங்கினார். மத்தியச் சட்டசபை உறுப்பினராகத் தேர்வு பெற்றார். 1938-ல் இராசபாளையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசியல் மாநாட்டிள் வரவேற்புக் குழுத்தலைவராக விளங்கினார். 1941-ல் தனநபர் அறப்போரில் பங்கேற்று 9 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். பிரகாசம் அமைச்சரவையில் வேளாண்மைத்துறை அமைச்சரானார்.

**சென்னை மாநில முதல்வர்:**

காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மார்ச் 31, 1949-ல் குமாரசாமி ராஜாவின் பெயரை பக்தவச்சலம் முன் மொழிய, கோபாலரெட்டி பெருமாள்சாமி ரெட்டியார் வழிமொழிந்தார். குமாரசாமி ராஜா 105 வாக்குகளும் சுப்பராயன் 85 வாக்குகளும், பெற்றனர். முதல்வராகப் பொறுப்பேற்றார்.

**ஒரிசா மாநில ஆளுநர்:**

1952 முதல் பண்பாடு, கலை அகியவற்றை வளர்த்தார். தம் சொந்த இல்லத்தையும், நிலபுலன்களையும் பொது மக்களுக்கு வழங்கிக் ''காந்தி கலை மன்றம்'' என்னும் பண்பாட்டு மையத்தை நிறுவினார். இந்நிறுவனம் இலக்கியம் கலை, பண்பாடு வளர்த்தது. 1953-ல் இங்குச் சிறந்த நூலகம் நிறுவப்பெற்றது.

1954-ஆம் ஆண்டு பிபரவரித் திங்களில் ஓசா மாநில ஆளநராகப் பதவியேற்றவர், தம் ஊரில் நிறுவிய காந்தி கலை மன்றத்தை வளர்க்கும் பொருட்டும், உடல் நலக் குறைவினாலும் ஆளுநர் பதவியைத் துறந்தார்.

மறைவு:

1957-ஆம் அண்டு மார்ச்சுத் திங்களில் 59-ஆம் வயதில் மறைந்தார்.

1.2.4 பண்பு நலன்கள்:

குமாரசாமி விளையாட்டுப் போட்டிகளில் விருப்பம் மிக்கவர். ஆதில் கலந்துகொண்டு நிறையப் பரிசுகள் பெற்றவர். சிறுவயதிலிருந்தே நீண்ட தூரம் விரவாக நடந்து செல்வதில் வல்லவராக விளங்கியவர். ஒரு முறை 7 மைல் தூரத்தை (15-4 க.மீ) ஒன்றரை மணிநேரத்தில் நடந்தே சென்றிருக்கிறார்.

மீனாட்சி விவேக வித்யானந்த சபை என்ற பெயரில் அமைப்பு ஒன்றினைத் தொடங்கி அதன் வாயிலாக நிறைய நூல்கள் பயிலவும், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் நடத்தவும் வகை செய்தார். அவருக்கு அரசியலில் ஈடுபாடு ஏற்படக் காரணமாயிருந்தவர் அன்னிபெசன்ட் அம்மையார்.

நாட்டு மக்களுக்குத் தேசியக் கல்வியை ஊட்டும் ஒரு பள்ளியை நிறுவ வேண்டுமென பெசண்ட் அம்மையார் அறிவித்தார். அம்மையார் அதற்கெனத் திட்டமும் அறிவித்தார். அதன்படி ஒவ்வொருவரும் ஒரு நாள் உணவு உண்ணாது காசை மிச்சப்படுத்தி அனுப்பவேண்டும் என்றபோது மாணவராயிருந்த குமாரசாமி, தாமும் மற்ற மாணவர்களை அவ்வாறு சேர்த்துக் கல்வி நிலையத்துக்குக் காசு திரட்டி அனுப்பினார்.

அன்னிபெசண்ட் அம்மையாரின் சொற்பொழிவுகளைத் தமிழில் மொழிபெயர்த்து நாட்டு மக்களிடையே பரப்பினார். ‘‘ஹோம் ரூல்’’ இயக்கத்தில் பங்கு கொண்டமைக்காக இரண்டு ஆண்டுகள் சிறைத்தணடனை பெற்றார்.

தாழ்த்தப்பட்டோர் நலனில் அக்கறை உடையவராக விளங்கிய இவர், தாழ்த்தப்பட்டோர் ஆலய நுழைவைச் சட்டமாக்கினார். நீத்திதுறையைத் தனித்துறையாக்கினார்.

காலம் தவறாமை, தோல்விகண்டு துவளாமை, வெற்றியில் இறுமாப்பு அடையாமை, நிருவாகத்தில் நேர்மை, கண்டிப்பு முதலிய நல்லியல்புகளுக்கெல்லாம் உறைவிடமாகத் திகழ்ந்தார். அரசியலில் நேர்மை, நடுநிலை தவறாமை, அஞ்சாமை ஆகிய இயல்புகளுக்குச் சொந்தக்காரர்.

அமைச்சராகவும் விளங்கியவர் பி.எஸ்.குமாரசாமி ராஜா. இவருடைய ஆட்சிக்காலம் முழுமையும் பிரகாசத்தின் தொடர்ந்த எதிர்ப்பினை இவர் சந்திக்க நேர்ந்தது. அரசியல் சிக்ல் தவிர உணவு நிலை, துணிக்கட்டுப்பாடு

முதலியன வேறு அச்சுறுத்தின.

ஓமந்தூரார் ஓய்வுபெறுவதான அறிவித்தவுடன் தலைமை அமைச்சர் பதவிக்குப் போராட்டம் தொடங்கியது. முத்துரங்கர் உயிருடன் இல்லையாயினும் அவருடைய மறைவிற்குப் பின் காமராசர், முத்துரங்கனின் அப்பதவிக்கு விழைந்தார். காமராசராலும் ஓமந்தூராராலும் பொது வேட்பாளராகத் தேர்ந்தேடுக்கப்பட்டார். நிலக்கழார்கள் டாக்டர் சுப்பராயனை ஆதரித்தனர்.

மார்ச் 31, 1949-ல் டாக்டர் சுப்பராயர் பெற்ற 89 வாக்குகளுக்கு மேல், 105 வாக்குகள் பெற்று குமாரசாமி ராஜா சென்னை மாநிலச்' சட்டமன்றக் காங்கிரசு தலைவராகவும் ஓமந்தூராரின் கொள்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றும் என்று உறுதியளித்தார். அமைச்சரவையில் பிரகாசம் தமது குழுவினருக்கு இடம் வேண்டினார். சுப்பராயருக்கு ஆதரவு தெரிவித்தார். அமைச்சர்கள் சிலருக்கு எதிராகச் சுப்பராயர் ஊழல் குற்றச்சாட்டினைச் சுமத்தினார். குாங்கிரசுத் தலைவர் பிரசாத் குற்றச்சாட்டின் பேரில் சில விளக்கங்களைக் கேட்டார்.

டாக்டர் பட்டாபி சீத்தாராமையர் காங்கிரஸ் தலைவரானார். ஆதன் பின்னும் பிரகாசம் குழுவினா் நீதி விசாரணை வேண்டினர். குாங்கிரஸ் பொதுச் செயலாளர் சங்கர்ராவ் தேவ் ஆதாரப்பூர்வமான குற்றச்சாட்டில் உண்மை உள்ளதா என ஆராய அகுப்பப் பெற்று அவர் விசாரித்து தகவல் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். இதற்கிடையில் பிரகாசம் மீது ஊழல் குற்றம் சுமத்தப் பெற்றது.

ஒரு வாரம் சென்னையில் தங்கி சங்கர்ராவ்தேவ் விசாரணையை முடித்தார். சங்கர்ராவின் விசாரணையில் நிறைவடையாத பிரகாசம் நீதிவசாரணை நடத்தும்படிக் காங்கிரசுச் செயற்குழுவிற்கு வேண்டுகோள் விடுத்தார். காங்கிரஸ் செயற்குழு குற்றச்சாட்டுகளைஈ குமாரசாமி ராஜாவிற்கே அனுப்பி ஆராயச் சொன்னது. அதனாலும் முடிவு ஏற்படாத நிலையில் (இராசேந்திர பிரசாத், ஜவஹர்லால் நேரு, வல்லபாய்கட்டேல்) ஆகிய மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப் பெற்றது. மூவர்குழு போதுமான ஆதாரங்கள் இல்லாத நிலையில் யைத்தின் பெரில் நடவடிக்கை ஏதம் எடுப்பதற்கில்லை என்று கூறப் பிரச்னையை முடித்தது.

எனவே, சட்டமன்றத்தில் தனியிடம் ஒதுக்கும்படி எதிர்த்தரப்பில் அமர்வதாகவும் பிரகாசம் சபாநாயகருக்கு வேண்டுகோள் விடுத்தார். ஐந்துபேர் கொண்ட பொதுக்குழு விசாரிக்க வேண்டும் என்ற அவருடைய வேண்டுகோளும்

தள்ளுபடியாயிற்று. காங்கிரஸ் செயற்குழு பிரகாசம், அவருடைய ஆதரவாளர்கள் பதினான்குபேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் குறிப்பு அனுப்பியது. பிரகாசம் குற்றச்சாட்டுகளைத் திரும்பப்பெற மறுத்தார். முழுவிவாதத்திற்கான அவருடைய தீர்மானமும் வாக்கெடுப்பில் தோற்றது. காங்கிரஸிலிருந்து பிரகாசம் விலகினார்.

**1.2.5 உணவுப்பரச்சினை:**

உணவுநிலை மோசமாகவும் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியின் எச்சம் அது. ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும் வரை அந்நிலையியே நீடித்தது. அறுவடையும் மோசமாயிருந்தது. தலைக்கு எட்டு அவுன்சு அரிசி வழங்கப்பெற்றுப்பின் அது 7 அவுன்சு ஆகக் குறைக்கப் பெற்றது. சென்னை மாநிலத்தின் தேவை இரண்டு இலட்சம் டன்னாக இருந்தபோது 30,000 டன் தான் வருகையாயிற்று. 30,000 டன்னும் ஒழுங்காக வழங்கப்படவில்லை எங்கு பார்த்தாலும் பதுக்கல், கள்ளச்சந்தை, விருந்துகள் தடை செய்யப்பட்டன. 50 பேருக்கு மேல் விரந்தளிக்கக் கூடாது என்று தடை விதித்தது அரசு.

பங்கீடு முறை சரிவரச் செயல்படவில்லை. ஒருவாரப் பங்கீட வழங்குவதற்கும் பதிலாக மாவட்டப் பகுதிகளில் 3 அல்லது 4 நாட்கள் பங்கீடு வழங்கப் பெற்றது. உணவுப்பற்றாக்குறையைத் தொடர்ந்து துணிப்பற்றாக்குறையும் ஏற்பட்டது. துணிக்கடைகளில் நீண்ட வரிசை நின்றது.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு எனப் புதிய தனித்துறை அரிசன நலத்துறை என்ற பெயரில் உருவாயிற்று. பெண்டிர், குழந்தைகள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்திய அரசு பெண்டிருக்கெனத் தொழிற் பயிற்சி நிலையங்களை உருவாக்கியது.

மலேரியா ஒழிப்பில் கவனம் செருத்தியது. பாதுகாக்கப் பெற்ற குடிநீர் வழங்கிட நடவடிக்கைகள் எடுத்தது. 5000-க்கு மேற்பட்ட மக்கள் வாழுமிடங்களில் 20ஆண்டுக் காலத்திற்குள் சாக்டை வசதி செய்து தரத்திட்டமிடப் பெற்றது. பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் திறக்கப்பெற்றன. நகர்ப்புற கிராமப்புற வீட்டுவசதித் திட்டங்கள் உருவாயின.

பெண் கல்வியில் தனிக்கவனம் வெலுத்தியது. 246 பொது இடைநிலைப் பள்ளிகளும், பத்துப் புதிய கல்லூரிகளும்திறந்தது. தொழில் நுட்பக் கல்வியில் தனிக்கவனம் செலுத்தியது. 1951-ஆம் ஆண்டு முடிவில் 347 தொடக்கப்பள்ளிகள், 530 இரவுப்பள்ளிகள், 408 வயது வந்தோர் நிலையங்கள், 40 ஆதரவுப்பள்ளிகள், 16 ஆதாரப்பயிற்சி பள்ளிகள் உருவாக்கியது.

உடல் ஊனமுற்றோர் கல்வியில் கவனம் செலுத்தி 1950-ல் பூவிரந்த

வல்லியில் பார்வையற்றோருக்கு என விக்மோரியா நினைவுப்பள்ளி ஏற்படுத்தியது. வயது வந்தோர் கல்வியில் அரசு உதவித்தொகை வழங்கிக் கவனம் செலுத்தியது.

ஆண்டுக்கு அரை மில்லியன் டன் உணவு தானியங்கள் கட்டுப்பாடு ஏற்பட்டது. பருவகாலங்கள் தவறியதால் பற்றாக்குறை ஒரு மில்லியன் டன்னாக உயர்ந்தது. குறிப்பிட்ட சில பிரிவுகளில் கதர்த்தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிட்டது. நூல் நூற்பவர்களுக்கு இராட்டைகள் மலிவு விலையில் அளிக்கப்பெற்றன.

சிறுதொழில் வளர்ச்சிக்கு சர்விசுவேசுவரய்யா திட்டம் தீட்டப்பெற்றது. இதன்படி 10 முதல் 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட 15முதல் 20 கிராமங்கள் ஓர் அலகாகப் பிரிக்கப்பெற்றன.

தனியார் தொழில் முனைவோருக்குத் தெழில் நிதியுதவி நிறுவனம் அமைக்கப்பெற்றது. சர்க்கரை வனஸ்பதித் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கப்பெற்றது.

வேளாண்மை முன்னேற்றதிற்கு கீழ்பவானித்திட்டம், பெரியாறு நீர்மின் திட்டம், பயிர் பாதுகாப்புத்திட்டம், கால்நடைப் பாதுகாப்புத்திட்டம், சாலையோரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம், பழத்தோட்டம் உருவாக்கும் திட்டம் ஆகியன வகுத்தார்.

1950-ஆம் அண்டுப் புதிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது. 1952-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் முதலமைச்சர் குதாரசாமி உள்ளிட்ட பெரும்பான்மை அமைச்சர்கள் தோல்வியடைந்தனர். தனிப் பெரும்பான்மை பெற்றபோதிலும் காங்கிரசு அறுதிப்பொரும்பான்மை ஆட்சி அமைக்கும் அளவிற்குப் பெறவில்லை.

**உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக**

1. கூட்டுறவு இயக்கம்
2. இந்து அறநிலையச்சட்டம்

## 1.3 உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. இவ்வியக்கத்தின் மிகப் புகழ்ப்பெற்ற தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்ததோடு பல நிறுவனங்களின் தலைவராகவும் விளங்கினார். மத்தியச் சட்டசபை உறுப்பினராகத் தேர்வு பெற்றார். 1938-ல் இராசபாளையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசியல் மாநாட்டிள் வரவேற்புக் குழுத்தலைவராக விளங்கினார். 1941-ல் தனநபர் அறப்போரில் பங்கேற்று 9 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். பிரகாசம் அமைச்சரவையில் வேளாண்மைத்துறை அமைச்சரானார்.

2. இந்து அறநிலையத்துறையில் நிழவிய ஊழல்களை ஒழித்திட இச்சட்டம் கொண்டுவந்தார். இந்த மசோதாவிற்கு தீவரமான எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே அலயங்களின் நிருவாகிகள், அறங்காவலர் மாநாடு கூட்டி அச்சட்டம் குறித்த கருத்தினை அறிந்தார்.

## 1.4 சுருக்கம்

1950-ஆம் அண்டுப் புதிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது. 1952-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் முதலமைச்சர் குதாரசாமி உள்ளிட்ட பெரும்பான்மை அமைச்சர்கள் தோல்வியடைந்தனர். தனிப் பெரும்பான்மை பெற்றபோதிலும் காங்கிரசு அறுதிப்பொரும்பான்மை ஆட்சி அமைக்கும் அளவிற்குப் பெறவில்லை.

## 1.5 முக்கிய கருத்துப்படிமங்கள்

நாட்டு மக்களுக்குத் தேசியக் கல்வியை ஊட்டும் ஒரு பள்ளியை நிறுவ வேண்டுமென பெசண்ட் அம்மையார் அறிவித்தார். அம்மையார் அதற்கெனத் திட்டமும் அறிவித்தார். அதன்படி ஒவ்வொருவரும் ஒரு நாள் உணவு உண்ணாது காசை மிச்சப்படுத்தி அனுப்பவேண்டும் என்றபோது மாணவராயிருந்த குமாரசாமி, தாமும் மற்ற மாணவர்களை அவ்வாறு சேர்த்துக் கல்வி நிலையத்துக்குக் காசு திரட்டி அனுப்பினார்.அன்னிபெசண்ட் அம்மையாரின் சொற்பொழிவுகளைத் தமிழில் மொழிபெயர்த்து நாட்டு மக்களிடையே பரப்பினார். ‘‘ஹோம் ரூல்’’ இயக்கத்தில் பங்கு கொண்டமைக்காக இரண்டு ஆண்டுகள் சிறைத்தணடனை பெற்றார்

## 1.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. காந்தியடிகளுடன் சந்திப்பு
2. உணவுப்பரச்சினை

**நெடுவினா**

1. 1949-1952 வரை தமிழக அரசின் பணிகளை எடுத்தியம்புக.
2. குமாரசாமி இராஜாவின் அமைச்சரவைக் காலம் தமிழக வரலாற்றில் சோதனை மிகுந்த காலமா என ஆராய்க.

## 1.7 மேலும் படிக்க

1. Baker, C.J – The Politics of South India
2. Rajayyan.K - History of Madurai,1736 -1801 A.D
3. Rajayyan.K - A Real History of Tamil Nadu Upto 2004 A.D
4. Subramanian .N - History of Tamil Nadu (PL.II)

# அலகு-2 ராஜாஜி- தமிழ்நாட்டில் மாநில மறுசீரமைப்பு

**அமைப்பு**

2.0 அறிமுகம்

2.1 ராஜாஜி

2.1.1 தமிழக அரசியலும் அரசாங்கத்திலும் ராஜாஜியின் பங்கு

2.1.2 தமிழக காங்கிரசில் சத்தியமூர்த்தியும் ராஜாஜியும்

2.1.3 தமிழக காங்கிரசும் ராஜாஜியும்

2.1.4 ராஜாஜி - அவரது அமைச்சரவை - கொள்கைகள்

2.2 மாநில மறுசீரமைப்பு

2.2.1 தார் கமிட்டி

2.2.2 ஆந்திர மாநிலம் அமைக்க படுதல் 1953

2.2.3 தனி மாநில கோரிக்கை கிளர்ச்சிகளும் உண்ணாவிரதமும்

2.2.4 மொழிவாரி மாநில மறுசீரமைப்பு கமி'ன்

2.2.5 மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956

2.2.6 தமிழ்நாடு உருவாதல்

2.2.7 தமிழகத்தின் வட எல்லை பிரச்சனை

2.2.8 தமிழ்நாடு பெயர் சூட்டப்படல்

2.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

2.4 சுருக்கம்

2.5 முக்கிய கருத்துப்படிமங்கள

2.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

2.7 மேலும் படிக்க

## 2.1 ராஜாஜி

### 2.1.1 தமிழக அரசியலும் அரசாங்கத்திலும் ராஜாஜியின் பங்கு

தமிழ்நாடு அரசியலில் முக்கியப் பங்கு வகித்த காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் இராஜாஜி. காமராசர் அவர்களின் அரசியல் குருவான சத்திய மூர்த்தி அவர்களுக்கும் ராஜாஜி அவர்களுக்குமிடையிலான அரசியல் மோதல்களை தமிழக அரசியல் வரலாற்றில் அதிலும் குறிப்பாக தமிழக காங்கிரஸின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவையாகும். சுதந்திரத்திற்காகவே போராடி அதனைக் காணாமலேயே மறைந்தவர் சத்தியமூர்த்தி. ஆனால் ராஜாஜி அவர்கள் சுதந்திரத்திற்குப் பின்னால் பொது வாழ்விலும் மற்றும் மத்திய, மாநில அரசுப்பதவிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

மூதறிஞர் என்றும் ஊ.சு என்றும் அன்புடன் அழைக்கப்பட்ட ராஜாஜி அவர்கள் 1878ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் தேதி தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளி என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் நல்லாள் சக்ரவர்த்தி என்பவர் நகரின் முன்சீப் ஆகப் பணியாற்றியவர். சாதாரணக் குடும்பத்தில் பிறந்த இவர் சட்டக்கல்வி பயின்று சேலத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

தம்முடைய அரசியல் பாதையைத் தாமாகவே ஏற்படுத்திக் கொண்டார். அரசியலில் வெற்றிக்குத் தேவையான எந்தவொரு குணாதிசயமும் அவரிடம் காணப்படவில்லை என்றே கூறலாம். தாம் சேலத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் சேலம், திருச்சி, மாவட்டங்களில் அரசியல் பணிகளில் தீவிரமாக இருந்த னுச. ராஜன், ஈ.வெ.ரா, னுச. சுப்பராயன் போன்றோருடன் நட்பு மேற்கொண்டு அவர்களின் மதிப்பையும் பெற்று தனக்கெனதொரு அரசியல் அடித்தளத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

ராஜாஜியின் பொது வாழ்க்கையை அரசியல் சார்ந்ததாகவும், அரசாங்கம் சார்ந்ததாகவும் இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். முதலாவதாக அவருடைய அரசியல் பணியை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். 1916 - ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டு வரையிலும் அவருடைய அரசியல் பணியினை நாம் இரண்டு கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம். 1918 - இல் அவர் சேலம் நகராட்சியின் தலைவராகப் பணியாற்றியதன் பயனாக அவருக்கு ஒரு குறுகிய கால நிர்வாக அனுபவம் கிடைத்தது. அதற்குப் பின்னர் அவர் எந்த விதமானஅதிகாரப் பதவியிலும் இல்லை. இந்தக் காலக் கட்டங்களில் அவர் பெரிதும் எதிர்க்கட்சியாக இருந்து போராடுவதிலேயே இருந்தது.

அரசியல் பணிகளைப்பற்றிக் குறிப்பிடுகையில், சுதேசி இயக்கம், காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கம், உப்பு அறப்போர் ஆகியவற்றில் தம்மை பெரிதளவில் ஈடுபடுத்திக் கொண்டார். சுதேசி இயக்கத்தை நடத்திய வ.உ.சி. சுப்பிரமணிய சிவா ஆகியவர்காளுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டதோடு மட்டுமன்றி வ.உ.சியின் கப்பல் கம்பெனிக்குப் பங்குகள் சேர்த்துக் கொடுத்தார். அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்திலும் பங்கேற்றார்.

தமிழ்நாட்டில் பிரிட்டி' அரசுக்கு எதிராகப் போராடும் தலைவர்களில் ஒருவராகவும், காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தினை மிக கண்டிப்பாக வலியுறுத்தும் தலைவராகவும் விளங்கினார். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தபொழுது தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை கைவிட்டு காந்தியடியகளின் பாதையைப் பின்பற்றினார். பெரியார்

என்று அன்போடு அழைக்கப்படும் ஈ.வே.ரா காங்கிரசில் சேரத் துணையாக இருந்தார். இந்திய தேசிய காங்கிரசின் பொதுச் செயலாளாராகப் பணியாற்றினார். சுயராஜ்யக் கட்சியினருக்கு ஒரு சிம்ம சொப்பனமாக விளங்கியவர் ராஜாஜி. அக்கட்சியினரின் சட்டமன்ற நுழைவுக் கொள்கையை தீவிரமாக எதிர்த்ததோடு மட்டுமில்லாமல் 1926-ஆம் ஆண்டு அக்கட்சியினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவிடாமல் செய்ததில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு.

1930 ஆம் ஆண்டு காந்தியடிகள் தண்டியாத்திரை துவங்கியபொழுது திருச்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத்தில் உறுதிகொண்ட நூறு தொண்டர்களுடன் வேதாரண்யம் நோக்கித் தன் உப்புப் பயணத்தை தொடங்கினார்.வழியெங்கிலும் காந்தியடிகளின் கொள்கைகளை இத்தொண்டர்கள் அறிவுறுத்திச் சென்றனர். வழிநெடுகிலும் இவர்களுக்கு மக்களிடையே அமோக வரவேற்பிருந்தது. உப்பு எடுத்தமைக்காக இவரும் இவருடைய தொண்டர்களும் கைது செய்யப்பட்டுச் சிறை சென்றனர்.

### 2.1.2 தமிழக காங்கிரசில் சத்தியமூர்த்தியும் ராஜாஜியும்:

தமிழக அரசியலில் காங்கிரசின் முக்கியத் தலைவர்களாக இருவரும் இருந்தார்கள். இவருடைய பாதையும் வெவ்வேறாக இருந்தது. சிலநேரங்களில் சந்தித்தும் பலநேரங்களில் பெரிதளவு பிரித்தும் காணப்பட்டன. இவர்கள் இருவருக்குமிடையிலான மோதல்கள் தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை.1887- ஆம் அண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்த சத்தியமூர்த்தி அவர்கள் ஒருசிறந்த வழக்கறிஞர். 1919 ஆம் ஆண்டில் தம்மை காங்கிர்சோடு இணைத்துக் கொண்டார். 1923 ஆம் ஆண்டு சட்டமன்றத்திற்கும், 1935 ஆம் ஆண்டு இந்திய சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆனால் ராஜாஜி அவர்கள் எந்த்வொரு நிலையிலும் எந்தவொரு சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இருவரிடையே கொள்கை ரீதியான வேறுபாடும் போராட்டமும் இருந்தது. 1936 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11 ஆம் தேதி ராஜாஜி காங்கிரசிலிருந்து விலகினார்.

அதே ஆண்டு தமிழ்நடு முழுவதும் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார் சத்தியமூர்த்தி. அதே ஆண்டு மத்திய அளவில் காங்கிரசின் உபதலைவராகவும் இருந்தார். 1937 ஆம் ஆண்டுத் தேர்தலில் சத்தியமூர்த்தி அவர்கள் தமிழ் நாட்டில் அமைச்சரவை அமைப்பார் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ராஜாஜியின் வெகுதந்திரமான இராஜினாமா சூழ்நிலையை முற்றிலும் மாற்று அமைத்து சத்திய மூர்த்தியை போட்டியினின்று விலகும் நிலைக்கு ஆளாக்கியது. ராஜாஜி தன் முதல் அமைச்சரவையை 1937 ஆம் ஆண்டு

அமைத்தார். கட்சிக்குள்ளும், வெளியிலும் ராஜாஜி அதிகாளவில் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ராஜாஜியினால், சத்திய மூர்த்த் அவர்கள் தள்ளி வைக்கப்பட்டிருந்தார். ஆனால் சத்தியமூர்த்தி அவர்கள் தள்ளி சென்னை மாநகராட்சிமூலம் மீண்டும் தமிழக அரசியலுக்குள் புகுந்தார். கட்சித்தலைவர்களுக்குள் தேர்தல் ஏற்பட்டாலும், சத்தியமூர்த்தியை ஆதரிக்கும் தொண்டர்களும் இருந்தனர். அவருடைய பிரசம சீடரான காமராஜ் அவர்கள் 1940 ஆம் ஆண்டு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார். 1941 ஆம் ஆண்டு சத்திய மூர்த்தி சென்னை மாநகராட்சியின் மேயரானார். இந்நிகழ்ச்சியின் கட்சிக்குள் ராஜாஜியின் செல்வாக்கை குறைந்தன.

**2.1.3 தமிழக காங்கிரசும் ராஜாஜியும்:-**

தமிழக காங்கிரசைப் பொறுத்தமட்டில் சிறந்த பேச்சாளரும் ஊக்கத்துடன் உழைக்கும் அரசியல்வாதியுமாகத் திகழ்ந்த சத்தியமூர்த்தி அவர்களினால் ராஜாஜிக்கு கட்சிக்குள் செல்வாக்கு காணப்படவில்லை. காங்கிரஸ் மேலிடத்தில் தன்னுடைய செல்வாக்கினை அறிந்திடும் நோக்கத்துடன் 1936 ஆம் ஆண்டு ராஜாஜி காங்கிரசிலிருந்து விலகினார். சத்தியமூர்த்தி தலைவராகத் தேந்தெடுக்கப் பட்ட பிறகு ராஜாஜியினுடைய ராஜினாமா வி'யம் தேசிய வி'யமாக்கப்பட்டு காங்கிரசின் மேலிடம் இப்பிரச்சனையில் தலையிட்டது. அதன் விளைவாக சத்தியமூர்த்தி போட்டியின்று விலகி ராஜாஜிக்காக விட்டுக்கொடுத்தார். ராஜாஜியின் அரசியலுக்கு ஆதரவு பாமர மக்களிடமிருந்து வரவில்லை. பெரும் உயர்ந்தோர் குழாமிடமிருந்தே வந்தது.

அவர் எப்பொழுதும் தேசியக் கட்சியின் மத்திய தலிமியையே நம்பியிருந்தார். காந்தியடிகளார் எந்தவிதமான அரசாங்க பதவியும் ஏற்கக் கூடாது, பிரிட்டிஷ் ஆட்சிக்கு போரில் ஒத்துழைப்பு தரக்கூடாது என்ற நோக்கத்தில் தனியார் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தார். இதனடிப்படையில் ராஜாஜியின் தலைமையிலான காங்கிரஸ் மந்திரிசபை ராஜினாமா செய்தது. ராஜாஜி இந்த தனியார் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். 1942 ஆம் ஆண்டு காந்தியடிகளினால் துவக்கப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தில் ராஜாஜி சேராமல் காங்கிரசிலிருந்து விலகினார். இரண்டாவது உலகப் போர் முடிந்தவுடன் மீண்டும் அவர் காங்கிரசில் சேர முயற்சித்தார். ஆனால் சம்பந்தப்பட்ட முடிவை எடுக்க காங்கிரஸ் கட்சி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு வழங்கி இருந்தது. அப்பொழுது காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த காமராசர் ராஜாஜியின் அடிப்படை உறுப்பினர் பதவியைக்கூட பறித்துவிட வேண்டும் என்ற எண்ணாத்தில் இருந்தார். இந்நிலையில்

சத்தியமூர்த்தி 1943 ஆம் ஆண்டு காலமானார். அதன் பின்னர் காமராசரின் அதிகாரம் கூடலாயிற்று. ராஜாஜி அவர்கள் காங்கிரஸ் தலைவர் அபுல்கலாம் ஆசாத் உதவியுடன் நாலணா உறுப்பினர் பதவி பெற்று அதன் மூலம் திருச்செங்கோடு காங்கிரஸ் பிரதிநிதி என்ற அடிப்படையில் தமிழ்நாடு பிரதேச காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினர் ஆனார். இதை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எதிர்த்தது. ராஜாஜியின் மறுபிரவேசத்தை பெரும்பான்மையினர் விரும்பவில்லை.

இருப்பினும் இறுதியாக திருப்பரங்குன்றம் மாநாட்டில் ஏற்கப் பெற்றது. ஆனால் இவருக்கு 1946 ஆம் ஆண்டு தேர்தலில் பங்கேற்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில், சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் வெற்றி பெறவில்லை. காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள்கூடி ஏகமனதாக ராஜாஜியைத் தலைவராக ஏற்றனர். அப்பொழுது சென்னை கவர்னராக இருந்த ஸ்ரீ பிரகாசம், ராஜாஜியின் நண்பரும் ஆதரவாளரும் ஆவார். இவர் ராஜாஜியை தந்திரமாக மேல்சபை உறுப்பினராக்கி அவரை அமைச்சரவை அமைக்குமாறு அழைத்தார். இது தமிழகத்தில் இராஜாஜியின் இரண்டாவது அமைச்சரவை. தனது நண்பர் சுப்பராயனை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக நியமனம் செய்து கட்சியிலும் ஓரளவிற்கு தன் ஆதிக்கத்தைத் செலுத்தினார்.

1954 - ஆம் ஆண்டு உடன்நிலை காரணமாக ஓய்வு பெற எண்ணி ராஜினாமா செய்தார். இதற்குப் பின்னர் காங்கிரசிலிருந்து விலகி ஒரு எதிர்க்கட்சியாளராகவே தன் இறுதிகாலம் வரையிலும் இருந்து 1972ம் ஆண்டு காலமானார். நேருவின் சோசலிச கொள்கைகளை இவர் விரும்பவில்லை. பெரும்தொழில் தேசியமயமாக்கும் கொள்கையினை எதிர்த்தார். நேருவின் அரசை 'லைசன்சு, பெர்மிட்' என்று வர்ணித்தார். 1959-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 4-ந் தேதி சுதந்திரக் கட்சியை துவக்கினார். காங்கிரசை தோற்கடிப்பதற்காக 1967-ம் ஆண்டுத் தேர்தலில் தி.மு.க வுடன் உடன்பாடு ஏற்படுத்தி காங்கிரசை தோற்கடித்தார். அதன் பயனாக தி.மு.க வெற்றி பெற்று அமைச்சரவை அமைத்தது. அதன் பின்னர் காங்கிரஸ் இரண்டாக உடைந்தவுடன் இந்திராகாந்திக்கு எதிராக காமராஜ் அவர்களுடன் இணைந்து போராடினார்.

### 2.1.4 ராஜாஜி - அவரது அமைச்சரவை - கொள்கைகள்:

தமிழகத்தில் ராஜாஜி தன்னுடைய முதல் அமைச்சரவையை 1937-ம் ஆண்டு அமைத்தார். 1939 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் அனைத்தும் பதவி விலகிய போது ராஜாஜி முதலில் பதவி விலக மறுத்துப் பின்னர் காந்தியடிகளாரின் தனியார் சத்தியாக்கிரகத்தின் அடிப்படையில் பதவி விலகினார். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் அவரது அமைச்சரவை கொண்டுவந்த சட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில்

சில வரவேற்புக்குள்ளாகின, சில எதிர்ப்புக்குள்ளாகின.

- தீண்டத்தகாதவர் ஆலய நுழைவுச் சட்டம்
- மதுவிலக்குச் சட்டம்
- சென்னை உழவர் நிவாரணச் சட்ட்ம்
- மலிவு விலையில் கதர்துணி வழங்குதல்
- மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பினை சரிக்கட்ட விற்பனை வரி.
- இந்தியை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கினார்.
- வேளாண்மை, கிராமப் பொருளாதாரத்தை அவர் கைக்கொண்டார்.

இவற்றில் விவசாயிகள் கடன் நிவாரணச்சட்டம், தீண்டத்தகாதவர் ஆலய நுழைவு, இந்தியை கட்டாயப்பாடமாக்கியது போன்றவை பெரிதும் எதிர்ப்புக்குள்ளாகியது. ஆனால் அதே சமயத்தில் ஏணியில் முன்னேற விரும்பிய பலர் ராஜாஜியின் கொள்கைகளுக்கு ஆதரவு நல்கினர்.

1939-ஆம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டு வரை தன்னுடைய இரண்டாவது அமைச்சரவை அமைக்கும் வரையிலும் ராஜாஜி பல அரசுப் பொறுப்புக்களில் இருந்தார்.

1946-ல் நேரு அமைத்த இடைக்கால அரசாங்கத்தில் தொழில் துறை அமைச்சராக இருந்தார். 1947-48 ல் மேற்கு வங்க ஆளுநராகவும், 1948 ஜுன் முதல் 1950 ஜனவரி 25 வரை கவர்னர் ஜெனரலாகவும், 1950-51ல் நேருவின் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகவும் பணியாற்றினார். 1952-54 ல் தமிழ்நாட்டு அரசியலில் மீண்டும் புகுந்து முதலமைச்சரானார்.

இரண்டாவது அமைச்சரவை:-

1952 - ம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறவில்லை. காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ராஜாஜியை ஏகமனதாக தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள், இராஜாஜி மேல்சபை உறுப்பினராகி முதலமைச்சர் ஆனார். இவர் அரிஜன கட்சிகளையும், பொதுநலக் கட்சிகளையும், உழைப்பாளார் கட்சியையும் தமக்கு ஆதரவாக்கிக் கொண்டார். இதற்காக பொதுநலக்கட்சியின் மாணிக்கவேலு நாயக்கரை தம்முடைய அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார். இந்த அமைச்சரவை கொண்டு வந்த சட்டங்களும், திட்டங்காளும் பின்வருமாற்.

- உணவுக் கட்டுப்பாட்டை நீக்கி உணவுப் பங்கீட்டைத் தாராளமாக்கினர்.
- தஞ்சைப் பண்ணையார் பாதுகாப்பு மசோதா கொண்டு வந்தார்.

- திருப்பதியை ஆந்திரர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்னை தலை நகரத்தை தமிழகத்துடன் இணைத்தார்.

- புதிய கல்வித்திட்டம் எனும் குலக்கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது.

இவற்றில் ஆந்திரப் பிரிவினையை சமாளித்து, சென்னையை தமிழ்நாட்டுடன் தக்க வைத்துக் கொண்டதால் அவருடைய மதிப்பு அதிகரித்தது. ஆனால், அதேசமயத்தில் அவருடைய குலக்கல்வித் திட்டத்திற்கு நாடெங்கிலும் எதிர்ப்பு அலைவீசிற்று, இந்நிலையில் வேறுவழியின்றி உடல்நிலை காரணமாக ஓய்வுபெற எண்ணி 1954-ஆம் ஆண்டு ராஜினாமா செய்தார்.

பொதுப் பணிகள்:-

- மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டார் திருச்செங்கோட்டிற்கு அருகில் உள்ள புதுப்பாளையத்தில் ஆசிரம் ஒன்றைனை நிருமாணப் பணிகள் நிறைவேற்ற உருவாக்கினார்.

- கலப்புத் திருமணத்திற்கு ஆதரவளிக்கும் முறையில் தம்முடைய மகள் லட்சுமியை காந்தியடிகளார் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்தார்.

- அணுசோதனைகளை நிறுத்துமாறு அறிவுறுத்ட அமெரிக்கா சென்று கென்னடியைச் சந்தித்தார்.

- பி.சி.ஜி என்னும் மருந்துக்கு எதிர் பிரச்சாரம் செய்தார்.

- எந்த இந்திய கட்டாயம் ஆக்கினாரோ அதே இந்திக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார்.

அவருடைய நூல்கள்:-

ராஜாஜி ஒரு தலைசிறந்த எழுத்தாளர். அதிலும் குட்டிக் கதைகள் கூறி தம்முடைய கருத்தை ‘வலுயுறுத்துவதில் வல்லவர்’’வியாசர் விருந்து (மகாபாரதத்தை முழுமையாகவும் தெளிவாகவும் அறிந்துகொள்ளா வழிகாட்டிய நூல்); “சக்கரவர்த்தி திருமகள்” “ கண்ணன் காட்டிய வழி”, உபநிடதப்பலகணி”. “பஜகோவிந்தம்” போன்ற நூல்கள் இன்றும் அவருடைய எழுத்தாற்றலை பறைச்சாற்றுகின்றன. மதுவின் தீமையை தெளிவாக எடுத்துக்கூறி அவருடைய “திக்கற்ற பார்வதி” என்ற நூல் தமிழ் திரைப்படமாக வெளிவந்தது.

## 2.2 மாநில மறுசீரமைப்பு

இந்திய சுதேச அரசுகள் ஒருங்கிணைக்கப்பட்ட பின்பு புதிதாக உருவான மாகாணங்கள் பரப்பிலும் மக்கள் தொகையிலும் பொருளாதார அடிப்படையிலும் முக்கியமான மொழி வகையிலும் முரண்பட்டு காணப்பட்டன ஏனெனில் எந்த ஒரு அடிப்படையான கொள்கையிலும் இணைப்பு ஏற்படுத்தப்படவில்லை எனவே மாகாணங்களின் எல்லைகள் மேலும் சிறப்பாகவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் மாற்றியமைக்க வேண்டும் என்ற பொதுவான கருத்து நிலவியது எனவே தற்காலிகமாக வும் பழமொழிகள் பேசுவோரை கொண்டு அமைக்கப்பட்டிருந்த மாநிலங்களின் எல்லைகளை அறிவுபூர்வமாகவும் நடைமுறைக்கு சாத்தியமானது அளவும் சீரமைப்பு செய்ய வேண்டியது இன்றியமையாதது ஆனது.

### 2.2.1 தார் கமிட்டி

அணைக்கட்டு திட்டங்களில் மிகப்பெரிய கீழ்பவானி திட்டமாகும் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே பவானி ஆற்றின் குறுக்கே இந்த அணை அமைக்கப்பட்டுள்ளது இதன் மூலம் கோவை திருச்சி மாவட்டங்களில் 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன மேலும் மேட்டூரில் நீர்த்தேக்கங்களில் இருந்து ஐந்து மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட்டது கீழ்பவானி க்கு அடுத்த பெரிய திட்டம் மணிமுத்தாறு ஆகும் தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறு ஆகிய மணிமுத்தாறு குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டது இதன் மூலம் ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன மேலும் அமராவதி அணை கட்டும் வைகை அணை கட்டும் காமராஜ் ஆட்சி காலத்தில் தான் அமைக்கப்பட்டன பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்ட சாத்தனூர் அணை கட்டினால் தென்னாற்காடு மாவட்ட நீர் பாசன வசதி பெற்றது.

சேலம் மாவட்டம் கிரு'ணகிரியில் ஒரு அணைகட்டும், செங்கல்பட்டு மாவட்டம் சாத்தூரில் ஆரணி ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டும் கட்டி முடிக்கப்பட்டது. காவிரியின் வடகரையில் புதிய கட்டளை உயர்மட்ட கால்வாயும் காவிரிக்கரையில் புள்ளம்பாடி கால்வாய் வெட்டப்பட்டது. தென் ஆற்காடு மாவட்டம் வீடுகளின் அருகே வராக நதியின் குறுக்கே ஒரு அணையும் அதன் இடப்பக்கத்தில் கால்வாயும் கட்டி முடிக்கப்பட்டன பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் 1961 நேருவின் ஆல் தொடங்கப்பட்டது.

இவ்வாறு காமராஜ் ஆட்சியில் பாசத்துக்குரிய பேர் ஆறுகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் வறண்ட நிலங்கள் வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்றப்பட்டன பருவத்தில் மழை இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் நீக்கப்பட்டது இத்திட்டங்கள் நீரைத் தேக்கி வைத்து பயன் அளித்ததுடன் ஆறுகளில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடாத வாழும் பாதுகாக்கின்றன இவ்வாறு காமராஜர் ஆட்சி காலத்தில் விவசாயம் செய்யப்படும் மொத்தம் 150 லட்சம் ஏக்கரில் 56 லட்சம் ஏக்கர் நிலங்கள் நிலையான நீர் பாசன வசதி பெற்றன.

### 4.3.4 காமராஜர் காலத்தில் ஏற்பட்ட மின்சார புரட்சி

காமராஜர் ஆட்சிக்காலத்தில் மொத்த மக்கள் தொகையில் 70 சதவீதம் மக்கள் கிராமங்களிலேயே வாழ்ந்துவந்தனர் எனவே இந்த கிராமங்களுக்கு எல்லாம் மின்சார வசதி செய்து கொடுத்தால் தான்

பெரும்பான்மையான மக்கள் அதன் பலனை அடைய முடியும் என்பதை காமராஜ் தனது லட்சியமாக கொண்டிருந்தார் அதாவது தமிழகத்தை மின்சார மயமாக்குவதை காமராஜ் ஆட்சி அமைந்து பிரதானமான நோக்கமாக கொண்டிருந்தது.

1951ஆம் ஆண்டில் இருந்து மின்சார வளர்ச்சியில் புதிய வேகம் தோன்றியது தமிழ்நாடு முழுவதும் பரவலாக குறைந்த சக்தி அதே சக்தி மின்சார ரயில்கள் நீரிலேயே மொத்தம் 13628 கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பம்புசெட்டு களுக்கும் 1961இல் மின்சாரம் வழங்கப்பட்டது.

காமராஜர் ஆட்சி மேற்கொண்ட மின்சார திட்டங்களில் மிகப்பெரியது குந்தா நீர் மின்சார திட்டமாகும் கனடாவின் உதவியுடன் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 1960 ஆம் வருடத்திலிருந்து மின்சார உற்பத்தியை தொடங்கியது இத்திட்டத்தை நேருவின் முன்னிலையில் ஒரு தொழிலாளி உற்பத்தி இயந்திரத்தை தொடங்கி வைத்தார் இதன் மொத்த உற்பத்தி திறன் ஒரு லட்சத்து 40 ஆயிரம் கிலோ வாட் ஆகும்.

பைகாரா மின்சார நிலையத்திலிருந்து வெளிப்பட்ட நீரை மேயாறு பள்ளத்தாக்கில் நீர்வீழ்ச்சியாக விழும்படி செய்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது பெரியாறு ஏரியின் நீரை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்காக மதுரை மாவட்டத்திலுள்ள கடலூருக்கு அரசியல் ஒரு மின்சார நிலையம் அமைக்கப்பட்டது இதன் மூலம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடிந்தது மேலும் சென்னை அனல் மின்சார நிலையத்தின் மூன்றாவது பிரிவு 9 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டது மதுரைக்கு வடக்கே உள்ள சமய நல்லூரில் அனல் மின்சார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது அது 14 ஆயிரம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்தது.

இவ்வாறு காமராஜர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களினால் எண்ணற்ற சிறு தொழில்கள் பெருகின மேலும் மின்சாரம் உபயோகிப்போர் எண்ணிக்கையும் அதிகரித்தது கிராமத்திற்கு மின்சாரத்தை வழங்குவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கியது காமராஜ் ஆட்சியின் சாதனையாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும் விநியோகம் செய்வதிலும் மகாரா'டிரம் மேற்கு வங்காளத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டை விளங்கச் செய்த பெருமை காமராஜ் ஆட்சிக்கு உண்டு.

### 4.3.5 காமராஜரின் நிலச்சீர்திருத்த சட்டங்கள்

மக்கள் தொகை பெருக்கம் அளவிற்கு உற்பத்தியாகும் நிலங்கள் பெருகுவது இல்லை எனவேதான் நிலப்பிரச்சனை எந்த ஒரு மாநிலத்திலும் அடிப்படை பிரச்சனையாக உருவெடுத்தது காமராஜர் அறிந்திருந்தார் இதனால் பதவிக்கு வந்த இரண்டு மாத காலத்திற்குள்ளேயே காமராஜர் நிலச்சீர்திருத்தம் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் நிறுத்துவதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் நிலச்சீர்திருத்த துணை குழுவை காமராஜர் அமைத்தார் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் பல நில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் காமராஜர் காமராஜ் ஆட்சி அமைப்பதற்கு முன்பாகவே ஜமீன்தார் ஒழிப்புச் சட்டமும் 1952 தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமும் நிறைவேற்றப்பட்டிருந்தது அதன்பின் காமராஜ் காலத்தில் கீழ்க்கண்ட சட்டங்கள் இயற்றப்பட்டன நில உடைமையாளர்கள் நியாயமற்ற வழியில் தமது நிலங்களில் இருந்து பண்ணை ஆட்களை வெளியேறுவதை தடுக்கும் வகையில் 1955இல் சென்னை புத்தக சாகுபடியாளர்கள் பாதுகாப்பு சட்டம் ஒன்றை கொண்டு வந்தார் காமராஜர் 1956இல் சென்னை குத்தகை சாகுபடியாளர்கள் சட்டம் இந்த சட்டத்தின் மூலம் நியாயமான குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டது அதன்படி நீர்ப்பாசனம் உள்ள விவசாய நிலங்களுக்கு 40 சதவீத விளைச்சல் அல்லது அதற்கேற்ப பணமும் தண்ணீர் ஏற்பாடு செய்து பாய்ச்சப்படும் நிலங்களுக்கு 35 சதவீதமும் மற்ற நிலங்களுக்கு 33 சதவீத விளைச்சல் பணமும் நிர்ணயிக்கப்பட்டது காமராஜர் அடுத்தபடியாக 1962ல் சென்னை நிலசீர்திருத்த சட்டம் கொண்டுவந்தார் இதன்படி ஐந்து பேர் கொண்ட குடும்பம் 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்திருக்க இச்சட்டம் தடை செய்தது 1955இல் விவசாய வருமானவரி சட்டமும் காமராஜரின் ஆட்சியில் தான் கொண்டு வரப்பட்டது.

### 4.3.6 காமராஜரின் பஞ்சாயத்து சீர்திருத்தங்கள்

கிராமப்புற மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக பஞ்சாயத்து முறை காமராஜ் ஆட்சி காலத்தில் மிகவும் சிறப்பாக செயல்பட்டது 1958இல் காமராஜர் காலத்தில் தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் இயற்றப்பட்டது காந்தி ஜெயந்தி விழாவை பஞ்சாயத்து ஆட்சி ஆரம்பமாகும் நாளாக கொண்டாடப்பட்டது 1960 ஆம் வருடம் காந்தி ஜெயந்தி விழாவின்போது தமிழ்நாட்டில் 75 பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பமாயின இதையடுத்து தமிழ் புத்தாண்டு தினத்தில் 129 பஞ்சாயத்து ஊழியர்களும் 1961இல் 129 யூனியன் களும் ஆரம்பமாகி இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் காமராஜர் ஆட்சியில் 333 பஞ்சாயத்து யூனியன் களும் சுமார் 12000 பஞ்சாயத்துகளும் பணியாற்ற ஆரம்பித்தன.

இந்த புதிய பஞ்சாயத்து ஆட்சி தமிழ்நாட்டில் நன்கு வேரூன்றி

செயல்பட்டது பிராமண வேலைகளை பஞ்சாயத்து குள்ளேயே ஏற்று நடத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டது விவசாயம் கல்வி மருத்துவம் குடிநீர் சாலை வசதி கைத்தொழில் மாதர் நலம் குழந்தை பராமரிப்பு முதலிய பல்வேறு பொறுப்புகளை கிராம பஞ்சாயத்துகளுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கொண்டு சிறப்பாக செயல்பட்டனர் இவ்வாறு கிராமப்புற வளர்ச்சியை இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டவர் காமராஜர் ஆவார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. காமராஜர் அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டம்
2. காமராஜரின் நீர்ப்பாசனத் திட்டங்கள்

## 4.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. வறுமையில் உழன்று சிக்கித்தவிக்கும் நாட்டு மக்களின் நாடித்துடிப்பை நன்கறிந்தவர் காமராஜர் எனவே பள்ளிகளுக்கு வரும் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை 1955ஆம் மார்ச் 27 இல் சென்னை பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில் நடந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் அறிவித்தார் காமராஜர் வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் எங்கும் வாழும் மனிதர்க்கெல்லாம் என்று பாடிய பாரதி பிறந்த எட்டயபுரத்தில் மதிய உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார் காமராஜர் 3000 ஊர்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டது 1957,1958 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மதிய உணவுத்திட்டம் இடம்பெற்றது அதற்காக நிதி ஒதுக்கப்பட்டது 1957 நவம்பர் 1ஆம் தேதி முதல் காமராஜரின் மதிய உணவுத் திட்டம் அரசின் ஒப்புதல் பெற்று அரசு நிதி உதவிபெறும் திட்டமாக மாறியது.

2. காமராஜ் ஆட்சியில் கல்வி புரட்சி தொழில் புரட்சி போல் பாசனம் செய்யும் நடைபெற்றது உணவு பற்றாக்குறையை போக்கி தன்னிறைவு காணும் பொருட்டு காமராஜ் ஆட்சியில் பெரிய ஆறுகளின் குறுக்கே நீண்ட வலிமையான அணைகள் கட்டப்பட்டன.அணைக்கட்டு திட்டங்களில் மிகப்பெரிய கீழ்பவானி திட்டமாகும் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே பவானி ஆற்றின் குறுக்கே இந்த அணை அமைக்கப்பட்டுள்ளது இதன் மூலம் கோவை திருச்சி மாவட்டங்களில் 2

லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன மேலும் மேட்டூரில் நீர்த்தேக்கங்களில் இருந்து ஐந்து மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட்டது கீழ்பவானி க்கு அடுத்த பெரிய திட்டம் மணிமுத்தாறு ஆகும் தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறு ஆகிய மணிமுத்தாறு குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டது இதன் மூலம் ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன மேலும் அமராவதி அணை கட்டும் வைகை அணை கட்டும் காமராஜ் ஆட்சி காலத்தில் தான் அமைக்கப்பட்டன பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்ட சாத்தனூர் அணை கட்டினால் தென்னாற்காடு மாவட்ட நீர் பாசன வசதி பெற்றது.

## 4.5 சுருக்கம்

கர்மமே கண்ணாயினர்' என்ற வாக்கிற்கேற்ப தான் எடுத்த காரியங்களை மிகவும் திறமையாக செய்து காட்டியவர். எனவே தான் நாடு அவரை ''கர்மவீரர்'' என்று பாராட்டுகின்றது. காங்கிரசில் பதவி பிரச்சனைகள் எழுகின்ற நேரங்களில் எல்லாம் அப்பிரச்சனைகளைத் தம்முடைய அனுபவத்தினாலலும், திறமையினாலும் சாமர்த்தியமாகச் செயல்பட்டு நல்லவிதமாக முடித்தமையால் ''பெருந்தலைவரானார்''. தமிழ் மக்கிளின் நலனில் அதிக அளவு அக்கறைக் காட்டி, அவர்கள் சீரும் சிறப்புடனும் செயலாற்றிட வழிகவகுத்தவர். தமிழ் மொழியை சென்னை மாநிலத்தின் ஆட்சி மொழியாக்கினார். தந்தை பெரியாரால் பச்சைத் தமிழர்' என்று பாராட்டப்பட்டவர்.

## 4.6 முக்கிய கருத்துப்படிமங்கள்

வறுமையில் உழன்று சிக்கித்தவிக்கும் நாட்டு மக்களின் நாடித்துடிப்பை நன்கறிந்தவர் காமராஜர் எனவே பள்ளிகளுக்கு வரும் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை 1955ஆம் மார்ச் 27 இல் சென்னை பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில் நடந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் அறிவித்தார் காமராஜர் வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் எங்கும் வாழும் மனிதர்க்கெல்லாம் என்று பாடிய பாரதி பிறந்த எட்டயபுரத்தில் மதிய உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார் காமராஜர் 3000 ஊர்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டது 1957,1958 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மதிய உணவுத்திட்டம் இடம்பெற்றது அதற்காக நிதி ஒதுக்கப்பட்டது 1957 நவம்பர் 1ஆம் தேதி முதல் காமராஜரின் மதிய உணவுத் திட்டம் அரசின் ஒப்புதல் பெற்று அரசு நிதி உதவிபெறும் திட்டமாக மாறியது.

இந்த புதிய திட்டப்படி முதல் கட்டமாக 4200 மையங்களில் ஒரு

லட்சத்து 20 ஆயிரம் மாணவர்களுக்கு பகல் உணவு அளிக்கப்பட்டது இதன் மூலம் கிராமப்புறங்களில் அனைத்து சாதியைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் சமமாக அமர்ந்து உணவு அருந்தக் கூடிய சமத்துவ சூழ்நிலை ஏற்பட்டது மேலும் பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது இடையிலேயே பள்ளிப்படிப்பை விட்டு ஓடும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைந்தது காமராஜரின் இந்த மதிய உணவுத் திட்டம் வரலாற்று சிறப்புமிக்க திட்டமாகும்.

## 4.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. காமராஜரின் நிலச்சீர்திருத்த சட்டங்கள்
2. காமராஜரின் பஞ்சாயத்து சீர்திருத்தங்கள்

**நெடுவினா**

1. காமராஜ் மற்றும் அவரது அமைச்சகம்
2. காமராஜரின் வளர்ச்சித் திட்டங்கள்.

## 4.8 மேலும் படிக்க

1. Rajayyan.K - History of Madurai,1736 -1801 A.D
2. Rajayyan.K - A Real History of Tamil Nadu Upto 2004 A.D
3. Subramanian .N - History of Tamil Nadu (PL.II)
4. Gopalakrishnan.M.D – Periyar, Father of the Tamil Race.
5. Sathianathier,R - History of India Vol II.

# அலகு-5 கல்வி- திட்டங்கள்- தொழில்துறை மேம்பாடு- கே. திட்டம் அமைப்பு

5.0 அறிமுகம்
5.1 கல்வி திட்டங்கள்
5.1.1 கல்விக்கு கண் திறந்த காமராஜர்
5.1.2 காமராஜர் காலத்தில் தமிழ் வளர்ச்சி
5.2 காமராஜரின் ஆட்சிக் காலத்தில் தொழி வளர்ச்சி
5.2.1 மத்திய அரசுத் துறை
5.2.2 மாநில அரசுத் துறை தொழில்கள்
5.3 காமராஜர் திட்டம்
5.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
5.5 சுருக்கம்
5.6 முக்கிய கருத்துப்படிமங்கள்
5.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
5.8 மேலும் படிக்க

## 5.0 அறிமுகம்

சாதாரணத் தொண்டராக வாழ்க்கையைத் தொடங்கி இந்திய அரசியலிலும், தமிழ்நாட்டு, அரசாங்க, அரசியலிலும் மிக முக்கியமான பங்கு வகித்தவர் காமராசர். ‘‘பெருந்தலைவர்”, ‘‘கர்மவீரர்”, ‘‘கறுப்புக் காந்தி” என்று பல்வகையாலும் பாராட்டப் பெற்றவர் காமராசர்.

## 5.1 கல்வி திட்டங்கள்

### 5.1.1 கல்விக்கு கண் திறந்த காமராஜர்

சுதந்திரம் எப்படி நாட்டு மக்களின் சிறப்புரிமையோ அதேபோல கல்வி பெறுவதும் நாட்டு மக்களின் பிறப்புரிமையை ஆகும் என்பதை உணர்ந்த காமராஜர் எல்லா இடங்களிலும் புண்ணியகோடி தருவது ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற பாரதியாரின் வரிகளுக்கு செயல் வடிவம் கொடுத்தவர் காமராஜர் ஏழ்மை குடும்பத்தில் பிறந்து வறுமையில் சிக்கி ஆறாவது வகுப்பு வரை மட்டுமே கல்வி பயின்று தொண்டராக காங்கிரஸ் நுழைந்து தலைவராகி முதல்வராக பொறுப்பேற்ற காமராஜர் எல்லோருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்பதை தனது ஆட்சியின் மிகப்பெரிய அலட்சியமாக கருதி செயல்பட்டார்.

முதல்வராக பொறுப்பேற்றவுடன் ராஜாஜி ஆட்சி காலத்தில் மூடப்பட்ட 6000 ஆரம்பப் பள்ளிகளை திறக்க ஆணையிட்டார் மாணவர்கள் பாதிநாள் படிப்பும் மீறினால் குலத்தொழில் செய்ய வகை செய்யும் ராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார் பள்ளிகள் இல்லாத கிராமம் என்ற நிலை மாறி தமிழ்நாட்டில் 300க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட எல்லா

கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன 1954இல் 18 லட்சம் சிறுவர்கள் மட்டுமே படித்த நிலை மாறி 1961-ல் 34 லட்சம் சிறுவர்கள் படிக்கும் நிலை ஏற்பட்டது.

கல்வி வளர்ச்சிக்காக புரட்சிகரமான புதிய திட்டம் ஒன்று காமராஜரால் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது இத்திட்டத்தின்படி பள்ளி வசதிகளைப் பெருக்கும் பணியில் உள்;ர் மக்களின் ஒத்துழைப்பினை பெறுவதற்காக பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நாடு முழுவதும் நடத்த முடிவு செய்யப்பட்டது இந்த மாநாடுகள் மூலமாக பள்ளிகளில் வசதிகளைப் பெருக்கும் முயற்சிக்கு தமிழகமெங்கும் நல்ல வரவேற்பு இருந்தது முதல் பள்ளி சீரமைப்பு மாநாடுகள் 1958 பிப்ரவரி 20 இல் கடம்பத்தூர் இல் நடைபெற்றது இத்தனை மாநாடுகளில் காமராஜர் கல்வி அமைச்சராக இருந்த சுப்பிரமணியம் பொது கல்வி இயக்குனராக இருந்த நேத்து சுந்தரவடிவேலு ஆகியோர் கலந்துகொண்டு ஊக்கம் அளித்தனர் 1958 முதல் 1963 வரை 150 பள்ளி சீரமைப்பு மாநாடுகள் மூலமாக பொதுமக்கள் மனமுவந்து அளித்த உதவிகளால் சிறுவர் சிறுமியர்களுக்கு இலவச உணவு உடை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பதே காமராஜரின் லட்சியம் எனவே 1955,1956 ஆம் ஆண்டு முதல் எல்லா ஏழை சிறுவர் சிறுமியர்களுக்கு இலவச கல்வி அளிக்க உத்தரவிட்டார் 1960 ஆம் ஆண்டில் பதினோராம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட்டது உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 471 இலிருந்து 1961இல் 1361 ஆக உயர்ந்தது. மேலும் காமராஜர் ஆட்சி காலத்தில் தொழில் கல்வி வளர்ச்சிக்காக 10 பொறியியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன மேலும் மருத்துவ கல்லூரிகள் கால்நடை மருத்துவ கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் ஆகிய எண்ணிக்கையில் தொடங்கப்பட்டன இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில்தான் நூலகச் சட்டம் ஏற்றப்பட்டது 1953இல் ஒரே கிளை நூலகம் மட்டும் இருந்தது அது 1961-ல் 454 ஆக உயர்ந்தது 1947, 1948 சென்னை மாகாண அரசு கல்விக்காக 704 லட்சம் ரூபாய் செலவு செய்தது ஆனால் அது 1963இல் 134 கோடி ரூபாயாக உயர்ந்தது அதாவது மாநிலத்தின் மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பாகம் கல்விக்காக செலவிடப்பட்டது.

இவ்வாறு காமராஜர் ஆட்சி காலத்தில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டு மக்களிடையே எதிர்காலத்தின் மீது மிகப்பெரிய நம்பிக்கை ஒளி வீசியது கல்வியில் புரட்சி செய்து சமுதாயப் புரட்சிக்கு வித்திட்ட பெருமை கர்மவீரர் காமராஜருக்கு மட்டுமே உண்டு.

### 5.1.2 காமராஜர் காலத்தில் தமிழ் வளர்ச்சி

தமிழன்னையை முதன்முதலில் அரியாசனத்தில் ஏற்றி வைத்த பெருமை காமராஜருக்கு உண்டு தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு காமராஜர் ஆட்சியில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ஆயிரத்து 956 டிசம்பர் 18ம் தேதி 1957 1958ம் வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தை தமிழில் சமர்ப்பித்து சாதனை படைத்தார் சி சுப்பிரமணியம் 1956 டிசம்பர் 27 தமிழ் ஆட்சிமொழி மசோதா ஸ்ரீ சுப்பிரமணியர் அதனால் அறிமுகப்படுத்தப்பட்டது 1959 ஜனவரியில் தமிழ் அறிஞர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் அமைக்கப்பட்டது இதற்கு கல்வி அமைச்சரை தலைவராவார்.

கல்லூரிகளில் பாடங்களை கற்பிக்கும் மொழியாக தமிழை கொண்டு வரவும் தமிழில் மலிவான விலையில் உயர் கல்விக்கான பாடநூல்களை வெளியிடவும் இந்த மன்றம் செயல்பட்டது 1959 ஜனவரி 26இல் தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் தமிழைப் பயிற்று மொழியாக அதற்கான திட்டம் வகுத்தது முதன்முதலாக கோவை அரசினர் கல்லூரியில் 1960, 1961 இல் புதிய வகுப்புக்கு மட்டும் தமிழை பயிற்று மொழி ஆக்குவது என்று தீர்மானித்தது இத்திட்டம் பின்னர் 1963,1964 கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது.

தமிழை பயிற்று மொழியாக்க படிப்பவர்களுக்கு மாத தொகையும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டன தரமான ஆங்கில பாட நூல்கள் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது காமராஜர் ஆட்சியில் கலைச்சொல் அகராதி கொண்டுவருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது அதன்படி 1960இல் வேதியியல் உளவியல் புவியியல் வானியல் போன்ற பல்வேறு திட்டங்களுக்கான கலைச்சொல் அகராதி தயாரிக்கப்பட்டு மலிவு விலையில் விற்கப்பட்டன.

மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்ட பின்பு மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்றக்கோரி எழுந்தது காமராஜர் ஆட்சி இதனை பரிவுடன் பரிசீலித்து 1961 பிப்ரவரி 24 இல் ஒரு அறிக்கையை சட்டப்பேரவையில் சுப்பிரமணியம் சமர்ப்பித்தார் ஸ்டேட் என்பதை தமிழில் எழுதும்போது இனி தமிழ்நாடு என்று எழுத அரசு முடிவெடுத்தது அரசாங்க நிர்வாக கடிதப் போக்குவரத்தில் இனி தமிழ் நாடு என்றுதான் எழுதப்படும் என்று அரசு அறிவித்தது இதன்படி தமிழகமெங்கும் பெயர்ப்பலகைகளில் தமிழ்நாடு என்று பொறிக்கப்பட்டது.1962 டிசம்பரில் காமராஜரின் ஆட்சிக்

காலத்தில் பாரதியாரின் 89வது பிறந்த நாள் சென்னை நகரில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது தமிழ் கவிஞர் ஒருவருக்கு அரசு அதிகாரப்பூர்வமாக விழா எடுத்து சாதனையை நிகழ்த்திக் காட்டியது காமராஜர் ஆட்சியாகும்.

## 5.2 காமராஜரின் ஆட்சிக் காலத்தில் தொழி வளர்ச்சி

காமராஜர் ஆட்சி கல்வியில் புரட்சி செய்து சாதனை படைத்ததை போல தொழில் துறையிலும் புரட்சி செய்து வரலாறு படைத்தது தமிழகத்தை அழைத்துச்செல்ல காமராஜர் ஆட்சியில் எண்ணற்ற முயற்சிகள் செயல் வடிவம் பெற்றன காமராஜர் ஆட்சி காலத்தில் தமிழகம் முழுவதும் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன இதனால் வேலை வாய்ப்புகள் அதிகரித்தன.

### 5.2.1 மத்திய அரசுத் துறை

காமராஜர் ஆட்சி காலத்தில் துவங்கப்பட்ட மிகப்பெரிய மத்திய அரசின் திட்டம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டமாகும் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருக்கும் சுமார் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரியை வெட்டி பயன்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும் இந்த பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக்கு பயன்படுவதாகும் இந்தத் திட்டம் 86 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது நெய்வேலி இரண்டரை லட்சம் கிலோவாட் உற்பத்தி திறனுள்ள அனல் மின்சார நிலையம் ர்'ய நாட்டு உதவியுடன் தொடங்கப்பட்டது.

சென்னை பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை சுவிட்சர்லாந்து நாட்டு உதவியுடன் தொடங்கப்பட்டது இதன்மூலம் ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் பல தொழில்கள் பெருகவும் வாய்ப்பளித்தது மத்திய அரசின் முதலீட்டில் சென்னைக்கு அருகில் என்ற இத்தாலிய நிறுவனம் ஒப்புதலுடன் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை நிறுவப்பட்டது பிரஞ்சு தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் நீலகிரியில் கச்சா பிலிம் உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

திருச்சிக்கு அருகில் திருவெறும்பூரில் கனரக கொதிகலன் தொழிற்சாலையும் ஆவடியில் ராணுவ தளவாட தொழிற்சாலையில் முகத்தில் அறுவை சிகிச்சை கருவிகள் செய்யும் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டன.

### 5.2.2 மாநில அரசுத் துறை தொழில்கள்

மாநில அரசின் முதலீட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக இந்தியிலும் விருது நகரிலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன அதேபோல ஈரோடு தஞ்சாவூர் திருச்சி மதுரை நெல்லை மார்த்தாண்டம் ஆகிய ஊர்களிலும் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டன இந்த தொழிற்பேட்டைகளை பெரிய தொழில்களுக்கும் நடுத்தர தொழில் வளர்க்கும் தேவைப்படும் உப கருவிகள்

உற்பத்தி செய்யப்பட்டன இந்த சிறுதொழில்கள் பிரிவுகள் மூலம் 500 சிறுதொழில் முனைவோர் பயனடைந்தனர்.

மேலும் தனியார் துறையில் பொறியியல் தொழில் துணி உற்பத்தி சிமெண்ட் ஆகியவைகளின் உற்பத்தியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது காமராஜ் ஆட்சியின் போது தான் ராஜபாளையம் ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது துணி உற்பத்தி தொழிலில் 1961இல் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டது காமராஜர் ஆட்சி காலத்தில் வடபாதி மங்கலம் பேட்டை வாய் தலை ஆகிய இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டன 1961இல் மேலும் 9 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி தரப்பட்டது பொறியியல் துறையிலும் கணிசமான வளர்ச்சி பெற்றன வண்டலூரில் ஸ்டாண்டர்ட் மோட்டர் தொழிற்சாலை திருவொற்றியூரில் ராயல் என்.ஃ.பீல்டு மோட்டார்சைக்கிள் எண்ணூர் அசோக் லேலண்ட் ஆகியவை தொடங்க அரசு பல்வேறு உதவிகளை செய்தது.

சோயி நிறுவனத்தாரின் காகிதத் தொழிற்சாலைகள் காமராஜ் ஆட்சி காலத்தில்தான் தொடங்கப்பட்டது மேட்டுப்பாளையம் அருகில் விஸ்கோஸ் நிறுவனத்தின் சேர்க்கப்பட்டு தொழிற்சாலை தொடங்கப்பட்டன இவ்வாறு காமராஜர் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு தொழில் வளம் பெற்றது தமிழ்நாட்டில் இந்த தொழில் புரட்சி ஏற்பட்ட காமராஜருக்கு பெரிதும் துணை நின்ற தொழில் அமைச்சர் ஆர் வெங்கட்ராமன் ஆவார்.

## 5.3 காமராஜர் திட்டம் (கே. திட்டம்)

காமராஜருக்கும் நேருவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது நேருவின் தலைமையில் காமராஜர் ஏற்று நடந்து வந்தார் காமராஜரின் தேசிய பணியில் நேரு பெரும் மதிப்பு வைத்து முக்கிய சிக்கல்களில் அவரை கலந்து ஆலோசனை செய்தார் 1962 இல் நடைபெற்ற சீன படையெடுப்பிற்கு பிறகு காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சரியத் தொடங்கியது எனவே கட்சியை வலுப்படுத்துவதற்காக மூத்த காங்கிரஸ் தலைவர்கள் அரசு அதிகாரத்தையும் பதவியையும் இழந்து விட்டு கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என்று காமராஜ் இதுவே காமராஜ் திட்டம் எனப்படும்.

பிரதமர் நேரு காமராஜ் திட்டத்தை ஏற்றுக்கொண்டார் இந்த திட்டப்படி தமிழக முதல்-அமைச்சர் பதவியை விட்டு 1963 அக்டோபர் 1ஆம் தேதி கட்சிப் பணிக்கு தம்மை அர்ப்பணித்தார் காமராஜ் ஆனால் இந்தத் திட்டம் பலரால் விமர்சிக்கப்பட்டது.

பெரியார் நற்சான்றிதழ் வழங்கிய காமராஜரின் ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது காமராஜ் ஆட்சி என்றால் எளிமை வாய்மை தூய்மை நேர்மை திறமை என்ற பொருளாகும் எளிமையான ஆட்சியை ஊழல் பகட்டு ஆரவாரம் இல்லாத ஒளிவுமறைவற்ற வெளிப்படையான ஆட்சி அமைத்தவர் காமராஜர் தான் ஆட்சி செய்த ஒன்பது ஆண்டுகளில் தமிழக அவர் முன் நின்றது தமிழ்நாட்டின் ரட்சகர் என்றும் கல்வி வள்ளல் என்றும் பெரியாரால் போற்றப்பட்ட காமராஜர் 1975 அக்டோபர் 2 இறந்தபோது அவருக்கு சொந்தமாக இருந்தவை பத்து கதர் சட்டைகளும், வேஸ்டிகளும், ஒரு நூறு ரூபாய் நோட்டு மட்டுமே ஆகும்.

**உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக**

1. காமராஜர் காலத்தில் தொழில் வளர்ச்சி
2. மாநில அரசுத் துறை தொழில்கள்

## 5.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. காமராஜர் ஆட்சி காலத்தில் துவங்கப்பட்ட மிகப்பெரிய மத்திய அரசின் திட்டம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டமாகும் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருக்கும் சுமார் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரியை வெட்டி பயன்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும் இந்த பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக்கு பயன்படுவதாகும் இந்தத் திட்டம் 86 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது நெய்வேலி இரண்டரை லட்சம் கிலோவாட் உற்பத்தி திறனுள்ள அனல் மின்சார நிலையம் ர்'ய நாட்டு உதவியுடன் தொடங்கப்பட்டது.

2. மாநில அரசின் முதலீட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக இந்தியிலும் விருது நகரிலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன அதேபோல ஈரோடு தஞ்சாவூர் திருச்சி மதுரை நெல்லை மார்த்தாண்டம் ஆகிய ஊர்களிலும் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டன இந்த தொழிற்பேட்டைகளை பெரிய தொழில்களுக்கும் நடுத்தர தொழில் வளர்க்கும் தேவைப்படும் உப கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன இந்த சிறுதொழில்கள் பிரிவுகள் மூலம் 500 சிறுதொழில் முனைவோர் பயனடைந்தனர்.

## 5.5 சுருக்கம்

பெரியார் நற்சான்றிதழ் வழங்கிய காமராஜரின் ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது காமராஜ் ஆட்சி என்றால் எளிமை வாய்மை

தூய்மை நேர்மை திறமை என்ற பொருளாகும் எளிமையான ஆட்சியை ஊழல் பகட்டு ஆரவாரம் இல்லாத ஒளிவுமறைவற்ற வெளிப்படையான ஆட்சி அமைத்தவர் காமராஜர் தான் ஆட்சி செய்த ஒன்பது ஆண்டுகளில் தமிழக அவர் முன் நின்றது தமிழ்நாட்டின் ரட்சகர் என்றும் கல்வி வள்ளல் என்றும் பெரியாரால் போற்றப்பட்ட காமராஜர் 1975 அக்டோபர் 2 இறந்தபோது அவருக்கு சொந்தமாக இருந்தவை பத்து கதர் சட்டைகளும், வேஸ்டிகளும், ஒரு நூறு ரூபாய் நோட்டு மட்டுமே ஆகும்.

## 5.6 முக்கிய கருத்துப்படிமங்கள்

காமராஜருக்கும் நேருவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது நேருவின் தலைமையில் காமராஜர் ஏற்று நடந்து வந்தார் காமராஜரின் தேசிய பணியில் நேரு பெரும் மதிப்பு வைத்து முக்கிய சிக்கல்களில் அவரை கலந்து ஆலோசனை செய்தார் 1962 இல் நடைபெற்ற சீன படையெடுப்பிற்கு பிறகு காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சரியத் தொடங்கியது எனவே கட்சியை வலுப்படுத்துவதற்காக மூத்த காங்கிரஸ் தலைவர்கள் அரசு அதிகாரத்தையும் பதவியையும் இழந்து விட்டு கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என்று காமராஜ் இதுவே காமராஜ் திட்டம் எனப்படும்.

## 5.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. கல்வி திட்டங்கள்
2. தொழில் துறை மேம்பாடு

**நெடுவினா**

1. காமராஜர் காலத்தில் தமிழ் வளர்ச்சி
2. காமராஜர் திட்டம்

## 5.8 மேலும் படிக்க

1. Natarajan.C- Social History of Modern Tamilnadu
2. Subramanian.N-Hhistory of Tamil Nadu 1336 -1984 A.D
3. Devanesan.A -History of Tamil Nadu upto1995 A.D
4. Balasundaram.M - Kamaraj and his secrets of Success

# அலகு-6 எம்.பக்தவத்ஸலம் - இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி-காங்கிரஸ் அமைச்சரவையின் சாதனைகள் 1947-1967.

**அமைப்பு**

6.0 அறிமுகம்
6.1 மீ.பக்தவத்சலம்
6.2 இந்தி எதிர்ப்புப் போராட்டம்
6.2.1 சுதந்திரத்துக்கு முன் இந்தித் திணிப்பும், இந்தி எதிர்ப்பு போராட்டமும்
6.2.2 சுதந்திரத்திற்குப் பிறகு இந்தி எதிர்ப்புப் போராட்டம்
6.3 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சகட்டம்: 1965
6.3.1 பக்தவத்சலம் பதவி ஏற்றதும், போராட்டத்தின் புதிய வேகமும்
6.3.2 குடியரசு தினமும் துக்க தினமும்
6.3.3 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள்
6.4உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
6.5 சுருக்கம்
6.6 முக்கிய கருத்துப்படிமங்கள்
6.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
6.8 மேலும் படிக்க

## 6.0 அறிமுகம்

## 6.1 மீ.பக்தவத்சலம்

பெரியவர் பக்தவத்சலம் என்று அழைக்கப்படும் 1897 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ஆம் தேதியன்று செங்கல்பட்டு மாவட்ட நாசரத் பேட்டையில் கனகசபாபதி, மல்லிகா தம்பதியினருக்கு மகனாய்ப் பிறந்தார். இளம் வயதிலேயே தந்தையாரை இழந்த அவரை அவருடைய மாமா முத்துரங்கம் வளர்த்தார். அவர் தீவிரமான காங்கிரஸ்வாதியும், சுத்ந்திரப் போராட்ட வீரருமாவார். இவரை தேசப்பற்றுடையவராகவும், இந்து மதப்பற்றுடையவராகவும் வளர்த்தார். 1920-ஆம் ஆண்டில் அவருடைய தாயார் காலமானார்.

கல்வி

தன்னுடைய தொடக்கக் கல்வியைப் பொன்னேரியிலும், பள்ளிக்கல்வியை சென்னை கிறித்துவமி‘ன் பள்ளியிலும், மயிலை மயிலாப்பூர் பி.எஸ். உயர்நிலைப்பள்ளியிலும் முடித்தார். சென்னை மாநிலக்கல்லூரியில் பொருளாதாரத்தை முக்கியப் பாடமாகக் கொண்டு பி.ஏ. பட்டப்படிப்பு முடித்தார்.

சென்னை சட்டக்கல்லூரியில் தம்முடைய சட்டப்படிப்பை முடித்தார். விடுதலைப் போராட்ட வீரரான டி.வி.கோபாலசாமி முதலியாரின் மகள் ஞான சுந்தரியை 1902-ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். அல்லாடி கிரு'ணசாமி அய்யரிடம் ஓராண்டு பயிற்சி பெற்றதற்குப் பின்னர் தனியாக வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு

கல்லூரியில் பயின்ற காலத்திலேயே டாக்டர் அன்னிபெசண்ட்டின் ஹோம் ரூல் இயக்கத்தில் ஆர்வம் கொண்டார். மகாத்மா காந்தியால் கவரப்பட்டு 1920-ல் சுதந்திர இயக்கத்தில் ஊர்வலத்தை தலைமை தாங்கி நடத்தியதற்காக ஆறுமாத சிறைத்தண்டனைப் பெற்று வேலூர் சிறையில் இருந்தார். தேசிய அளவிலான சுதந்திரப் போராட்டத்தில் அவர் கொண்டிருந்த ஆர்வமே அவரை விடுதலை இயக்கத்தில் நாட்டம் கொள்ளச்செய்தது. 1940-41-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றுச் சிறைத் தண்டனைப் பெற்றார். அம்ரோட்டிச் சிறைச்சாலையில் மூன்றாண்டுகள் இருந்தார். அப்பொழுது இவருடன் சிறையில் அருந்தவர்களில் முக்கியமானவர்களில் கு.காமராசரும், வி.வி கிரியும் ஆவார்கள்.

அரசியல், அரசாங்கப் பதவிகள்

1921-22-ல் அவர் செங்கல்பட்டு மாவட்டம் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்ட்டார். 1927-ல் சென்னை காங்கிரஸின் வரவேற்புக்குழச் செயலாளராகப் பணியாற்றினார். காங்கிரஸ் இயக்கத்தில் தமிழ்நாடு காங்கிரஸின் செயலாளர், துணைத் தலைவர் ஆகிய பொறுப்புளிலிருந்தும் பணியாற்றினார். அகில இந்தியக் காங்கிரஸின் செயற்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். 1933-ல் இவர் செங்கல்பட்டு மாவட்ட வாரியத்திற்கு துணைத் தலைவராகவும் 1933-ல் ஹரிஜன செவா சங்கத்தின் துணைத்தலைவராகவும் 1937-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் துணை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938 முதல் 1946-ஆம் ஆண்டு வரையிலும் சென்னை சட்டமன்ற உறுப்பினர்களின் அமைப்பாளரானார்.1952-ல் ''பாரததேவி'' எனும் பத்திரிகையின் ஆசிரியரானார். இப்பத்திரிகையே பின்னர் தினமணியுடன் இணைந்தது. 1956-ல் ஐரோப்பாவில் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் மாநாட்டிற்குச் சென்ற தூதுக் குழுவிற்குத் தலைமை வகித்தார். 1960-ஆம் அண்டு சோவியத் ர'யாவிற்குச் சென்றார்.

அமைச்சர்கள்

1946 இவர் ஓ.பி ராமசாமி ரெட்டியார் அமைச்சரவையிலும், அதற்குப் பின்னர் 1949-ல் பி.எஸ். குமாரசாமி ராஜா அமைச்சர் அவையிலும் அமைச்சராகப் பணியாற்றினார். 1952-ஆம் அண்டு நடைபெற்ற தேர்தலில்

தோல்வி அடைந்தார். ஆனால் 1953-ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில் இவரை இராஜாஜி தம்முடைய அமைச்சரவையின் நாடாளுமன்ற நடவடிக்கைச் செயராளராக நியமித்தார். அதற்குப் பின்னர் தம்முடைய அமைச்சரவையிலும் சேர்த்துக் கொண்டார். பின்னர் காமராசர் அமைச்சர் அவையிலும் இடம் பெற்றார். 1967 முதல் 1967 வரை முதல் அமைச்சராகப் பணியாற்றினார்.

'காமராசரின் திட்டப்படி' காமராசர் பதவி விலகிடவே பக்தவத்சலம் 963-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் தேதி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். 21 ஆண்டுகள் அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அரசாங்கத் துறைகளில் பொறுப்பு வகிக்காத துறைகளே இல்லை எனலாம்.

அக்டோபர் 2, 1963இல் பக்தவத்சலம் ஒரு மனதாக தமிழக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 12 துறைகளுக்கு முதலமைச்சராக அவர் பொறுப்பேற்றார். நிதி, கல்வி, தொழிலாளர் நலம், சட்ட வாரியங்கள், தேர்தல், இந்து அறநிலையத்துறை, பொதுத்தகவல், வருவாய் நிருவாகம், மாவட்ட நிருவாகம், வருவாய் வாரியம், திட்டமிடல், ஆட்சிமொழி அகிய துறைக்குப் பொறுப்பு வகித்தவர் அவர்.

மிகவும் விரைந்து முடிவெடுக்கும் ஆற்றல் இவரிடம் காணப்பெற்றது. 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பை கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு ஒடுக்கினார். தம் முதலமைச்சர் பதவிக் காலத்தில் சிறந்த மதலமைச்சர் என மெய்ப்பித்தார்.

1967ஆம் ஆண்டு தேர்தலில் அவர் தன் பதவியை வெற்றி வாய்ப்பை இழந்தார். தனிச்சிறப்பு வாய்ந்த அரசியல் உள்ளுணர்வு வாய்ந்தவராய் விளங்கினார். எந்தப் பிரச்சனையையும் நேரான நோக்கில் அணுகினார். ஏந்தச் சட்டமும் வரைவையும் தாமதப்படுத்தியதில்லை. ஒவ்வொரு துறையும் அவருடைய வழி காட்லின் பேரில் இயங்கியது.

இந்து அறநிலையத் துறையில் தனிக்கவனம் செலுத்தினார். மிகவும் தீவரக் கடவுள் நம்பிக்கை உடையவராய் விளங்கினார். ஆலயங்களின் நிலையை ஆராய்ந்து பழுதடைந்த கோவில்களைப் பழுது பார்த்துக் குடமுழுக்கு நடைபெற வகை செய்தார். யுனெஸ்கோவின் நிதியுதவியுடன் திருவரங்கம், இராமேஸ்வரம், வரதராஜ சுவாமி திருக்கோவில் அகியன திருப்பணிக்கு ஆளாக்கினார். காஞ்சி ஆச்சாரியரின் ஆசியுடன் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடுகள் நடைபெற்றன. ஆலய வழிகாட்டி நூல்கள், ஸ்தல

புராணங்கள் அச்சிட வகை செய்தார். ஆலயம் செல்லும் அடியவர் வசதிக்காகக் கல்யாண மணடபம், தங்குமிடங்கள் கட்டினார். கோயில் குளங்கள் தூர்வரித் தூய்மை செய்யப் பெற்றன.

இந்திய அறநிலைய, அறக்கட்டளைச் சட்டம் 1.1.1960 முதவ் நடைமுறைக்கு வந்தது. ஆலயங்களில் செயல் அலுவலர்கள் துணை ஆணையர்களாகப் பதவி உயர்வு பெற்றனர். அலுவலகப் பணியாளர் அரசுப் பணியாளர் அயினர். சுமயப்பணிகள், அலயற்களின் பணிகளைக் கவனிக்க ஆலோசனைக் குழுவினை நியமித்தார். கன்னியாகுமரி, செங்கோட்டை மாவட்ட ஆலய நிருவாகம் சென்னை மாநிலத்திற்கு மாறுதல் பெற்றது. அதற்கெனப் புதிய சட்டம் ஏப்ரல் 1, 1960 முதல் நடைமுறைக்கு வந்தது. சி.பி. இராமசாமி ஐயர் குழு ஆலயங்களின் பணிகளை மதிப்பிட்டுப் பக்தவத்சலத்தின் பணிகளைப் பாராட்டத்தக்கது.

பொதுப்பணித்துறை

பொதுப்பணித்துறை அமைச்சராக 1946 முதல் 1952 வரை பலிவேறு பாசன, மின் திட்டங்களை உருவாக்கினார். கீழ்பவானி திட்டம், பரம்பிக்குளம் அலியார் திட்டங்கள் சில குறிப்பிடத்தகு திட்டங்களாகும். மதுரை மாவட்டத்தில் வைகைத் திட்டம் மேற்கொள்ளப் பெற்றது. மோயார் நீர்மின் திட்டம் குந்மே மின் திட்டம் ஆகியன மேற்கொண்டார். 1949இல் 245 இலட்சம் மதிப்பீட்டில் மேட்டூர் கால்வாய்த்திட்டம் உருவாயிற்று. 1951இல் ஆரணியாறு திட்த்தின 95.22 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கினார். பெரிய நீர்மமின் திட்டங்களை விடச் சிறிய பாசனத் திட்டங்கள் சிறந்தவை என்று கருதினார்.

மோயார் திட்டம் (364 இலட்சம்) பைக்காரா விரிவு (326 இலட்சம்) பாபனாசம் விரிவாகத் திட்டம் (மதுரை னல் மின் திட்டம்) உள்ளிட்டவை உருவாயின. 1949இல் மின் வழங்கல் நிறுவனங்கள் தேசிய மயமாயின. மூன்று நிறுவனங்கள் இருபது தல அமைப்புகள் அரசினால் மேற்கொள்ளப் பெற்று மின் உற்பத்தி அண்டுதோறும் அதிகரித்தது. 1946இல் மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த அளவு 98,100கி வாட்டாக இருந்தது. இந்தியாவின் தலையாய மாநிலமாகக் கிராமப்புற மின் மயமாக்களில் சென்னை மாநிலம் விளங்கியது. 1946இல் 1,003 கிராமங்கள், நகரங்கள் மின் வசதி பெற்றிருந்தன. 1951இல் 1800 கிராமங்கள் மின் வசதி பெற்றன. இவ்வாறாக மூன்று மின் திட்டங்கள் விரிவாக்கத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

நெடுஞ்சாலைகள்

பக்தவத்சலம் பொதுப்பணித்துறையில் நெடுஞ்சாலைத் துறையைச் சாலைகள் அமைக்க நிருவகிக்க உருவாக்கினார். 1951இல் சென்னை மாநிலத்தில் சாலை வசதி 2,12,526 மைல்களுக்கு இருந்தது.

உணவு மேலாண்மை

வேளாண்மைத் துறையை ஒன்பது ஆண்டுகளும், உணவுத்துறையை நான்கு ஈண்டுகளும் நிருவகித்தார். தரமான விதைகள், இரசாயணஉரம், இயற்கை உரம் உருவாக்கல் முதலிய பணிகளை அவருடைய அரசு மேற்கொண்டது. பசுநதாள் உரத்துடன் 1962 வரை 40.95 இலட்சம் ஏக்கர் மேற்கொள்ளப் பெற்றது. இரண்டாவது திட்டக் காலத்தில் 3.3 இலட்சம் ஏக்கர்கள் பாசன வசதிகள் பெற்றன். சிறுபாசன திட்டத்திற்கு அரசு 7.39 கோடிகளை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது செலவிட்டது, மாநில விதைப் பண்ணைகள் வாயிலாகத் தரமான விதைகள் வழங்கினர். இரண்டாவது திட்ட முதலில் 134 பண்ணைகள் இருந்தன. வேளாண்மைக் கடன்களுக்கு 1955-56இல் ஈறு கோடி வழங்கப் பெற்றது. 1960-61இல் 25.7 கோடியாக உயர்ந்தது. உணவு உற்பத்தி 38 இலட்சம் டன்களிலிருந்து முதல் திட்டக் காலத்தில் 44 இலட்சம் டன்களாக உயர்ந்தது. தானிய உற்பத்தி 51,00,000 டன்களாகும். இரண்டாவது திட்டக் கலத்தில் 44 இலட்சம் 52இலட்சம் டன்களாக உயர்ந்தது. உலக உணவு காங்கிரசு அமெர்க்காவில் நடைபெற்றபோது 1963இல் அதற்குத் தலைமை தாங்கினார். வேளாண்மையில் அங்கிரந்து திரும்பியதும் அறிவியல் முறைகளை அறிமுகம் செய்தார்.

தொழில், தொழிலாளர்: சிறுதொழில் வளர்ச்சிக்கும் தொழிலாளர் நலனுக்கும் பெரும் பணியாற்றினார். தேசிய மதிப்புச் சட்டத்தினை உருவாக்கினார். தேசியக் கொடி, காந்தி அடிகளுக்கு மக்களை மரியாதை செய்ய வைத்தார். 1964இல் ஊராட்சிப் புதிய சட்டமுன் வரைவு நிறைவேற்றினார். ஆழ்கடல் மீன்பிடித் திட்டம் ஊக்குவித்தார் 67 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 25.47 இலட்சங்கள் வழங்கினார். தோட்டப் பண்ணைத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.

2000 பசுக்கள், எருமைகளைக் கவனிக்கும் ஒவ்வொரு முதன்மைக்கிராம அமைப்புகள் என 15 அமைப்புகளை உருவாக்கினார். நீலகிரியில் ஆட்டுப்பண்ணை வளர்ப்பு, கண்டபடி விலங்குகளைப் பலியிடத் தடை ஆகியன மேற்கொண்டார்.

பெண் கல்வியைப் போற்றியவர் 300க்கு மேல் உள்ள கிராமங்களில் தொடக்கப் பள்ளிகளைத் திறந்தார். 1963-64இல் 30,020 பள்ளிகள் இருந்தன. அரசுப்பள்ளிகள் 4.26 இலட்சங்களாக உயர்ந்தன. மூன்றாம் வகுப்பிலிருந்தே அங்கிலம் கற்பிக்க வகை செய்தார். 30,000 பள்ளிகளில் மதிய உணவுத்திட்டம் தொடங்கியதன் பயனாய் 14.4இலட்சம் பேர் பயன் பெற்றனர். ஆண்டுதோறும் இரண்டு நல்லாசிரியர்கள் தேர்வு செய்யப் பெற்றனர். 163-64இல் 189 புதிய உயர்நிலைப்பள்ளிகள் திறந்தார். இடைநிலைப் பள்ளிகள் 8.39 இலட்சத்திலிருந்து 9.45 இலட்சங்களாக உயர்ந்தன. பொறியியல் கல்லூரி இடங்கள் 275லிருந்து 360 ஆக உயர்ந்தது. 1950இல் திரைப்படத்துறை நிறுவனம் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தை மதுரைப் பல்கலைக்கழகம் எனும் பெயரில் தொடங்கினார். காதி உற்பத்திக்குத் தனித்துறை உருவாக்கினார்.

குடியரசும் மக்களும், தேசிய கௌரவம், வளரும் தமிழகம், பாரதம் காப்போம், பாரதப் பண்டி, சமுதாய வளர்ச்சி, எனது நினைவுகள் முதலானவை இவர் எழுதிய நூல்கள். சென்னை இசைக் கழக நிறுவனங்களில் இவரும் ஒருவர். கோலாம்பூர் உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தலைமையெற்றுக் குழு ஒன்றை அழைத்துச் சென்றார். இந்திய சமூகநலக் குழுவின் நிறுவனர் தலைவராவார். ஆதி திராவிட சேவா சங்கத்தில் துணைத் தலைவராவார்.

சிறந்த நிர்வாகியம் மக்கள் பிரதிநிதியும் ஆவார். இவர் கல்வித்துறை அமைச்சராக இருந்தபொழுது கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியை முதன்மையானதாக்கிய பெருமையும் 166-இல் மதுரைப் பல்கலைக் கழகத்தை உருவாக்கிய பெருமையும் இவரையே சேரும். ஆறநிலையத்துறை அமைச்சராகப் பணியாற்றியபொழுது கோவில் நிர்வாகங்களில் மன்னேற்றத்தை ஏற்படுத்தினார். மகாத்மா காந்தியின் திட்டத்தில் பெரிதும் நம்பிக்கை வைத்திருந்த இவர் கதர், தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளித்தார். தன்னிறைவுப் பொருளாதாரத்தை இவர் விரும்பினார்.

இவருடைய முதலமைச்சர் பதவிக் காலத்தில் அனைத்துத் துறையிலும் பொதுவான வளர்ச்சி பெற்றாலும், உணவுப் பங்கீட்டு முறையில் ஏற்பட்ட சிக்கலின் விளைவாகவும், 195-66-ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடு தழுவிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகவும் ராஜாஜி திராவிட முன்னேற்றக் கழகம், மற்ற எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து 1967-ல் நடந்த தேர்தலில் போட்டியிட்டதன் விளைவாகவும் காங்கிரஸ் கட்சி 1967-ல் தோல்வி கண்டது.

காட்சிக்கு எளியராகவும், சமய உணர்வுடையவராகவும் விளங்கிய பக்தவத்சலம் அவர்கள் 1987-ஆம் ஆண்டு பிபரவரி மாதம் 13-ந் தேதி தம்முடைய 89-வது வயதில் மறைந்தார். வாழ்வின் இறுதிக்காலத்திலும் மன உறுதியுடன், பார்வை பழுதுபட்ட நிலையிலும் காங்கிரசு இயக்க நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டார்.

## 6.2 இந்தி எதிர்ப்புப் போராட்டம்(THE ANTI-HINDI AGITATION 1965)

மொழி ஒரு சமூகத்தின் பண்பாட்டுத் தொடர்புக் கருவியாகும். அது மனித சமூக சாரத்தின் மேலோங்கிய நிலையை எடுத்துரைக்கும் சிறப்புக் கூறு ஆகும். பல்வேறு மொழிகளைப் பேசும் தேசிய இனங்கள் வாழும் நாட்டில் அரசியல் காரணம் கருதி ஒரு குறிப்பிட்ட மொழி திணிக்கப்படுதல் தவறானது ஆகும். அவ்வாறு ஒரு மொழி திணிக்கப்படும்போது அந்த நாட்டில் திணிக்கப்பட்டவர்களுக்கும், திணித்தோருக்கும் இடையே முரண்பாடு ஏற்படும். இவ்வாறு தான் சென்னை மாகாணத்தில் இந்தி மொழி திணிப்பு ஏற்பட்டது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நிகழாத அளவில் திராவிட மொழி பேசுவோர் இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தினர். 1965 - ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்தது. 1967-ல் திமுக ஆட்சி அமைக்கப்பட்ட பின் தமிழகத்தில் இந்தித் திணிப்பு தடுத்து நிறுத்தப்பட்டது.

### 6.2.1 சுதந்திரத்துக்கு முன் இந்தித் திணிப்பும், இந்தி எதிர்ப்பு போராட்டமும்

எந்த ஒரு சமுதாயத்திலும் அந்த சமுதாயத்தில் பெரும்பான்மையினராக இருக்கும் மக்களின் உரிமைகளுக்கு எதிராகத் திணிக்கப்படும் செயலே சமுதாயப் பிரச்சனையாகிறது. இந்தப் பிரச்சனைகளின் வழியாக உருவாகும் சமூகக் குலைவுகள் சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்களையும் சமூக நெறிமுறைகளில் முரண்பாட்டையும் தோற்றுவிக்கிறது. சென்னை மாகாணத்தில் தோன்றிய இந்தி மொழியின் அறிமுகம், அதன் வழியாக உருவான பல்வேறுபட்ட கருத்துக்களுமே இந்தி மொழிக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு போராட்டத்தை நடத்துவதற்குக் காரணமாயின.

1) தேசிய ஒருமைப்பாடும் இந்தி மொழியும்

பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்தியாவில் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் நோக்கத்துடன் காங்கிரஸ் இயக்கம் இந்தி மொழியை அறிமுகப்படுத்தியது. மொழி அடிப்படையில் பெரும்

பான்மையினருக்கும், சிறுபான்மை மக்களுக்கும் ஒற்றுமை ஏற்படுத்த மகாத்மா காந்தி விரும்பினார். இதனால் உருதும் இந்தியும் கலந்த தேவநாகரி மொழி வடிவமான இந்துஸ்தானியை பரப்ப முயன்றார். 1931 - ல் கராச்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் 'இந்தி மொழியை எளிதில் கற்று விடலாம் என்றும், அத்துடன் பல்கலைக் கழக மட்டத்தில் இந்தியைக் கட்டாயப் பாடமாகவும் கற்றுத் தரவேண்டும்' என்றார். தேசிய நலன் குறித்து காந்தியால் உருவாக்கப்பட்ட இந்தி மொழியை எல்லோரும் கற்க காங்கிரசும் வற்புறுத்தியது.

சென்னை மாகாணத்திலுள்ள ஆங்கில அரசின் கீழ் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இந்தி மொழியைப் பயிற்றுவிக்க வேண்டுமென்று காங்கிரசும் கேட்டுக் கொண்டது. இந்தியைப் பரப்புவதற்கு சென்னை மாகாணத்தில் 1918,1922-ம் வருடங்களில் நாற்பது மையங்கள் தொடங்கப்பட்டன. இதற்கு நீதிக்கட்சியின் ஆதரவும் கிடைத்தது.இந்தி மொழி பரவலுக்கு காங்கிரசும், நீதிக்கட்சி அரசும் துணை நின்ற நேரத்தில் அதற்கு எதிர்ப்பும் உருவாக ஆரம்பித்தது. சென்னை மாகாண மக்களிடம் பிராமணர்களின் பண்பாட்டு ஆதிக்கமே மீண்டும் இந்தியின் வடிவில் வருகிறது என்று பெரியார் கருத்து தெரிவித்தார். இதுபற்றி குடியரசு இதழில் இந்தியைப் பொது மொழி ஆக்குவதால் நாட்டிற்கு நன்மை ஏற்படாது. அதனால் தமிழ் மக்களின் முன்னேற்றமும், தமிழ் மொழியின் வளர்ச்சியும் குன்றும் என்று எழுதியிருந்தார். 1930 - ல் நன்னிலத்தில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் இந்தியை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1931, அக்டோபர் 14-ம் தேதி சென்னை பச்சையப்பன் கல்லூரி 'தமிழ் சங்கத்தின்' சார்பாக நடைபெற்ற கூட்டத்திலும் இந்தி மொழிக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

2) காங்கிரஸ் அமைச்சரவையும் கட்டாய இந்தியும்

காங்கிரஸ் இயக்கத்தின் சென்னை மாகாண தலைவர்கள் இந்தி மொழியைப் பரப்புவதில் மிகத் தீவிரமாக நின்றனர். ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்க வேண்டும் என்று சத்தியமூர்த்தி வலியுறுத்தினார். இந்திய வரலாற்றைப் பள்ளிகளில் இந்தியில் கட்டாயப் பாடமாக வைக்க வேணும் என்றார்.

இராஜாஜி 1936 - ல் பொப்பிலி அரசர் தலைமையில் அமைந்த நீதிக்கட்சி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியை இரண்டாவது மொழியாகக் கற்றுத் தர ஆணை பிறப்பித்தது. இவ்வாறு 1937-ல் சென்னை மாகாணத்தில் 104 உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி கற்றுத் தரப்பட்டது.இந்தி மொழிக்கு எதிரான கருத்து 1937-க்குப் பிறகு மெல்ல தீவிரத் தன்மையுடன் வலுவடைய ஆரம்பித்தது. இதற்கு முக்கியக் காரணம் 1939, ஆகஸ்ட் 15ம்

தேதி சென்னை மாகாணத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் இராஜாஜி தலைமையில் ஆட்சி அமைத்ததேயாகும். முதலமைச்சர் ஆன பின்பு 'எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்கப் போவதாக' இராஜாஜி கூறினார். கல்வியமைச்சர் சுப்பராயன், 'இந்தி மொழியைப் பள்ளிகளில் கற்றுத் தருவதால் தமிழ் மொழிக்கு எந்த தீங்கும் நடந்துவிடாது' என்றார்.

இந்தப் பேச்சுக்கள் தமிழகத் தலைவர்களின் மொழி உணர்வைத் தூண்டி விட்டது. மேலும் தமிழறிஞர்களிடம் இருந்து இந்த கட்டாய இந்தி திணிப்பிற்கு கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. அவர்கள் மாகாணத்தில் பல இடங்களில் கூட்டம் நடத்தித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இவ்வாறு இந்தி மொழிக்கு எதிரான கருத்துக்கள் மாகாணமெங்கும் பரவுவதற்கான களம் உருவானது.

மேலும் ஒரு பிராமணர் தலைமையில் அமைச்சரவை அமைந்ததும் அதில் பத்து பேரில் நான்கு பேர் பிராமணர்களாக இருந்ததும் முக்கியப் பிரச்சனையாகக் கருதப்பட்டது. கட்டாய இந்தி அறிமுகமானது ஆரியப் பண்பாடு இந்தி வடிவில் தமிழகத்தில் நுழைகிறது என்ற கருத்தை மக்களிடம் திராவிடக் கழகத்தவர் பரப்பினர்.

இந்தி மொழித் திணிப்பிற்கு எதிராக சென்னை மாகாணமெங்கும் சுயமரியாதை இயக்கமும், தனித்தமிழ் இயக்கமும், முஸ்லீம் லீக்கும், தமிழறிஞர்களும் தம் எதிர்ப்பை பல்வேறு மாநாடு வழியாகத் தெரிவித்தனர். ஆனாலும் இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசு இந்த எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் 1938, ஏப்ரல் 21-ல் இந்தியைக் கட்டாயப் பாடமாக 6,7,8 ஆகிய வகுப்புகளில் கற்றுத் தரப்படும் என்று ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது.

அரசு இந்தித் திணிப்பை உடனே கைவிட வேண்டும் என்று கூறி சென்னை மாகாணமெங்கும் எதிர்ப்புக் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. இந்தி மொழியின் மீதான வெறுப்பைக் காட்டவும், மக்கள் சக்தியை ஒன்று திரட்டவும் அனைத்துத் தலைவர்களும் 1938 மே 28-ல் திருச்சியில் கூடி 'இந்தி எதிர்ப்பு வாரியம்' ஒன்றைத் தொடங்கினர். இந்த வாரியம் அமைக்கப்பட்ட பின்பு இந்திக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்தது. முதல்வர் வீட்டு முன்பு அறவழியிலான மறியல் நடைபெற்றது. தமிழகத்தில் இந்தி மொழி எதிர்ப்பு அடித்தட்டு மக்களிடமும் உருவாக்கப்படுவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டன. அதற்காக திருச்சியிலிருந்து சென்னை வரை நீண்ட

நடைப்பயணத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடைப்பயணம் ஐ.குமாரசாமி பிள்ளை தலைமையில் நடைபெற்றது. 234 ஊர்கள் வழியாக 82 பொதுக் கூட்டங்களை நடத்தி இந்திக்கு எதிராக மக்களைத் தட்டி எழுப்பியது.

1938, ஆகஸ்டு 1, டிசம்பர் 25 ஆகிய நாட்கள் இந்தி ஒழிப்பு நாளாக தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது. பெரியார் மீது அரசுக்கு எதிராக சதி செய்ததாக வழக்கு தொடுக்கப்பட்டு மூன்று வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. இதனால் தமிழகமெங்கும் அரசுக்கு எதிராக தீவிரமான எதிர்ப்பு உருவானது. இந்த நிலை இந்தியா சுதந்திரம் அடையும் வரை நீடித்தது. எனவே 1940, பிப்ரவரி 21ல் கட்டாய இந்தியை நீக்கி விருப்பப் பாடமாக கற்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்தது.

### 6.2.1 சுதந்திரத்திற்குப் பிறகு இந்தி எதிர்ப்புப் போராட்டம்

1) மீண்டும் இந்தி திணிப்பு

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு அரசுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்காது என்று மத்திய அரசு அறிவித்தது. ஆனால் அப்போது சென்னை மாகாணத்தில் ஓ.பி.இராமசாமி ரெட்டியாரை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை மீண்டும் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க முயன்றது. ஆனால் சென்னை மாகாணத்திலுள்ள ஆந்திரம், கன்னடப் பகுதிகளில் மட்டும் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. தமிழ்ப் பகுதிகளில் மட்டும் இந்தி விருப்பப் பாடமாக்கப்பட்டது. நாளேடுகள், மாத வார இதழ்கள் அரசின் ஒருதலைப்பட்சமான இந்த முடிவைக் கண்டித்தன. உடனே அரசு தமிழ் மொழி பேசும் பகுதிகளில் மீண்டும் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது. ஆம் மீண்டும் ஒரு மொழிப் போராட்டம் தோன்றும் சூழ்நிலை இயல்பாகவே உருவாகியது.

2) மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம்

அரசாங்கத்தின் செயல்பாட்டிற்கெதிராக தமிழறிஞர்கள், சமயவாதிகள், காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சித் தலைவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தனர். 1948, ஜூலை 17 ல் சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் கண்டனக் கூட்டம் நடத்தினர். இதில் பெரியார், மறைமலையடிகள், திரு.வி.க, அண்ணா, ம.பொ.சி, நாரண துரைக்கண்ணன், அப்துல் மஜித், அருள் தங்கையா பாதிரியார் போன்றோர் கலந்து கொண்டனர். இந்தி திணிப்பு ஆரிய திராவிட போராட்டத்தின் மறுவடிவம், எனவே இதற்கு முடிவு கட்ட வேண்டும் என்று பலர் ஆவேசமாகப் பேசினர். திராவிடர்களின் பண்பாட்டையும், மறுமலர்ச்சியையும் அழிக்கவே ஆரியர்கள் இந்தியைப் புகுத்தியுள்ளனர் என்றார் மறைமலையடிகள் ஆரிய வர்ணாஸ்ரமத்தை, சாதி உயர்வு தாழ்வை மீண்டும் புகுத்த எடுக்கப்பட்ட

சூழ்ச்சியே இந்தித் திணிப்பு என்று பேசினார். இதன்பிறகு இந்தி எதிர்ப்புப் போராட்டம் மேலும் தீவிரமாகியது.

3) அமைதிப் போராட்டம்

1948, ஆகஸ்ட் 8-ல் திராவிடர் கழக செயற்குழு கூடி இந்திக்கு எதிராகப் போராட்டம் நடத்த தீர்மானித்தது. இந்தப் போராட்டத்தை அமைதியான முறையில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. ஊர்வலம் நடத்துதல், பொதுக் கூட்டம் கூட்டுதல், அமைச்சர்களுக்கு எதிராக கருப்புக் கொடி காட்டுதல், அரசு அலுவலகங்களில் மறியல் செய்தல் போன்ற வழி முறைகளே பின்பற்றப்பட்டன. இந்தப் போராட்டங்கள் தமிழ் மொழியின் மீது பற்றுறுதியையும் இந்தி மொழி மீது மேலும் வெறுப்பையும் தூண்டுவதற்கான களமாக அமைந்தது. அப்போது சென்னைக்கு வந்த இந்திய கவர்னர் ஜெனரல் இராஜாஜிக்கு கருப்புக் கொடி காட்டப்பட்டது. மேலும் முதல்வர், கல்வி அமைச்சர் உட்பட பலருக்கும் கருப்புக் கொடி காட்டப்பட்டது. ஆனாலும் அரசு இந்தித் திணிப்பை அகற்றவில்லை.

1945, நவம்பர் 2-ல் அண்ணாவைத் தளபதியாகக் கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை திராவிடர் கழகம் தொடங்கியது. தினமும் தமிழகமெங்குமுள்ள பள்ளிகளின் முன்பு மறியல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் போராட்டம் தமிழகமெங்கும் நடைபெற்றதால் அதனை நசுக்க அரசு 144 தடைச் சட்டத்தை நிறைவேற்றியது. 1948 டிசம்பர் 19-ல் கும்பகோணத்தில் மிகப்பெரிய போராட்டம் ஆரம்பமானது. தடையை மீறிய பெரியார், மணியம்மை, என்.வி.நடராசன் போன்றோர் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை பெற்றனர். இதற்கிடையில் 1949-ல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து அண்ணா தலைமையில் திமுக ஆரம்பிக்கப்பட்டது.

4) அரசின் புதிய ஆணையும், எதிர்ப்பும்

1950, மே 2-ம் தேதி அப்போது கல்வி அமைச்சராக இருந்த மாதவராவ் ஆணை ஒன்றைப் பிறபித்தார். அதன்படி முதல்வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரை இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தையும், மூன்றாம் மொழியாக இந்தியையும் கட்டாயமாக கற்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இதனை தி.க. வும் திமுக வும் எதிர்த்தன. 1950, மே 10ம் தேதி இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது. பல்வேறு வகையான எதிர்ப்பு முறைகளைக் கையாண்டு இந்தியை நீக்கக் குரல் கொடுத்தனர். அரசுக்கு எதிராக உருவான மக்களின் எதிர்ப்புணர்வைக் கருத்தில் கொண்டு 1950, ஜுலை18-ல் தனது கட்டாய இந்தித் திணிப்பை அகற்றியது. ஆனாலும் இந்தக் கட்டாய இந்தித்

திணிப்பு ஏதாவது ஒரு வடிவத்தில் அரசால் செயற்படுத்தப்பட்டுக் கொண்டு தான் இருந்தது.

5 ) இந்திய அரசியலமைப்பில் மொழிக் கொள்கை:1955

1950 ஜனவரி 26ல் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் 343 வது பிரிவில் இந்தியாவின் ஆட்சி அலுவல் மொழியாக இந்தி இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. 341(1)ம் பிரிவில் முதல் 15 ஆண்டுகள் வரை இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. 344 வது பிரிவின்படி ஆட்சி மொழிக்குழு ஒன்றும் அரசுத் தலைவர்களால் அமைக்கப்படும். ஆனால் இதற்கு பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. இதற்கு முக்கியக் காரணம் 351வது பிரிவு இந்தி மொழியை மேலும் பரவச் செய்வதும், அந்த மொழியை மேலும் வளமுறச் செய்வதும் இந்திய அரசின் கடமை என்று அமைந்திருந்தது தான்.

மத்திய அரசு இந்தி மொழியை ஆட்சி மொழியாக அறிவித்ததால் மற்ற மொழி பேசும் மக்களுக்கு ஆங்கிலம் தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ள 15 ஆண்டுகால நீட்டிப்பு கொடுத்தது. அதாவது 1965ம் ஆண்டு வரை ஆங்கிலம் நீட்டிக்கப்பட்டது. மற்றமொழி பேசும் மக்களுக்கு தாம் அளித்த 15 ஆண்டுகளுக்குள் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று உறுதி மொழி தரப்பட்டது. ஆனால் இந்தி கற்பவர்களுக்கு அரசு வேலைகளில் தனிச் சலுகைகள் வழங்க வேண்டுமென்று அரசு சில மறைமுக நடவடிக்கைகளில் இறங்கியது. இது அரசு அளித்த வாக்குறுதியை மீறுவதாக அமைந்தது. இதன் எதிரொலியாகத் தமிழகமெங்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின.

6) இராஜாஜி ஆட்சிக் காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம்: 1952-1954

1952, ஏப்ரல் மாதம் 10ம் தேதி சென்னை மாகாணத்தில் இராஜாஜியை முதல்வராகக் கொண்டு புதிய அமைச்சரவை பதவி ஏற்றது. இவரது காலத்தில் மொழிப்போர் புதிய வடிவம் பெற்றது. 1952 முதல் திராவிடர் கழகமும், திமுகவும் இணைந்து மொழிப் போராட்டத்தைத் துவக்கின. முதலாவது, புகைவண்டி நிலையம், அஞ்சல் நிலையம் மற்றும் மத்திய அரசு அலுவலகங்களில் பெயர்ப்பலகைகளில் காணப்படும் இந்தி எழுத்துக்களை தார்பூசி அழிக்கும் போராட்டம் ஆரம்பமானது. இக்கிளர்ச்சியில் பெரியார், அண்ணா, கருணாநிதி, நெடுஞ்செழியன், மதுரை முத்து, என்.வி.நடராஜன், சத்தியவாணி முத்து போன்ற தலைவர்கள் இந்தி எழுத்துக்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்தி எழுத்துக்களை தார் பூசி அழிக்கும் இந்தப் புதிய போராட்டத்தை

அரசு அடக்க முயலவில்லை. அதனால் இந்தி எதிர்ப்புணர்ச்சி மக்கள் திரளை நோக்கி நகர்ந்து. மக்களிடம் இந்தியில் மீது வெறுப்புணர்ச்சியும், தமிழ் மீது பற்றும் ஏற்பட இந்தப் போராட்டம் உதவியது.

7) தேசியக் கொடி எரிப்புப் போராட்டம்: 1955

மத்திய அரசு அனைத்திந்தியக் கல்விக் கொள்கை என்ற பெயரால் இந்தியை மீண்டும் தேர்வுப் பாடமாகத் திணிக்கும் சூழ்நிலை 1955 ல் உருவானது.இதனைத் தடுப்பதற்காக 1955, ஜூலை 17ல் திருச்சியில் திராவிடர் கழக நிர்வாகக் குழு கடுமையான ஒரு முடிவு எடுத்தது. ' மத்திய அரசு அரசியலின் பெயரால் இந்தியை வலுக்கட்டாயமாக திணிக்கிறது. எனவே இந்தியக் கூட்டாட்சியில் இருக்க விரும்பவில்லை. இந்த எதிர்ப்பைக் காட்ட 1955 ஆகஸ்ட் 1-ல் தேசியக் கொடி எரிப்புப் போராட்டம் தொடங்கப்படும்' என்று முடிவெடுத்து. இந்தப் போராட்டம் பற்றி பிரதமர் நேரு அறிந்ததும், அப்போது தமிழக முதல்வராக இருந்த காமராஜருடன் தொடர்பு கொண்டு தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை நிறுத்த வேண்டினார். காமராஜர் பெரியாரைச் சந்தித்து 'இந்தி பேசாத மக்களின் நலன்களைப் பாதிக்ககூடிய எந்த நடவடிக்கைகளையும் இந்திய அரசோ மாநில அரசோ எடுக்காது' என்று உறுதிமொழி அளித்தார். எனவே திராவிடர் கழகம் தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டது.

8) பி.ஜி.கெர் குழுவும் இந்தி திணிப்பும்:1955

மத்திய அரசு இந்தியா முழுவதும் இந்தி மொழியைப் பரப்புவதற்கும் வளப்படுத்துவதற்கும் 1955 ஜுன் 7ம் தேதி பி.ஜி.கெர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. இந்தக் குழு இந்தி மொழியை வளப்படுத்தும் விதமாக ஒரு திட்டத்தை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது. இந்தத் திட்டத்தில், இந்தி கட்டாயப் பாடம் இல்லை விருப்பப் பாடமாகப் படிக்கலாம். இந்தி மொழியைப் படிக்க விரும்பாதவர்கள் வேறொரு மொழியைப் படிக்கலாம். மூன்றாவது மொழி தேர்வுப் பாடமாக இருக்கும்,. ஆனால் அதில் வாங்கும் மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது' என்று கூறப்பட்டிருந்தது.

9)கெர் குழு அறிக்கை எதிர்ப்புப் போராட்டம்: 1957

கெர் குழுவின் அறிக்கைக்கு பலமான எதிர்ப்பு தோன்றியது. சமஸ்கிருதத்தால் தமிழர்களும் தமிழும் பாதிக்கப்பட்டது போல, இனியும் இந்தியால் பாதிப்படைய விடக்கூடாது என்று திராவிடர் கழகம் கருதியது. 'வளைந்த குண்டூசிக்குக்கூட பெறாத இந்தி நமக்கு எந்த வகையிலும்

தேவையில்லை' என்றார் பெரியார். எனவே இந்தி மொழியை மறைமுகமாகத் திணிக்கும் கெர் குழு அறிக்கையைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார். திமுக-வும் கடுமையாக எதிர்த்தது.

1957, நவம்பர் 26ம் தேதி பெரியாரின் ஆணைப்படி மாநிலம் முழுவதும் சட்ட எரிப்புப் போராட்டம் துவக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் சுமார் நான்காயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். சட்ட எரிப்பில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரியும், இந்திக்கு எதிராகவும் கும்பகோணத்தில் முதல் முறையாக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இதன் பிறகு தான் மக்களிடம் மொழி உணர்வைத் தூண்டிய திமுக தம் கொள்கைகளை மாணவர்களை நோக்கி எடுத்துச் சென்றது.

10) வானொலிக்கு எதிரான போராட்டம்:1959

மக்கள் தொடர்புக் கருவிகளுள் ஒன்றாக இருக்கும் வானொலிக்கு 'ஆகா'வாணி' என்று பெயர் சூட்டப்படுவாதக மத்திய அரசு அறிவித்தது. இதற்கு எதிராக 1959, மே 23-ம் தேதி போராட்டம் ஆரம்பமானது. இப்போராட்டத்துக்கு ஆதரவாக தமிழ் எழுத்தாளர்கள், பாடகர்கள், பேச்சாளர்கள் ஆகிய அனைவரும் கலந்து கொண்டனர். வானொலிக்கு மீண்டும் பழைய பெயர் ஏற்படாத வரையில் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என்று அறிவித்தனர் போராட்டம் தீவிரமடைந்தது. கி.அ.பெ.விஸ்வநாதம் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். பின்னர் மத்திய அரசு 'ஆகாஷ் வாணி' என்ற சொல்லைத் திரும்பப் பெற்றுக் கொண்டதும் போராட்டம் நிறுத்தப்பட்டது. இருப்பினும் மத்திய அரசு இந்தியைப் பரப்புவதில் முனைப்பு காட்டியது.

11) குடியரசுத் தலைவர் ஆணையும், தேசப்பட எரிப்புப் போராட்டமும்: 1960

1959-ல் பி.ஜி.கெர் அளித்த பரிந்துரையை குடியரசுத் தலைவர் ஏற்று 1960, ஏப்ரல் 20-ல் இந்தியை ஆட்சி மொழியாக அறிவித்தார். குடியரசுத் தலைவரின் ஆணையால் தமிழ் நாடெங்கும் எதிர்ப்பு பலமாக உருவாகியது.'இந்தி பேசாத மக்களின் கருத்தை அறியாமல் இந்தியைப் புகுத்தமாட்டேன், ஆட்சி மொழியாக ஆங்கிலம் மக்கள் விரும்பும் வரை நீடிக்கும்' என்ற பிரதமர் நேரு தனது உறுதிமொழியை மீறிவிட்டதாக திராவிடர் கழகம் கருதியது. கொதித்தெழுந்த பெரியார் நாட்டுப் பிரிவினைக்கு வழிவகுத்து விட்டார்கள். எனவே தேசப் பிரிவினைக்கு இந்திய தேசப்படத்திற்கு தீ வையுங்கள்!" என்று அறிக்கை வெளியிட்டார் பெரியார்.

அதன்படி 1960, ஜூன் 5-ம் தேதி துக்க நாளாக அறிவிக்கப்பட்டது. எனவே தடுப்புக் காவல் சட்டப்படி பெரியார், வீரமணி, சி.பா.ஆதித்தனார்

உட்பட பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தேசப்படத்தை எரித்த சுமார் நான்காயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். 1960, ஜூலை 31-ல் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்று சென்னை கோடம்பாக்கத்தில் திமுகவால் கூட்டப்பட்டது. அதில் தமிழகத்தில் அப்போது சுற்றுப் பயணம் செய்து வந்த டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்துக்கு கருப்புக் கொடி காட்ட முடிவு செய்யப்பட்டது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மேலும் தொடராமல் செய்ய மத்திய அரசு முயன்றது.

12) இந்திய ஆட்சி மொழிச் சட்டம், 1963

1963, ஏப்ரல் 13-ல் இந்திய அரசின் ஆட்சி மொழிச் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி தாக்கல் செய்தார். இந்தப் புதிய சட்டத்தின்படி 1965, ஜனவரி 26-ம் நாள் முதல் இந்தி ஆட்சி மொழியாகும். இந்தி மொழிக்குத் துணை மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப்படும். 1965, ஜனவரி 26க்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஒப்புதலுடன் அரசு வெளியிடும் இந்தி மொழி பெயர்ப்பு, மத்திய அரசு சட்டங்கள், ஆணைகள், கட்டளைகள் முதலியவை அதிகாரப்பூர்வ மானதாகக் கருதப்படும். இந்தச் சட்டம் தாக்கல் செய்யப்பட்டவுடன் திமுக பாராளுமன்ற உறுப்பினர்கள் இது இந்தி பேசாத மக்களுக்கு இழைத்த அநீதி என்று கண்டித்தார்.

தி.மு.க 1963, ஜுன் 8-ல் சென்னையில் பொதுக் குழுவைக் கூடி அரசியல் சட்டம் 17-வது பிரிவை எரிக்கத் தீர்மானம் நிறைவேற்றியது. அக்டோபர் 13-ல் சென்னை நுங்கம்பாக்கத்தில் மாநாட்டை நடத்தியது. மேலும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1965 ம் ஆண்டு இறுதி வரை நடைபெறும் திமுக அறிவித்தது. அரசியல் சட்டத்தை கொளுத்துவதன் மூலம் மத்திய அரசு மொழிப் பிரச்சனையைத் தீர்க்கும் என்று கருதியது.

## 6.3 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சகட்டம்: 1965

### 6.3.1 பக்தவத்சலம் பதவி ஏற்றதும், போராட்டத்தின் புதிய வேகமும்

முதல்வர் காமராஜர் ‘காமராஜர் திட்டப்படி’ பதவியிலிருந்து விலகினார். அவரைத் தொடர்ந்து 1963, அக்டோபர் 3-ல் பக்தவத்சலம் முதல்வரானார். இவர் முதல்வரானதும் ஆட்சி மொழிக்கு எதிரானப் போராட்டம் வேகம் பெற்றது. 1963, நவம்பர் 17-ம் தேதி அண்ணா தலைமையில் அரசியல் சட்டத்தின் 17வது மொழிப்பிரிவை எரிப்பதாக இருந்தது. ஆனால் போராட்டம் நடப்பதற்குள் அவரும் மற்றும் பலரும் கைது செய்யப்பட்டனர். சட்ட எரிப்புக்கு முன்பாக நடைபெற்ற கைதுகள் போராட்டத்தை திமுக துரியமாகச் செயல்படுத்துவதற்குத் தூண்டுதலாக இருந்தன. அரசியல் சட்டத்தை எரிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு அண்ணா உட்பட பலருக்கு ஆறுமாதச்

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதன் விளைவாக ஒவ்வொரு நாளும் தமிழகத்தின் முக்கிய ஊர்களில் போராட்டம் நடைபெற்றது. ஒரு வருட காலமாக நடந்த சட்ட எரிப்புப் போராட்டம், 1965 ஜனவரி 26-ம் தேதி புதுவேகம் பெற்றது.

6.3.2 குடியரசு தினமும் துக்க தினமும்

1965, ஜனவரி 8-ம் தேதி திமுகவின் தலைமை நிலையச் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. 1965, ஜனவரி 26- துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் என்றும் துக்கத்துக்கு அறிகுறியாக கருப்பு சின்னம் அணிய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இது போராட்டத்தின் வேகத்தை அதிகரித்தது.

6.3.3 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள்

இந்தச் சூழ்நிலையில் ஆட்சி மொழிச் சட்டத்தை எதிர்த்து மாணவர் போராட்டம் புது வேகத்துடன் கிளம்பியது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஒன்றுகூடி ஒரு போராட்டக் குழுவை அமைத்தனர். ஜனவரி 26-ம் தேதியை துக்க தினமாகக் கொண்டாடினர். சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் இந்தியை அரக்கி வடிவத்தில் கொடும்பாவி செய்தும், எரித்தும், இந்திப் புத்தகங்களை எரித்தும் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

மதுரையில் அரசியல் பிரிவு 17 கொளுத்தப்பட்டது, இதற்குக் காரணமான சீனிவாசன், நாவளவன், ராஜா முகமது, நா.காமராசன், கா.காளிமுத்து ஆகிய மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனால் போராட்டம் தீவிரமடைந்தது. தடியடி, கண்ணீர் புகைக், குண்டு ஆகியவற்றால் இந்தி எதிர்ப்பு போராட்ட வீச்சு மாணவர் மத்தியில் வேகமாகப் பரவியது.

மாணவர் இராஜேந்திரன் மரணம்

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தித் திணிப்புக் கெதிராகப் போராட்டத்தில் குதித்தனர். எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர். மாணவர்களின் ஊர்வலத்தைக் கலைக்க காவல்துறை தடியடி, கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு செய்தும் ஊர்வலத்தைத் தடுக்க முடியாததால் துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்தது. இந்த துப்பாக்கிச் சூட்டில் இராஜேந்திரன் என்ற

மாணவன் மரணமடைந்தார். இதனால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மாணவர் கையிலிருந்து மாறி பொது மக்கள் கைக்குச் சென்றது.

தீக்குளித்து திமுக தொண்டர்கள் பலி

அரசின் இந்தி மொழித் திணிப்பிற்கும், சர்வாதிகார அடக்கு முறைகளுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு திமுக தொண்டர்கள் பலர் தீக்குளித்து உயிர் நீத்தனர். திருச்சி சின்னச்சாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், ஐயம்பாளயம் அரங்கநாதன், முத்து, ஏ.வி.சி கல்லூரி மாணவர் சாரங்கபாணி போன்றவர்களைத் தொடர்ந்து பலர் தம் உடலில் தீ வைத்துக் கொண்டு உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று கூறிக் கொண்டே இறந்தனர். மாணவர்களின் எதிர்ப்புணர்வு வீச்சு தமிழகத்தில் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவியது. போராட்டத்தை அடக்க முடியாமல் அரசு திணறியது.மக்களின் ஆதரவை காங்கிரஸ் அரசு கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டே வந்தது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் மாணவர்களின் பங்கு
2. குடியரசு தினமும் துக்க தினமும்

## 6.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. ஆட்சி மொழிச் சட்டத்தை எதிர்த்து மாணவர் போராட்டம் புது வேகத்துடன் கிளம்பியது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஒன்றுகூடி ஒரு போராட்டக் குழுவை அமைத்தனர். ஜனவரி 26-ம் தேதியை துக்க தினமாகக் கொண்டாடினர். சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் இந்தியை அரக்கி வடிவத்தில் கொடும்பாவி செய்தும், எரித்தும், இந்திப் புத்தகங்களை எரித்தும் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.மதுரையில் அரசியல் பிரிவு 17 கொளுத்தப்பட்டது, இதற்குக் காரணமான சீனிவாசன், நாவளவன், ராஜா முகமது, நா.காமராசன், கா.காளிமுத்து ஆகிய மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனால் போராட்டம் தீவிரமடைந்தது. தடியடி, கண்ணீர் புகைக், குண்டு ஆகியவற்றால் இந்தி எதிர்ப்பு போராட்ட வீச்சு மாணவர் மத்தியில் வேகமாகப் பரவியது,மாணவர் இராஜேந்திரன் மரணம்சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தித் திணிப்புக் கெதிராகப் போராட்டத்தில் குதித்தனர். எதிர்ப்பு ஊர்வலம்

நடத்தினர். மாணவர்களின் ஊர்வலத்தைக் கலைக்க காவல்துறை தடியடி, கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு செய்தும் ஊர்வலத்தைத் தடுக்க முடியாததால் துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்தது. இந்த துப்பாக்கிச் சூட்டில் இராஜேந்திரன் என்ற மாணவன் மரணமடைந்தார். இதனால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மாணவர் கையிலிருந்து மாறி பொது மக்கள் கைக்குச் சென்றது.

2. 1965, ஜனவரி 8-ம் தேதி திமுகவின் தலைமை நிலையச் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. 1965, ஜனவரி 26- துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் என்றும் துக்கத்துக்கு அறிகுறியாக கருப்பு சின்னம் அணிய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இது போராட்டத்தின் வேகத்தை அதிகரித்தது.

## 6.5 சுருக்கம்

1965, ஜனவரி 8-ம் தேதி திமுகவின் தலைமை நிலையச் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. 1965, ஜனவரி 26- துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் என்றும் துக்கத்துக்கு அறிகுறியாக கருப்பு சின்னம் அணிய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இது போராட்டத்தின் வேகத்தை அதிகரித்தது.

## 6.6 முக்கிய கருத்துப்படிமங்கள்

1957, நவம்பர் 26ம் தேதி பெரியாரின் ஆணைப்படி மாநிலம் முழுவதும் சட்ட எரிப்புப் போராட்டம் துவக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் சுமார் நான்காயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். சட்ட எரிப்பில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரியும், இந்திக்கு எதிராகவும் கும்பகோணத்தில் முதல் முறையாக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இதன் பிறகு தான் மக்களிடம் மொழி உணர்வைத் தூண்டிய திமுக தம் கொள்கைகளை மாணவர்களை நோக்கி எடுத்துச் சென்றது.

## 6.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. இந்திய அரசியலமைப்பில் மொழிக் கொள்கை
2. தேசியக் கொடி எரிப்புப் போராட்டம்
3. இந்திய ஆட்சி மொழிச் சட்டம்

**நெடுவினா**

1. சுதந்திரத்துக்கு முன் இந்தித் திணிப்பு

2. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சகட்டம்



## 6.8 மேலும் படிக்க

1. B.S Baliga, - Studies in Madras Administration, 2 Vols.
2. Edgar Thurston - Castes and Tribes in South India
3. Baker, C.J – The Politics of South India
4. Yesudhasan.V.S. Isaac & -History of Tamil society and culture, Since Jaya Dhas.R 1336 A.D.,10 John Gilbert.G – Contemporary History India.

# தொகுதி III கட்சிகளின் நலத்திட்டங்கள்

# அலகு-7 தி.மு.க - சி.என்.அண்ணாத்துரை மற்றும் அவரது அமைச்சரவை உருவாக்கம்-எம்.கருணாநிதி மற்றும் அவரது அமைச்சரவை

**அமைப்பு**

7.0 அறிமுகம்
7.1 கா.ந.அண்ணாதுரை (அண்ணா)
7.1.1 தமிழக முதல்வர் அண்ணா
7.1.2 அண்ணா அமைச்சரவையின் பணிகள்
7.2 மு. கருணாநிதி ஆட்சி
7.2.1 அமைச்சரவை
7.2.2 சாதனைகள்
7.2.3 மாவட்டத் தலைநகர்கள்
7.2.4 சமத்துவபுரம், 1997- 98
7.2.5 உழவர்களுக்கான திட்டம்
7.2.6 திருவள்ளுவர் சிலை திறப்பு, 2000
7.2.7 சரித்திரச் சாதனைகள், 1996 – 2001
7.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
7.4 சுருக்கம்
7.5 முக்கிய கருத்துப்படிமங்கள்
7.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
7.7 மேலும் படிக்க

## 7.0 அறிமுகம்

பேரறிஞர் அண்ணா சிறந்த பேச்சாளர், சிறந்த எழுத்தாளர், சிறந்த நாடகப் படைப்பாளர், சௌமியன், பரதன் முதலிய புனைப் பெயர்களில் கதை, கட்டுரைகள் படைத்தவர், திராவிட நாடு இதழில் 'தம்பிக்கு என்று எழுதிய எழுத்தோவியங்கள் சிறப்பு வாய்ந்தவை. ஆண்ணாவின் ஏடுகள் ஹோம்ரூல், திராவிட நாடு, காஞ்சி, ஹோம்லாண்டு ஆகியன ஆகும். மேடைப் பேச்சுக்கலையை வளர்த்வர். ஆண்ணா 'அக்கிராசனார்' அவர்களே என்று அழைத்து வந்ததைத் 'தலைவர்' அவர்களே என்றும், 'மகாஜனங்களே' என்பதைப் பொதுமக்களே என்றும், 'நமஸ்காரம்' என்று கூறிவந்ததை வணக்கம் என்றும் கூறவைத்த தலைவர். துமிழின உணர்வு, தமிழ் உணர்வு தழைக்கச் செய்தவர்.

## 7.1 கா.ந.அண்ணாதுரை (அண்ணா)

சி.என்.அண்ணாதுரை என்ற பெயர் கொண்ட பேரறிஞர் அண்ணா, தமிழ்மக்கள் நெஞ்சில் அண்ணா என்றே அறியப்பட்டவர். துனமான இயக்கம் கண்டெடுத்த மனிதநேயம், தமிழ் இன உணர்வுமிக்க மாபெரும் தலைவர் அவர். அரசியலில் இயக்கத்தக்கவர்களைப் பாச உணர்வோடு தம்பி என்று அழைத்து அனைவர் நெஞ்சத்திலும் நீங்கா இடம் பெற்றவர். ஆரசியல் எதிரிகளும்கூட மதிப்பும் மரியாதையும் செலுத்திய மாபெரும் மனிதர். சிறந்த கல்வியறிவும், இலக்கியப்புலமை திறமை வாய்ந்த தலைவர் அவர். மக்களை நேசித்த மக்கள் தலைவர்.

15-09-1909-ல் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் நடராசன், பங்காரு தம்பதியருக்கு ஒரே மகனாகப் பிறந்தவர். சிற்றன்னை இராசாமணி அம்மையாரால் வளர்க்கப்பட்டார். 1914-ல் காஞ்சியில் பச்சையப்பன் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். காஞ்சிபுரம் நகராட்சியில் 1927-ல் சிறிது காலம் பணியாற்றினார். பின் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முதுகலைப்படிப்பை முடித்தார். 1929-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பார்வையாளராகக் கலந்துகொண்டார். சென்னை 9, 1930-ல் இராணி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். சென்னை கோவிந்தப்பர் நடுநிலைப்பள்ளியில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1934-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவின் வாழ்வில் திருப்பம் ஏற்பட்டது. திருப்பூர் செங்குந்தர் மாநாட்டில் பெரியாரைச் சந்தித்ததே நீதிக்கட்சியில் வாசுதேவ் நடத்திய பாலபாரதி ஏட்டிற்கும் நவயுவன் ஏட்டிற்கும் ஆசிரியரானார். பின் 1938-ல் பெரியாரின் குடியரசு ஏட்டின் துணை ஆசிரியர் ஆனார். ஜஸ்டின் ஏட்டிற்கும் சிறிது பாலத் துணை ஆசிரியரானார். 1939-ல் நீதிக்கட்சியில் பொதுச் செயலாளரானார். 1940-ல் பம்பாயில் பெரியாரும், அம்பேத்காரும் சந்தித்தபோது மொழி பெயர்ப்புப் பணியைச் செய்தார்.

1942 மார்க் 7-ல் திராவிட மாநாடு ஏட்டின் ஆசிரியரானார். 1944-ல் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் அண்ணாதுரை தீர்மானம் என்னும் புகழ்பெற்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிதிக்கட்சியின் பெயரைத் திராவிடர் னழகமாக மாற்றச் செய்தார். 1946-ல் பாவேந்தருக்குப் பொற்கிழி வழங்கினார். 1947-ல் பெரியார் விடுதலை நாளைத் துக்கநாள் அன்று அறிவித்தபோது விடுதலை நாளே என அறிவித்து அண்ணா திராவிட நாடு ஏட்டில் கட்டுரை தீட்டினார். 1948-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையிடப்பட்டார். 1948 ஈரோமு தி.க. மாநாட்டிற்குத் தலைவராக

தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1949-ல் பெரியார் - மாணியம்மை திருமணத்தை ஏற்க உடன்படாமல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 17.09.19இல் திராவிட மன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தார். 1949-இல் மாலைமணி இதழை தொடங்கி அதன் ஆசிரியரானார். 1950-இல் ஆரியமாயை என்ற நூல் எழுதியதற்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார். 1952-ல் இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தை முன்னின்று நடத்தினார்.

15.07.1953-ல் தி.மு.க.வின் அதிகாரப்லூர்வ ஏடான நம் நாட்டிற்கு ஆசிரியரானார். ஜீலை 15-ல் மும்முனை போராட்டத்தை நடத்தினார். 1956 மே 17-20-ல் திருச்சியில் நடைபெற்ற திருப்புமுனை மாநாட்டில் தி.மு.க. வை 1957-ஆம் ஆண்டுத் தேர்தலில் பங்கேற்கச் செய்தார். காஞ்சிபுரம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957-ல் ஹோம்லாண்டு இதழைத் தொடங்கினார்.

1958 சனவரி 3-ல் மைய அரசின் அமைச்சர்களுக்கெதிராக கறுப்புக் கொடி போராட்டத்தை முன்னின்று நடத்தினார் 1959-ல் மாநகராட்சித் தேர்தலில் அண்ணாவின் தலைமையிலான தி.மு.க வெற்றி பெற்றது. தி.மு.க. முதன் துாலாகச் சென்னை தேர்தலில் சட்டமன்றத்திற்குச் செல்லும் வெற்றி வாய்ப்பை 1957-ல் பெற்றது. 1962இல் தி.மு.க. வினர் 50 பேர் சட்டமன்றத்திற்குச் சென்றனர். 1962 ஜீலை 19-ல் விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைபட்டார். மாநிலங்களவை உறுப்பினராக ஆன அண்ணா இந்தியத்துணைக்கண்டம் ந்கு அறியும் வகையில் செயல்பட்டார். 1963-ல் இந்தியை எதிர்த்து அரசியல் சட்டத்தை எரிக்கத் திட்டமிட்டார். கைதாகி 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

1962-67-ல் மாநிலங்களவை உறுப்பினரானார். 1963-ல் பிரிவினைக் கோரிக்கையை விடுத்துத் தி.மு.க. வின் கொள்கையை மாநில் சுயாட்சிக் கொள்கையாக மாற்றியவர் அண்ணா. 1965-ல் இந்தி எதிர்ப்பினை வெளிப்படுத்த, இந்தி 1965 முதவ் ஆட்சி மொழி என்பதை எதிர்த்து 1965 ஜனவரி 26ஐத் துக்கநாள் என அறிவித்தார் 1965-ல் சிங்கப்பூர், மலேசியா, ஐரோப்பா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து வந்தார்.

1967-ல் இராஜாஜி, முத்துராமலிங்கத் தேவரின் பார்வாட்டு பிளாக், காணிதேமில்லத்தின் முசுலிம் லீக் ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்து 1967-ல் தி.மு.க வை வெற்றி பெறச் செய்தார். 1967 இல் நாடாளுமன்ற உறுப்பினராகத்

தேர்ந்தெடுக்கப் பற்றார். 1968-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்தது. 6.3.1967ல் அண்ணா தலைமையில் தி,மு.க. ஆட்சிக் கட்டில் ஏறியது. 6.3.67 ஏப்ரல் 26-ல் பிப்ரவரி 2-ஆம் நாள் நள்ளிரவு 12.20-க்குச் சென்னையில் உடல் நலம் குன்றி மறைந்தார்.

பேரறிஞர் அண்ணா சிறந்த பேச்சாளர், சிறந்த எழுத்தாளர், சிறந்த நாடகப் படைப்பாளர், சௌமியன், பரதன் முதலிய புனைப் பெயர்களில் கதை, கட்டுரைகள் படைத்தவர், திராவிட நாடு இதழில் 'தம்பிக்கு என்று எழுதிய எழுத்தோவியங்கள் சிறப்பு வாய்ந்தவை. ஆண்ணாவின் ஏடுகள் ஹோம்ரூல், திராவிட நாடு, காஞ்சி, ஹோம்லாண்டு ஆகியன ஆகும்.மேடைப் பேச்சுக்கலையை வளர்த்வர். ஆண்ணா 'அக்கிராசனார்' அவர்களே என்று அழைத்து வந்ததைத் 'தலைவர்' அவர்களே என்றும், 'மகாஜனங்களே' என்பதைப் பொதுமக்களே என்றும், 'நமஸ்காரம்' என்று கூறிவந்ததை வணக்கம் என்றும் கூறவைத்த தலைவர். துமிழின உணர்வு, தமிழ் உணர்வு தழைக்கச் செய்தவர்.பகுத்தறிவுக் கொள்கை பழுதுபடாமல் 'கட்வுட் கவலை நமக்கில்லை' என்றும் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனவும் வலியுறுத்திய தலைவர் தமிழ் நாடகக்கலை வளர்ச்சியில் அண்ணாவின் பங்கு பெரும் பங்கு எனலாம்.

'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' 'சந'திரமோகன்' 'நீதிதேவன்மயக்கம்' முதலிய நாடகங்களைப் படைத்தவர். செவ்வாழை, புலிநகம், குமரிக்கோட்டம், பிடிசாம்பல் முதலிய சீர்திருத்த நூற்றுக்கணக்கான கதைகளைப் படைத்தவர். வண்டிக்காரன்மகன், ஓர் இரவு, நல்லதம்பிஈ வேலைக்காரி, சொர்க்கவாசல் ஆகிய திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதியவர். ஆண்ணாவின் கதைகள் சாதி உயர்வு, மூடநம்பிக்கை ஆகியவற்றைச் சாடின. 'தீ பரவட்டும் 'நாடும் ஏடும்'இ 'நல்ல தீர்ப்பு' ஆகியன அண்ணாவின் கடிதமலர்கள்.

1969-ல் பேரறிஞர் அண்ணாவின் மறைவிடத்தில் நினைவாலயம் ஒன்று எழுப்பப்பெற்றது. அண்ணாவின் நினைவைப் போற்றும் வகையில் தமிழகம் முழுவதம் அண்ணாவின் சிலைகள் நிறுவப் பெற்றன.

### 7.1.1 தமிழக முதல்வர் அண்ணா

மிகக்குறுகிய காலமே ஆட்சி செய்தார் அண்ணா னினும் தமிழக வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கக்கூடிய சாதனைகளைச் செய்த சாதனையாளராக உயர்ந்து நிற்கிறார். ஆட்சிக்கு வந்ததும் ரூபாய்க்கு ஒரு படி

அரிசி வழங்கும் திட்டத்தை நிறைவேற்றினார்.

சென்னை மாநகரில் கூவம் சீரமைப்புப் பணியினைத் தொடங்கினார். ஜீலை 23, 1967-ல் சேலம் எழுச்சி நாள் கொண்டாடிச் சேலத்தில் உருக்காலை ஏற்படுத்த வேண்டினார். 1968 ஜனவரி 3-ஆம் நாள் சென்னையில் உலகத்திழ் மாநாட்டைக் கூட்டினார். இம்மாநாட்டின் நினைவாகக் சென்னையில் கடற்கரையில் தமிழ்ப்பணி ஆற்றியோர் சிலைகள் அமைத்தார். திருக்குறள் ஆராய்ச்சிக்கெனத் தமிழகத்தின் மூன்று பல்கலைக்கழகங்களுக்கு 9இலட்சம் ரூபாய் வழங்கச் செய்தார்.

1968-ல் ஜனவரி 23-ல் இருமொழிக் கொள்கையாகத் தாய்மொழித் தமிழ், உலகமொழி ஈங்கிலம் என்று சட்டமாக்கினார். யேல் பல்கலைக் கழகம் ஏப்ரல் மாதம் அண்ணாவிற்கு சப்-பெல்லோஃப் வழங்கிச் சிறப்பித்தது. டிசம்பர் 1 தமிழ்நாடு பெயர் சூட்டி மகிழ்ந்தார். அதன்பின் உடல் நலிவுற்ற அவர் பிப்ரவரி 2, நள்ளிரவில் மறைந்தார்.ஏழை, எளிய மக்களின் அதயத்தில் அடம் பெற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்த ஓர் உயர்ந்த தலைவர், மாமனிதர் அண்ணா, அரசியல் பண்பாடுகாத்த அரும்பெரும் தலைவர் அண்ணா. ஆத்தில உணர்வுக்கு ஆட்படாதவர். முக்களை நேசித்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியன அண்ணாவின் அறமொழிகள், அண்ணா முதலமைச்சராக இருந்தபொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

### 7.1.2 அண்ணா அமைச்சரவையின் பணிகள்

இரண்டே ஆண்டுகள் தமிழக முதல்வராக அண்ணா இருந்த போதிலும் அவருடைய ஆட்சியில் நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுச் செயல் முறைக்கு வந்தன.

- சென்னை மாநிலத்திற்குத் “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டினார். இச்செயல் தமிழ் மக்களின் மனதில் அண்ணா அவர்களுக்கு நீங்காத ஒரு இடமம் பெறச் செய்தது.
- புன்நெய் நிலங்களுக்கு நிலவரி நீக்கப்பட்டதால் உழவர்களின் சுமை குறைந்தது.
- குலப்புத்திருமணங்கள் ஊக்குவிக்கும் பொருட்டு, சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடிச் சட்டம் கொண்டு வந்தார்.
- தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையே எனும் தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றினார்.
- ஏழைகளுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தரத் திட்டம் வகுத்தார்.

- கோவையிலும், சென்னையிலும் தற்கள் தேர்தல் உறுதிமொழிகளில் ஒன்றாகிய ரூபாய்க்கு ஒருபடி அரிசி என்ற திட்டத்தினைச் சிலகாலம் செயல்படுத்தினார்.
- தமிழகத்தின் தலைநகரான சென்னையில் மூன்றாவது உலகத்தமிழ் மாநாடு 1968-ஆம் ஆண்டு ஜனவரித்திங்களில் நடைபெறச செய்தார். தமிழக அரசு தலைமைச் செயலகம் செந்தமிழில் பெயர்ப் பலகை இடம் பெறச்செய்தார்.

## 7.2 மு. கருணாநிதி ஆட்சி

### 7.2.1 அமைச்சரவை

1996 சட்டப் பேரவைத் தேர்தல் வெற்றி கருணாநிதியின் அரசியல் மீட்சியாகும். அவரது அரசியல் மறுபிறப்பாகும். இத்தேர்தலில் வெற்றி பெற்ற கருணாநிதிக்கும், அவரது அமைச்சர்களுக்கும் ஆளுநர் சென்னா ரெட்டி 1996 மே 13 ஆம் தேதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். கருணாநிதியின் அமைச்சரவையில் இடம் பெற்றோர்: அன்பழகன் (கல்வி), ஆர்க்காடு வீராசாமி (மக்கள் நல்வாழ்வுத் துறை) நாஞ்சில் மனோகரன் (வருவாய்த்துறை), கோ.சி.மணி (உள்ளாட்சி) வீரபாண்டி ஆறுமுகம் (வேளாண்மை),துரைமுருகன் (பொதுப்பணி), பொன்முடி (போக்குவரத்து), தமிழ்க் குடிமகன் (தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு),கே.என்.நேரு (உணவு), கே.சுந்தரம் (பால்வளம்), ரகுமான்கான் (தொழிலாளர் நலம்), ஆலடி அருணா (சட்டம்) வே.தங்கபாண்டியன்(கூட்டுறவு, என்.கே.கே.பெரியசாமி (கைத்தறி) பன்னீர்செல்வம் (பிற்படுத்தப்பட்டோர் நலம்) பெங்களர் என். பழனிச்சாமி (வனவளம்), கே.பிச்சாண்டி (வீட்டு வசதி); இ. பெரியசாமி (ஊரகத் தொழில்), முல்லை வேந்தன் (செய்தி - விளம்பரம்); புலவர் செங்குட்டுவன் (அறநிலையத்துறை),எஸ்.பி.சற்குண பாண்டியன் (சமூக நலம்), சமயநல்லூர் எஸ். செல்வராஜ் (சுற்றுலா), அந்தியூர் ப.செல்வராஜ் (கதர் - அச்சுத்துறை),எஸ். ஜெனிபர் சந்திரன்(மீன் வளம்).

### 7.2.2 சாதனைகள்

தலைவர்கள்

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டு மாவட்டங்கள் அந்தந்த மாவட்டத்தின் தலைநகரின் பெயரால் அழைக்கப்பட்டன. தி.மு.கவின் ஆட்சிக்காலத்தில் மாவட்டங்களும், போக்குவரத்துக் கழகங்களும் தமிழ் நாட்டுத் தலைவர்கள் பெயர்களால் அழைக்கப்படும் பழக்கம் ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக, காஞ்சீபுரம் மாவட்டம் அண்ணா மாவட்டம் என்றும், ஈரோடு மாவட்டம் பெரியார் மாவட்டம் என்றும் திருவள்;ர் மாவட்டம் எம்.ஜி.ஆர். மாவட்டம் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டன. அதே போன்று போக்குவரத்துக் கழகங்களுக்கும்

தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன.

### 7.2.3 மாவட்டத் தலைநகர்கள்

காலப்போக்கில் இவை சாதி மதப் பூசல்களுக்கு வழிவகுத்தது. எனவே, கருணாநிதி அரசு அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களுடன் கலந்து பேசிய (1997 ஜூன் 5) பின்னர் 1997 ஜூலை முதல் தேதி தலைவர்களின் பெயரால் இயங்கிய போக்குவரத்துக் கழகங்கள் அந்தந்தப் பகுதிகளின் பூகோள அமைப்புக்கேற்ப பெயர் மாற்றம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. உதாரணமாக சென்னையில் இயங்கி வந்த பல்லவன் மற்றும் அம்பேத்கார் மாநகர போக்குவரத்து கழகம்- சென்னை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாவட்டப் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களும் மாற்றப்பட்டன. இதேபோன்று மாவட்டங்களுக்கு வைக்கப்பட்ட தலைவர்களின் பெயர்கள் நிக்கப்பட்டு மீண்டும் மாவட்டத் தலைநகரின் பெயரிலேயே அந்த மாவட்டங்கள் அழைக்கப்பட்டன. உதாரணமாக அண்ணா மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் என்றும், பெரியார் மாவட்டம் ஈரோடு மாவட்டம் என்றும், எம்.ஜி.ஆர் மாவட்டம் திருவள்;ர் மாவட்டம் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது!

### 7.2.4 சமத்துவபுரம், 1997- 98

சமூக நீதிக் கொள்கைக்கு உருவம் கொடுக்கவும், பெரியாரின் சமத்துவ சமுதாயக் குறிக்கோளைப் பரப்பவும் கருணாநிதி அரசு ஒரு ஆக்கப்பூர்வமான வீட்டு வசதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1997-98 இல் துவக்கப்பட்ட அத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு சமத்துவபுரம் என்று பெயரிடப்பட்டது (பு.மு.மே.171 யுனை னுசயஎனைய யனெ வுசடையட றுநடகயசந னுநியசவஅநவெ 22.10.1997). இத்திட்டத்தின் கீழ் சமத்துவபுரம் கிராமப் பகுதியில் உருவாக்கப்பட்டது; ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஒப்புரவுடன் வாழ்வதற்குத் தேவையான உள்கட்டுமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. சாதி, சமய, வகுப்பு வேறுபாடின்றிப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு சமத்துவபுரத்தில் குடியமர்த்தப்பட்டனர். முதல் சமத்துவபுரம் 1998 ஆகஸ்டு 17 ஆம் தேதி மதுரை மாவட்டத்தில் மேலக்கோட்டை என்ற கிராமத்தில் 100 வீடுகளைக் கொண்ட பெரியார் சமத்துவபுரம் தொடங்கி வைக்கப்பட்டது. சமத்துவபுரத்திட்டம் கிராமக்குடியிருப்பு, சமூக இணக்கம், சமுதாய சொத்து ஆகியவற்றை வளர்ப்பதற்கான முன்னோடி முயற்சியாகக் கருதப்பட்டது.

### 7.2.5 உழவர்களுக்கான திட்டம்

உழவர் சந்தைத் திட்டம் 1999 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. முதல் உழவர் சந்தை மதுரையில் துவக்கப்பட்டது. அதன்பின் இவை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. உழவர் சந்தை

உழவர்களின், உழவர்களுக்கான சந்தையாகும். இச்சந்தையில் உழவர்கள் தங்களது விளைபொருளை இடைத்தரகர் குறுக்கீடின்றி நுகர்வோர்களுக்கு நேரடியாக விற்பனை செய்யலாம். இவர்களுக்காக ஒதுக்கப்படும் இடத்துக்கு வாடகை கொடுக்க வேண்டாம். காய்கறிகள், பழங்கள் போன்ற விவசாயப் பொருட்களின் விலை சந்தைக்குழுவால் ( ஆயசமநவபைெ ஊழஅஅவைவநந) நிர்ணயிக்கப்படும்.

### 7.2.6 திருவள்ளுவர் சிலை திறப்பு, 2000

இணைப்புப் பாலம்

2000 ஜனவரி முதல் தேதி குமரிமுனையில் விவேகானந்தர் மண்டபத்தை அடுத்து கடலில் உள்ள பாறையில் திருவள்ளுவர் சிலையை தமிழக முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார். 1999 டிசம்பர் 31 ஆம் தேதி துவக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்புவிழா இரண்டு நாட்கள் நடைபெற்றன. இந்த இருநாள் நிகழ்ச்சியின் போது குறளோவியம், கண்காட்சி, குழந்தைகள் குறள் ஒப்புவிக்கும் நிகழ்ச்சி, ஆய்வரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சி 20 ஆம் நூற்றாண்டையும், 21 ஆம் நூற்றாண்டையும் இணைக்கும் பாலமாக அமைந்தது.

வரவேற்பு

கன்னியாகுமரி திருள்ளுவர் சிலையை உருவாக்கியவர், சென்னை வள்ளுவர் கோட்டத்தி உருவாக்கிய கணபதி ஸ்தபதி ஆவார். அவர் தலைமையில் 500 சிற்பிகள் பங்கேற்று இச்சிலையை வடித்தனர். திருவள்ளுவர் சிலையின் பீடம் 38 அடி; சிலையின் உயரம் 95 அடி; சிலையின் மொத்த உயரம் 133 அடி. திருவள்ளுவர் சிலை 3681 செதுக்கப்பட்ட கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் மொத்த எடை 7000 டன்! திருவள்ளுவர் சிலைக்கான மொத்த செலவு ரூ.10 கோடி. இச்சிலையில் 133 குறட்பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை 21 ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தை வரவேற்றது.

### 7.2.7 சரித்திரச் சாதனைகள், 1996 - 2001

கருணாநிதி அவரது ஐந்தாண்டு கால சாதனை சரித்திரத்தை பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார்.

- மெட்ராஸ்' என்ற பெயர் சென்னை' என்று மாற்றப்பட்டது
- திருவள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் கன்னியாகுமரியில் சிலை அமைக்கப்பட்டது
- காவிரி நதிநீர் ஆணையம் பிரதமர் தலைமையில் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டது

- அரசு அலுவலர்களுக்கு சாதனைகள் - மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான ஊதியம்
- வணிகர்களுக்கு சலுகைகள் - வரிகள் நீக்கம் - குறைப்பு; அனைத்துப் பொருட்களுக்கும் ஒருமுனை வரி.
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நல வாரியங்கள்
- மாணவர்களுக்குச் சலுகைகள் - இலவச பேருந்து வசதி - பள்ளிகளில் கணினி பயில நிதி ஒதுக்கீடு - ஒற்றைச் சாரள முறை அறிமுகம்
- விவசாயிகளுக்கு சலுகைகளுடன் இலவச மின்சாரம் நீடிப்பு - கடன்கள் தள்ளுபடி - கொள்முதல் விலை உயர்வு - உரவிலை குறைப்பு
- உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் - மகளிருக்குத் தனி ஒதுக்கீடு
- தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு முதலீடு - ஏற்றுமதி சாதனை - டைடல் பூங்கா.
- தகவல் தொழில் நுட்பத்திற்கான தனித் துறை - உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
- காமராசர், அம்பேத்கார், பக்தவத்சலம், காயிதே மில்லத் மணி மண்டபங்கள்
- ஏழைப் பெண்கள் இலவச திருமண உதவித் திட்டம்
- இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் - கைத்தறியாளர்களுக்கு வாழ்வளிப்பு
- வருமுன் காப்போம் திட்டம், வாழ்வொளி திட்டம்
- தொகுப்பு வீடுகள் - காங்க்ரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டம்
- பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்
- உழவர் சந்தைகள் 19 அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
- நமக்கு நாமே திட்டம் ( நெஞ்சுக்கு நீதி, நான்காம் பாகம், பக்கம் 625-26).

**உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக**

1. சமத்துவபுரம்
2. உழவர்களுக்கான திட்டம்

## 7.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. சமூக நீதிக் கொள்கைக்கு உருவம் கொடுக்கவும், பெரியாரின் சமத்துவ சமுதாயக் குறிக்கோளைப் பரப்பவும் கருணாநிதி அரசு ஒரு ஆக்கப்பூர்வமான வீட்டு வசதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1997-98 இல் துவக்கப்பட்ட அத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு சமத்துவபுரம் என்று பெயரிடப்பட்டது (G.O.NO.171> Adi Dravida and Tribal Welfare Department> 22.10.1997). இத்திட்டத்தின் கீழ் சமத்துவபுரம் கிராமப் பகுதியில் உருவாக்கப்பட்டது; ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஒப்புரவுடன் வாழ்வதற்குத் தேவையான உள்கட்டுமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. சாதி, சமய, வகுப்பு வேறுபாடின்றிப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு சமத்துவபுரத்தில் குடியமர்த்தப்பட்டனர். முதல் சமத்துவபுரம் 1998 ஆகஸ்டு 17 ஆம் தேதி மதுரை மாவட்டத்தில் மேலக்கோட்டை என்ற கிராமத்தில் 100 வீடுகளைக் கொண்ட பெரியார் சமத்துவபுரம் தொடங்கி வைக்கப்பட்டது. சமத்துவபுரத்திட்டம் கிராமக்குடியிருப்பு, சமூக இணக்கம், சமுதாய சொத்து ஆகியவற்றை வளர்ப்பதற்கான முன்னோடி முயற்சியாகக் கருதப்பட்டது.

2. உழவர் சந்தைத் திட்டம் 1999 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. முதல் உழவர் சந்தை மதுரையில் துவக்கப்பட்டது. அதன்பின் இவை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. உழவர் சந்தை உழவர்களின், உழவர்களுக்கான சந்தையாகும். இச்சந்தையில் உழவர்கள் தங்களது விளைபொருளை இடைத்தரகர் குறுக்கீடின்றி நுகர்வோர்களுக்கு நேரடியாக விற்பனை செய்யலாம். இவர்களுக்காக ஒதுக்கப்படும் இடத்துக்கு வாடகை கொடுக்க வேண்டாம். காய்கறிகள், பழங்கள் போன்ற விவசாயப் பொருட்களின் விலை சந்தைக்குழுவால் ( Marketing Committee) நிர்ணயிக்கப்படும்.

## 7.4 சுருக்கம்

பகுத்தறிவுக் கொள்கை பழுதுபடாமல் ‘கட்வுட் கவலை நமக்கில்லை’ என்றும் ˙ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ ‘கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனவும் வலியுறுத்திய தலைவர் தமிழ் நாடகக்கலை வளர்ச்சியில் அண்ணாவின் பங்கு பெரும் பங்கு எனலாம். ‘சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்’ ˙சந்திரமோகன்’ ‘நீதிதேவன்மயக்கம்’ முதலிய நாடகங்களைப் படைத்தவர். செவ்வாழை, புலிநகம், குமரிக்கோட்டம், பிடிசாம்பல் முதலிய

சீர்திருத்த நூற்றுக்கணக்கான கதைகளைப் படைத்தவர். வண்டிக்காரன்மகன், ஓர் இரவு, நல்லதம்பிஈ வேலைக்காரி, சொர்க்கவாசல் ஆகிய திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதியவர். ஆண்ணாவின் கதைகள் சாதி உயர்வு, மூடநம்பிக்கை ஆகியவற்றைச் சாடின. 'தீ பரவட்டும் 'நாடும் ஏடும்'இ 'நல்ல தீர்ப்பு' ஆகியன அண்ணாவின் கடிதமலர்கள்.1969-ல் பேரறிஞர் அண்ணாவின் மறைவிடத்தில் நினைவாலயம் ஒன்று எழுப்பப்பெற்றது. அண்ணாவின் நினைவைப் போற்றும் வகையில் தமிழகம் முழுவதம் அண்ணாவின் சிலைகள் நிறுவப் பெற்றன.

## 7.5 முக்கிய கருத்துப்படிமங்கள்

கன்னியாகுமரி திருள்ளுவர் சிலையை உருவாக்கியவர், சென்னை வள்ளுவர் கோட்டத்தி உருவாக்கிய கணபதி ஸ்தபதி ஆவார். அவர் தலைமையில் 500 சிற்பிகள் பங்கேற்று இச்சிலையை வடித்தனர். திருவள்ளுவர் சிலையின் பீடம் 38 அடி; சிலையின் உயரம் 95 அடி; சிலையின் மொத்த உயரம் 133 அடி. திருவள்ளுவர் சிலை 3681 செதுக்கப்பட்ட கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் மொத்த எடை 7000 டன்! திருவள்ளுவர் சிலைக்கான மொத்த செலவு ரூ.10 கோடி. இச்சிலையில் 133 குறட்பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை 21 ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தை வரவேற்றது.

## 7.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. திருவள்ளுவர் சிலை திறப்பு
2. அண்ணாவின் இருமொழிக் கொள்கை

**நெடுவினா**

1. கருணாநிதியின் சரித்திரச் சாதனைகள்
2. அண்ணா அமைச்சரவையின் பணிகள்

## 7.7 மேலும் படிக்க

1. Venkatesan. G-History of modern Tamilnadu From 1600-2011 A.D.
2. Natarajan.C- Social History of Modern Tamilnadu
3. Subramanian.N-Hhistory of Tamil Nadu 1336 -1984 A.D
4. Devanesan.A -History of Tamil Nadu upto1995 A.D
5. Subramanian.N-Hhistory of Tamil Nadu 1336 -1984 A.D
6. Devanesan.A -History of Tamil Nadu upto1995 A.D

# அலகு-8 தி.மு.க ஆட்சியின் போது நலத்திட்டங்கள்-சமூக-பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றங்கள்.

## அமைப்பு

8.0 அறிமுகம்
8.1 கல்வி முன்னேற்றங்கள்.
8.1.1 தமிழ்மொழி வளர்ச்சி
8.1.2 கல்வி வளர்ச்சி
8.2 சமூக நலத்திட்டங்கள்
8.2.1 சமூக நலத்திட்டங்கள்
8.2.2 சென்னை அழகுபடுத்தப்படல்
8.2.3 வரலாற்று இடங்களுக்கு முக்கியத்துவம்
8.3 கழக ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி
8.3.1 பணத்தோட்டம்
8.3.2 பொருளாதார ஏற்றத்தாழ்வு
8.3.3 பொருளாதாரப் போக்கு
8.3.4 தொழிற்வளர்ச்சி
8.3.5 வேளாண்மைத் துறையில் வளர்ச்சி
8.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
8.5 சுருக்கம்
8.6 முக்கிய கருத்துப்படிமங்கள்
8.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
8.8 மேலும் படிக்க

## 8.0அறிமுகம்

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டு மாவட்டங்கள் அந்தந்த மாவட்டத்தின் தலைநகரின் பெயரால் அழைக்கப்பட்டன. தி.மு.கவின் ஆட்சிக்காலத்தில் மாவட்டங்களும், போக்குவரத்துக் கழகங்களும் தமிழ் நாட்டுத் தலைவர்கள் பெயர்களால் அழைக்கப்படும் பழக்கம் ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக, காஞ்சீபுரம் மாவட்டம் அண்ணா மாவட்டம் என்றும், ஈரோடு மாவட்டம் பெரியார் மாவட்டம் என்றும் திருவள்;ர் மாவட்டம் எம்.ஜி.ஆர். மாவட்டம் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டன. அதே போன்று போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன.

## 8.1 கல்வி முன்னேற்றங்கள்

### 8.1.1 தமிழ்மொழி வளர்ச்சி

தமிழ் மொழி பற்று கொண்ட கருணாநிதி தமிழ்மொழி மேம்பாட்டிற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார் தமிழ்நாட்டில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை குறைக்கும் நோக்குடன் ஆங்கில பெயர்களுக்குப் பதிலாக தமிழ் பெயர்கள் சூட்டப்பட்டன கல்லூரிகளில் தமிழை போனதாக மொழியாக தாக்கினார் தமிழ் வளர்ச்சிக்காக தனியாக அமைச்சகமும் அமைக்கப்பட்டது தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய நீராரும் கடலுடுத்த என்ற பாடல் அறிவிக்கப்பட்டது ஆகா' வாணி என்பது வானொலியாக பிராந்தியசெய்திகள் என்பது மாநில செய்திகள் என்று மாற்றப்பட்டது ஸ்டேட் எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் வலம் வந்து கொண்டிருந்த பேருந்துகளுக்கும் தமிழ்நாடு அரசு அருந்தும் பழக்கம் என்ற பெயர் சூட்டப்பட்டது தமிழர்களின் வரலாற்றை எழுத டாக்டர் மு வரதராசனார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார் கருணாநிதி.

பட்டப்படிப்பு பட்ட மேற்படிப்பு மாணவர்கள் தங்கள் தாய்மொழி தமிழில் படிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் பாட நூல்கள் தமிழில் எழுதப்படுவதற்கு ஆணை பிறப்பித்தார் கருணாநிதி தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையிலான பணிகளில் ஒரு முயற்சியாக அகரமுதலியை பல தொகுதிகளாக வெளியிடுவதற்கான அகரமுதலி திட்டத்தை 1974 நிறுவினார் கருணாநிதி.

மேலும் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்வுக்காக இலக்கியங்களை கலை பண்பாட்டுத்துறை பள்ளிக்கல்வித்துறை சமூகவியல் துறை சிறைத்துறை ஆகிய ஐந்து தொகுதிகளை கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1970 நிறுவினார். இவ்வாறு தமிழ் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### 8.1.2கல்வி வளர்ச்சி

கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது கல்விக் கூடங்களின் எண்ணிக்கை பெருகியது பல முக்கிய நபர்களில் கல்லூரிகள் தொடங்கப்படும் என மருத்துவ கல்லூரியில் பொறியியல் கல்வியில் வளர்ச்சி அடைந்தது மருத்துவ கல்வி வளர்ச்சிக்காக ராமமூர்த்தியின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது அக்குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்தியது தமிழ்நாட்டில்

வளர்ச்சிக்கான நிதி வசதிகளை எவ்வாறு தடுக்கலாம் என்பதற்காகவும் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையிலும் டாக்டர் மால்கம் ஆதிசே'ய்யா தலைமையில் ஒரு குழுவை அமைத்து அதன் பரிந்துரைகளை செயல்படுத்தினார் கருணாநிதி மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் என்று அமைக்கப்பட்டது இதன் மூலம் மாநிலம் முழுவதிலும் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படுவது நூலகத்துறை என தனியாக பொது நூலக இயக்கத்தை உருவாக்கினார் கருணாநிதி இதன் மூலம் தமிழில் வெளியாகும் அனைத்து நூல்களையும் வாங்கிப் அரசு ஆதரவு தமிழில் தேர்வுகளை சிறப்பாக நடத்துவதற்கு தமிழ்நாடு தேர்வாணைய இயக்கம் கருணாநிதி காலத்தில் உருவாக்கப்பட்டது.

## 8.2 சமூக நலத்திட்டங்கள்

### 8.2.1 சமூக நலத்திட்டங்கள்

கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில் எண்ணற்ற சமூகநலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன சமுதாயத்தில் மிகக் கீழான நிலையில் உள்ள பிச்சைக்காரர்களாக பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் 1970 இல் தொடங்கப்பட்டது 1071 தமிழ்நாடு முழுவதும் கண்ணொளி வழங்கும் திட்டம் வழங்கப்பட்டது இதன் மூலம் லட்சக்கணக்கானோர் கண்ணொளி பெற்றனர் தமிழ்நாட்டில் கருணாநிதியால் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் பின்னர் மத்திய அரசால் தேசிய அளவில் பின்பற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டது 1973 இலவச சைக்கிள் ரிக்'ா வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1974 இல் ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டம் 1975 அனாதை சிறுவர்களின் மறுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள சுமார் 75 லட்சம் வீடில்லா ஏழை ஆதிதிராவிடர்களுக்கு குறைந்தது பத்து லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை செயல்படுத்த 1974 ஆணை பிறப்பிக்கப்பட்டது கிராமப்புற பெண்களின் சுகாதாரம் குடும்ப நலம் வாழ்க்கை கல்வி மற்றும் சுய வேலை வாய்ப்பு பயிற்சி காதலரின் மகளிர் நல மையங்கள் கிராமங்களில் தொடங்கப்பட்டன கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்ட உணவு வழங்குவதற்கு ரூபாய் இரநூறு உதவி வழங்கும் விதமாக 1989 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் தொடங்கப்பட்டது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மக்கள் பணியில் பயிற்சி அளிக்கும் இளைஞரணி திட்டம் செயல்படுத்தப்பட்டது மக்களுக்கான குடிநீர் வடிகால் வாரியம் குடிசை மாற்று வாரியம் ஆகியவை உருவாக்கப்பட்டன.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஐஎப்எஸ், ஐபிஎஸ்

தேர்வு எழுதுவதற்காக இலவச பயிற்சி மையம் தொடங்கப்பட்டது.

### 8.2.2 சென்னை அழகுபடுத்தப்படல்

கருணாநிதி முதல்வராக இருந்த காலத்தில் சென்னை நகரை அழகுபடுத்த பட்டது நகரின் மத்தியில் நோய்களின் பிறப்பிடமாக விளங்கும் கூறுமாறு சுத்தப்படுத்த கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது படகு போக்குவரத்து தொடங்கப்பட்டது நகரில் அதிநவீன வசதிகள் நிறைந்த பல அரசு கட்டிடங்கள் கட்டப்பட்டன புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தலைமைச் செயலக கட்டிடம் இவரது ஆட்சிகாலத்தில் தான் கட்டப்பட்டது பாடசாலைகள் எடுத்துக்கொண்டு அழகுபடுத்தப்பட்டன.

### 8.2.3 வரலாற்று இடங்களுக்கு முக்கியத்துவம்

கருணாநிதியின் ஆட்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளிக்கப்பட்டது உலகப்பெரும் பொதுமறையாம் திருக்குறளைத் தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் தினத்தை நினைவு சின்னமாக வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கி மாபெரும் சாதனை படைத்தார் கருணாநிதி. தமிழகத்தின் பண்டைய சிற்பக்கலை சிறப்புகளும் நவீன கட்டுமான உத்திகளும் ஒருங்கிணைந்த மாபெரும் கலைப்படைப்பு வள்ளுவர் கோட்டம் ஆகும் விடுதலைப்போரில் உயிர்நீத்த வீரபாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை எழுப்பப்பட்டு அவருக்கு சிறை வைக்கப்பட்ட கட்டபொம்மனின் நினைவிடமாக அது திகழ்கிறது.

தென்னகத்தின் பெரிய தேர்களில் திருவாரூர் தேரை ஒன்று அதன் எடை 200 டன் ஏறத்தாழ 40 ஆண்டு காலமாக ஓடாமலிருந்த தேரை அமெரிக்க நாட்டில் பொறியாளர்களின் உதவியுடன் தேரோடும் நான்கு வீதிகளையும் சீரமைத்து 1969 முதல் தேரை ஓட்டி தேர்த்திருவிழா நடத்தினார் கருணாநிதி. கரிகால் பெருவளத்தான் காலத்தில் சிறப்புடன் விளங்கியது காவிரிப்பூம்பட்டினம் என்கிற பூம்புகாரை அது கடலின் சீற்றத்தால் மறைந்து போன நகரம் ஆகிவிட்டது அந்த நகரில் மீண்டும் உருவாகியுள்ள கண்ணகி வாழ்ந்த அந்த ஊரில் நினைவுச்சின்னம் அமைக்க முடிவு செய்தார் கருணாநிதி. சிலப்பதிகாரக் காட்சிகளைச் சிற்பங்களாக வடித்து சிலப்பதிகாரக் கலைக்கூடத்தில் நிறுவினார். இதில் கண்ணகி கதையை விளக்கும் 48 சிற்பங்கள் உள்ளன 1973 இந்திர விழா நடந்த பௌர்ணமியில் எழுநிலை மாடம் திறந்துவைக்கப்பட்டது. கன்னியாகுமரியில் காமராஜருக்கு 50 லட்சம் ரூபாய் செலவில் நினைவு மண்டபம் கட்டப்பட்டது. அண்ணா சமாதி அழகுபடுத்தினார்.

## 8.1 கழக ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி

### 8.3.1 பணத்தோட்டம்

1967 ஆம் ஆண்டு அண்ணாதுரையின் தலைமையின் கீழ் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க அரசு திராவிட நாடு, தமிழ்-தமிழர் பண்பாட்டுப் பாதுகாப்பு, காங்கிரஸ் எதிர்ப்பு, மத்திய அரசுடன் மோதல் போன்ற பிரச்சனைகளில் தன் சிந்தனையையும், செயலையும் முழுமையாகச் செலுத்தியமையால் தமிழ் நாட்டில் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. பொருளாதாரம் படித்த முதலமைச்சர் அண்ணாதுரையால் தமிழகப் பொருளாதார வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டத்தைத் தீட்ட முடியவில்லை . அவர் எழுதிய ''பணத் தோட்டம்'' என்ற புத்தகத்தில் கூறியிருந்த பொருளாதாரப் புரட்சிக் கருத்துக்களுக்கு செயலுருவம் கொடுக்க இயலவில்லை. அண்ணாதுரை ஆட்சிப் பொறுப்பேற்ற பின் நினைப்புக்கும் நடைமுறைக்குமுள்ள இடைவெளியை நன்குணர்ந்தார்.

### 8.3.2 பொருளாதார ஏற்றத்தாழ்வு

தி.மு.க ஆட்சிக்கு வநத் பின்னர் தான் வேளாண்மையில் பசுமைப் புரட்சி (Green Revolution) தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பசுமைப் புரட்சியின் தோற்றகர்த்தாவாகிய மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம் விஞ்ஞான வேளாண்மையின் மூலம் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தினார். அந்த அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த பசுமைப் புரட்சியைக் காங்கிரஸ் திட்டமாகக் கருதிய தி.மு.க அரசு அதில் அக்கறை காட்டவில்லை. விளைவு? பசுமைப் புரட்சி அளித்த வாய்ப்பை முனைப்புடன் பயன்படுத்திக் கொண்ட கோவை, வேலூர் மாவட்டங்கள் விஞ்ஞான வேளாண்மையில் விரைவாக வளர்ச்சி பெற, தர்மபுரி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்கள் விவசாயத்தில் பின்தங்கிய பிரதேசங்களாயின! இப்பிராந்தியப் பொருளாதார ஏற்றத்தாழ்வு தமிழ் நாட்டுப் பொருளாதார சமநிலையற்ற வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. அதுமட்டுமல்ல. வேலையில்லா விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வேலை தேடி நகரங்களுக்குச் சென்று குடியேறலாயினர். கிராமத்திலேயே தங்கியோர் வறுமையில் வாடினர்.

### 8.3.3 பொருளாதாரப் போக்கு

இந்தியா விடுதலையானதிலிருந்து இன்று வரை தமிழ் நாட்டின் வேளாண்மை வளர்ச்சியை மதிப்பீடு செய்து பார்க்கையில் பின்வரும் பொருளாதாரப் போக்கு தெளிவாகத் தெரிகிறது: மாநிலத்தின் மொத்த வருவாயில் வேளாண்மை வளர்ச்சிக்கான பங்கு குறைந்துள்ளது தமிழக வேளாண்மை படிப்படியாக உணவு சாராத பணப்யிர் விவசாயமாக மாறிக் கொண்டிருக்கிறது நில உடைமை உறவிலும், விவசாய பொருள்

உற்பத்தியிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும், இம்மாற்றங்களின் பயன் விவசாயத் தொழிலாளர்களைச் சென்றடையவில்லை சிறு, குறு விவசாயிகளின் நிலப்பரப்பும் குறைந்து விட்டது. விவசாய நிலத்தை வீடுகளும், தொழிற்சாலைகளும் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. அரசாங்கம் அளிக்கும் சலுகைகளை முழுதுமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வசதியான பெரிய விவசாயிகள், அரசாங்க ஆதரவுடன் வளமாக வாழ்கின்றனர் முக்கிய பயிர்களான நெல், கரும்பு, பருத்தி, நிலக்கடலை சாகுபடியில் உடல் உழைப்பு குறைக்கப்பட்டு, எந்திர மற்றும் நவீன இடுபொருள்களின் உபயோகம் அதிகரித்துள்ளது ல்வேறு காரணங்களுக்காக சாகுபடி நிலங்கள் தரிசு நிலங்களாகி வருகின்றன் பொதுவாக கிராமங்களில் விளைச்சல் குறைந்து வேலையின்மை அதிகரித்துள்ளது வேலையில்லா விவசாயத் தொழிலாளர்கள் வேலைதேடி பிற இடங்களுக்குக் குடிபெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, ‘‘மானாவரிப் பிரதேசங்களில் டெல்டா அல்லாத வட மாவட்டங்களில் பிழைப்பு தேடி குடிபெயர்தல் சமீப ஆண்டுகளில் தீவிரமாக அதிகரித்துள்ளது’’ என்று குறிப்பிட்டுள்ளார் தேவ.பேரின்பன்.

புதிய பொருளாதாரக் கொள்கை

1990களில் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை-தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல்-யின் தாக்கத்தால் தமிழ் நாட்டுப் பொருளாதாரத்தை, குறிப்பாக வேளாண்மை வளர்ச்சியைப் பாதித்தது. தமிழக விவசாயம் வெளிநாட்டு விவசாயத் தேவைகளோடு பிணைக்கப்பட்டது. பணப் பயிர்களின் தேவை மேலும் அதிகரித்தது இத்தேவை அதிகரித்ததால் உணவுப் பயிர்களின் உற்பத்தி குறையலாயிற்று. மேலும் விளை நிலங்களில் பொருளாதார மண்டலங்களும், அடுக்குமாடிக் கட்டிடங்களும் தோன்றுவதால் விளைநிலத்தின் பரப்பளவு வெகுவாகக் குறைந்து விட்டது. உணவுப் பொருள்களின் உற்பத்திக் குறைவும், உணவுத் தட்டுப்பாடும், விலைவாசி உயர்வும் தவிர்க்க முடியாதவையாகிவிட்டன.

பொது வினியோக முறை (Public Distribution System) மானிய முறை (Subsidy), இலவசத் திட்டங்கள் (Free Bees) போன்றவை வாசனைத் திரவியத் திட்டங்களாகவே (Cosmetic Schemes) யன்றி வேளாண்மையின் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமையவில்லை. அரசாங்கத்திடம் உள்ள உணவு தானியங்கள் கையிருப்பு மக்களுக்கு முறையாக, முழுமையாகச் சென்றடைய வேண்டும். தேவையான உணவுப் பொருட்கள் இருப்பு இருப்பது அவற்றைத் தேவையான இடத்துக்குக் கொண்டு செல்வது மக்களுக்குத் தடையின்றி

வழங்குவது ஆகிய மூன்றையும் வழுவின்றிக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். தமிழ் நாட்டில் தற்போதுள்ள நிலையில், குறைந்த விளைநிலத்தில், நீரைச் சிக்கணப்படுத்தி, அதிகபட்ச உற்பத்தியை எட்டுவதால் மட்டுமே மக்களுக்கு உண்மையான உணவுப் பாதுகாப்பை (குழழன ளுநஉரசவைல) அளிக்க முடியும்.

### 8.3.4 தொழிற்வளர்ச்சி

கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில் தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டது உலகத்திலேயே முதல் தொடர்புக்கு வார்ப்படத் தொழிற்சாலை அரக்கோணத்தில் அமைக்கப்பட்டது சோவியத் நாட்டின் தொழில் நுட்ப உதவியுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 1972ல் கருணாநிதி தொடங்கி வைக்கப்பட்டது 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் கீழ்கண்ட பல தொழில்கள் துவங்கப்பட்டன.

.

கும்மிடிப்பூண்டியில் ஏசியா டுபாக்கோ நிறுவனத்தின் சார்பில் காலணி மேல் பாகம் தயாரிக்கும் தொழிற்சாலை, மறைமலைநகரில் மேக்னடிக் மீடியா என்ற தொழிற்சாலை டிட்கோ மூலமாக தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் தொழிற்சாலை மேலூருக்கு அருகில் உள்ள நரசிங்கப்பட்டியில் செயற்கை வைரம் உருவாக்கும் தொழிற்சாலை கடலூரில் தமிழ்நாடு குளோரின் மற்றும் சல்ஃபைடு கெமிக்கல் தொழிற்சாலை தர்மபுரி மாவட்டம் ஓசூரில் டைட்டான் கைக்கடிகார உறுப்புக்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தஞ்சை மாவட்டம் பாளையங்கோட்டையில் கயிறாலான ரப்பர் தயாரிக்கும் தொழிற்சாலை போன்றவை கருணாநிதி காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

### 8.3.5 வேளாண்மைத் துறையில் வளர்ச்சி

கருணாநிதி ஆட்சிக்காலத்தில் வேளாண்மை வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது கிராமங்களில் வேளாண்மை பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டன விவசாயிகளுக்கு புச்சி மருந்துகள், ரசாயன உரங்களும் உபயோகம் செய்யப்பட்டது. பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டதால் விவசாய உற்பத்தி அதிகரித்தது .சிறு அளவு நீளமுள்ள ஏழை உழவர்களுக்கு கடன் பெற்று உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக 1966 தமிழ்நாடு கூட்டுறவு நில அடமான வங்கி திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதன்படி தமிழ்நாடு எங்கும் நிலவள வங்கிகள் உருவாக்கப்பட்டன விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை தொடங்கியவர் கருணாநிதி ஆவார். 1970 கருணாநிதி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்பது 15 ஸ்டாண்டர்டு உச்சவரம்பு என்று மாற்றி சட்டம் இயற்றினார்.

| **உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக** |
|---|
| 1. பணத்தோட்டம் |
| 2. பொருளாதார ஏற்றத்தாழ்வு |

## 8.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. 1967 ஆம் ஆண்டு அண்ணாதுரையின் தலைமையின் கீழ் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க அரசு திராவிட நாடு, தமிழ்-தமிழர் பண்பாட்டுப் பாதுகாப்பு, காங்கிரஸ் எதிர்ப்பு, மத்திய அரசுடன் மோதல் போன்ற பிரச்சனைகளில் தன் சிந்தனையையும், செயலையும் முழுமையாகச் செலுத்தியமையால் தமிழ் நாட்டில் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. பொருளாதாரம் படித்த முதலமைச்சர் அண்ணாதுரையால் தமிழகப் பொருளாதார வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டத்தைத் தீட்ட முடியவில்லை . அவர் எழுதிய “பணத் தோட்டம்” என்ற புத்தகத்தில் கூறியிருந்த பொருளாதாரப் புரட்சிக் கருத்துக்களுக்கு செயலுருவம் கொடுக்க இயலவில்லை. அண்ணாதுரை ஆட்சிப் பொறுப்பேற்ற பின் நினைப்புக்கும் நடைமுறைக்குமுள்ள இடைவெளியை நன்குணர்ந்தார்.

2. தி.மு.க ஆட்சிக்கு வநத் பின்னர் தான் வேளாண்மையில் பசுமைப் புரட்சி (Green Revolution) தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பசுமைப் புரட்சியின் தோற்றகர்த்தாவாகிய மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம் விஞ்ஞான வேளாண்மையின் மூலம் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தினார். அந்த அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த பசுமைப் புரட்சியைக் காங்கிரஸ் திட்டமாகக் கருதிய தி.மு.க அரசு அதில் அக்கறை காட்டவில்லை. விளைவு? பசுமைப் புரட்சி அளித்த வாய்ப்பை முனைப்புடன் பயன்படுத்திக் கொண்ட கோவை, வேலூர் மாவட்டங்கள் விஞ்ஞான வேளாண்மையில் விரைவாக வளர்ச்சி பெற, தர்மபுரி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்கள் விவசாயத்தில் பின்தங்கிய பிரதேசங்களாயின! இப்பிராந்தியப் பொருளாதார ஏற்றத்தாழ்வு தமிழ் நாட்டுப் பொருளாதார சமநிலையற்ற வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. அதுமட்டுமல்ல. வேலையில்லா விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வேலை தேடி

நகரங்களுக்குச் சென்று குடியேறலாயினர். கிராமத்திலேயே தங்கியோர் வறுமையில் வாடினர்.

## 8.5 சுருக்கம்

மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை-தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல்-யின் தாக்கத்தால் தமிழ் நாட்டுப் பொருளாதாரத்தை, குறிப்பாக வேளாண்மை வளர்ச்சியைப் பாதித்தது. தமிழக விவசாயம் வெளிநாட்டு விவசாயத் தேவைகளோடு பிணைக்கப்பட்டது. பணப் பயிர்களின் தேவை மேலும் அதிகரித்தது இத்தேவை அதிகரித்ததால் உணவுப் பயிர்களின் உற்பத்தி குறையலாயிற்று. மேலும் விளை நிலங்களில் பொருளாதார மண்டலங்களும், அடுக்குமாடிக் கட்டிடங்களும் தோன்றுவதால் விளைநிலத்தின் பரப்பளவு வெகுவாகக் குறைந்து விட்டது. உணவுப் பொருள்களின் உற்பத்திக் குறைவும், உணவுத் தட்டுப்பாடும், விலைவாசி உயர்வும் தவிர்க்க முடியாதவையாகிவிட்டன.

## 8.6 முக்கிய கருத்துப்படிமங்கள்

கருணாநிதி முதல்வராக இருந்த காலத்தில் சென்னை நகரை அழகுபடுத்த பட்டது நகரின் மத்தியில் நோய்களின் பிறப்பிடமாக விளங்கும் கூறுமாறு சுத்தப்படுத்த கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது படகு போக்குவரத்து தொடங்கப்பட்டது நகரில் அதிநவீன வசதிகள் நிறைந்த பல அரசு கட்டிடங்கள் கட்டப்பட்டன புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தலைமைச் செயலக கட்டிடம் இவரது ஆட்சிகாலத்தில் தான் கட்டப்பட்டது பாடசாலைகள் எடுத்துக்கொண்டு அழகுபடுத்தப்பட்டன.

## 8.7 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. தொழிற்வளர்ச்சி
2. வேளாண்மைத் துறையில் வளர்ச்சி

**நெடுவினா**

1. கல்வி முன்னேற்றங்கள்
2. கழக ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி

## 8.8 மேலும் படிக்க

1. B.S Baliga, - Studies in Madras Administration, 2 Vols.
2. Edgar Thurston - Castes and Tribes in South India
3. Baker, C.J – The Politics of South India
4. Yesudhasan.V.S. Isaac & -History of Tamil society and culture, Since Jaya Dhas.R 1336 A.D.,10 John Gilbert.G – Contemporary History India.

# அலகு-9 அ.இ.அ.தி.மு.க-அமைச்சகம்

9.0 எம்.ஜி.ஆர்
9.1 அறிமுகம்
9.1.1 அரசியல் நுழைவு
9.1.2 சினிமா உலகம்
9.1.3 கழகத்தில் கருத்து வேறுபாடு – அ.இஅ.தி.மு.க. வின் தோற்றம்
9.1.4 தேர்தல் பிரவேசம்
9.1.5 11 ஆண்டு கால சாதனைகள்
9.1.6 கழகத்தில் பிளவு
9.2 செல்வி. ஜெயலலிதா
9.2.1 அறிமுகம்
9.2.2 வாழ்க்கை வரலாறு மற்றும் ஓராண்டு கால ஆட்சி
9.2.3 ஜெயலலிதாவின் நான்காவது ஆட்சிகாலம்
9.2.4 ஜெயலலிதாவின் ஐந்தாவது ஆட்சிகாலம்
9.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
9.4 சுருக்கம்
9.5 முக்கிய கருத்துப்படிமங்கள்
9.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
9.7 மேலும் படிக்க

## 9.0 எம்.ஜி.ஆர்

## 9.1 அறிமுகம்

தமிழக மக்களால் "புரட்சித் தலைவர்" என்றும், "மக்கள் திலகம்: என்றும் அழைக்கப்பட்டவர் எம்.ஜி.ராமசந்திரன் என்ற எம்.ஜி.ஆர் அவர்கள். இவர் கோபால மேனனுக்கும் சத்தியவதி அம்மையாருக்கும் இரண்டாவது குமாரராக 1917 ஆம் ஆண்டு பிறந்தார். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமிழகத்தில் வாழ்ந்த இவருடைய பெற்றோர்கள் மலையாள மண்ணைச் சேர்ந்தவர்கள்.

இளமையில் வறுமையின் கொடுமைக்கு ஆளானவர். வாழ்க்கைப்பிழைப்பிற்காக இவரும் இவருடைய தமையனார் எம்.ஜி.சக்ரபாணி அவர்களும் நாடக நடிகர்களாக தம்முடைய வாழ்க்கையை மேற்கொண்டனர். இவரது அன்னை இவரை கடினமாக உழைத்து ஆளாக்கிட வழிகாட்டியவர். தாயை இறையாகக் கருதிய இவருடைய உயர்ந்த பண்பே இவருடைய வெற்றிக்கு அடிப்படை எனலாம். நாடகத்துறையிலிருந்து சினிமாத்துறைக்கு வந்த எம்.ஜி.ஆர் அவர்கள் திரையுலகில் முடிசூடா மன்னராக விளங்கியவர். நிச்சயமற்ற திரையுலகிலேயே பல்லாண்டு காலம் முன்னணியில் இருக்கமுடிந்த

அவரால் அரசியலிலும், அதிகாரப் போட்டியிலும் தொடர்ந்து முன்னணியில் இருக்க முடிந்தது.

### 9.1.1 அரசியல் நுழைவு

தம்முடைய வாழ்க்கைப் பாதையில் பல்வேறு அரசியல் தலைவர்களால் கவரப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தின் போது காந்திஜியின் கொள்கைகளால் கவரப்பட்டு காங்கிரஸில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதற்குப் பின்னால் தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கம் இவரைக் கவர்ந்தது. பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949 ஆம் ஆண்டு பெரியாரை விட்டுப்பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய பொழுது அறிஞரின் நாவண்மையினால் கவரப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார்.

இவருடைய கவர்ச்சியைப் பயன்படுத்து வாக்குகளைப் பெறமுடியுமென அண்ணா அவர்கள் நம்பியிருந்தார். அவருடைய நம்பிக்கை வீண்போக வில்லை 1967, 1971 - ல் நடந்த தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருவாரியான வெற்றியில் எம்.ஜி.ஆருக்கு முக்கியமான பங்கு உண்டு. அண்ணாவின் நம்பிக்கைக்கு பாத்திரமான இவர் அண்ணாவால் கழகத்தின் பொருளானராக நியமிக்கப்பட்டார். ஊழலுக்கு அப்பாற்பட்டவர் என்ற நற்பெயரையும் சம்பாதித்துக் கொண்டார்.

### 9.1.2 சினிமா உலகம்

தான் நடித்த எந்த ஒரு படத்திலும் குடிகாரனாகவோ அல்லது புகைப்பிடிப்பவனாகவோ, கொடுமைக்காரனாகவோ நடித்ததில்லை. மக்களை கவரும் வண்ணம் நேர்மை, நன்னடத்தை கொண்ட இளைஞனாகவே தாம் நடித்த 150 க்கு மேற்பட்ட படங்களில் கதாநாயகனாகவே நடித்து முடித்தவர், தாய்குலத்தைக் கவரும் தனயனாகவும், விவசாயிகளுக்கு ஒரு விவசாயி ஆகவும், தொழிலாளர்களுக்குத் தொழிலாளியாகவும், நாடோடிகளுக்கு ஒரு நாடோடியாகவும் நடித்து மக்களுக்கு காட்சியளித்தவர். இவற்றின் மூலமாக அவருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு வளர்ந்து கொண்டே இருந்தது.

### 9.1.3 கழகத்தில் கருத்து வேறுபாடு - அ.தி.மு.க. வின் தோற்றம்

அண்ணாவிடம் அவரிடமிருந்த செல்வாக்கு, கட்சியில் அவர் வகித்த பதவி ஆகியவற்றின் காரணமாக திரைப்படங்களில் நடிப்பதையும், கட்சிப் பிரச்சாரத்தையுமே முக்கியமாகக் கொண்ட அவருக்கு அண்ணா உயிருடன் இருந்தவரை அரசியலில் எவ்விதப் பிரச்சனையும் இல்லை. அண்ணாவின் மறைவிற்குப் பின்னால் கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராகவும், கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றார்

.

பொருளாளராகவிருந்த எம்.ஜி.ஆர் அவர்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பொறுப்பு வகிப்பவர்கள் தன் சொத்து

விபரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கூறினார். மேலும் அரசாங்கத்தின் மதுவிலக்கு கொள்கையினையும் குறை கூறினார். இது கட்சிக்குள் ஒரு பிரச்சனையாக கிளம்பியது. கழகத்தின் செயற்குழு உறுப்பினர்களைல் பெரும்பாண்மையினர் எம்.ஜி.ஆரை கழகத்தினின்று நீக்க வேண்டும் என்ற ஒரு மகஜரைக் கட்சியின் தலைவரான கலைஞரிடத்தில் கொடுத்தார்கள். அந்த மகஜரின் பேரில் கட்சியில் தலை வரும் செயலாளராகவிருந்த நெடுஞ்செழியனும் சேர்ந்து எம்.ஜி.ஆரை, எல்லாப் பொறுப்புகளினின்றும் , தற்காலிகமாக நீக்கம் செய்தனர்

.

இந்நிகழ்ச்சி நடந்து 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாளன்று பலவித சமரச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எதற்கும் உடன்படாத எம்.ஜி.ஆர் அவர்கள், 1972 அக்டோபர் 18 ஆம் நாளன்று தன்னுடைய பெயரில் உள்ள நற்பணி மன்றங்கள், ரசிகர் மன்றங்கள் ஆகியவற்றை அடித்தளமாக வைத்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தை தொடங்கினார். தமது கட்சியின் கொள்கை “அண்ணாயிசம்” என்று கூறினார். தன்னுடைய கட்சியின் கொள்கைகள் எல்லா மக்களையும், குறிப்பாக பெண்களையும், கிராமப்புறத்தினரையும் இயன்ற அளவு மகிழ்ச்சிப் படுத்தும் என்று கூறினார். அண்ணாயிசம் என்பது அண்ணாத்துரையின் கொள்கை எனக்கூற முடியாது. மாறாக தமது நிலையில் அண்ணா இருந்தால் என்ன செய்திருப்பாரென எம்.ஜி.ஆர் நினைத்தாரோ அதனையே அண்ணாயிசம் என அழைத்துக் கொண்டார்.

### 9.1.4 தேர்தல் பிரவேசம்

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியவுடன் நடந்த முதல் பாராளுமன்ற இடைத்தேர்தலில் (திண்டுக்கல்) கழகம் தன்னுடைய வேட்பாளரை நிறுத்தியது. அத்தேர்தலில் தி.மு.க காங்கிரஸ் வேட்பாளர்களைவிட மிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று அ.தி.மு.க வெற்றி வாகை சூடியது. அதனைத் தொடர்ந்து நடந்த சட்டமன்ற இடைத்தேர்தல்களிலும் வெற்றி கண்டது. எம்.ஜி.ஆர் அவரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. கல்யாண சுந்தரம் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தின் மீது ஊழல் புகார் தயாரித்து மாநில ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் அனுப்பினார்கள்.

அதன் விளைவாக அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷனின் அறிக்கையின் அடிப்படையில் தி.மு.க அரசு கலைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1977 - ல் தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. தேசிய காங்கிரஸ், வலதுசாரி கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டு தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர் தமிழகத்தின் முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேசிய அளவில் ஜனதா கட்சி பெரும்பான்மை பெற்று அமைச்சரவை அமைத்தது.

1980 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் அரசு மக்கள் செல்வாக்கை இழந்து விட்டது எனக் காரணம் காட்டி கலைக்கப் பட்டது. அதற்கடுத்து நடந்த 1980 தேர்தலில் தி.மு.க, இ.காங்கிரஸ் ஒரு கூட்டணியாகவும் அ.இ.அ.தி.மு.கவும் இரணடு கம்யூனிஸ்ட் கட்சிகளும் சேர்ந்து தேர்தலைச் சந்தித்தன. இத்தேர்தலில் பாராளுமன்றத் தொகுதிகளில் இ. காங்கிரசும், சட்டமன்றத் தொகுதிகளில் அ.இ.தி.மு.கவும் பெரும்பான்மை பெற்றன.

எம்.ஜி.ஆர் இரண்டாம் முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்றார். அதற்குப் பின்னை 1984 ல் நடந்த தேர்தலுல் இ. காங்கிரஸ் கட்சியும் அ.இ.அ.தி.மு.கவும் ஒரு கூட்டணியாகவும், திராவிட முன்னேற்றக்கழகம், ஜனதாகட்சி, கம்யூனிஸ்ட்கள் மற்றொரு கூட்டணியாகவும் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டன. மீண்டும் பாராளுமன்றத் தொகுதிகளில் இ.காங்கிரசும் சட்டமன்றத் தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.கவும் பெருவாரியான இடங்களில் வெற்றி பெற்றன மூன்றாம் முறையாக எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார். 1977 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு தான் காலமாகின்ற வரையிலும் தமிழகத்தின் முதல்வராகத் தன்னாட்சி நடத்தியவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

**9.1.5 11 ஆண்டு கால சாதனைகள்**

எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பிலிருந்த பொழுது அவருடைய ஆட்சியின் சாதனைகள் பலதுரைகளிலும் காணப்படுகின்றது. அவைகள்:

- பிற்படுத்தப்பட்டோருக்கு அரசுப்பணிகளில் 32 விழுக்காடு என்று இருந்ததை 50 விழுக்காடு என்று மாற்றியது குறிப்பிடத்தக்கது.

- கோவையில் பாரதியார் பல்கலைக் கழகத்தையும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தையும், பெண்களுக்கென கொடைக்கானலில் அன்னை தெரஸாவின் பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தையும் தொடங்கியது இவருடைய ஆட்சியில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

- காமராசர் காலத்தில் இருந்துவந்த, பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் புதுப்பிக்கப்பட்டு சத்துணவுத் திட்டமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

- குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு அதிக அளவில் ஆழ்குழாய்கிணறுகள் தோண்டச் செய்தார்; கிருஷ்ணா நதி நீரைச்

சென்னைக்கு கொண்டுவர அண்டை மாநிலங்களுடன் ஓர் உடன்பாட்டை மேற்கொண்டார்.

நடைமுறை அரசியல்வாதி

கட்சியில் நிலவிய கோஷ்டி மனப்பான்மை, ஊழல் போன்ற அரசியல் பிரச்சனைகளை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. மத்திய அரசாங்கத்தோடு சுமூக உறவையே விரும்பிய அவர் தமது அரசாங்கம் கலைக்கப்பட்டு விடக்கூடாதென்பதில் கவனமாயிருந்தார். இறுதி வரையில் மத்திய அரசுடன் அணைத்துப் பிரச்சனைகளில்கூட தமது கடைசிகாலத்திலும் மிக கவனமாக இருந்து செயல்பட்டார். தம்முடைய கட்சித்தலைவர்களில் சிலர் இந்தி திணிப்பு எதிர்ப்பு, மாநில சுயாட்சி போன்ற பிரச்சனைகளில் மத்திய அரசாங்கத்திற்கெதிராகப் பேசவும் அனுமதித்து தமது கட்சியும் திராவிடப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததேயெனக் காட்டிக் கொண்டார்

.

தி.மு.க ஆட்சியில் நடத்தியதைப்போல தன்னுடைய ஆட்சிக்காலத்தில் உலகத்தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்தி அதனைத் தமது அரசியல் ஆதாயத்திற்கு பயன்படுத்திக் கொண்டார். தமது திரையுலக நண்பர்களுக்கு அரசாங்கத்திலும், கட்சியிலும் பொறுப்புக்கள் கொடுத்தாலும் அவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டார். ஒரு சிலப் பிரச்சனைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்த அவர் சிலவற்றை அப்படியே விட்டுவிட்டார்.

அதற்கு அவருடைய உடல் நலமின்மையே காரணமாகும். அமெரிக்காவில் சிகிச்சை பெற்று திரும்பிய போதிலும் அவருடைய உடல்நலத்தில் ஒரு முன்னேற்றமும் இல்லை. இறுதியாக 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 24 ந் தேதியன்று இறைவனடி சேர்ந்தார். இந்தியாவின் மிக உயர்வான விருதான “பாரத ரத்னா” பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. தமிழக மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்ற அரசியல் தலைவர்களில் எம்.ஜி.ஆரும் ஒருவர்.

**9.1.6 கழகத்தில் பிளவு**

எம்.ஜி.ஆர் மறைவிற்குப் பின்னால் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. கழகம் இரண்டாக பிளவுபட்டது. ஒரு பிரிவு செல்வி. ஜெயலலிதா தலைமையிலும் மற்றொரு பிரிவு எம்.ஜி.ஆரின் துணைவியார் ஏ.ஜோனகியின் தலைமையிலும் செயல்படத்துவங்கின. ஏ.ஜோனகியின் பிரிவிலிருந்து ஒருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார். செல்வி. ஜெயலலிதாவின் பிரிவு அவருடைய தலைமையில் சட்டமன்றத்தில் பிராதான எதிர்க்கட்சி அந்தஸ்து பெற்றது. அதற்குப் பின்னர் திருமதி. ஏ.ஜோனகி அரசியலிலிருந்து முழுமையாக ஒதுங்கியதற்குப் பின்னர் இருபிரிவினரும் செல்வி.

ஜெயலலிதாவின் தலைமையில் ஒருங்கிணைந்தார்கள்.∵ அ.இ.அ.தி.மு.க.

மீண்டும் ஒரு பிளவினை சந்தித்தது. எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் அமைச்சர்களாகவிருந்த திரு. திருநாவுக்கரசு, திரு. மு.மு.ளு.ளு.சு இராமச்சந்திரன் அவர்கள் கழகத்தினின்று பிரிந்து திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் புதியதொரு இயக்கத்தை தொடங்கினார்கள். தி.மு.க அரசு கலைக்கப்பட்டது.

1991 -ல் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் இணைந்த அ.இ.அ.தி.மு.கவுடன் இ. காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டு தேர்தலில் போட்டியிட்டன. பாராளுமன்றத் தொகுதிகளில் இ. காங்கிரஸும், சட்டமன்றத் தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.கவும் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றின. தி.மு.க இரண்டே இரண்டு இடங்களில் மட்டும் வெற்றி பெற்றது. செல்வி.ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார். தேர்தல் வெற்றியினைக் கொண்டாடவும், ஓராண்டு சாதனைகளை விளக்கவும் மதுரையில் 1992 ஜுன் 28 ,29 ம் தேதிகளில் ஒரு மாபெரும் மாநாடு நடத்தப்பட்டது.

## 9.2 செல்வி. ஜெயலலிதா

### 9.2.1 அறிமுகம்

செல்வி. ஜெயலலிதா அவர்களின் அரசியல் நுழைவு மற்றும் அவருடைய ஓராண்டுகால ஆட்சியும்.“கலைச் செல்வி” என்றும் “புரட்சித்தலைவி” என்றும் தொண்டர்களால் பாசத்துடன் அழைக்கப்படும் செல்வி, ஜெயலலிதா அவர்கள் சினிமாத்துறையில் முன்னனியில் இருந்த திருமதி. சந்தியா ஜெயராமன் அவர்களின் ஒரே மகளாகப் பிறந்தார். தன்னுடைய இளம் வயதில் கான்வெண்டில் கல்வி பயின்றதனால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் தேர்ச்சிப் பெற்றவர்.

### 9.2.2 வாழ்க்கை வரலாறு மற்றும் ஓராண்டு கால ஆட்சி

நடனக் கலையில் மிக்க ஆர்வமும், ஈடுபாடும் கொண்ட இவர் தன்னுடைய தாயார் வழியிலேயே தாமும் சினிமாத் துறையில் நுழைந்து அன்றைய திரையுலக முன்னணி நடிகர்கள் அனைவருடன் ஏறத்தாழ 150 படங்களுக்கு மேல் கதாநாயகியாகவே நடித்து சிறந்த நடிகை என்ற அந்தஸ்தும் பெற்றவர். சினிமாத் துறையில் காலஞ்சென்ற முன்னாள் முதல்வர் “பாரத் ரத்னா” எம்.ஜி.ஆர் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். அவருடைய நம்பிக்கைக்கும், அன்பிற்கும் பாத்திரமானார்.

1972 ஆம் ஆண்டு, தி.மு.கவின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர் அவர்கள், கட்சித்தலைவர் கலைஞருடன் கருத்து வேறுபாடு கொண்டு கழகத்தை விட்டு விலகி அ.தி.மு.க என்ற புதியதொரு அரசியல் கட்சியைத் தொடங்கினார். கட்சியை வளர்ப்பதற்காக முழு மூச்சுடன் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இதற்கிடையில், எம்.ஜி.ஆர். அவர்களுக்கும்

செல்வி. ஜெயலலிதா அவர்களுக்குமிடையே பல ஆண்டுகளாகத் தொடர்பு விட்டுப் போயிருந்தது.

1980 ஆம் ஆண்டு உலகத் தமிழ்நாடு நடைபெற்ற பொழுது செல்வி.ஜெயலலிதாவின் “காவிரி தந்த கலைச்செல்வி: என்ற நாட்டிய நாடகத்தை அமைச்சராகவிருந்த திரு.ஆர்.எம். வீரப்பன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். இதன் மூலமாக பல ஆண்டுகள் பிரிந்திருந்த உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கைத்தறிக் கண்காட்சியில் கைத்தறிவாரியத் தலைவராக இருந்த திரு. அங்காபுத்தூர் ராமலிங்கம் அவர்கள் செல்வி. ஜெயலலிதாவின் நாட்டிய நாடகத்தை நடத்தச் செய்தார். இக்கலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து செல்வி. ஜெயலலிதா மீண்டும் எம்.ஜி.ஆரின் நம்பிக்கையைப் பெற்றார்

. முதல்வர் பணியில் இருந்துகொண்டே கட்சி நடவடிக்கைகளைச் சரியான முறையில் கவனிக்க முடியவில்லை என்று எம்.ஜி.ஆர் அவர்கள் கவலைப்பட்டு வந்தார். அச்சமயத்தில்தான் தன் அன்பிற்கும் நம்பிக்கைக்குமுரிய செல்வி. ஜெயலலிதா அவர்களை எட்டயபுரம் பாரதி நூற்றாண்டு விழா, கடலூர் அ.தி.மு.க மாநில மாநாடு ஆகியவற்றில் பங்கேற்கச் செய்தார். கட்சியின் மூத்த தலைவர்களின் எதிர்ப்புக்களுக்கிடையில் எம்.ஜி.ஆர் அவர்கள் செல்வி. ஜெயலலிதாவை அ.இ.அ.தி.மு.க வின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமனம் செய்தார். அச்சமயத்திலேயே கிட்டத்தட்ட எல்லா மாவட்டச் செயலாளர்களின் ஆதரவும் செல்வி. ஜெயலலிதா பக்கமே இருந்தது.

எம்.ஜி.ஆர். உடல்நிலை பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் நடந்த 1984 தேர்தலில் செல்வி. ஜெயலலிதாவைப் பிரச்சாரத்திற்கு அனுப்புவதில் பலகருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆனால் செல்வி ஜெயலலிதா பிரச்சாரத்திற்குப் போனால்தான் அ.இ.அ.தி.மு.கவுடன் தேர்தல் உடன்பாடு என்று காங்கிரஸ் மேலிடம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.அதற்குப் பின்னர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முழுமூச்சுடன் தேர்தல் பிரச்சாரம் செய்தார். 1984 தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றி பெற்று மீண்டும் அமைச்சரவையை அமைத்தது.

அ.தி.மு.க வெற்றி பெற்று, உடல் குணமாகி எம்.ஜி.ஆர் சென்னை திரும்பிய போது விமான நிலையத்தில் அவரைச்சந்திக்க விடாமல் செல்வி. ஜெயலலிதாவைத் தடுத்துவிட்டனர். இருப்பினும் அவர் கட்சிப் பணிகளைச் செம்மையாகச் செய்து கொண்டே வந்தார். எம்.ஜி.ஆர் அவர்கள் மீண்டும் நோய்வாய்ப்பட்டு 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் தேதி மறைந்தவுடன் அ.இ.அ.தி.மு.க இரண்டாகப் பிளந்தது. செல்வி.ஜெயலலிதா தலைமையில் ஒரு அணியும், மறைந்த தலைவர் எம்.ஜி.ஆரின் மனைவி திருமதி ஏ.ே ஜானகி தலைமையில் ஒரு அணியுமாகச் செயல்படத்

தொடங்கின. ஓராண்டு இடைவேளைக்குப் பின்னர் நடந்த 1989 ஆண்டு பொதுத்தேர்தலில் புறா சின்னத்தில் ஏ.ஜோனகி அணியும் சேவல் சின்னத்தில் செல்வி. ஜெயலலிதா அணியும் போட்டியிட்டன. திருமதி. ஜானகி அணியைச் சார்ந்தவர்களில் ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றார்.

ஆனால், செல்வி. ஜெயலலிதா அணியைச் சேர்ந்தவர்கள் 27 பேர் வெற்றி பெற்றனர். செல்வி ஜெயலலிதா அவர்களும் எதிர்க்கட்சித் தலைவரானார். அதற்குப்பின் கழகத்தின் இருபிரிவுகளையும் இணைக்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு இறுதியில் பிரிந்த அ.இ.அ.தி.மு.க ஒன்றாக இணைந்து செல்வி. ஜெயலலிதா தலைமையில் செயல்படத் தொடங்கியது.

இதற்கிடையில், விடுதலைப்புலிகள் மீது சரியான நடவடிக்கை எடுக்கவில்லை, சட்டம் ஒழுங்குச் சீர் குலைந்திருக்கிறது என்று காரணங்கள் காட்டி தி.மு.க அரசு கலைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலிலி இணைந்த அ.இ.அ.தி.மு.கவும் காங்கிரசும் தேர்தல் உடன்பாடு கொண்டு தேர்தலில் போட்டியிட்டன. செல்வி.ஜெயலலிதா அவர்கள் காங்கேயம் தொகுதிகளிலும், பர்கூர் தொகுதியிலும் போட்டியிட்டவர்கள்.

இரு தொகுதிகளிலும் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பின்னர் காங்கேயம் தொகுதியை ராஜினாமா செய்துவிட்டார். வரலாறு காணாத அளவிற்கு இந்த வெற்றி அமைந்து விட்டது. 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்த தி.மு.க.1991 ஆம் ஆண்டுத் தேர்தலில் இரண்டே இரண்டு இடங்களில் மட்டும்தான் வெற்றிப் பெற்றாது. செல்வி. ஜெயலலிதா அவர்கள் 1991 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார். ஓராண்டு காலமும் முடிந்து விட்டது.

புரட்சித்தலைவி செல்வி. ஜெயலலிதாவின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் 1992 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28,29 -ந் தேதிகளில் மதுரையில் பிரம்மாண்டமான விழா எடுக்கப்பட்டது. அரசியலில் சினிமாக் கலாச்சாரம் பூரணமாகச் செல்வாக்குப் பெறா ஆரம்பித்தது முதற்கொண்டு இத்தகைய ஆடம்பர விழாக்கள் நடத்தப்படுவது தமிழக மக்களுக்குப் பழகிப்போன விஷயம்தான்.

இந்த விழா புரட்சித் தலைவியின் வெற்றிகரமான ஆட்சியின் ஓராண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகும். மதுரை வெற்றி விழாவை செல்வி. ஜெயலலிதாவின் ஒன்பதாண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகும். மதுரை வெற்றி விழாவை செல்வி.ஜெயலலிதாவின் ஒன்பதாண்டு கால அரசியல் வாழ்க்கையின் வெற்றியாகக் கொண்டாடுவது பொருத்தமாக இருக்கும். பல்வேறு எதிர்ப்புக்களிடையே அரசியல் வாழ்வின் எதிர்நீச்சல் போட்டு முன்னேறி கட்சியைத் தன் முழுஅதிகாரத்தின் கீழ் கொண்டுவந்து, அமோகமான தேர்தல்

வெற்றிக்குப் பின்னர் ஆட்சியையும் கைப்பற்றி செல்வாக்குடன் விளங்கி வருவது மகத்தான சாதனையாகும். அவருடைய எதிரிகளின் தோல்விகளை ஒப்பிடுகின்ற பொழுது செல்வி. ஜெயலலிதா அவர்களின் வெற்றி பிரமிக்கத்தக்கது.

ஓராண்டு காலத்திற்குள் அதிக அளவிலான சாதனைகளை எதிர்பார்க்க முடியாது. இருப்பினும், குறிப்பிடத்தக்க சில காரியங்களில் உதாரணமாக, காவிரிநீர் பிரச்சனை, விடுதலைப்புலிகளை ஒடுக்கும் நடவடிக்கைகள், மற்றும் மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான உறவு ஆகியவற்றில் முன்னேற்றம் காணமுடிகிறது. மேலும் தொழில் துறையில் 1967 ஆம் ஆண்டிலிருந்தே "மணலி" யில் ரூபாய் 2000 கோடி மதிப்பீட்டில் மிகப் பெரிய அளவிலான "ஏரோமெடிக்பிளான்ட்" துவங்குவதற்குண்டான முன் அனுமதியை மத்திய அரசிடம் பெற்றது, நாகப்பட்டினம் அருகே 1992 ஆம் ஆண்டுத் ஜூன் மாதம் முன்னாள் குடியரசுத் தலைவர், திரு. சு. வெங்கற்றாமன் தலைமையில் துவக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டு வருகின்ற எண்ணை சுத்திகரிப்பு ஆலை, மேலும் ஏறத்தாழ 5 ஆண்டு காலமாக மூடிக்கிடந்த டீ ரூ ஏ மில், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் போன்ற கம்பெனிகளைத் திறக்கச் செய்து பல இன்னல்களுக்கு ஆளாகியிருந்த தொழிலாளர்களின் வாழ்வில் நலன் காணச்செய்தது செல்வி. ஜெயலலிதாவின் ஓராண்டு ஆட்சிக் காலத்தில்தான்.

முந்தைய ஆட்சியைப் போலவே புரட்சித்தலைவியின் ஆட்சியும் பல இலவசத் திட்டங்களினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட, மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக அமுல்படுத்த முடியவில்லை. இருப்பினும் அதற்க்குண்டான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அடிப்படை வசதிகள், உணவுப் பொருட்கள், குடிநீர், மின்சாரம் இவற்றில் தடைகள் ஏற்படாதவரை எதிர்க்கட்சிகளின் போராட்டங்கள் எடுபடாது. இந்தப் போராட்டங்களே சகஜ வாழ்க்கையைப் பாதிக்கும் என்றால் மக்களிடமிருந்து ஆதரவுக்குப் பதில் கண்டனங்கள்தான் எழும்.

இருபதாம் நூற்றாண்டில் மிகவும் இளவயதிலேயே முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல்', முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் தான். இளமைத் துடிப்பும் ஆர்வமும் கொண்ட செல்வி.ஜெயலலிதா அவர்கள் சாதனைகள் பல சாதித்திட போதிய காலமும் வாய்ப்புக்களும் உள்ளன. தற்போதைய சூழ்நிலையில் ஆட்சி முழுமையாக ஐந்தாண்டு காலம் நீடித்து நிறைவு பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஊழலைக் களைந்து, மது விலக்குக் கொள்கையை அமல்படுத்தி, வளர்ச்சித் திட்டங்களோடு வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் தீவிரமாக அந்தரங்க சுத்தியுடன் செயல்படுத்தினால் அவையே பெரிய சாதனைகளாகும்



**9.2.3 ஜெயலலிதாவின் நான்காவது ஆட்சிகாலம்**

ஆட்சி காலம் புரட்சித்தலைவி ஜெயலலிதா நான்காவது முறையாக தமிழக முதல்வராக 2011 மே 16இல் பதவி ஏற்றால் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட போவதாக அறிவித்தார் தொழில் வளர்ச்சி விவசாய முன்னேற்றம் மின்சார உற்பத்தி ஆகியோருக்கு முன்னுரிமை அளித்து தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்ற போவதாக அறிவித்தார் எல்லோரும் எல்லாமும் பெற்று இல்லாமை இல்லாத நிலையை ஏற்படுத்துவதே எனது லட்சியம் என்று கூறி ஆட்சியைத் தொடங்கினார் ஜெயலலிதா 2011 ஆம் வருடம் சட்டமன்ற தேர்தலில் வெற்றி தமிழகத்தில் 14 ஆம் சட்டமன்றத்திற்கான தேர்தல் ஒரே நாளில் 2011 ஏப்ரல் 13இல் நடைபெற்றது 234 தொகுதி களுக்கான நடைபெற்ற இந்த தேர்தலில் ஜெயலலிதாவின் தலைமையிலான அதிமுக கூட்டணி 52 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது ஆதிமுக 146 இடங்களைப் பெற்று தனி மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற்று அதிமுகவில் சட்டசபை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெயலலிதா 2011 மே 16 தமிழக முதலமைச்சராக பதவியேற்றார்.

அப்போது ஏழை பெண்களுக்கு தாலிக்கு தங்கம் ரே'ன் கார்டுதாரர்கள் மாதம் 20 கிலோ விலையில்லா அரிசி முதியோர் ஓய்வூதிய தொகை உயர்வு உள்ளிட்ட 7 உத்தரவுகளை கையெழுத்திட்டு தனது கட்சியை துவங்கினார் ஜெயலலிதாவின் நிர்வாகம் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு இரண்டு ஆண்டுகளில் பல மக்கள் வளர்ச்சித் திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார் தேர்தலின்போது வாக்குறுதி அளித்த 1.86 கோடி குடும்பங்களுக்கு மாதம் 20 கிலோ விலையில்லா அரிசி பெண்களுக்கு விலையில்லா மிக்சி கிரைண்டர் மற்றும் மின்விசிறி ஏழை மக்களுக்கு விலையில்லா கறவை மாடுகள் ஆடுகள் பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா லேப்டாப் போன்றவை வழங்கப்பட்டன.

தமிழகத்தில் வறுமையை ஒழித்து 11 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை எட்டும் வகையில் 15 லட்சம் கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஒன்றை வெளியிட்டார் ஜெயலலிதா படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 4 கிராம் தங்கமும் 25,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது முதியோர் மாற்றுத்திறனாளிகள் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவி தொகை ஆயிரமாக உயர்த்தப்பட்டது அரசுப் பணி புரியும் தாய்மார்களுக்கு மகப்பேறு விடுப்பு ஆறு மாதங்கள் ஆக உயர்த்தப்பட்டது தமிழக மக்கள் அனைவருக்கும் தரமான மருத்துவ சிகிச்சைக்காக முதலமைச்சரின் விரிவான

மருத்துவ காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன பழைய மாமல்லபுரம் சாலையில் ரூபாய் 3500 கோடி முதலீட்டில் ஒருங்கிணைந்த தொழில் நகரம் அமைக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது ரூபாய் 19 ஆயிரத்து 700 கோடி மதிப்பீட்டில் தொழில் தொடங்க 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

மாணவர்களின் கல்வி நலன் கருதி பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன தமிழகத்தில் பல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் தரம் உயர்த்தப்பட்டன பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச சீருடை காலணிகள் வழங்கப்பட்டன புத்தகப் பை கணித உபகரணப் பெட்டிகள் வழங்கப்பட்டது இந்தியாவிலேயே முதல் முறையாக படித்த பள்ளியிலேயே ஆன்லைன் மூலம் மாணவ மாணவியர் வேலைவாய்ப்பு பதிவு செய்ய உதவி செய்து கொடுக்கப்பட்டது பல கல்லூரிகள் கால்நடை மருத்துவ கல்லூரிகள் பொறியியல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டு 50 லட்சம் சந்தாதாரர்களுக்கு மாதம் 70 ரூபாய் கட்டணத்தில் 100 சேனல்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டன.

கோவில்களில் புனரமைப்பு பணிகள் மற்றும் குடமுழுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன கோவில்களில் அன்னதான திட்டம் விரிவுபடுத்தப்பட்டது மேலும் ஆதிதிராவிடர் நெசவாளர் விவசாயிகள் நலன் கருதி பல சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன தமிழ்நாட்டில் நிலவும் மின் தட்டுப்பாட்டை போக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது 22 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 3860 மெகாவாட் மின் உற்பத்திக்கு நான் புதிய அனல் மின் திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது உடன்குடி சூப்பர் கிரிட்டிக்கல் அனல் மின் திட்டம் ரூபாய் 8000 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது மேலும் மின் உற்பத்திக்கு புதிய காற்றாலை சூரிய ஒளி மின் திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன 20 துணை மின் நிலையங்கள் இயங்கி வைக்கப்பட்டுள்ளன பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அவர்களது பண்பாட்டை பாதுகாக்கவும் அவர்களது கலாச்சார மேன்மையை மக்களில் எடுத்துச் செல்லவும் ஊட்டி தாவரவியல் பூங்கா அருகே ரூபாய் 10 கோடி மதிப்பில் பழங்குடியினர் பண்பாடு ஆதார மையம் அமைக்க ஜெயலலிதா 2013 ஆகஸ்ட் 12-இல் உத்தரவிட்டார் நெய்வேலி நிலக்கரி கழகத்தை தனியார்மயமாக்கும் முயற்சியை தடுத்தல் இந்திய பொதுத்துறை

நிறுவனமான நெய்வேலி நிலக்கரி கழகம் தனியார்மயம் ஆவதை தடுத்து வெற்றிகண்டார் ஜெயலலிதா கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலி நிலக்கரி கழகம் இந்திய அரசின் ஒரு பொதுத்துறை நிறுவனம் ஆகும் இங்கு 18 ஆயிரம் நிரந்தர பணியாளர்களும் 11 ஆயிரம் ஒப்பந்த தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள் இங்கு வருடத்திற்கு 28.5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது இதனை பயன்படுத்தி இங்கு செயல்படும் மூன்று அனல் மின்நிலையங்கள் மூலம் 2490 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற நிறுவனத்தில் 93.5 54 சதவீத பங்குகள் மத்திய அரசிடமும் மீதமுள்ள 6.44 சதவீத பங்குகள் ஆயுள் காப்பீட்டு நிறுவனமும் வங்கிகள் மற்றும் பொதுமக்களிடம் உள்ளன.

இந்திய பங்கு பரிமாற்றம் வாரியத்தில் வழிகாட்டுதல்படி 5 சதவீத பங்குகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்ய 2013 ஜுன் 21-இல் மத்திய அரசு முடிவு செய்தது இதனை ஊழியர்கள் எதிர்த்தனர் ஏனெனில் பொதுமக்கள் என்ற பெயர் பங்குகள் தனியார் வசம் போய்விட்டால் நல்ல லாபம் ஈட்டி வரும் இந்த பொதுத்துறை நிறுவனம் படிப்படியாக தனியார் மயமாக்கப்பட்டு விடும் என்பதே ஆகும் எனவே தொழிலாளர்கள் 2013 ஜுலை 3ஆம் தேதி முதல் காலவரையற்ற போராட்டத்தில் இறங்கினார்கள் இதனால் நிலக்கரி மற்றும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது இந்நிலையில் ஜெயலலிதா நிறுவனப் பங்குகளை பொது மக்கள் என்ற பெயரில் தனியாருக்கு விற்கக்கூடாது என்றும் அந்த பங்குகளை தமிழக அரசை வாங்க தயாராக இருப்பதாகவும் பிரதமருக்கு உறுதியான கடிதம் எழுதினார் தனது நிலையில் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜெயலலிதா வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு டிஐடிஸ் அகோ ஏபிசிடி டி ஐ சி போன்ற தமிழக அரசு நிறுவனங்களுக்கு பங்குகளை விற்க முடிவு செய்தது மேலும் ஜெயலலிதாவின் வேண்டுகோளை ஏற்று 3.56 சதவீத பங்குகளை மட்டுமே விற்பனை செய்ய 2013 ஜுலை 12இல் மத்திய அரசு ஒப்புக்கொண்டது எனவே தொடர்ந்து 12 நாட்களாக நடந்து வந்த தொழிலாளர் போராட்டம் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது இவ்வாறு தமிழகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி நிலக்கரி கழகம் தனியார்மயம் ஆவதை தடுத்து வெற்றி கண்டார் ஜெயலலிதா தஞ்சை பகுதியில் மீத்தேன் வாயு எடுக்க தடை தஞ்சை திருவாரூர் ஆகிய காவிரி டெல்டா மாவட்டங்களில் 691 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் நிலக்கரி படுகை மீத்தேன் வாயு குறித்து ஆய்வு செய்து உற்பத்தி செய்ய கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு மத்திய அரசு 2010ல் அனுமதி வழங்கியது 2011 ஜனவரியில் திமுக அரசும் ஆய்வு உரிமம் இறங்கியது.

ஆனால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் அப்பகுதியில் மண்வளம் பாதிக்கும் நிலத்தடி நீர் குறையும் விலை நிலமாக மாறிவிடும் நச்சுத்தன்மை கொண்ட மீத்தேன் வாயு கசிந்தால் மக்களுக்கு பல்வேறு கொடிய நோய்கள் ஏற்படும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்து இத்திட்டத்தை எதிர்த்தார்கள் இப்பிரச்சனை குறித்து ஆய்வு செய்த ஜெயலலிதா நிலக்கரி படுகை மீத்தேன் வாயுவை வெளியேற்ற பயன்படுத்தப்படும் ரசாயன பொருட்களில் சில நச்சுத்தன்மை கொண்ட தாகவும் தண்ணீரில் கரையக் கூடிய தாகவும் கதிரியக்கம் கொண்டதாகவும் உள்ளன என்று தெரிவித்தார் எனவே இத் திட்டத்தில் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு அமைத்து உத்தரவிட்டார் அந்த குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அரசு ஒரு முடிவு எடுக்கும் வரை கிரேட் கம்பனி எந்த பணியையும் மேற்கொள்ள அனுமதிக்க கூடாது என்று அதிகாரிகளுக்கு 2013 ஜூலை 17-இல் உத்தரவிட்டார் ஜெயலலிதா இதனால் காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர் இவ்வாறு தனது நான்காவது ஆட்சிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் மேற்கொண்ட திட்டங்களை செயல்படுத்தி சிறப்பாக ஆட்சி செய்து வருகிறார் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் தமிழக மக்கள் அவரிடம் அதிகமாக எதிர்பார்க்கின்றனர் முக்கியமாக சட்ட ஒழுங்கை நிலை நாட்டுதல் அரசு நிர்வாகத்தில் காணப்படும் ஊழலை ஒழித்தல் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துதல் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற முக்கியமான செயல்களில் உடனடியாக கவனம் செலுத்தி தமிழகத்தை வளர்ச்சி பாதையில் வழிநடத்திச் செல்ல ஜெயலலிதா தீர்க்கமான பல முடிவுகளை எடுக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்

**9.2.4 ஜெயலலிதாவின் ஐந்தாவது ஆட்சிகாலம்**

2011ம் வருடம் சட்டமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்த ஜெயலலிதா சுமார் மூன்றாண்டு காலம் பதவியில் நீடிக்க முடிந்தது.

ஜெயலலிதா ஐந்தாவது முறையாக தமிழக முதல் அமைச்சராக மே 23 ல் பதவியேற்றார் அவருடன் 28 அமைச்சர்களும் பதவி ஏற்றனர் பின்னர் ஜூன் 27 இல் நடைபெற்ற சென்னை கே நகர் சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினரானார் ஜெயலலிதாவின் நான்காவது ஐந்தாவது ஆட்சி கால சாதனைகள் தொழில் வளர்ச்சி தமிழக அரசு ரூபாய் 31 706 கோடி முதலீட்டில் இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டது.



இதன் மூலம் 1.62 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை

வாய்ப்பு கிடைக்கும் ரூபாய் தொள்ளாயிரத்தி 379 கோடி முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மூலமாக 42 நிறுவனங்களுக்கு ஒற்றை சாளர ஒப்புதல் வழங்கப்பட்டது தமிழ்நாடு தொழில் கொள்கை 2014 தமிழ்நாடு மோட்டார் வாகன தொழில் கொள்கை 2014 மற்றும் தமிழ்நாடு உயிரி தொழில்நுட்ப கொள்கை 2014 ஆகிய கொள்கைகள் வெளியிடப்பட்டன.

திருச்சியில் ரூபாய் 1500 கோடி செலவில் காகித அட்டையை நிறுவப்பட்டது 9 10 மாவட்டங்களில் சிப்காட் தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டன குறைந்த விலையில் அம்மா சிமெண்ட் அம்மா உப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவீட்டின்படி நாட்டின் இரண்டாவது சிறந்த பொருளாதார வளர்ச்சியடைந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது கல்வி வளர்ச்சி உயர் மற்றும் மேல்நிலை கல்வி இடைநிற்றலை தவிர்க்க 89 லட்சம் பேருக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக 1500 கோடி ரூபாய் வழங்கப்பட்டது 75 ஆயிரம் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

மேலும் இலவச சீருடைகள் புத்தகங்கள் நோட்டுகள் காலணிகள் கணித உபகரண பெட்டிகள் மிதிவண்டிகள் போன்றவை வழங்கப்படுகின்றன தேசிய அளவிலான கல்வி வளர்ச்சி குறியீட்டில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது தகவல் தொழில்நுட்பம் பொதுமக்கள் அனைவரும் ஒரே இடத்தில் அரசின் பல்வேறு சேவைகளை எளிதில் பெற்றிட எட்டாயிரத்து 11 அரசு இ-சேவை மையங்கள் அமைக்கப்பட்டு அதில் 5300 மையங்கள் செயல்பாட்டில் உள்ளது இதன் மூலம் சுமார் 45 லட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன சென்னையில் நகர்ப்புற அரசு இ-சேவை மையங்கள் மற்றும் மீன் வலை தளம் திறந்து வைக்கப்பட்டது ஆளுகைக்கு திட்டத்தின் கீழ் மின் ஆளுகை திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு மாநில அரசு மையம் துவங்கப்பட்டது.

தகவல் பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் தரவு மைய இயக்கங்கள் ஆகியவற்றிற்காக தேசிய அளவில் தரச்சான்றிதழ் பெற்ற முதல் மாநிலம் தமிழகம் ஆகும் எரிசக்தி வளர்ச்சி தமிழ்நாட்டில் தடையில்லா மின்சாரம் கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன தமிழ்நாட்டின் நீண்டகால மின் தேவையை எதிர்கொள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் 3330 மெகா வாட் மின்சாரம் 2014 முதல் பதினைந்து ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்ட மேட்டூர் மற்றும் வட சென்னை மின் நிலையங்களில் மின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது பல துணை மின்

நிலையங்கள் அமைக்கப்படுகின்றன 1500 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன மின் கட்டணம் மற்றும் கட்டணம் செலுத்த கடைசி நாள் ஆகிய விவரங்கள் எஸ்எம்எஸ் மூலம் தெரிவிக்கப்படும் அறிமுகப்படுத்தப்பட்டது.

பிற சாதனைகள் ரூபாய் 1.5 லட்சம் கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023 தொகுதி 1 இரண்டு வெளியிடப்பட்டது அரசு பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது தமிழக வரவுசெலவுத்திட்டம் மதிப்பீடு ஒரு லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது அம்மா திட்டத்தின் கீழ் மனுக்களுக்கு உடனடி தீர்வு விரைவு பட்டா மற்றும் சிறப்புத் திட்டம் வேளாண் உபகரணங்கள் மற்றும் இடுபொருள் களுக்கு மதிப்பு கூட்டு வரி விலக்கு அம்மா உணவகம் மரக்கன்றுகள் நடும் திட்டம் கோவில்களில் அன்னதான திட்ட விரிவாக்கம் சிறப்பு சுற்றுலா கட்டமைப்பு திட்டம் அம்மா குடிநீர் திட்டம் அரசு மினி பஸ்கள் இயக்கம் மாடிதோட்ட காய்கறித் தோட்டம் அம்மா மருந்தகங்கள் போன்ற புரட்சிகரமான திட்டங்கள் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செயல்பட்டு வருகின்றன சென்னை மெட்ரோ ரயில் திட்டம் 45 கிலோ மீட்டர் நீளத்தில் ஆன 2 வழித்தடங்கள் 24 கிலோ மீட்டர் சுரங்கப்பாதை ஆகவும் 21 கிலோ மீட்டர் உயர தரப்பட்ட வழித்தடமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது இதில் முதல் கட்டமாக கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான பத்து கிலோமீட்டர் உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை 2015 ஜூன் 29 துவங்கப்பட்டது பல துறைகளில் வளர்ச்சி கண்டு வருகிறது.

**உங்கள்முன்னேற்றத்தை சோதித்தறிக**

1. அரசியல் நுழைவு
2. கழகத்தில் பிளவு

## 9.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. தம்முடைய வாழ்க்கைப் பாதையில் பல்வேறு அரசியல் தலைவர்களால் கவரப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தின் போது காந்திஜியின் கொள்கைகளால் கவரப்பட்டு காங்கிரஸில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதற்குப் பின்னால் தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கம் இவரைக் கவர்ந்தது. பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949 ஆம் ஆண்டு பெரியாரை விட்டுப்பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய பொழுது அறிஞரின் நாவண்மையினால் கவரப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில்

சேர்ந்தார். இவருடைய கவர்ச்சியைப் பயன்படுத்து வாக்குகளைப் பெறமுடியுமென அண்ணா அவர்கள் நம்பியிருந்தார். அவருடைய நம்பிக்கை வீண்போக வில்லை 1967, 1971 - ல் நடந்த தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருவாரியான வெற்றியில் எம்.ஜி.ஆருக்கு முக்கியமான பங்கு உண்டு. அண்ணாவின் நம்பிக்கைக்கு பாத்திரமான இவர் அண்ணாவால் கழகத்தின் பொருளானராக நியமிக்கப்பட்டார். ஊழலுக்கு அப்பாற்பட்டவர் என்ற நற்பெயரையும் சம்பாதித்துக் கொண்டார்.

## 9.4 சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டில் மிகவும் இளவயதிலேயே முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல்', முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் தான். இளமைத் துடிப்பும் ஆர்வமும் கொண்ட செல்வி.ஜெயலலிதா அவர்கள் சாதனைகள் பல சாதித்திட போதிய காலமும் வாய்ப்புக்களும் உள்ளன. தற்போதைய சூழ்நிலையில் ஆட்சி முழுமையாக ஐந்தாண்டு காலம் நீடித்து நிறைவு பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஊழலைக் களைந்து, மது விலக்குக் கொள்கையை அமல்படுத்தி, வளர்ச்சித் திட்டங்களோடு வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் தீவிரமாக அந்தரங்க சுத்தியுடன் செயல்படுத்தினால் அவையே பெரிய சாதனைகளாகும்.

## 9.5 முக்கிய கருத்துப்படிமங்கள்

1991 -ல் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் இணைந்த அ.இ.அ.தி.மு.கவுடன் இ. காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டு தேர்தலில் போட்டியிட்டன. பாராளுமன்றத் தொகுதிகளில் இ. காங்கிரஸும், சட்டமன்றத் தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.கவும் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றின. தி.மு.க இரண்டே இரண்டு இடங்களில் மட்டும் வெற்றி பெற்றது. செல்வி.ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார். தேர்தல் வெற்றியினைக் கொண்டாடவும், ஓராண்டு சாதனைகளை விளக்கவும் மதுரையில் 1992 ஜுன் 28 ,29 ம் தேதிகளில் ஒரு மாபெரும் மாநாடு நடத்தப்பட்டது.

## 9.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. ஏம்.ஜி.ஆரின் தேர்தல் பிரவேசம்

2. ஏம்.ஜி.ஆரின் 11 ஆண்டு கால சாதனைகள்

**நெடுவினா**

**1.** அ.தி.மு.க. வின் தோற்றம

**2.** ஜெயலலிதாவின் ஐந்தாவது ஆட்சிகாலம்

**3.**

## 9.7 மேலும் படிக்க

1. Subramanian.N-Hhistory of Tamil Nadu 1336 -1984 A.D
2. Devanesan.A -History of Tamil Nadu upto1995 A.D
3. Balasundaram.M - Kamaraj and his secrets of Success
4. Veeramani.K - The History of the struggle for Social Justice In Tamilnadu.

# அலகு-10 அ.இ.அ.தி.மு.க ஆட்சியின் நலத்திட்டங்கள்

**அமைப்பு**

10.0அறிமுகம்

10.1 ஜெயலலிதா ஆட்சி

10.1.1 வரலாற்று சாதனைகள்

10.1.2 பதவி விலகல்

10.2 பன்னீர்செல்வம் ஆட்சி 2001-2002

10.3 ஜெயலலிதா ஆட்சி 2002-2006

10.3.1 இடைத்தேர்தலில் வெற்றி

10.3.2 மீண்டும் முதலமைச்சர்

10.3.3 அரசாணைகள்

10.3.4 காவிரி நீர் பிரச்சனை

10.3.5 ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு

10.4 தகவல் தொழில்நுட்ப கொள்கை 2002

10.4.1 நோக்கம்

10.4.2 மின் ஆட்சி

10.4.3 புதிய தொழில் கொள்கை

10.4.4 கிராமத் திட்டம்

10.4.5 சுனாமி சீரமைப்பு நடவடிக்கை

10.4.6 வீராணம் குடிநீர்த் திட்டம்

10.5 வரவு செலவுத்திட்டம் 2005-2006

10.6 பொருளாதார வளர்ச்சி

10.6.1 சுய உதவிக்குழுக்கள்

10.6.2 சாதனைகள்

10.6.3 பொருளாதார வளர்ச்சியும் வறுமை ஒழிப்பும்

10.7 விடுதலைக்குப்பின் கல்வி வளர்ச்சி

10.7.1 மாபெரும் மாற்றம்

10.7.2 கல்வி கமி‘ன்கள்

10.7.3 கல்வி குறிக்கோள்கள்

10.8 பள்ளிக் கல்வி

10.8.1 துவக்கக் கல்வி

10.9 இடை நிலைக் கல்வி

10.9.1 முக்கியத்துவம்

10.9.2 மாணவர் நலத்திட்டங்கள்

10.10 நவோதயப் பள்ளிகள்

10.11 சமச்சீர் கல்வி

10.12 உயர்கல்வி

10.13 கல்வி வளர்ச்சித் திட்டங்கள்

10.14 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

10.15 சுருக்கம்

10.16 முக்கிய கருத்துப்படிமங்கள்

10.17 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

10.18 மேலும் படிக்க

## 10.0 அறிமுகம்

2001 மே 10 ஆம் தேதி நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்ட ஜெயலலிதாவின் அதிமுக கூட்டணி மொத்தம் உள்ள 234 இடங்களில் 196 இடங்களைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை நிகழ்த்தியது. இதில் அதிமுக மட்டும் 132 இடங்களில் வெற்றி வாகை சூடியது! அதிமுக சட்டப் பேரவை உறுப்பினர்கள் கூடி ஜெயலலிதாவை முதலமைச்சராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தனர். அதை அடுத்து ஜெயலலிதா ஆளுநரை சந்தித்து தான் சட்டப் பேரவை அதிமுக தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கான கடிதத்தைக் கொடுத்தார். அந்தக் கடிதத்தின் அடிப்படையில் ஆளுநர் பாத்திமா பீவி ஜெயலலிதாவை முதலமைச்சர் பதவி ஏற்குமாறு அழைப்பு விடுத்தார்.

## 10.1 ஜெயலலிதா ஆட்சி

ஆளுநரின் அழைப்பை ஏற்று ஜெயலலிதா 2001 மே 14 ஆம் தேதி பொன்னையன், தம்பிதுரை,டி.ஜெயக்குமார்,அய்யாறு வாண்டையார், ஆர்.சரோஜா ஆகியோரும் பதவி முதலமைச்சராகப் பதவி ஏற்றார். ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவின் போது ஜெயலலிதாவும் அவருடன் முன்னாள் அமைச்சர்களான ஏற்றனர். அடுத்த ஐந்து நாட்களில் அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டது (மே 19). புதிய அமைச்சர்கள் ஜெயலலிதாவின் அமைச்சரவையில் இடம் பெற்றனர். 25 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. காளிமுத்து சட்டப்பேரவை சபாநாயகராகவும், வரகூர் அருணாசலம் துணை சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 10.1.1 பதவி விலகல்

ஜெயலலிதா முதலமைச்சர் பதவி ஏற்றதற்கு எதிராக சட்டத் தடை இருந்தது: அவர் ஆண்டிப்பட்டி, கிரு‘ணகிரி, புவனகிரி, புதுக்கோட்டை ஆகிய 4 தொகுதிகளில் போட்டியிட மனுதாக்கல் செய்திருந்தார். தேர்தல் சட்டப்படி ஒரு

வேட்பாளர் 2 தொகுதிகளுக்கு மேல் போட்டியிடக் கூடாது. அவரது மனுக்கள் நான்கு தொகுதிகளிலும் தள்ளுபடி செய்யப்பட்டன! எனவே, அவர் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவரானார். அவரால் தேர்தல் பிரச்சாரம் செய்ய முடிந்ததேயன்றி, தேர்தலில் போட்டியிட முடியவில்லை! தேர்தலில் வெற்றி பெறாத ஒருவர் முதலமைச்சராகப் பதவி ஏற்றது சரியல்ல என்பதே அந்தத் தடையாகும்.

## 10.2 ஓ.பன்னீர் செல்வம் ஆட்சி 2001 - 2002

முதலமைச்சர் ஜெயலலிதா 2001 செப்டம்பர் 21 ஆம் தேதி பதவி விலகிய அன்றே அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சர் பொறுப்பேற்றார். பன்னீர்செல்வம் அரசியலுக்கு வருவதற்கு முன்பு பெரியகுளத்தில் விவசாயியாக இருந்தார். பெரியகுளம் நகராட்சித் தலைவராக இருந்த இவர் (1996), 2001 ல் நடை பெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஜெயலலிதாவின் அமைச்சரவையில் பொதுப்பணி அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஜெயலலிதா பதவி விலகியதை அடுத்து முதலமைச்சரானார்.

## 10.3 ஜெ.ஜெயலலிதா ஆட்சி, 2002 – 2006

### 10.4.1 இடைத் தேர்தலில் வெற்றி

2002 பிப்ரவரி 21 ஆம் தேதி ஆண்டிப்பட்டி தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிட்டு அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க வைகை சேகரை 41,000 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்! அவரை எதிர்த்து போட்டியிட்ட மதிமுக, புதிய தமிழகம் மற்றும் இருபது சுயேட்சைகளும் டெபாசிட் தொகையை இழந்தனர்.

### 10.4.2 மீண்டும் முதலமைச்சர்

ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற ஜெயலலிதாவை சட்டப் பேரவை அதிமுக உறுப்பினர்கள் முதலமைச்சராகத் தேர்வு செய்தனர். அவர் சட்டப் பேரவை அதிமுகவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான கடிதத்தைப் பெற்றுக் கொண்ட புதிய ஆளுநர் ராமமோகன் ராவ் அவரைப் பதவி ஏற்குமாறு அழைத்தார். ஆளுநரின் அழைப்பை ஏற்றுக் கொண்ட ஜெயலலிதா 2002 மார்ச் 2 ஆம் தேதி மூன்றாவது முறையாக முதலமைச்சர் பதவிப் பொறுப்பேற்றார். இவரது பதவி ஏற்பு விழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்றது. ஆளுநர் ராமமோகன் ராவ் ஜெயலலிதாவுக்கு 26 அமைச்சர்களுக்கும் பதவி பிரமானம் செய்து வைத்தார்.

### 10.4.3 அரசாங்க ஆணைகள்

ஜெயலலிதா முதலமைச்சர் பதவி ஏற்றவுடன் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலிருந்து நேராக கோட்டைக்குச் சென்று மூன்று அரசாங்க ஆணைகளில் கையெழுத்திட்டார்:

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழியாக தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக 29 மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க வகை செய்யும் திட்டம்

- தமிழ்நாட்டில் உள்ள ஊட்டக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளிக்கும் திட்டம்

- ஆளுநரின் சட்டப்பேரவை உரை பற்றியது.

### 10.4.4 காவிரி நீர்ப் பிரச்சனை

பிரிட்டி' ஆட்சியின் போது 1924 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட 50 ஆண்டு காவிரி நதிநீர்ப் பங்கீட்டு உடன்படிக்கை 1974 இல் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கர்நாடக அரசு அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க மறுத்துவிட்டதால் காவிரி நீர்ப் பங்கீடு கர்நாடகத்துக்கும் தமிழ்நாட்டுக்குமிடையே தீர்க்கப்படாப் பிரச்சனையாக நீடித்து வருகிறது. 1989 இல் பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் அமைக்கப்பட்ட காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றம் (Tribunal) வழங்கிய தீர்ப்பின்படி (1991 ஜுன் 25) கர்நாடக அரசாங்கம் ஆண்டுக்குக் குறிப்பிட்ட அளவு தண்ணீரை (205 tmc)த் திறந்துவிட வேண்டும். எனினும் கர்நாடக அரசாங்கம் அத்தீர்ப்பை ஏற்க மறுத்துவிட்டது! அதன்பின் கர்நாடக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பிரச்சனையை மேன்மேலும் சிக்கலாக்கி 2002 ஆம் ஆண்டில் நீர் நெருக்கடியைத் தோற்றுவித்துவிட்டது!

2002 இல் மாநில அரசியல் நெருக்கடிகளுக்கு உள்ளான கர்நாடக மாநில முதலமைச்சர் எஸ்.எம்.கிரு'ணா உச்சநீதிமன்ற உத்தரவு மற்றும் காவிரி நதி ஆணையத் (Cauvery River Authority)தின் தீர்ப்பு ஆகியவற்றை ஏற்காமல் கர்நாடக அரசு தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரைக் கொடுக்க மறுத்துவிட்டது. தமிழ்நாடு உச்ச நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்தது. உச்சநீதிமன்றத் தீர்ப்பு(நவ.1) இரு மாநிலங்களுக்கும் திருப்தி அளிக்காமையால் இருமாநில உறவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. நதிநீர்ப் பங்கீடு நதிநீர் பிரச்சனையாக அரசியலாக்கப் பட்டதால் இரு மாநிலங்களிலும் வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வழக்கம் போல் விவசாயிகளின் குறுவை சாகுபடிக்கு தேவையான நீர் கிடைக்கவில்லை.

### 10.4.5 ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு

மத்திய அரசாங்கத்தின் தாராளமயமாக்கல் (Liberalisation) கொள்கையைப் பின்பற்றி 1992 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு (Comprehensive Social Security)த் திட்டம் உருவாக்கப்

பட்டது. உணவுப் பாதுகாப்பு, ஆரம்ப சுகாதாரம், துவக்கக் கல்வி, குடியிருப்பு, வாழ்வாதார உதவி, சமூக நலன், பொது உணவுப் பொருள் வினியோகம் போன்றவை ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கூறுகளாகும். சர்வ சிக்க்ஷா அபியான் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு, புத்தாயிரம் வளர்ச்சி இலக்கை (Millenium Development Goal) மனதில் கொண்டு பள்ளிகள் சீரமைக்கப்பட்டன, பையன்களுக்கும் பெண்களுக்குமிடையேயான கல்வி இடைவெளியைக் குறைத்தல் போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 10.5 தகவல் தொழில்நுட்பக் கொள்கை, 2002

### 10.5.1 நோக்கம்

தமிழ்நாட்டு தகவல் தொழில்நுட்பக் கொள்கை (Tamilnadu Information Technology Policy) 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இக்கொள்கையின் 5 நோக்கங்களாவன:

- முதலீட்டாளர்களை ஈர்த்தல்
- மின் ஆட்சி (e-governance) முனைப்பு முயற்சிகளுக்குத் தேவையான தூண்டுதலைக் கொடுத்தல்
- தகவல் தொழில்நுட்பம் சம்மந்தப்பட்ட சேவைகள் மற்றும் வன்பொருள் (Hardware) ஆகியவற்றுக்குத் தேவையான முதலீட்டை உறுதி செய்தல்
- வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்
- இவை சம்மந்தமான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 10.5.2 மின் ஆட்சி

தகவல் தொழில் நுட்பக் கொள்கையை செவ்வனே செயல்படுத்த மின்-ஆட்சி(e-governance) மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம். எனவே ஆட்சித் திறமையை அதிகரிப்பதற்காக 10 துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன:

- மாவட்ட நிர்வாகம்
- வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்
- வர்த்தக வரித்துறை
- முத்திரை மற்றும் பதிவுத் துறை

- கருவூல நடவடிக்கை
- மெட்ரொ குடிநீர் சேவை
- தமிழ்நாடு மின்சார வாரியம்
- நகராட்சிகள், மாநகராட்சிகள்
- பயன்பாட்டு சேவைகள் (Utility Services)
- உள்கட்டுமான சம்மந்தப்பட்ட துறைகள்
- தமிழ்நாடு மாநிலம் தழுவிய வலை வேலை (Tamilnadu State wide Area Net-work - TNSWAN).

### 10.5.3 புதிய தொழில் கொள்கை

ஜெயலலிதா ஆட்சியின் கீழ் 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு புதிய தொழில் கொள்கை (Tamilnadu New Industrial Policy) அறிவிக்கப்பட்டது. குறிப்பாக, பொருள் உற்பத்தித் துறையில் மூலதன முதலீட்டைப் பெருக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான பாதைப் படத்தில் (Road Map) விவரிப்பதே இக்கொள்கையின் நோக்கமாகும். தடையற்ற தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத தரமான உள்கட்டமைப்பு, மின்சார விநியோகம், நிர்வாக வழிமுறையை எளிமையாக்கல், கட்டுப்பாடுகளைத் தளத்தல், மாநில வரிமுறையை சீர்திருத்தல்,தொழிலாளர் சீர்திருத்தம் போன்றவை இக்கொள்கையின் பிரதான அம்சங்களாகும். அதன்படி, நெடுவழிப் பாதை விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு, போக்குவரத்து மேம்பாடு, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் வெளியேற்றம், நடுத்தர மற்றும் சிறுதொழில் வளர்ச்சி, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

### 10.5.4 கிராமத் திட்டம்

நமது கிராமத் திட்டம் 2004 ஆகஸ்டு 14 ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமத்தை மையமாகக் கொண்டு தீட்டப்பட்ட இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பொதுவானது. இத்திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள், சிமெண்ட் பாதைகள் போன்ற கிராமக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால் ஒவ்வொரு கிராமத்துக்கும் சாதனை அடிப்படையில் அதிக அரசாங்க உதவி வழங்கப்படும். நூறு சதவிகித பள்ளிச் சேர்க்கை, குழந்தைச்

சாவு குறைப்பு, குழந்தைக் கொலையை (festicide) ஒழித்தல், வறுமைக் குறைப்பு, கிராம சுகாதாரம் ஆகிய அளவுகோல்களைக் கொண்டு கிராமத்தின் சாதனையைக் கணக்கிட்டு ஊக்க உதவித் தொகை வழங்கப்படும். மக்கள் பங்கேற்புடன் பன்முக கிராம வளர்ச்சியை உறுதி செய்வதே நமது கிராமம் திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆக்கப்பூர்வமான கிராம முன்னேற்றத் திட்டத்துக்காக 2004 - 2005 அரசு வரவு - செலவுத் திட்டத்தில் ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டது.

### 10.5.5 சுனாமி சீரமைப்பு நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் 2004 டிசம்பர் 26 ஆம் நாள் சுனாமிப் பேரலைகள் தாக்கி கடற்கரைப் பகுதி மக்கள் பேரழிவை எதிர்க்கொண்டனர். இந்த இயற்கைச் சீற்றத்துக்கு கிட்டதிட்ட 8,000 பேர் பலியாயினர். இவர்களது துயர் துடைக்கவும், மறுவாழ்வுக்காகவும், மறுசீரமைப்புக்காகவும் கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. குறிப்பாக மீனவர் குடும்பங்களின் மறுவாழ்வுக்காக சேமிப்பு வழி துயர்துடைப்புத் திட்டம் (savings-cum- Relief Scheme) அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தால் 10.36 லட்சம் மீனவர் குடும்பங்கள் பயனடைந்தன. சுனாமி நிவாரண நிதியிலிருந்து உடனடித் தேவைகளுக்காக உதவி நிதி வழங்கப்பட்டது.

### 10.5.6 வீராணம் குடிநீர்த் திட்டம்

அண்ணாவால் உருவாக்கப்பட்டு, கருணாநிதியால் கைவிடப்பட்ட வீராணம் குடிநீர்த் திட்டத்தை முதலமைச்சர் ஜெயலலிதா புதிய வீராணத் திட்டம் என்ற பெயரில் புதுப்பித்தார். எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாமல் இத்திட்டத்தை நிறைவேற்றப் போவதாக சட்டப்பேரவையில் அறிவித்தார் (2003 ஏப்ரல்). அறிவித்தபடி திட்டம் நிறைவேற்றப்பட்டது (2004).

## 10.6 வரவு - செலவுத் திட்டம், 2005 – 2006

இரண்டு இலக்குகள்

நிதி அமைச்சர் சி.வைக்கப்படும் பொன்னையன் முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று என்ற குறளைக் கூறி 2005- 2006 ஆம் ஆண்டுக்கான அதிமுக அரசாங்கத்தின் ஆண்டு வரவு-செலவு திட்டத்தை (Budget) 2005 மார்ச் 2 ஆம் தேதி சட்டப் பேரவையில் சமர்ப்பித்தார். இத்திட்டத்தின் இலக்குகள் இரண்டு:

- வளர்ச்சியை மேம்படுத்தல்
- நிதி நிலையை வலுப்படுத்துவதன் மூலம் ஏழை எளியோருக்கு அதிக பட்ச பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல், வருவாய் பற்றாக்குறை (Revenue Deficit) யைக் குறைப்பதன் மூலம் 2008 ஆம் ஆண்டில் வருவாய் உபரி (Revenue Surplus) யை உறுதி செய்தல். இந்த

நம்பிக்கையோடு அதிமுக அரசின் பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டு, பின்பற்றப்படுவதாகக் கூறினார் நிதி அமைச்சர்.

## 10.7 பொருளாதார வளர்ச்சி

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளார்ச்சி 2004-2005 இல் 14.10 சதவிகிதமாக இருந்தது. தேசியப் பொருளாதார வளர்ச்சியோடு ஒப்பிட்டால் இது பிரமிக்கத்தக்க வளர்ச்சியாகும். திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி 2004-2005க்கான தமிழ்நாட்டு வருவாய் ரூ.28,736.79 கோடியாகும். இது கடந்த ஆண்டைவிட 171மடங்கு அதிகமாகும்.

### 10.7.1 சுய உதவிக்குழுக்கள்

சமுதாயப் பாதுகாப்பைப் போன்றே பொருளாதாரப் பாதுகாப்பு, குறிப்பாக பெண்களுக்கு இன்றியமையாதது. பெண்களின் வருவாயை அதிகரிப்பதன் மூலமே பெண்களின் தன்னம்பிக்கையையும், தற்சார்புடைமையையும், அதிகாரத்தையும் அதிகரிக்க முடியும். இந்த நோக்கத்துடன் அமைக்கப்பட்டவையே சுய உதவிக் குழுக்கள்(Self-Help Groups). பிரத்யேகமாக ஏழை எளிய பெண்களுக்கான இத்திட்டம் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மூளைச் குழந்தை (Brain-Child) ஆகக் கருதப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தொழிலார்வளமும், செயல் திறமையும் கொண்ட பெண்களுக்குக் கடன் உதவி வழங்கப்பட்டது. அவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. பொருளாதாரப் பாதுகாப்புக்கு உத்திரவாதம் அளிக்கும் இத்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் சுய உதவிக் குழுக்களில் 33 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். இவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த மகளிர் திட்டம் மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றது.

### 10.7.2 சாதனைகள்

தமிழ் நாட்டின் அரசாங்க அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் (Civil Servants) நிர்வாகத் திறமை பாரம்பரியப் பெருமைக்குரியது. கல்வி முறை, திறமையான பொது சேவை விநியோகம், சாலைப் போக்குவரத்து, குடிநீர் விநியோகம் போன்ற துறைகளில் தமிழ்நாடு தேசிய அங்கீகாரம் பெற்றுள்ளது. எனினும் ஜெயலலிதாவின் இரண்டாம் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருந்த பின்வரும் ஆட்சிச் சவால்களை எதிர்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன:

- கட்டுக்கடங்காமல் பெருகிவந்த அதிகார வர்க்கம் (Bureaucracy)
- அடிக்கடி அதிகாரிகளைப் பணிமாற்றம் செய்தல்
- அரசாங்க நடவடிக்கைகளை வெளிப்படையாகவும், பொறுப்பேற்பதாகவும் இருக்கச் செய்தல்

- ஊழல் எதிர்ப்பு நிறுவனங்களை சுதந்திரமாகச் செயல்படச் செய்தல்
- குற்றங்கள் பதிவு செய்யப்படுவதற்கேற்ப, விரைவில் விசாரணை நடத்தி தண்டனை வாங்கிக்கொடுத்தல்
- சேவைத் துறைகளில் (Registration Regional Transport) காணப்படும் காலதாமதம், ஊழல் இவைபற்றிய பல்வேறு பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதலமைச்சர் ஜெயலலிதா சவால்களை சாதனைகளாக மாற்றினார்.

### 10.7.3 பொருளாதார வளர்ச்சியும், வறுமை ஒழிப்பும்

தமிழ்நாடு இந்தியாவில் 7வது மக்கள்தொகைமிக்க, 5வது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் மாநிலமாகும். 1990களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சிகள், நீர் தட்டுப்பாடு, மின்சார பற்றாக்குறை, கடன் சுமை போன்ற காரணங்களால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்தது. எனவே, ஜெயலலிதா அரசு 2001லிருந்து 2004 வரை நிதி மற்றும் அமைப்பு ரீதியான மாற்றங்களை (Stractural Changes) மேற்கொண்டது. இவை வரவேற்கத்தக்க விளைவுகளைத் தந்தன. எனினும் மின்சாரக் கட்டணக் குறைப்பு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், வரையற்ற பொது வினியோகம் போன்ற காரணகளால் செலவினங்கள் பெருகிவிட்டன.

உலக வங்கியும், தமிழ்நாடு அரசும் இணைந்து தயாரித்த அறிக்கை (Economic Growth and Poverty Alleviation) 5 கொள்கைக் குறிப்புகளைத் தயாரித்தது:

- நடைமுறை சாத்தியமான நிதி சீர்திருத்தம்
- நிதி முதலீட்டை ஊக்குவித்தல்
- வேளாண்மை வளர்ச்சி
- ஆட்சிச் சவால்களை எதிர்க்கொள்ளும் முறைகள்
- வறுமை நிலையைக் கண்டறிந்து வறுமையை ஒழித்தல்.

இவற்றின் அடிப்படையில் வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

## 10.8 விடுதலைக்குப் பின் கல்வி வளர்ச்சி

### 10.8.1 மாபெரும் மாற்றம்

இந்திய விடுதலை பெற்ற பின்னர் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது கல்வி இந்தியாவின் சமூக பொருளாதார அரசியல் அறிவியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வளமிக்க கருவியாக கருதப்பட்டது நாட்டு ஒருமைப்பாடு சமூக நீதி சமதர்ம பொருளாதாரம் சமயசார்பின்மை மனித பொருள் வளங்களைப் பயன்படுத்துதல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு தொழில்மயமாக்கல் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி அனைவருக்கும் தரமான கல்வி போன்ற உயரிய குறிக்கோள்களை மனதில் கொண்டு கல்வி மனித வள மேம்பாட்டு கானா இந்திய கல்வி முறையில் மாபெரும் மாற்றங்களை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### 10.8.2 கல்வி கமி‘சன்கள்

நடுவன் அரசு அமைத்த டாக்டர் இராதாகிரு‘ன் கமி‘சன் அன்றைய இந்தியாவில் பின்பற்ற உயர் கல்வி முறையை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் மதிப்பீடு செய்து பல ஆக்கபூர்வமான பரிந்துரைகளை செய்தது அதேபோன்று டாக்டர் லட்சுமணசாமி முதலியார் கமி‘சன் இந்திய இடைநிலை கல்வியை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தது அதன்பின் அமைக்கப்பட்ட டாக்டர். டிஎ.கோத்தாரி கல்வி கமி‘சன் இந்திய கல்வி முறையின் அனைத்து நிலைகளிலும் துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பற்றி பரிந்துரைகளை செய்தது இதை எடுத்து 1986 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை இந்தியாவை 21ஆம் நூற்றாண்டுக்கு கொண்டு செல்ல படுவதற்கான கல்வித் திட்டத்தை கொடுத்தது இவற்றுக்கிடையே அரசியலமைப்புச் சட்டம் இந்திய குடிமக்கள் அனைவருக்கும் கல்வியை அடிப்படை உரிமையாக்கி இச்சட்டம் வழி காட்டு விதிகள் 14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டியது துவக்கத்தில் தமிழ்நாட்டில் கல்விக்கொள்கை மேற்கொண்ட முற்போக்கு நடவடிக்கைகளின் விளைவாக இருந்தது.

### 10.8..3 கல்வியின் குறிக்கோள்கள்

கேடில் விழுச்செல்வம் கல்வி மனிதவள மேம்பாட்டுக்கான அடித்தளம். கல்வியால் மட்டும் மட்டுமே கற்றறிந்த சமுதாயத்தை உருவாக்கி மனிதவளத்தை வளர்த்து சமத்துவம் சகோதரத்துவம் கருத்து சுதந்திரம் சமூகநீதி சர்வோதய சமுதாயம் மக்களாட்சி முறை போன்ற உயரிய இலக்குகளை எட்ட முடியும் மனித மேம்பாட்டு குறியீடுகளில் ஒன்று எழுத்தறிவாகும் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி விரும்புவோருக்கு உயர்நிலை கல்லூரி தொழில் கல்வி தொழில்நுட்ப அறிவும்,பயிற்சியும்,தேர்ச்சியும் பெற்ற தொழிலாளர் பணியாளர் உருவாக்கம் அறிவியல் அணுகுமுறை விஞ்ஞான மனப்பான்மையை விரிவுபடுத்துதல்

ஆகியவை கல்வியின் குறிக்கோள்கள் ஆகும்.

## 10.9 பள்ளிகல்வி

துவக்கக் கல்வி

இந்திய விடுதலைக்குப் பின்னர் அனைவருக்கும் கல்வி என்ற கொள்கை மத்திய மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது 6 முதல் 14 வரை உள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்த்து தக்கவைத்து துவக்க கல்வி அளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டில் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் 300க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட சிற்றூர்கள் அனைத்திலும் பள்ளிகள் திறக்கப்பட்டன மேலும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக கட்டணமின்மை, சீருடை, பாடநூல், போக்குவரத்து, பயண அட்டைகள் சைக்கிள் கணினிக் கல்வி போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன. நிர்வாக, மேலாண்மை உள்கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

## 10.10 இடைநிலை கல்வி

முக்கியத்துவம்

இடைநிலைக் கல்வி, தொடக்கக் கல்வி உயர்கல்விக்கும் இடைப்பட்ட நிலை ஆகும் இரு நிலைக் கல்வியையும் இணைக்கும் பாலம் போன்றது. இடைநிலைக் கல்வி மாணவர்கள் உயர்நிலை கல்லூரி கல்வியைத் தொடரவும் பணி வாய்ப்புகளுக்கான அறிவையும், திறமையையும, பயிற்சியையும்,தேர்ச்சியையும் பெற வாய்ப்பளிக்கிறது இக்காலகட்டத்தில்தான் மாணவர்கள் அறிவியல் மனப்பான்மையும் பகுத்தறிந்து பார்க்கும் பக்குவத்தையும் ஆக்கபூர்வமான குடிமைப் பண்புகளையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

மாணவர்கள் நலத்திட்டங்கள்

இடைநிலைக் கல்வி நிலையில் மாணவர்களுக்கு ஊக்கத்தை கொடுப்பதற்காக பாடப்புத்தகங்கள் வழங்க மிதிவண்டிகளை கூடுதல் கணினி கல்வியை விரிவுபடுத்துதல் தொழில் கல்வியை மேம்படுத்துதல் ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்களுக்கு விருதுகளும் பரிசுகளும் வழங்கி பெற்றோரின் குழந்தைகளுக்கு கல்வி உதவி அளித்தல் போன்ற மாணவர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## 10.11 நவோதயா பள்ளிகள்

நோக்கம்

ராஜீவ் காந்தி இந்திய பிரதமராக இருந்தபோது அறிமுகப்படுத்திய புதிய கல்விக் கொள்கையின் விளைவாக ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நவோதயா பள்ளிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை உலக தரம்

வாய்ந்த நடுநிலைப்பள்ளிகள். இப்பள்ளிகள் இந்தியாவில் மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் துவங்கப்பட்டன. இப்பள்ளி திட்டத்தின் நோக்கங்கள் மூன்று:

- இதுவரை வளர்ச்சி அடையாத கிராமப் பகுதியில் கல்வி நிலையை உயர்த்துதல்
- கிராமத்தில் வாய்ப்பின்றி வாழும் திறமைமிக்க மாணவர்களின் திறமையை வெளிக் கொணர்தல்
- திறமைமிக்க மாணவர்களை கண்டறிந்து அவர்களது திறமைகளை முழுவதுமாக வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு அளித்தல்.

கல்வி சாதனையாளர்கள்

நவோதயா பள்ளிகள் இளம்கல்வி சாதனையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக துவக்கப் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் பெற்றோர்களின் சாதி சமய பற்றியோ, பொருளாதார நிலை பற்றியும் கவலை இல்லை. இப்பள்ளிகளில் 75 சதவீதம் இடங்கள் கிராம குழந்தைகளுக்காக ஒதுக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் துவக்கப்பள்ளியின் பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு செய்யப்படும். மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களாக இருக்குமாறு பள்ளி சேர்க்கை இருக்கும் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் அனைவரும் விடுதிகளில் தங்கிப் படிப்பர். கல்வி மற்றும் விடுதி செலவுகள் அனைத்தையும் அரசே ஏற்கும் இப்பள்ளிகள் மத்திய இடைநிலைப்பள்ளி போர்டுடன் (CBSC) இணைக்கப்பட்டுள்ளன.

## 10.12 சமச்சீர் கல்வி

முத்துக்குமரன் குழு

நோக்கம்

தமிழக அரசு 2006 செப்டம்பர் மாதம் முன்னாள் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் முத்துக்குமரன் தலைமையில் சமச்சீர் கல்வி பற்றி ஆராய்வதற்காக ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைத்தது இக்குழுவின் நோக்கம்:

- மாநிலத்தில் பல்வேறு பிரிவு பள்ளிகளில் அரசு பள்ளிகள் மத்திய போர்டு மெட்ரிக் பள்ளிகள் மெட்ரிகுலே‘ன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் ஆகியவற்றின் ஒரே தரமான பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- சமச்சீர் கல்வி அளிப்பதற்கு வேண்டிய கட்டமைப்பு வசதிகள் ஆசிரியர் தரம் தேர்வு முறைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்.

## 10.13 கல்வி வளர்ச்சித் திட்டங்கள்

சிறப்பு திட்டங்கள்

பள்ளிக் கல்வி வளர்ச்சிக்காக பல சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன இவற்றை முக்கியமானவை

- **நூலக வசதிகள் மேம்பாட்டுத்திட்டம்**

  இத்திட்டத்தின் நோக்கம் மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை பலப்படுத்துதல் படிப்பினை படிப்பு வேகத்தை மேம்படுத்துதல் பாடப்புத்தகங்களை கடந்து பாட சம்பந்தமான பிற புத்தகங்களையும் படிக்க வாய்ப்பு அளித்தல் மனதை ஒருமுகப்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.

- **கற்பித்தல் கருவிகள் வழங்கல்**

  கற்பித்தல் தரத்தை மேம்படுத்த கணித கருவிப்பட்டி, அரசியல் விளக்கப்படங்கள், வரைபடங்கள் போன்றவற்றை வழங்கல்.

- **மொழி ஆய்வகங்கள் அமைத்தல்**

  தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை பின்பற்றப்படுகிறது. எனவே, தாய் மொழியான தமிழும் உலகத் தொடர்பு மொழியான ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களை தெளிவாக தெரிந்து கொள்வதற்கும் ஆங்கிலச்சொல் ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் பிறருடன் ஆங்கிலத்தை தடையின்றி உரையாடவும் பயிற்சி பெறுவதற்காக பள்ளிகளில் மொழி ஆய்வகம் அமைக்கப்படுகிறது.

- **கற்பிக்கும் திறனை மேம்படுத்துதல்**

  ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி திட்டங்கள் மாநில அளவில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒப்புரவை திறமையையும் ஊக்குவிக்கும் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்மாதிரி பள்ளிகள் ஏற்படுத்துதல் ஆசிரியர் மாணவரிடையே மின்னணு ஆளுமை திறனை மேம்படுத்துதல் அரசு தேர்வுத்துறை திட்டங்கள்.

- **ஈவேரா நாகம்மை திட்டம்**

  இத்திட்டத்தின் கீழ் கலை அறிவியல் பாடங்களில் பட்டப்படிப்பு பயிலும் ஏழைப் பெண்களுக்கு அவர்கள் எந்த சாதி மதத்தை சார்ந்தவராக இருந்தாலும் இலவச கல்வி வழங்கப்படுகிறது இதற்கான வருமான வரம்பு ரூபாய் 50,000 ஆகும்.

- **அடிப்படை அறிவியல் கல்வி**

  அறிவியல் துறைகளில் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் மேற்படிப்பை தொடரவும் ஆராய்ச்சியில் இருக்கவும் அறிவியல் சமூக அறிவியல் பாடங்களில் ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துதல், போட்டித் தேர்வுகளில் மாணவர்கள் பங்கேற்றகச் செய்தல், கல்வி உதவித்தொகை வழங்கல், அறிவியல் சமூக இயல் துறைகளில் மாநில அளவில் சாதனை படைக்கும் நிறுவனங்களை அடையாளம் கண்டு ஊக்குவித்தல் போன்றவை இதில் இடம் பெற்றுள்ளன.

**தமிழ் கல்வி**

இருவகை

தமிழ்நாட்டில் அனைத்து துறைகளிலும் தமிழ் கோலோச்ச வேண்டும் என்ற குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது சூழ்நிலையில் தமிழ் கல்வி பற்றிய தெளிவு பெற வேண்டிய அவசியமாகிறது. தமிழ் கல்வி இருவகைப்படும்.

- தமிழ் மொழியை பாடமாக பயில்வது
- தமிழ்மொழி பிற பாடங்களை கற்பது

மொழி கல்வி

தமிழ் கல்வி என்பது "எண்ணும் எழுத்தும் கண்ணென தகும்" என்ற குறுகிய வட்டத்திற்குள் சுருங்கிவிட்டது இலக்கிய இலக்கணத்தை கற்பதே தமிழ் என்றாகிவிட்டது அதன் காரணமாக போர்முறை, காதல் நெறி, பக்தி மார்க்கம் பற்றி பேசும் தமிழ் இலக்கிய விரிவடையாமல் தேங்கிவிட்டது. பிறமொழி சரித்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும். இல்லையேல் "தமிழ் மெல்ல இனிச் சாகும" என்ற பாரதி எச்சரிக்கை வேண்டியதாயிற்று இது தமிழ் கல்வியின் ஒரு பரிமாணம்.

மொழி வழி கல்வி

தமிழ் கல்வியின் மற்றொரு பரிமாணம் பிற பாடங்களை தமிழ்வழி கற்பது தற்கால அறிவியல் கணிதவியல் கணினியியல் தகவல் தொழில்நுட்பம் மருத்துவம் மேலாண்மை போன்ற துறைகள் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. இவை பற்றிய நூல்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவாறு தமிழில் எழுதப்பட வேண்டும். அது மட்டுமல்ல இத்துறைகள் பற்றிய மேலைநாட்டு நூல்களை தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் இவற்றிற்கு ஏற்ப பல்கலைக்கழகங்களும்

கல்லூரிகளும் பள்ளிகளும் தயாராக வேண்டும் அமைச்சர்களும் அரசாங்க அலுவலர், அலுவலர்களும் பிற துறை அதிகாரிகளும் தங்கள் பிள்ளைகளையும் பேரக் குழந்தைகளும் அரசு கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் சேர்க்கிறார்கள் அன்றுதான் தமிழ்க்கல்வி தமிழகத்தில் வெற்றி பெறும்.

## 10.14 உயர்கல்வி

இந்தியா விடுதலை பெற்றதிலிருந்து உயர் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது ஆயிரத்து 48 நடுவண் அரசால் அமைக்கப்பட்ட டாக்டர் இராதாகிரு'ண்ணன் கமி'ன் உயர் கல்வி வளர்ச்சி பின்பற்றியது வான் அதற்கு காரணம் உயர்கல்வி நிலைகளிலிருந்து வரன் பட்டதாரிகளை நேரடியாக நாட்டின் பணி தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் தமிழ்நாடு உயர் கல்வித் துறையில் மிகவும் முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.

வியத்தகு வளர்ச்சி

வரலாற்று ரீதியாக பார்க்கையில் தமிழ்நாட்டில் துவக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை வியப்பிற்குரியது அண்ணாமலை பல்கலைக்கழகம் 1929, சென்னை பல்கலைக்கழகம் 1857, மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் 1966 தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் 1971, காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம் 1976, அண்ணாமலை பல்கலைக்கழகம் 1978, தமிழ் பல்கலைக்கழகம் 1981, பாரதியார் பல்கலைக்கழகம் 1982, பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982, அன்னை தெரசா மகளிர் கல்லூரி 1984, அழகப்பா பல்கலைக்கழகம் 1985, டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகம் 1987, அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் பல்கலைக்கழகம் 1988, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 1989, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் 1996, பெரியார் பல்கலைக்கழகம் 1997, தமிழ்இணையப்பல்கலைக்கழகம் 2001, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 2002, தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம் 2003, இவையன்றி தொழில்நுட்ப நிறுவனம் (IIT) சென்னையிலும் தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (NIT) திருச்சியிலும் உள்ளன.

தரமும் தகுதியும்

தனியார் அறக்கட்டளைகள் தொண்டு அமைப்புகள் தங்களது பொறுப்பில் புதிய தன்நிதிக் கல்வி நிலையங்களை தொடங்குவதற்கு அரசு அனுமதி அளிக்கிறது. கல்லூரிகள் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் துவங்கப்பட்டுள்ளன முன்னமேயே அரசு உதவி பெற்றுவரும் கல்லூரிகளிலும் தன்நிதித் துறைகள் துவங்கப்பட்டுள்ளன. அனைத்து கல்லூரிகளிலும்

பல்கலைக்கழக மானியக்குழுவின் உதவியைப் பெற்று வருகின்றன. தேசிய தரக்கட்டுப்பாட்டு குழு கல்லூரிகளில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்பையும் தரத்தையும் நிர்ணயம் செய்கிறது. அதே போன்று மாநில தரக் கட்டுப்பாட்டு குழு 1910 ஜூலை மாதத்திலிருந்து செயல்படுகிறது. கல்லூரி கல்லூரி ஆசிரியர்கள் பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் தேசிய தகுதி தேர்வு (NET) மூலம் தெரிவு செய்யப்படுகின்றன.

தமிழிணைய பல்கலை கழகம்

உலகில் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி வாழும் தமிழ் மக்களின் மொழி வாழ்வியல் பண்பாட்டு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 1999ஆம் ஆண்டு தமிழ் இணையப்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது இதுவே தற்போது தமிழ் இணையக் கல்விக்கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கல்விக்கழகத்தின் பணிகள் பல வகைப்பட்டவை குறிப்பாக இணைய வழி கல்வித்திட்டங்கள் மின் நூலகம் கணித்தமிழ் வளர்ச்சி கல்வி திட்டத்தின் கீழ் தமிழ் கல்வி அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை நன்கு வரையப்பட்ட கல்வித் திட்டத்தின் கீழ் இணையவழி வழங்கப்படுகிறது என்ற சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இவற்றுக்கான சான்றிதழ் மற்றும் உயர்கல்வி கொடுக்கப்படுகின்றன. மின் தேர்வு உண்டு மின் நூலகத்தில் நூல்கள் அகராதிகள் பிற பார்வை கூடங்கள் எனும் மூன்று தனிப் பிரிவுகள் இடம்பெற்றுள்ளன தமிழ்இணையப்பல்கலைக்கழகம் குறித்த விவரங்களை அறிய விரும்புவோர் தொடர்பு மையத்தை அணுகலாம். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்பதே இக்கழகத்தின் மூல முழக்கமாக உள்ளது

**உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக**

1. சுனாமி சீரமைப்பு நடவடிக்கை
2. புதிய தொழில் கொள்கை
3. வீராணம் குடிநீர் திட்டம்

## 10.15 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. சுனாமி சீரழிவு நடவடிக்கை தமிழ்நாட்டில் 2004 டிசம்பர் 26 சுனாமி பேரலைகள் தாக்கி மக்கள் பேரழிவை எதிர்கொண்டனர் மீனவர் குடும்பங்களின் மறுவாழ்வுக்கான சேமிப்பு வழி துயர் துடைப்பு திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டது.

2. ஜெயலிதா ஆட்சியின்கீழ் 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது இக்கொள்கையின் பிரதான அம்சங்கள் உள்கட்டமைப்பு, மின்சார விநியோகம், நிர்வாக வழிமுறை எளிமையான தொழிலாளர் சீர்திருத்தம்.

3. அறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு கருணாநிதியால் கைவிடப்பட்ட வீராணம் குடிநீர் திட்டம் முதலமைச்சர் ஜெயலலிதாவால் புதிய வீராணம் திட்டம் என்ற பெயரில் புதுப்பித்தார் இத்திட்டம் 2004இல் நிறைவேற்றப்பட்டது.

## 10.16 சுருக்கம்

ஜெயலலிதாவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்ட சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் நவீன தொழில்நுட்பத் தேவைகளை மனதில் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டவையாகும். இக்கால கட்டத்தில் சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட 2005 - 2006 க்கான அரசாங்க வரவு - செலவுத் திட்டம் இதற்கான தக்க சான்றாகும். இத்திட்டம் திராவிடக் கட்சிகள் பின்பற்றிவந்த சமூக நீதியோடு பொருளாதார நீதியை ஒருங்கிணைத்தது. உண்மையான பொருளாதார வளர்ச்சியால் மட்டுமே சமூக நீதியை வழங்க முடியும் என்ற நடைமுறை உண்மை உணர்த்தப்பட்டது. குறிப்பாக தமிழ்நாடு மின்வெட்டு இல்லாத மாநிலமாகத் திகழ்ந்தது.

## 10.17 முக்கிய கருத்துப்படிமங்கள்

கேடில் விழுச்செல்வம் கல்வி மனிதவள மேம்பாட்டுக்கான அடித்தளம். கல்வியால் மட்டும் மட்டுமே கற்றறிந்த சமுதாயத்தை உருவாக்கி மனிதவளத்தை வளர்த்து சமத்துவம் சகோதரத்துவம் கருத்து சுதந்திரம் சமூகநீதி சர்வோதய சமுதாயம் மக்களாட்சி முறை போன்ற உயரிய இலக்குகளை எட்ட முடியும் மனித மேம்பாட்டு குறியீடுகளில் ஒன்று எழுத்தறிவாகும் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி விரும்புவோருக்கு உயர்நிலை கல்லூரி தொழில் கல்வி தொழில்நுட்ப அறிவும்,பயிற்சியும்,தேர்ச்சியும் பெற்ற தொழிலாளர் பணியாளர் உருவாக்கம் அறிவியல் அணுகுமுறை விஞ்ஞான மனப்பான்மையை விரிவுபடுத்துதல் ஆகியவை கல்வியின் குறிக்கோள்கள் ஆகும்.

## 10.18 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறு வினாக்கள்**

1. சுய உதவி குழுக்கள்
2. கிராமத் திட்டங்கள்

**நெடு வினாக்கள்**

1. விடுதலைக்குப் பின் கல்வி முன்னேற்றம்
2. பொருளாதார வளர்ச்சியில் அ.இ.அ.திமு.க வின் பங்கு
3. சமூக முன்னேற்ற திட்டங்கள்

## 10.19 மேலும் படிக்க

1. Subramanian .N - History of Tamil Nadu (PL.II)
2. Gopalakrishnan.M.D – Periyar, Father of the Tamil Race.
3. Sathianathier,R - History of India Vol II.
4. B.S Baliga, - Studies in Madras Administration, 2 Vols.

# தொகுதி- IVஉலகத் தமிழ் மாநாடுகள்

# அலகு-11 மைய மாநில உறவுகள்

**அமைப்பு**

11.0 அறிமுகம்
11.1 சட்ட உறவுகள்
    11.1.1 மையப் பட்டியல்
    11.1.2 மாநிலப் பட்டியல்
    11.1.3 இருதிறத்திற்கும் உரிய பட்டியல்
11.2 ஆட்சிமுறை உறவுகள்
11.3 நிதி உறவுகள்
11.4 காவிரி நீர்
11.5 இன்றைய நிலை
11.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
11.7 சுருக்கம்
11.8 முக்கிய கருத்துப்படிமங்கள
11.9 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
11.10 மேலும் படிக்க

## 11.0 அறிமுகம்

மைய அரசு சக்கரம் எனில் அந்தச் சக்கரத்தின் கம்பிகளாய் விளங்குபவை, மாநிலங்கள். இந்தியா கூட்டாட்சித் தத்துவத்தில் இயங்குகிறது. கூட்டாட்சியின் சிறப்புக்கூறு அதிகாரப்பங்கீடு ஆகும். இந்த அதிகாரப்பங்கீடு அரசியல் சட்டத்தில் மூன்று பட்டியல்களில் அடங்கியுள்ளது. மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்கள் இவை என வரையறை செய்யப்பட்டுள்ளன.

அவ்வரசுகள் தங்களுக்கு வழங்கப்பெற்ற அதிகார வரையறைக்குள் செயல்படுகின்றபோதலும், பல வேளைகளில் சிக்கல்கள் எழாமல் இல்லை. அவ்வாறான வேளைகளில் சிக்கல்களைத் தீர்க்கத் துணை நிற்பது உச்சநீதி மன்றம். உச்சநீதி மன்றம் சிறப்பான முறையில் தன் பங்கினை ஆற்றி வருகின்றது.

அரசியல் அமைப்பினை உருவாக்கிய கருத்தாக்கள், இந்தியக் கூட்டரசினை உருவாக்குகையில், எத்தகைய மைய அரசு அமைக்கப்பெற வேண்டும்; மைய மாநில அரசுகளுக்கிடையில் எத்தகு உறவு அமைதல் வேண்டும் என்பதில் தங்கள் சிந்தனை, கருத்து, எண்ணம் ஆகியவற்றைச் செலுத்தினர்.

இந்தியா அந்நிய ஆட்சியிலிருந்தவரை அத்தகு எண்ணத்திற்கு இடமேற்படவில்லை. விடுதலை பெற்ற பின்னரே அத்தகு உறவுகள் குறித்துச் சிந்திக்க வேண்டுவதாயிற்று.

மைய அரசு வலிமை பொருந்தியதாய் அமைய வேண்டும் என்னும் கருத்தை முதலில் ஏற்றுக்கொண்டனர். அதே வேளையில், மைய அரசு சட்டாம்பிள்ளையாய், மேலாதிக்கச் சக்தியாய் அமைந்துவிடக்கூடாது என்பதிலும் கவனம் செலுத்தினர். உறவுகள் மேம்பட்டு நிற்குகும் வகையில், சீர்க்கேடு அடைந்திடாத வகையில் செம்மையான அடித்தள்ம் இட்டனர்.

உறவுகள் என்னும் உரம் வலுவானதாய் அமைய வகை செய்தனர்.மைய மாநில உறவுகளைச் சட்ட உறவுகள், ஆட்சிமுறை உறவுகள், மைய நீர் நிதி உறவுகள், நதிநீர்ப் பங்கீட்டு உறவுகள் எனப்பகுத்துக் காணலாம்.

## 11.1 சட்ட உறவுகள் (உரிமைகள்)

அரசியலமைப்புத்தான் சட்ட உறவுகளுக்கான அடிப்படை அரசியலமைப்பில் மைய மாநில அரசுகளின் சட்டமியற்றும் உரிமைகள் மூன்று பட்டியல்களாய் உள்ளன. அவற்றை மையப்பட்டியல், மாநிலப் பட்டியல், இருதிறப் பட்டியல் அல்லது பொதுப்பட்டியல் எனலாம்.

### 11.1.1 மையப் பட்டியல்

மையப் பட்டியலில் இடம் பெற்றுள்ள தலைப்புகளுக்குச் சட்டமியற்றும் முழு உரிமையை அல்லது தனி உரிமையை நாடாளுமன்றம் மட்டுமே கொண்டுள்ளது. இந்தியாவின் பாதுகாப்பு, படை நிருவாகம், அயல்நாட்டுறவு, ஆயுள் பாதுகாப்பு ஈட்டுக் கழகங்கள், இருப்புப்பாதைகள், அஞ்சல்-தொலைத் தொடர்பு, உள் வெளி வாணிபம், வங்கித்தொழில், சுரங்கக் கட்டுப்பாடு, தாதுப்பொருள்களின் மேம்பாடு, தொழிலாள்ர் சட்டம், உப்பு விளைவு, உயர்நீதிமன்றங்கள், இந்திய நிறுவனங்கள், தொல்பொருள் பாதுகாப்பு, வருமான வரி, சுங்கத் தீர்வை, ஆயத்தீர்வை உள்ளிட்ட 97 தலைப்புகள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

### 11.1.2 மாநிலப்பட்டியல

காவல் துறை, நிதி நிருவாகம், சிறைச்சாலை, உள்ளாட்சி மாநிலக்கல்வி போக்குவரத்து, வனவளாப் பாதுகாப்பு, மீன் வளாம் உள்ளிட்ட 66 தலைப்புகள் மாநிலப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.இருப்பினும், அரசியலமைப்பின் விதிகள் (249-253) மாநிலப்பட்டியலில் இடம் பெற்றுள்ளவற்றிற்குச் சட்டமியற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு நல்கியுள்ளது. அரசியலமைப்பில் 249 ஆம் விதியின்படி, மாநில அரசின் மூன்றில் இரண்டு பங்குச் சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவோடு

நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களை நாட்டு நலனுக்கு எதிரானவை எனக் கருதினால் அவை தொடரிபானவற்றிற்குச் சட்டமியற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது.

அரசியலமைப்பின் விதி 25இன் படி நெருக்கடி நிலை அறிவிப்பு செயல்பாட்டில் இருக்கும் போது, மாநிலப்பட்டியலில் கண்டுள்ள தலைப்புகளில் மைய அரசு அல்லது நாடாளுமன்றம் சட்டமியற்றும் உரிமைகயைப் பெற்றுள்ளது. அவ்வாறு மைய அரசினால் இயற்றப்பெறுகின்ற சட்டங்கள், நெருக்கடி நிலையானது செயலில் உள்ள காலம் வரையிலோ நெருக்கடி நிலைச் செயல்பாடுகள் முடிந்த பின்னர் ஆறு மாத காலம் வரையிலோ நடைமுறையில் இருக்கும்.மைய அரசு, தன் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு மாநில அரசுக்கு நெறிமுறை வழங்கும் உரிமை பெற்றுள்ளது. இதைத் தவிர விதி 356இன்படி, மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்து அரசு சரியாய் இயங்காத நிலையில் மாநிலப் படியலில் உள்ளவற்றிற்கு மைய அரசு சட்டமியற்றலாம்.

இரண்டு அல்லது இருண்டுக்கும் மேபட்ட மாநிலங்கள் நாடாளுமன்றச்சட்டம் தேவையானது எனச் சட்டமியற்றும் வேளையில் நாடாளுமன்றம் அந்த மாநிலங்களின் நலன் கருதித் தேவையான சட்டங்களை இயற்ற அரசியலமைப்பின் விதி 252 இடமளிக்கிறது. ஆனால் அச்சத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கோ அச்சட்டங்களை விலக்கிக்கொள்வதற்கோ நாடாளுமன்றமே உரிமை கொண்டுள்ளது.அரசியலமைப்பு விதி 253, உடன்பாடுகளையும், இந்தியா தொடர்பான உடன்பாடுகளையும் செயல்படுத்தும்பொருட்டு இந்தியா முழுமைக்கும் அல்லது இந்தியாவில் ஏதாவது ஒரு பகுதிக்குச் சட்டமியற்றும் உரிமையை மைய அரசுக்கு அளித்துள்ளது.

இவ்வாறு சட்டமியற்றும் அதிகாரம் மாநிலங்களுக்கு என வழங்கப்பெற்ற போதிலும் மைய அரசின் சட்டங்களுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இருக்கவேண்டிய நிலை உள்ளது. இருந்த போதிலும், மைய அரசு அச்சட்டத்தின் உரிமைகளை மாநிலங்களின் உரிமைக்கு எதிராய்த் தவறாய்ப் பயன்படுத்தப் பெரும்பான்மையாய் முயன்றதில்லை.

### 11.1.3 இருதிறத்திற்கும் உரிய பட்டியல்

இத்தலைப்பில் குற்றவியல் சட்டம், குற்றவியல் நடைமுறை சட்டம், தொழிற்சங்கங்கள், துறைமுகங்கள், வாணியக் கட்டுப்பாடு உள்ளிட்ட 46 தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்குச் சட்டமியட்டும் அதிகாரத்தை நாடாளுமன்றமும் மாநிலங்களின் சட்ட அவைகளும் கொண்டுள்ளன. ஏதேனும் சூழ்நிலையால் சிக்கல்கள் எழுமாயின் மைய அரசின் சட்டங்களே மிஞ்சி

நிற்கும்.

மூன்று பட்டியலிலும் இடம் பெறாத தலைப்புகளுக்குச் சட்டமியற்றும் உரிமையை எஞ்சிய உரிமைகள் என மைய அரசு பெற்றுள்ளது. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்திய அரசு வலிமை மிக்க மைய அரசைக் கொண்டிருக்க வேண்டும் என்னும் நோக்குடன்தான் எஞ்சிய அதிகாரங்களை மைய அரசிடம் அளித்துள்ளனர். ஆனாலும் மைய அரசிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருப்பதால் மாநிலங்களின் உரிமைக்குக் கே நேருமோஎன அஞ்சவேண்டி உள்ளது.இதனால் ''உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்'', மையத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில தன்னாட்சி எனும் முழக்கங்கள் எழுந்துள்ளன.

மையத்தில் மட்டுமல்லாமல், விடுதலைக்குப் பின் ஏறக்குறைய நூறுமுதல் தொண்ணூறு விழுக்காடு மாநிலங்கள் காங்கிரசு ஆளும் மாநிலங்களாய் விளங்கின. அதனால், இத்தகைய முழக்கங்கள், கோரிக்கைகள் எழவில்லை.1967க்குப் பின்னர், குறிப்பாய்த் தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் அரசு அமைந்தபின்னர் தென்னகத்திலிருந்து மாநில சுயாட்சிக் குரல்கள் எழுந்தன. 'ஏன் வேண்டும் இன்பத் திராவிட நாடு? என்னும் நிலை மாறி, இப்போது வேண்டும் எமக்கு மாநிலச் சுயாட்சி ' என்ற குரல் எழுந்தது. மெல்ல, மெல்ல இக்கோரிக்கை பரவி வருகிறது. இதனால் நாட்டு ஒற்றுமைக்குப் பாதிப்பு ஏற்படாமல் வலிவடிந்து வருகிறது. பிரிவினைக் கோரிக்கை பிசுபிசுத்துப்போனாலும் தன்னாட்சி வேண்டும் நிலை உள்ளது.

## 11.2 ஆட்சிமுறை உறவுகள்

அரசியலமைப்பின் படைப்பாளிகள் மைய, மாநில அரசுகளுக்கிடையில் எவ்விதச் சிக்கல்களும் எழாத வகையில் பல பிரிவின் நெறிமுறைகளையும் வரையறைகளையும் வகுத்தளித்துள்ளனர். நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு மைய அரசுக்கு உண்டு. அதற்கேற்றவாறு மைய மாநில அரசுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு இன்றியமையாதது. இந்த ஒருங்கிணைப்பு மாநிலங்கள்மீது மைய அரசின் முறையான கட்டுப்பாட்டினால் மாநிலங்களுக்கு இடையேயான இணக்கத்தினால் பெறப்படுகிறது.

பல முறைகளில் மாநிலங்களின்மீதான மைய அரசின் கட்டுப்பாடு செயல்படுத்தப்படுகின்றது. நெருக்கடி நிலைக் காலங்களில் மைய அரசு தன் நெறிமுறைகளை வழங்குகிறது. மாநில அரசுகளைத் தன் பணிகளைச்

செயல்படுத்தக்கோருகிறது. மானியம் அளிக்கிறது. அகில இந்தியப் பணிகளை உருவாக்குகிறது. மாநிலங்களுக்கிடையேயான குழுக்களை ஏற்படுத்துகிறது இச்செயல்கள்வாயிலாய் மாநிலங்கள் மீது கட்டுப்பாட்டை மைய அரசு செயல்படுத்துகிறது.அரசியலமைப்பு விதி 256 இன்படி மாநிலங்களின் அதிகாரங்களை நாடாளுமன்றத்தின் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டே செயல்படுத்த வேண்டும். தேவைப்படின் மைய செயற்குழு மாநிலங்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

விதி 356 இன்படி எந்த ஒரு மாநில அரசும் தன் மாநிலத்தில் மைய செயற்குழுவின் அதிகாரங்களைமீறுகின்ற வகையிலோ, புறந்தள்ளும் வகையிலோ நடந்துகொள்ளக்கூடாது.இந்திய அரசின் முகண்மைகள் சரியாகச் செயல்படத் தடைகள் எவையேனும் இருப்பின் அத்தடைகளை நீக்கத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாநில அரசுகளுக்கு மைய அரசு கட்டளை பிறப்பிக்கும்.

மையச் செயல்பிரிவு மாநிலத்தின் ஒப்புதலுடன் மாநில அலுவலர்கள் வாயிலாய்த் தன் வரையறிக்குட்பட்ட பணிகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். அதற்கான சட்ட உரிமையும் மைய அரசு கொண்டுள்ளது. அப்பணிகளை நிறைவேற்றும் அலுவலர்களுக்கான ஊதியங்கள், சலுகைகள் ஆகியவற்றை மைய அரசெ கொண்டுள்ளது. அப்பணிகளை நிறைவேற்றும் அலுவலர்களுக்கான ஊதியங்கள், சலுகைகள் ஆகியவற்றை மைய அரசே வழங்கும். இது தொடர்பாய் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் அச்சிக்கலைத் தலைமை நீதிபதியால் நியமிக்கப்பெற்ற நடுவர் வாயிலாய்த் தீர்த்துக்கொள்ளலாம். அனைத்து இந்தியப்பணிகள், இ.அ.ப., இ.கா.ப. என வழங்கப்படும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., முதலான பணிகளுக்குத் தகுந்தவர்களைத் தேர்வு செய்து, மாநிலங்களின் பணிக்கு என ஒதுக்கீடு செய்து அனுப்பக்கூடிய செயலை மேகொள்ளும் உரிமை இந்திய அரசுக்கே உரித்தாகும். மானிலங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்திய அரசு உதவி நிதி வழங்கும் உரிமை பெற்றுள்ளது. மலைவாழ் மக்கள், பழங்குடியினர் வாழ்வு மேம்பாட்டின்பொருட்டு அவர்களுக்கு வேண்டிய சிறப்பு நிதியை மாநிலங்களுக்கு ஒதுக்கும் அதிகாரத்தையும் இந்திய அரசு கொண்டுள்ளது.

மாநிலங்களுக்கு இடையே இணக்கத்தை ஏற்படுத்திச் சில விதிமுறைகள் வகுக்கப்பெற்றுள்ளன. இந்திய அரசியலமைப்பு மைய அரசுக்கு நதி நீர்ப்பங்கீடு, பயன்பாடு, கட்டுப்பாடு முதலிய சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் உரிமையை வழங்கியுள்ளது. ஆனால், நடைமுறையில் மைய அரசு இந்த உரிமையைப் பயன்படுத்தியுள்ளதா என்று பாத்தால், பயன்படுத்தவில்லை என்ற பதில் கிடைக்கிறது. இதற்கு அரசியல், தேர்தல் நொக்கு ஆகியவை காரணம். தேசிய அரசிய கட்சியாய் இருந்த போதிலும் நடுநிலை உணர்வோடு,

தேர்தலை எண்ணாமல் முடிவு செய்யவில்லை என்பதை நடைமுறை நிகழ்வு காட்டுகிறது.

கர்'மீர்ச்சிக்கல் போலக் காவிரிச்சிக்கல் திராமல் இருக்கிறது. ஆளும் கட்சிகள் மையத்தில் மாறிய போதும், மாநிலத்தில் ஆளும் கட்சிகளின் விருப்பு, வெறுப்பை எண்ணியே செய்யல்படுகின்றன. மைய அரசின் இந்த உரிமை பயன்படுத்தப் பட்டிருந்தால், மாநிலங்கள் செயல்துறையை விட்டு, நீதித் துறையை அணுக வேண்டியிராது. நதிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருந்தால் ஒருவேளை மையத்தில் ஆளும் அரசுகள் துணிவுடன் வாக்குகளைக் கருதாமல் செயல்பட்டிருக்குமோ என்னவோ? இங்கே மற்றொரு கருத்தையும் பதிவு செய்திட வேண்டும். இல்லையெனில் நாம் நடிநிலை தவறியவர்கள் ஆகிவிடுவோம்.

1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ச் சிக்கல் சட்டம், நதிநீச் சிக்கல் நடுவர் விவாதச் சட்டம், நதிநீர்ச் சைக்கல்களை நடுவர் மன்றத்தின் வாயிலாய்த் தீர்த்துக் கொள்ளவகை செய்தது. நடுவர் மன்றங்கள், மைய அரசின் விசாரணைக் குழுக்கள் என்று அவ்வப்போது நியமனம் ஆகித் தீர்ப்புகள் வழங்கப்பெற்றபோதும் பாதிப்பிற்குள்ளான அரசுகளுக்கு அவை பலன் அளிக்கவில்லை. முழுக்க முழுக்க அரசியல் கண்ணோட்டமே இதற்குக் காரணம். மைய - மாநில உறவுகளை குறித்த விதிமுறைகள் அரசியல் அமிப்பின் விதி 261, விதி 301,302, 3017 இல் காணலாம்.

## 11.3 நிதி உறவுகள்

1935 ஆம் ஆண்டு, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பெற்றது இந்திய அரசுச்சட்டம். 1935 என்பதே மைய மாநில அரசுகளுக்கிடையேயான வருவாய் வகைகளுக்கு அடிப்படை.மையப் பட்டியலில் இடம் பெற்றுள்ள வற்றைக் கட்டுப்படுத்தும் உரிமை மைய அரசுக்கு மட்டும் உண்டு. மாநிலங்கள் தங்கள் வருவாய்களை முழுமையாய்ப் பயன்படுத்திக்கொள்கின்றன. ஆனால், மைய அரசின் வருவாயில் ஒரு பகுதி அல்லது முழுமையாய் மாநிலங்களுக்குச் செல்கிறது.

மைய அரசு விதித்துப் பெறுகின்ற சில சுங்கத் தீர்வைகள் (மருத்துவ உற்பத்தி இனங்கள் தவிர) மைய மாநில அரசுகளுக்கிடையே பங்கீடு செய்யப்படுகின்றன. மைய அரசு, மாநிலத் தேவைகளைக் கருத்திற்கொண்டு மூன்று வகையான நிதி உதவிகளை மாநிலங்களுக்கு வழங்குகிறது.

அரசியலமைப்பின் விதி 273இன்படி அசாம், பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களிலிருந்து ஏற்றுமதியாகும் சணல், சணல் மூலம் உருவாகும் பொருள்களிலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு ஈடாகவே இந்நிதி

உதவியை மைய அரசு அளிக்கிறது. அம்மாநிலங்களௌக்கு வழங்கும் உதவித்தொகையின் அளவினைக் குடியரசுத்தலைவர் வரையறை செய்வார்.

அரசியலமைப்பின்படி,இவ்வுதவித்தொகை குடியரசு ஆனதிலிருந்து பத்தாண்டுக்காலத்திற்கு அல்லது ஏற்றுமதி வரியைப் பெறும் உரிமையினை மைய அரசு தக்கவைத்திடும் காலம்வரையில் அல்லது இரண்டனுள் எது முன்னர் முடிவிற்கு வருகிறதோ அதுவரை மட்டுமே செல்லுபடியாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விதி 275 இன்படி மாநிலங்களின் நிதித்தேவையைக் கணாக்கிட்டு உதவித்தொகை வழங்கிட மைய அரசுக்கு அதிகாரம் உள்ளது . இவ்வாறு வழங்கப்படும் நிதி உதவி மாநிலங்களுக்கு ஏற்றவாறு நாடாளுமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது.

சட்ட வரையறைகளுக்கு அப்பாற்பட்டுப் பொதுநலன் கருதி நிதி உதவி வழங்கும் பொது அதிகாரத்தை மைய மாநில அரசுகள் பெற்றுள்ளன. அரசியலமைப்பின் விதி 28 இன்படி இது உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பு விதிகளின்படி மாநிலங்கள் நிதி உதவி பெற்ற போதிலும் மைய அரசின் சொத்தின் மீது வரி விதிக்கும் உரிமை மாநிலங்களுக்கு வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தின் ஒப்புதலின் பேரில் மாநிலங்கள் வரி விதிப்பைச் செய்ய வேண்டும். ஆயினும், மைய அரசு நாடாளுமன்றத்தால் உருவாக்கப்படும் வரையறைக்குட்பட்டே செயல்பட வேண்டும். மாநிலங்கள் கடன் பெறுவது எனில் நேரடியாய் அண்டை நாடுகளிடமிருந்து பெறவியலாது. இந்தியாவிற்குக் கடன் பெற மாநிலச் செயற்குழுவிற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. தத்தம் வருவாய் சட்டவரையறைகளுக்குட்பட்டே பெறவேண்டும். மேலும், மாநில அரசுகள் மைய அரசிடமிருந்து கடன் பெறும் உரிமையைப் பெற்றுள்ளான. நிதி நெருக்கடி நிலை அறிவிப்புச் செய்யப்பட்டால் மைய அரசு மாநில வருவாய் இனங்களின்மீது கட்டளை பிறபிக்கும். இதுவரை இந்தியாவில் நிதி நெருக்கடி நிலை அறிவிக்கப்பெறவில்லை.

இந்தியக் கணக்குத் தணிக்கை அலுவலர் மைய அரசு, மாநில அரசு ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய்யும் உரிமை பெற்றுள்ளார். குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் அவ்வலுவலரின் ஆலோசனைக்கேற்ப மைய மாநில அரசுகளின் கணக்குகள் நிருவகிக்கப்பட வேண்டும். 1950க்குப் பிறகு ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் காரணமாய் மைய மாநில அரசுகளின் உறவில் புதிய பரிமாணங்கள் ஏற்படத் தொடங்கின. 1950, மார்ச்சுத் திங்களில் திட்டக்குழு அமைக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சியை எட்டவும் சமுதாயப்பணிகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடனும் திட்டக்குழு அமைக்கப்பட்டது. அத்திட்டக்குழு ஐந்தாண்டுத் திட்டங்களை விரிவுபடுத்தும்

பொருட்டு உருவாக்கப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் கூட்டாட்சிக் கூறுகளைக் குறைத்துவிட்டதாய்க் குறை கூறப்பட்டது. 1967இல் சூன் 17ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமது நிதிநிலை அறிக்கையை வெளியிடுகின்ற வேளையில் மைய மாநில உறவுகள் மேம்படுத்தப்பட வேண்டும் எனும் கருத்தையும், மைய அரசு வானளாவிய அதிகாரம் படித்திருப்பது மாநிலங்களின் நிலை குறித்துக் கவலையளிப்பதாய் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.1956இல் ஏற்பட்ட மாநிலங்கள் மறு சீரமைப்புப்பணி, 1967 பொதுத்தேர்தலுக்குப் பின் மாநிலங்களில் காங்கிரசு அல்லாத ஆட்சி, 1969இல் காங்கிரசில் ஏற்பட்ட பிளவு முதலியவை மைய மாநில உறவுகளில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியது.

## 11.4 காவிரிநீர்ச் சிக்கல்

1956இல் மொழிவழி மாநில அமைப்பு உருவான போது காவிரியின் துணை நதிகளைக்கொண்ட பகுதிகள் சென்னை மாநிலத்திலிருந்து பிரிக்கப்பெற்றுக் கருநாடகத்துடன் இணைக்கப்பட்டன. 1958 முதல் கருனாடக அரசு கபினி, ஹாரங்கி, ஸ்வர்ணாவதி, கேமாவதி, யாகச்சி முதலிய நீர்த்தேக்கங்களை அமைத்துக்கொண்டது. தமிழகம் தனக்குக் கிட்டும் சிறிதளவு நீரைத் தேக்க உடன்பாட்டின்படி உபரியைக் கருதி அமராவதி அணையைக் கட்டியதோடு, அத்தகவல்களை 1924 ஆம் ஆண்டில் தெரிவித்தது. ஆனால், கருநாடகம் தனது மாநிலத்தின் புதிய பாசனத்தின் திட்ட விவரங்களைத் தமிழகத்திற்குத் தர மறுத்துவிட்டது. தமிழகத்திற்குக் காவிரி நீர்வரத்துக் குறையவே தமிழக உழவர்கள் இடர்ப்பாட்டுக்குள்ளாயினர்.

தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்தும் பேச்சு வார்த்தை நடத்தியும் பலன் கிட்டவில்லை. 1970 இல் தமிழக அரசு நடுவர் மன்றம் அமைய மைய அரசிடம் கோரிக்கை வத்தது. நடுவர் மன்றம் அமைக்கப்பெறாமையால் 1971இல் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அவ்வழக்கில் கருநாடக அரசின் புதிய அணைக்கட்டுத் திட்டங்களை நிறுத்த வேண்டும் எனும் தமிழக அரசின் கோரிக்கையை உச்சநீதீமன்றம் ஏற்கவில்லை. பின்னர், இந்தியத் தலைமை அமைச்சர் இந்திராகாந்தியின் வேண்டுகோளின் பேரில், உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கைத் தமிழக அரசு திரும்பப்பெற்றது.

1972 இல் மைய அரசு தமிழ்நாடு, கேரளா, கருநாடம் ஆகியவற்றின்

அதிகாரிகளைக்கொண்ட உண்மையறியும் குழுவை ஏற்படுத்தியது. இக்குழு முறையாய்த் தகவல்களைத் திரட்டித் தன் அறிக்கையை 1973இல் அளித்தது. சிக்கல் தொடர்பாய் மேலும் ஆய்வு செய்யய மைய அரசின் பாசன அமைச்சரின் செயலர் சி.சி.பட்டேல் நியமன செய்யப்பட்டார். அவர் தமது அறிக்கையை அளித்தபின் மைய அரசு ஒரு நகல் ஒப்பந்தத்தைத் தயாரித்தது. இதனடிப்படையில் 1974இல் காவிரிப்பள்ளத்தாக்கு அதிகார அமைப்பு ஒன்றனை ஏற்படுத்தியது. ஆனால், இருமாநில அரசுகளும் அதனை ஏற்கவில்லை.

நீர்ப்பங்கீடு தொடர்பாய் 1975 இல் கருநாடக முதல்வர், தமிழக ஆளுநர், கேரளப் பாசன அமைச்சர், மைய அரசின் வேளாண் அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் இரு அரசுகளுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி தமிழகத்திற்கு 489 டி.எம்.சி தண்ணீர், கருநாடகாவிற்கு 177 டி.எம்.சி தண்ணீர் எனவும், கேரளாவிற்கு 5 டி.எம்.சி தண்ணீர் எனவும் பங்கீடு செய்துகொள்ள வேண்டும். மேலும், 15 ஆண்டுகளில் தமிழகம் 100 டி.எம்.சியையும் கருநாடகம் 25 டி.எம்.சி.யையும் மீதப்படுத்த வேண்டும் எனவும், அவ்வாறு மீதப்படுத்தப்பெற்ற நீரைத் தமிழகம் 4 டி.எம்.சி யையும் கருநாடகம் 87 டி.எம்.சி.யையும், கேரளா 34 டி.எம்.சி.யையும் பகிர்ந்துகொள்ள வேண்டும் எனவும் முடிவாகியது. ஆனால் 1977இல் இவ்வுடன்பாட்டை ஏற்கத் தமிழகம் மறுத்தது. 1980 இல் கருநாடகம் தன் பத்து அமிசத்திட்டத்தை முன் வைத்தது. இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தன. எனினும், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன.

காவிரிநீர்ப் பங்கீட்டுச்சிக்கல் மேலும் சிக்கலாகியதை உணர்ந்து தமிழக அரசு சிக்கலைத் தீர்க்கக் காவிரி மன்றத் தீர்ப்புக்கு விடும்படி கோரிக்கை வைத்தது. ஆயினும், மைய அரசு மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. எனவே, இப்பிரச்சனையை தமிழகம் உச்ச நீதி மன்றத்திற்குக் கொண்டுசென்றது.

உச்ச நீதிமன்றம் காவிரிநீர்ச் சிக்கலுக்குத் தீர்வு காணும் பொருட்டு நடுவர் மன்றம் அமைக்குமாறு மைய அரசுக்கு ஆணையிட்டது. அதன்படி மைய அரசு 1989இல் மும்பை உயர் நீதிமன்ற நீதிபதி சித்திதோ முகர்ஜியின் தலைமையில் நடுவர் மன்றம் அமைத்தது. நடுவர் மன்றம் 1991, சூனில் தன் இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது. தனது பாசனப்பரப்பை 11.2 ஏக்கருக்கு மேல் கருநாடகா உயர்த்தக்கூடாது; மேட்டூருக்கு ஆண்டுக்கு 205 டி.எம்.சி தண்ணிரை விடவேண்டும் என்று தீர்ப்பு அளித்தது. இறுதித்தீர்ப்பு வெளியாகும் வரையில் இத்தீர்ப்பு நடைமுறையில் இருக்கும். அத்துடன் இத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டது.

கர்நாடக அரசு நடுவர் மன்றத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாய் இடைக்கால ஆணையை அரசிதழில் வெளியிடக் கூடாது என எதிர்த்தது. இடைக்காலத் தீர்ப்புக்கு எதிராய் 1991, சூலையில் காவிரி நீர் நிலப்பாதுகாப்புச்சட்ட முன்வரவு என்பதனை வெளியிட்டது. மைய அரசு நடுவர் மன்றத் தீர்ப்பை நிலை நாட்டுவதற்குப் பதிலாய் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கேட்க முடிவு எடுத்தது. நடுவர் மன்றத் தீர்ப்பு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. காவிரி நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டின் உரிமையை நிலை நாட்டும் பொருட்டு வாழப்பாடி இராமமூர்த்தி தம் அமைச்சர் பதவியை விட்டு விலகினார்.

மைய அரசின் ஆலோசனைக்கேற்ப உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்பினை 1991 இல் வழங்கியது. அதன்படி கருநாடக அரசு பிறப்பித்த அவசரச்சட்டம் செல்லத்தக்கதன்று என்றாகியது. நடுவர் மன்றத்திற்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உண்டு என்பது உறுதியாயிற்று. நடுவர் மன்றத் தீர்ப்பை அரசு இதழில் பதிவு செய்ய மைய அரசு கடமைப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் கருத்துரையை மைய அரசு ஏற்றது. 1991, டிசம்பர் 12ஆம் நாளிட்ட அரசு இதழில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு பதிவு செய்யப்பெற்றது. ஆனால், இத்தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. கருநாடகத்தில் தமிழர்கள் தாக்குதலுக்கு ஆளாயினர். தமிழர் வீடுகளைக் கன்னட வெறியர்கள் சூறையாடினர்.

## 11.5 இன்றைய நிலை

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சனை முற்றுப்பெறாமலே உள்ளது. தமிழகம் உச்ச நீதி மன்றத்தை நாடிய போது, தலைமையமைச்சர் தலைமையிலான நதிநீர் ஆணையம் கூடி முடிவு எட்டும்வரை தினமும் குறிப்பிட்ட அளவு தண்ணீரைத் தமிழகத்திற்குத் திறந்துவிடவேண்டும் என உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுவிட்டது.

நீதிமன்ற ஆணையைக் கருநாடக அரசு செயல்படுத்தவில்லை. காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்டச் செய்தது. தலைமை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற ஆணையக்கூட்டத்தில் குறைந்த அளவு நீரை விடும்படி முடிவு செய்த போதும் அந்த அளவு நீரையுங்கூடத் திறந்துவிட முடியாது என்று கூறிவிட்டது. மைய அரசு என்று ஒன்று இருந்தும், உச்ச நீதிமன்றம் கட்டளையிட்டும் இவ்வாறான நிலை உள்ளது.

தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் கருநாடக அரசுக்கு எதிராய் நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்தது. வழக்கு விசாரணைக்கு வந்தபோது கருநாடக அரசு உச்ச நீதிமன்றம் கடுமையாய்க் கண்டித்தது.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாத அரசு பதவி விலகட்டும் என்று கூறக் கருநாடக முதல்வர் நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரினார். தண்ணீரைத் தமிழகத்திற்குத் திறந்துவிட உடன்பட்டதால் வழக்கு விசாரணை முற்றுப்பெறவில்லை. அவ்வப்போது மழை பெய்து, நீர்ப்பெருக்கு ஏற்படுவதால் பிரச்சனை தணிந்துள்ளது.

வெள்ளம் பெருக்கெடுக்கும் போது அதைத் தேக்க முடியாத கருநாடக அரசு, வெள்ளநீரைக் கணக்கில் காட்டுகிறது. இது போலவே கருநாடகம், ஆந்திரா ஆகியவற்றிற்கு இடையேயும் நீர்ப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அது அலமாட்டி நீர்த்தேக்கச் சிக்கல் ஆகும். இவ்வாறு மாநிலங்களில் நதிநீர்ப் பங்கீட்டுச்சிக்கல் இருந்து வருகிறது. கூட்டாட்சிக்கு வேட்டு வைக்கும் வகையில் உள்ள சிக்கல் இது. இவ்வாறான சிக்கல் எழும்போதெல்லாம் மாநிலங்களுக்கு இடையேயான சிக்கலுக்குத் தீர்வாய்ச் சொல்லப்படுவது நதிகளனைத்தையும் நாட்டுடைமையாக்கி மைய அரசின் கட்டுப்பாட்டில் விட வேண்டும் என்பதாகும். நதிகளையெல்லாம் இணைக்கவேண்டும் என்பது செயலளவில் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. மைய-மாநில சட்ட உறவுகள்
2. மைய பட்டியல்

## 11.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. அரசியலமைப்புதான் சட்ட உறவுகளுக்கான அடிப்படை மைய,மாநில அரசுகளின் சட்ட மியற்றம் உரிமைகள் 3 பட்டியலகளாய் உள்ளன.

- மைய பட்டியல்
- மாநில பட்டியல்
- பொது பட்டியல்

2. மையப் பட்டியலில் இடம்பெற்றுள்ள தலைப்புகளுக்கு சட்டமியற்றும் முழு உரிமையை அல்லது தனி உரிமையை நாடளுமன்றம் மட்டுமே கொண்டுள்ளது.

## 11.7 சுருக்கம்

"உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்",மையத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில தன்னாட்சி எனும் முழக்கங்கள் எழுந்துள்ளன. மையத்தில் மட்டுமல்லாமல், விடுதலைக்குப் பின் ஏறக்குறைய நூறுமுதல் தொண்ணூறு விழுக்காடு மாநிலங்கள் காங்கிரசு ஆளும் மாநிலங்களாய் விளங்கின. அதனால், இத்தகைய முழக்கங்கள், கோரிக்கைகள் எழவில்லை.

## 11.8 முக்கிய கருத்துப்படிமங்கள்

1950க்குப் பிறகு ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் காரணமாய் மைய மாநில அரசுகளின் உறவில் புதிய பரிமாணங்கள் ஏற்படத் தொடங்கின. 1950, மார்ச்சுத் திங்களில் திட்டக்குழு அமைக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சியை எட்டவும் சமுதாயப்பணிகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடனும் திட்டக்குழு அமைக்கப்பட்டது. அத்திட்டக்குழு ஐந்தாண்டுத் திட்டங்களை விரிவுபடுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டது.

## 11.9 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. மாநில பட்டியல்
2. மாநில சமூக நல வாரியம்
3. காவிரி நீர் சிக்கல்

**நெடுவினா**

1.மைய-மாநில பட்டியல் விளக்குக.

2.காவிரி நீர் சிக்கல் பற்றி விரிவான விடையளி

## 11.10 மேலும் படிக்க

1. Edgar Thurston - Castes and Tribes in South India
2. Baker, C.J – The Politics of South India
3. Yesudhasan.V.S. Isaac & -History of Tamil society and culture, Since Jaya Dhas.R 1336 A.D.,10 John Gilbert.G – Contemporary History India.
4. Venkatesan. G-History of modern Tamilnadu From 1600-2011 A.D.

*NOTES*

# அலகு-12 உலக தமிழ் மாநாடு

**அமைப்பு**

12.0 அறிமுகம்
12.1 உலக தமிழ் மாநாடுகள்
12.1.1 முதல் மாநாடு
12.1.2 இரண்டாம் மாநாடு
12.1.3 மூன்றாவது மாநாடு
12.1.4 நான்காவது மாநாடு
12.1.5 ஐந்தாவது மாநாடு
12.1.6 ஆறாவது மாநாடு
12.1.7 ஏழாவது,எட்டாவது மற்றும் ஒன்பதாவது மாநாடு
12.1.8 பத்தாவது மாநாடு
12.2 தமிழ் மொழியின் வளர்ச்சி
12.2.1 முன்னுரை
12.2.2 அரசின் மொழி வளர்ச்சிப் பணிகள்
12.2.3 தமிழ் ஆட்சி மொழிச் சட்டமும் - நடவடிக்கைகளும்
12.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
12.4 சுருக்கம்
12.5 முக்கிய கருத்துப்படிமங்கள
12.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
12.7 மேலும் படிக்க

## 12.0 அறிமுகம்

தமிழ் ஆர்வத்தை வெளிப்படுத்தவும், தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கவும் நடத்தப்படுவதுதான் உலகத் தமிழ் மாநாடு. தமிழ் இலக்கிய, இலக்கணத்தின் சிறப்புகள், பண்பாடு, தமிழ் மொழி வரலாறு, தொல்லியல் ஆய்வுகள், கலைகள், மொழியியல் பற்றி இம்மாநாட்டில் புதிய உண்மைகள் வெளியாகும் என்பதால் தமிழ் அறிஞர்களிடமும் மாணவர்களிடமும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் செம்மொழி மாநாடு, இதற்கு முன் நடந்த மாநாட்டின் தொடர்ச்சி அல்ல. தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட பின்னர் நடத்தப்படும் முதல் மாநாடு. உலகம் முழுவதும் உள்ள தமிழறிஞர்களை ஒன்றிணைத்து தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கும் கடின முயற்சியின் விளைவாக 1964ம் ஆண்டு, டில்லியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் துவக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநாடு நடத்த வேண்டும் என்றும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. முதல் உலகத் தமிழ்

மாநாடு 1966 ஏப்ரலில், மலேசியத் தலைநர் கோலாலம்பூரில் கோலாகலமாக நடந்தது. இந்த மாநாட்டுக்கு தனிநாயகம் அடிகளார் முன்னின்று ஏற்பாடு செய்தார். சர்வதேச தமிழ் அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## 12.1 உலக தமிழ் மாநாடுகள்

### 12.1.1 முதல் மாநாடு

தனிநாயக அடிகளார் மலேசிய அரசு தமிழ்ச் சமூகத்திற்கு அளித்தஆதரவின் துணையோடு பிரம்மாண்டமான முறையிலே முதல் 7 மாநாடு கோலாலம்பூரிலே 1966 ஏப்ரல் 16-23 தேதிகளில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் அன்று தமிழியல் ஆய்வில் பங்கெடுத்த பல்லின ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர்.

### 12.1.2 இரண்டாம் மாநாடு

எம். பக்தவத்சலம் முன்பு கோலாலம்பூரிலே விடுத்த அழைப்பினை 1968 ஏற்றுச் சென்னையிலே திமுக இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்த முன்வந்தது. அது 1968 ஆம் ஆண்டு சனவரி 3-10ஆம் நாட்களில் சென்னையிலே நடந்தது. அதேகாலத்திலே பூம்புகார் பொதுமக்கள் விழாவும் முக்கியத்துவம் பெற்றது

### 12.1.3 மூன்றாவது மாநாடு

பேராசிரியர் ஜீன் பிலியோசா பாரிசிலே மூன்றாவது அனைத்துலகத் 1970 தமிழாராய்ச்சி மாநாட்டினை 1970 இலே நடத்தினார். முன்னைய இரு மாநாடுகளுக்கும் பாரீஸ் மாநாட்டிற்கும் பெரும் வித்தியாசம். சலசலப்பின்றி வழமை போல் நடைபெறும் கருத்தரங்கு போன்று அது அமைந்திருந்தது. இம்மாநாடு 1970 சனவரி 15-18 காலப்பகுதியில் நடைபெற்றது.

### 12.1.4 நான்காவது மாநாடு,

1974ல் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் நடந்தது. இம்மாநாட்டுக்கும் தனிநாயகம் அடிகள்தான் ஏற்பாடுகளை செய்தார். யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆய்வு அமர்வுகளும், தமிழர் பண்பாட்டு பொருட்காட்சி சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி மண்டபடத்திலும் நடைபெற்றன. முதல் மூன்று மாநாடுகளைப் போல் இம்மாநாடு எளிதாக நடைபெறவில்லை. யாழ்ப்பாண நகர மேயர் ஆல்பிரட் துரையப்பா ஒரு தமிழராக இருந்தும், இந்த மாநாட்டு நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டார். யாழ்ப்பாணம் விழாக்கோலம் பூண்டது. தமிழ்ப் பகுதியிலிருந்து பொதுமக்கள் மாநாட்டைப் பார்க்க திரண்டு வந்தனர். அப்போது, பருத்தித்துறை வழியாக வந்தவர்கள் சிங்களர்களால் மறிக்கப்பட்டனர். அவர்கள் மண்டபம் வந்தடைந்த பின்னர், யாழ் வீரசிங்கம் மண்டபம் நிறைந்து வழிந்தது. காவல்துறையினர் சென்று வர பாதையில்லை என்றுகூறி, தடியடி கண்ணீர் புகை குண்டு ஆகியவற்றை வீசினர். இதனால் மக்கள் கலைந்து செல்லும்போது துப்பாக்கி சூடு நடத்தியதில் 9 பேர் பலியானார்கள்.

### 12.1.5 ஐந்தாவது மாநாடு,

1981ல் மதுரையில் நடந்தது. அப்போது முதல்வராக எம்.ஜி.ஆர்., இருந்தார். மதுரையில் உலகத் தமிழ் சங்கம் துவங்கவும், தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் துவங்கவும் அப்போது எம்.ஜி.ஆர்., முடிவு செய்தார். எம்.ஜி.ஆர்., நடத்திய ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு, மதுரையில், 1981ம் ஆண்டு ஜனவரி 4ம் தேதி தொடங்கியது. இந்த மாநாட்டை தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்., தலைமையில், கவர்னர் சாதிக் அலி தொடங்கி வைத்தார். இந்த மாநாடு யுனெஸ்கோ அமைப்புடன் இணைந்த சர்வதேச தமிழ் ஆராய்ச்சி அமைப்பின் கீழ் கொண்டாடப்பட்டது. இதற்கு தமிழக அரசும் நிதியுதவி வழங்கியது. தமிழக அரசு சார்பில் 10 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.மாநாட்டுக்காக மதுரை நகர் முழுவதும் அலங்கார வளைவுகளும், தமிழ் வளர்த்த அறிஞர்களின் சிலைகளும் நிறுவப்பட்டன. மதுரை நகரில் புகும் பகுதியிலேயே, கம்பீர நுழைவு வாயில் அமைக்கப்பட்டது. நகர் முழுவதும் அமைக்கப்பட்ட தோரண வளைவுகளுக்கு மட்டும் ஏழு லட்ச ரூபாய் செலவிடப்பட்டது. மதுரை மேலூர் சாலையில் அமைக்கப்பட்ட நக்கீரர் தோரண வாயிலை சத்தியவாணி முத்து திறந்து வைத்தார். மதுரை தமிழ்ச்சங்க தலைவர் டி.வி.எம்.பெரியசாமி இதற்கு தலைமை தாங்கினார். சேரன் நுழைவு வாயிலை நெடுஞ்செழியன் முன்னிலையில் கி.ஆ.பெ.விஸ்வநாதம் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு சர் முத்தையா செட்டியார் தலைமை வகித்தார். சோழன் நுழைவு வாயில் திறப்பு விழாவுக்கு தமிழக முன்னாள் முதல்வர் பக்தவச்சலம் தலைமை தாங்கினார். மாநகராட்சி கட்டடங்கள், விருந்தினர் மாளிகைகள் புதுப்பொலிவு பெற்றன. சில விருந்தினர் மாளிகைகள் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டன.

நகரில் நடமாடிய பிச்சைக்காரர்கள், பிச்சைக்காரர்கள் விடுதிக்கு அனுப்பப்பட்டனர். உலகம் முழுவதிலும் இருந்து வந்த 600க்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் மற்றும் இலக்கியவாதிகள் பங்கேற்றனர். இலங்கை, மலேசியா நாடுகளில் இருந்து மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், செனகல், இந்தோனேசியா, மொரிஷியஸ், மேற்கு ஜெர்மனி, ஸ்வீடன், செக்கோஸ்லோவாகியா, நெதர்லாந்து, நேபாளம், பின்லாந்து, பிஜி தீவுகளில் இருந்தும் மாநாட்டில் பங்கேற்க பிரதிநிதிகள் வந்தனர்.

வெளிநாடுகளில் இருந்து வந்த பிரதிநிதிகளை, தமிழக செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் மற்றும் முன்னாள் சென்னை ஐகோர்ட் நீதிபதி எஸ்.மகாராஜன் ஆகியோர் வரவேற்றனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ரயில்கள், பஸ்கள் மூலம் மக்கள் வந்து குவிந்தனர். இதற்காக 200 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. பல்வேறு இடங்களில் இருந்து மக்கள் பார்க்க வசதியாக 10 இடங்களில் ”டிவி“க்கள்

வைக்கப்பட்டன. இதில் 9 கோடி ரூபாய் மதுரை நகரில் நிரந்தர வசதிகளுக்காகவே செலவிடப்பட்டது. மதுரை திருமலை நாயக்கர் மகால் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. அங்கு திருமலை நாயக்கரின் வரலாற்றை விவரிக்கும் ஒளி-ஒலி காட்சி துவக்கிவைக்கப்பட்டது.சீர்காழி கோவிந்தராஜனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாநாடு துவங்கியது.

மாநாட்டை துவக்கி வைத்து பேசிய தமிழக கவர்னர் சாதிக் அலி தமிழ் புலவரின் ''யாதும் ஊரே, யாவரும் கேளீர்'' என்ற கூற்றின் அடிப்படையில் மாநாடு நடைபெறுவதாக குறிப்பிட்டார்.துவக்க விழாவில் தலைமை வகித்து பேசிய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்., மதுரையில் உலக தமிழ்ச்சங்கம் நிறுவப்படும் என அறிவித்தார். கோர்ட்டில் தமிழை வழக்கு மொழியாக கொண்டு வர தமிழக அரசு பாடுபடும் என குறிப்பிட்டார்.

மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய மத்திய விவசாய அமைச்சர் ஆர்.வி.சாமிநாதன் தான் தமிழன் என்ற முறையில் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதில் பெருமை அடைவதாக கூறினார். முன்னாள் முதல்வர் பக்தவச்சலம் தனது பேச்சின் போது உலகதத் தமிழ் மாநாடு நடைபெற காரணமாக இருந்த தனிநாயகம் அடிகளாருக்கு நன்றி தெரிவித்தார். மதுரை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதில் கேரள முதல்வர் நாயனார் கலந்து கொண்டார். பொதுமக்கள், அறிஞர்கள், கலைஞர்கள் பங்கெடுத்துக்கொள்ளும் வகையில், பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நாள்தோறும் மாநாட்டு திடலில் நடந்தது. இதற்கென பந்தயத்திடலில் முப்பதாயிரம் பேர் அமரக்கூடிய பெரிய பந்தல் அமைக்கப்பட்டது. தமிழக அரசு சார்பில் கவிதை போட்டிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமுக்கம் மைதானத்தில் நடந்த கண்காட்சியில், பண்டை தமிழர்களுடைய கலை, நாகரிகம், பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் பல்வகை காட்சிகள் அமைக்கப்பட்டன. தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரின் கட்டுரைகள் அடங்கிய சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. மாநாட்டின் போது தமிழ் புலவர்கள் 49 பேருக்கு தங்கப்பதக்கங்களை முதல்வர் எம்.ஜி.ஆர்., வழங்கினார்.

இறுதி நாளான ஜனவரி 10ம் தேதி பிரதமர் இந்திரா மாநாட்டில் உரையாற்றினார். ”உலக தமிழ் மாநாடு, வணக்கம்“ என தமிழில் பேச்சை துவங்கிய பிரதமர் இந்தி மொழி திணிக்கப்படாது என வாக்குறுதி அளித்தார். பிரமாண்ட அலங்கார வண்டிகளின் ஊர்வலத்தை பிரதமர் இந்திராவும், முதல்வர் எம்.ஜி.ஆரும் ஒரே மேடையில் அமர்ந்து பார்த்தனர். இந்த ஊர்வலத்தை காண வழிநெடுகிலும் 25 லட்சம் பேர் கூடியிருந்தனர். இந்த ஊர்வலத்தில் 5 யானைகளில் இசைக்கலைஞர்கள், பெண்கள், போலீஸ்

வாத்தியக்குழு, விவசாய காட்சி வாகனம், கொடி பிடித்த மாணவ, மாணவிகள், ஆசிரியைகள், மேளக்கலைஞர்கள், கரகாட்டக்காரர்கள், பொய்க்கால் குதிரை, தமிழ் வளர்த்த அயல்நாட்டு அறிஞர்கள், அவ்வையார், கண்ணகி, ஆண்டாள், கம்பர், தமிழன்னை வேடமிட்டவர்கள் கலந்து கொண்டனர்.விழா மேடைக்கு அருகே அமைக்கப்பட்ட தமிழன்னை சிலையை எம்.ஜி.ஆர்., திறந்து வைத்தார்.

**12.1.6 ஆறாவது மாநாடு**

மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் ஆறாவது உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றது. உலகில் தமிழர்கள் அதிக எண்ணிக்கை வசிக்கும் நாடுகளில் ஒன்றாக மலேசியா இருப்பதால் இங்கு ஆறாவது உலகத்தமிழ் மாநாடு நடத்தப்பட்டது. முதல் உலகத்தமிழ் மாநாடும் கோலாலம்பூரில் தான் நடைபெற்றது.1987ம் ஆண்டு நவ. 15ல் தொடங்கி ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டை மலேசிய பிரதமர் மகாகிர் முகமது தொடங்கி வைத்தார். இதில் 14 நாடுகளை சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள், மொழி வல்லுனர்கள் பங்கேற்றனர். இதில் மகாதிர் முகமது பேசியது: கடந்த கால நினைவுச்சின்னங்களை கண்டுபிடித்து, அடையாளம் காட்டுவதுடன் மட்டும் திருப்தி பட்டுவிடக்கூடாது. சமூகம்,மொழி, கலாசாரம், மதம், கலை போன்றவற்றில் பழங்கால சிறப்புக்களை புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும், வரலாற்று அறிஞர்களும் கண்டுபிடிக்கின்றனர். அவற்றை தற்போதைய காலத்துக்கு பொருத்தமானதாக மாற்றக்கூடியவர்களாகவும் அவர்கள் விளங்க வேண்டும்.

தமிழ் மொழிக்கு நீண்ட வரலாறு உண்டு. உலகின் மிகச்சிறந்த இனிமையான மொழி என நிபுணர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். புராதன காலம் முதல் இன்றுவரை பல வல்லுனர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்களால் தமிழ் மொழி வளர்க்கப்பட்டு இந்த பெயரை பெற்றுள்ளது.இப்போது தமிழ்மொழி, தமிழகத்தில் மட்டுமல்லாது, கிழக்கு மற்றும் தெற்கு ஆப்ரிக்கா, பர்மா, பிஜி, இந்தோனேசியா, இலங்கை, டிரினிடாட், மலேசியா நாடுகளிலும் பேசப்பட்டு வருகிறது. சிறப்பான இந்த மொழி மேலும் வளர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், மொரிஷியஸ், நெதர்லாந்து, பிலிப்பைன்ஸ், இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து தமிழ் அறிஞர்கள் கோலாலம்பூருக்கு வந்தனர்.இவர்களின் ஆராய்ச்சி கட்டுரைகள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. கருத்தரங்கு சிறப்புரை ஆகியவையும் நடந்தது. மாநாட்டை ஒட்டி தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர்களின் கலை, கலாசாரம் குறித்த கண்காட்சியும் துவக்கப்பட்டது.

**12.1.7 ஏழாவது,எட்டாவது மற்றும் ஒன்பதாவது மாநாடு**

ஆப்பிரிக்காவில் மொரீசியசில் 7-வது மாநாடு 1989 டிசம்பர் 1-8 இல்

நடைபெற்றது.

எட்டாவது மாநாடு

எட்டாவது மாநாடு தஞ்சாவூரில் 1995 சனவரி 1-5 இல் நடத்தப் பெற்றன.

ஒன்பதாவது மாநாடு

எட்டாவது மாநாடு இடம்பெற்று 14 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில் ஒன்பதாவது மாநாடு பெப்ரவரி 2010 இல் கோவையில் பிப்ரவரி 1 நடத்தப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி சென்னை தலைமைச் செயலகத்தில் 2009 செப்டம்பர் 17 ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் அறிவித்தார். பின்னர் உலகத் தமிழராய்ச்சி மாநாட்டை நடத்தப் போதிய கால அவகாசம் இல்லை என்று கூறி உலகத் தமிழாராய்ச்சி மன்றம் ஒப்புதல் தர மறுத்து விட்டது.

இதனால் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்று பெயர் மாற்றப்பட்ட ஒரு மாநாடு 2010 சூலையில் கோவையில் நடைபெற்றது. அதிகாரபூர்வமான 9-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2015 சனவரி 29 முதல் பிப்ரவரி 1 வரை மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது. கோலாலம்பூரில் உள்ள மலாயாப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை ஆகியவை கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. இம்மாநாட்டுக்கான கருப்பொருள் ‘‘உலகமயக் கலகேட்ட தமிழாய்வில் வளம் சேர்த்தல் என்பதாகும் .

### 12.1.8 பத்தாவது மாநாடு

இந்த மாநாடு 2019-ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்பே 2018 மாநாடு ஆம் ஆண்டே நடத்த தமிழக அரசு ஆலோசனை செய்து வருவதாகவும், அந்த மாநாட்டை மதுரையில் நடத்தவும் ஆலோசிப்பதாக கூறப்படுகிறது இந்த மாநாட்டிற்கு உலகம் முழுவதும் இருந்து தமிழ் அறிஞர்களையும் ஒருங்கிணைத்து அவர்களையும் வரவழைக்கலாம் என்பது தமிழக அரசு திட்டமாக இருக்கிறது.

## 12.2 தமிழ் மொழியின் வளர்ச்சி

### 12.2.1 முன்னுரை

அறுபதுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட மொழிக் கலவரங்கள் ஆட்சி மாற்றங்களுக்குக் காரணமாயின. அரசியலில் மொழிப் போராட்டங்களைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிய திராவிட இயக்கங்கள் அதனைச் சக்தி வாய்ந்த ஆயுதமாக எதிரணியின் மீது பயன்படுத்தியது. உலகில் மொழியைப் போராட்டக் கருவியாக்கி, அதன்மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படுத்திய நிகழ்வுகள் ஓரளவே உள்ளன. செக் குடியரசு, ஸ்பெயின், அல்ஜீரியா

போன்றவற்றைச் சான்று கூறலாம். இவ்வகைப் போராட்டங்கள் தனி நாடு என்ற தகுதியைப் பெற்றுத் தந்தன. இவ்வகைப் போராட்டங்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டபோது தனிநாடு என்ற கோரிக்கை வலுப்படாது மொழிவழி மாநிலம் என்ற கருத்தாக்கமே ஏற்பட்டது.

1937, 1948, 1952, 1965, 1986 ஆகிய ஆண்டுகளில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் வெறும் ஆட்சி மாற்றத்திற்கான கலகங்களாகவே அமைந்தன. ஆரம்பகாலங்களில் தனித்தமிழ் நாடு கோரிக்கை வலுப்பெற்றபோதும், பின்னாளில் இக்கோரிக்கை திராவிட இயக்கங்களால் கைவிடப்பட்டது. தமிழ் நாட்டில் ஏற்பட்ட மொழிப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மொழிவழி மாநிலங்கள் தங்களைக் கட்டமைத்துக் கொண்டன. ஆனால் இம்மாநிலங்களில், தமிழகத்தில் ஏற்பட்டது போன்ற மிகப்பெரிய மொழிப் போராட்டங்கள் ஏதும் ஏற்படவில்லை.

இருப்பினும் விடுதலைக்குப் பிறகு இம்மாநிலங்கள் மொழிவழிப் பிரிந்ததால் அம்மாநில மொழி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தன.. தமிழகத்திலிருந்து பிரிந்த மாநிலங்கள் ஒருவகையான வேகத்தோடும், ஆவலோடும் தங்களின் மாநில மொழிகளை வளர்க்கத் தலைப்பட்டன. இதனால் மொழிப் போராட்டங்களைச் செய்த தமிழகத்தைக் காட்டிலும், அம்மாநிலங்களின் மொழிகள் பெரும் வளர்ச்சி கண்டன. கல்வி, அரசு, சமூகத் தொடர்பு நிலைகள் எனப் பல்வேறு தளங்களிலும் அம்மாநில மொழிகள் வளர்ச்சி கண்டன. மேலும் மாநில
மொழியறியாத . மத்திய அரசு ஊழியர்கள், அம்மாநிலங்களில் பணி செய்ய நேர்கின்றபோது, அல்லது. வசிக்க நேரும்போது அம்மாநில மொழிகளைக் கட்டாயம் கற்றுக் கொண்டு, மாநில மொழியிலேயே பரிவர்த்தனைச் செய்ய வேண்டுமென மாநில அரசுகள் ஆணையிட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

இவ்வகை நடவடிக்கைகளை ஆரம்ப காலங்களில் தமிழகமும் செயல்படுத்தின. இருப்பினும் அதில் ஒரு உறுதிப்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. தமிழ் மொழி வளர்ச்சி விடுதலைக்குப் பிறகு அரசினாலும், தனிமனிதர்களாலும், அமைப்புகளாலும், முன்னெடுத்துச் செல்லப்பட்டது. தமிழ்மொழி வளர்ச்சி என்பது அகநிலையிலும் புறநிலையிலும் எவ்வெவ்வழிகளில் வளர்த்தெடுக்கப்பட்டது என்பதையும், அகநிலை புறநிலை வளர்ச்சி என்பது மொழியை எவ்வாறு கட்டமைக்கிறது என்பது குறித்தும் மொழி சமூகத்துடன் கொண்டுள்ள உறவுநிலை குறித்தும் இங்குப் பேசப்படுகிறது. அகநிலையில் மொழிவளர்ச்சி என்பது மொழியின் இலக்கிய வகைமைப் பெருக்கம், புதிய இலக்கிய உத்திகளின் உருவாக்கம், தொடர்ந்துபடைப்பு வெளிவருதல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. புறநிலை மொழிவளர்ச்சி என்பது அரசியல் அங்கிகாரம்பெறக் கல்வித் துறையிலும் நீதி

மன்றங்களிலும் தமிழ் அலுவல் மொழியாக அங்கீகரிக்கப்படுகிறது என்பதையும் இவ்வியல் பேசுகின்றது.

### 12.2.2 அரசின் மொழி வளர்ச்சிப் பணிகள்

விடுதலை அடைவதற்கு முன்பே தமிழ்மொழி பற்றிய விழிப்புணர்வு மக்களிடத்தில் தோன்றியுள்ளது. மேலை நாடுகளில் ஏற்பட்ட அறிவுசார் புரட்சிகள் ஆங்கிலேயர்களால் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டன. வசதிபடைத்தவர்கள் ஆங்கிலக் கல்வியை அறிந்தபோது அவற்றின் அகப் புறக் கட்டமைப்பு வளர்ச்சிகள் தமிழ் மொழியிலும் ஏற்பட வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. இதனால், ஆங்கிலக் கல்விக்கு இணையானதொரு தமிழை வளர்க்க வேண்டிய அல்லது ஆதரிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. விடுதலைக்குப் பிறகு அதிகாரங்களைக் கைப்பற்றிய அரசியல் கட்சிகள் மொழி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் தொடர்ந்த பாங்கினை இவ்வியல் ஆராய்கிறது.

### 12.2.3 தமிழ் ஆட்சி மொழிச் சட்டமும் - நடவடிக்கைகளும்

சென்னை மாகாணமாக இருந்தபோது தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய பகுதிகளைக் கொண்டு தமிழகம் விளங்கியது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், போன்றவை வட்டார மொழிகளாக இருந்தன (பெரியாண்டவன்.த., ஆட்சித்தமிழ், ப.33, 1993). சென்னை மாகாணத்தில் சட்டமன்றம் அமைக்கப்பட்ட பின்னர் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தத்தம் தாய்மொழியில் பேசுவதற்கு உரிமை கோரப்பட்டது. சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும் சட்ட முன்முடிவுகள் வட்டார மொழிகளில் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாக கொண்டு வரப்பட்ட தமிழக ஆட்சிமொழிச் சட்டம் பின்னாளில் பெயரளவில் நின்றது.

இக்குறைகளைப் போக்க 1957இல் தமிழக அரசு ஆட்சிமொழிக் குழுவை ஏற்படுத்தியது. இதற்குத் தலைவராக என்.வெங்கடேஸ்வர ஐயர் பொறுப்பேற்றார். இவருக்குப்பின்னர் சி.எ.இராமகிருஷ்ணன் தலைவரானர். வர்காலத்தில் இக்குழு “தமிழ் வளர்ச்சி இயக்கமாக’’ மாற்றம் பெற்று, 1965க்குப் பிறகு வி.கார்த்திகேயன் தலைமையில் செயல்படத் தொடங்கியது. இவ்வமைப்பு பல்வேறு அமைப்புகளைத் தன்னகத்தே கொண்டு தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டது. இவ்வமைப்பின் கீழ் தமிழ்ப் புத்தக வெளியீட்டுக் குழு இணைந்திருந்தது. 16.01.1958 முதல் சென்னை அரசு அலுவலகங்களில் தமிழிலேயே நிர்வாகம் நடைபெற வேண்டும் எனப் பரிந்துரை செய்தது.

26.01.1959ஆம் ஆண்டு தமிழை வரலாற்று ரீதியாக ஆராயவும் கல்லூரிகளில் பாடமொழியாக ஆக்கவும், அரசின் ஆட்சி மொழியாகச்

செயல்படுத்தவும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது.

இதில் தமிழகக் கல்வி அமைச்சர் தலைமையில் 38 உறுப்பினர்கள் செயல்பட்டார்கள். இதன் திட்டங்களாகக் கீழ் வருவன அறிவிக்கப்பட்டிருந்தன.

- துறைகளிடமிருந்து மக்களுக்குத் தமிழிலேயே கடிதங்களில் பதில் தருதல்.
- கல்லூரிகளின் பாடநூல்களைத் தமிழில் கொண்டு வருதல்.
- மலிவாக நூல்களைத் தமிழில் அச்சடித்து வெளியிடல்.
- மாவட்டம் மற்றும் அதற்குக் கீழ்ப்பட்ட அலுவலகங்களுக்கு எளிமையான மற்றும் குறிப்பிட்ட செய்திகளில் தமிழில் தொடர்பு கொள்ளுதல்.

இதன் முதற்படியாக 1961இல் பி.ஏ., வகுப்பிற்கு மட்டும் தமிழைப் பயிற்று மொழியாக்கியது. இது கோவை கல்லூாயில் முதன் முதலில் அமல்படுத்தப்பட்டது (முந்நூல்.ப.106). இதற்கு எதிராக, ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாக்கும்படி கல்கி பத்திரிக்கை தலையங்கம் எழுதியது (கல்கி 27.05.1961), 1962இல் தீவிர இந்தி எதிர்ப்புத் தொடர் போராட்டம் ஆரம்ப கட்டத்தில் நடைபெற்று வந்த சூழலில், தமிழ் மொழிக்கு எதிரானக் கருத்துக்களை அன்றைய காங்கிரஸ் தலைவர்கள் வெளியிடவில்லை. ஆனால் 1963இல் 3ஆம் வகுப்புகளில் ஆங்கிலத்தைப் பாடமொழியாக்கி அன்றைய தமிழக அரசின் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் ஆணையிட்டார். சில மாதங்கள் கழித்து, தமிழ்நாட்டின் தலைமைச் செயலகத்தில் ஒவ்வொரு துறையிலும் தமிழில் பயிற்சி பெற்றவர்கள் நால்வர் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும் அங்கு இருக்கும் தமிழரல்லாத தட்டச்சர்களுக்கும் தமிழில் பயிற்சி தர வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (தமிழக அரசின் ஆட்சிமொழி ஆணைகள் : ஆணை எண் : 1407 பொதுத் துறை 20.06.1962) மேலும் 01.06.1964லிருந்து தமிழில் வரைவு எழுதுபவர்களுக்குப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கவும் அரசாணை ஒன்றைத் தமிழக அரசு வெளியிட்டது. இதனால் 1965ல் டிசம்பர் 16ஆம் நாள் தமிழக ஆட்சிமொழி ஆணைக்குழு அமைக்கப்பட்டது (தமிழக அரசு ஆணை எண் 1785, 1965). 1966 நவம்பரில் தமிழக அரசுப் பல்கலைக்கழகங்களில் தமிழைப் பயிற்று மொழியாக்க ஆலோசனை செய்தது. இதற்கு இராஜாஜி போன்றவர்கள் அவசரம் காட்டக் கூடாது என்று அறிவுரை கூறினர்.



மேலும் 01.05.1966இல் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்த்திட்டம்

ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்காகத் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இத்திட்டத்தின்படி பொருளாதாரம், வரலாறு, சமுதாயவியல் ஆகிய துறைகளில் மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்டது. 1966 இறுதிவரை இக்கழகம் 116 புத்தகங்களை வெளியிட்டது (மலையமான், தமிழ் ஆட்சி மொழிச் சிக்கல்களும் தீர்வுகளும், ப.121, 1995). இவ்வாறு காங்கிரஸ் இயக்க ஆட்சி இந்தி எதிர்ப்புப் போராட்டங்களுக்கு முன்பும் பின்பும் தமிழ் வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1967ஆம் ஆண்டு தமிழகத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 137 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. 1967 மார்ச் 6இல் அண்ணாதுரை தலைமையில் அமைச்சரவை பொறுப்பேற்றவுடன் ஏப்ரல் 14ஆம் தேதி சென்னை மாகாணத்தைத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யும் அரசாணையை வெளியிட்டார்.மூ 1967இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், கலந்து கொண்ட அண்ணாதுரை தமிழ் அறிஞர்களின் வேண்டுகோளின்படி தமிழ் ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் எல்லாருடைய ஒத்துழைப்பும் தேவை எனக் கேட்டுக்கொண்டார்.

இதன்படி ஆட்சி மொழியாகத் தமிழைப் பயன்படுத்துவது பற்றிய அரசாணை தமிழில் 11.09.67ல் முதன்முறையாக வெளியிடப்பட்டது. அதன்படி செயலகப் பொதுத் துறையில் எல்லா அலுவல்களும் இனி தமிழிலேயே நடைபெற வேண்டுமென அறிவித்தது (ஆணை எண்.1261-66-1 பொதுத்துறை 30.04.1966). மேலும் தமிழில் போதிய அறிவு பெறாத தலைமைச் செயலக ஊழியர்களுக்குப் பயிற்சி நடத்தவும், அதற்கு கீ. இராமலிங்கனாரை நியமிக்கவும் ஆணை வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், பல்வேறு துறைகளின் தலைவர்களோடு தமிழிலேயே கடிதப்போக்குவரத்து நடத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. மேலும் கைவிடப்பட்ட தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு 1967ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது (அரசு ஆணை எண் 2316 பொதுத்துறை - 1969).

அண்ணாதுரைக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற மு.கருணாநிதி தமிழ் வளர்ச்சிக்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1970இல் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டது தன்வழி அறிவார்ந்த தமிழ் ஆய்வுகளுக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 1971இல் அரசின் செயல்துறைகள் தமிழ் மொழியினைப் பயன்படுத்தி கடிதப் போக்குவரத்து நடத்தப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. இது மூவாண்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். சார்புநிலை அலுவலகங்கள், இணை

அலுவலகங்கள் மேல்நிலை அலுவலகங்கள், செயலகத் துறைகள் ஆகியவை நீதிமன்றத்தோடு தமிழிலேயே தொடர்புகொள்ள வேண்டும் என அரசு உத்தரவிட்டது (கல்வித்துறைக் கழகம் எண்.35603.∴.த.∴.72 04.07.1973). தமிழ்நாட்டு மின்வாரியம், வீட்டுவசதி வாரியம் போன்ற தன்னாட்சி நிறுவனங்களும் தமிழைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற உத்தரவையும் தமிழக அரசு 1973இல் பிறப்பித்தது. (அரசாணை - கல்வித்துறைச் செயலர் - எண்.9397.∴.த.∴.72-5.∴. 19.11.1973).

1974 இல் பாவாணரைச் செந்தமிழ் சொற் பிறப்பியல் துறைக்கு இயக்குநராகத் தமிழக அரசு நியமித்தது (திருமாறன்.கு., தனித்தமிழ் இயக்கம், ப.196, 1992). அண்ணாதுரை முதல்வராக இருந்தபோது தமிழில் நீதிமன்றத் தீர்ப்பு எழுதுவோர்க்குப் பரிசு வழங்குவதென அறிவித்தார். 1969 மார்ச் 22இல் மு.கருணாநிதி சட்டச் சொல் அகராதியை வெளியிட்டு நீதிபதிகளிடம் அதனைப் பின்பற்றுமாறு வலியுறுத்தினார். அதுவே பின்பு 13.04.1975இல் தமிழ்நாடு அரசின் ஆணையாக வெளிவந்தது.

இதற்கு வழக்கறிஞர் மன்றத்திலிருந்த இராமநாத ஐயங்கார் என்பவர் எதிர்ப்புத் தெரிவிக்க அரசு அதனை ஓராண்டிற்குத் தள்ளிப் போட வேண்டியதாகியது. இவ்வறிவிப்பு பின்னர் 1976ல் நடைமுறைக்கு வந்தது. மேலும் நீதி மன்றச் சொற்களின் பயன்பாடு குறித்தும் அரசு ஒரு குழுவினை அமைத்தது. தமிழ்நாடு புத்தகக்குழு என அழைக்கப்பெற்ற இக்குழு நீதிமன்றச் சொற்களைத் தமிழ்ப்படுத்தும் பணியில் ஈடுபட்டது. 1978ல் இராமநாதபுர மாவட்ட முன்சீப் ஒருவர் உரிமை வழக்கு ஒன்றிற்காகத் தீர்ப்பைத் தமிழில் வழங்கினார். இதனை ஒருசிலர் ஆட்சேபித்ததால் இத்தீர்ப்பு செல்லாது என உயர்நீதி மன்ற நீதிபதி அதனை ரத்துசெய்தார். இதற்குக் காரணம் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றிய பின்பும் தமிழகச் சார்புநிலை நீதிமன்றங்களில் தமிழில் ஆட்சி மொழி என்ற அறிவிப்பு இல்லை என்பதுதான்.

இந்நிலையில் தமிழ்நாடு புத்தகக்குழு சட்டச் சொற்களை மொழிபெயர்ப்பு செய்யும் பணியில் ஈடுபட்டது. அதன்படி, 1979ல் 13 குறுஞ்சட்டங்களை மொழிபெயர்த்ததோடு சட்டச் சொற்களஞ்சியத்தை வெளியிட்டது (மலையமான், தமிழ் ஆட்சி மொழிச் சிக்கல்களும் தீர்வுகளும், ப.131, 1995). மேலும், தமிழார்வலர்களின் வேண்டுகோளின்படி 1980லிருந்து தீர்ப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து ஒரு இதழாக அரசு வெளியிட்டு வருகிறது. இந்நிலையில் தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தமிழ்நாட்டின் அனைத்துச் சார்புநிலை

நீதிமன்றங்களிலும் இனி தமிழில் தீர்ப்பு வெளிவர வேண்டியதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற முழக்கம் தமிழ் ஆர்வலர்களிடம் ஒலிக்கத் தொடங்கின. 1981இல் மூவாண்டு முனைப்புத் திட்டம் உருவானது இதன்மூலம் தமிழ் நூல்கள், கலைச் சொல்லாக்கம், அலுவலர்க்கு ஊக்கத் திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டன.

அரசு நீதிமன்றத்தின் தீர்ப்பு மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் தமிழ்மொழி செயல்பட 18.01.1982இல் அரசாணையொன்றை வெளியிட்டது (ஆணை எண்.9 பொது - தமிழ் வளர்ச்சித்துறை, 1.2.1982). இதன்மூலம் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துச் சார்புநிலை நீதிமன்றங்களிலும் தமிழ் ஆட்சி மொழியாகும் நிலை உருவானது.

1980க்குப் பிறகு தமிழ் வளர்ச்சித்துறை தமிழ் மொழி அனைத்துத் துறைகளிலும் முழு வேகத்துடன் செயல்பட முடுக்கிவிடப்பட்டது எனலாம். இதுபோலவே"அகரமுதலித்திட்டம்" தமிழ் வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு திட்டமாகும். அப்போதைய அ.இ.அ.தி.மு.க அரசு தமிழ் - தமிழ் அகராதியை வெளியிட மு.சண்முகம்பிள்ளையைத் தொகுப்பு ஆசிரியராகக் கொண்டும் அ.ச.ஞானசம்பந்தன், அ.மு.பரமசிவானந்தம் ஆகியோரை மேல் ஆய்வாளர்களாகக் கொண்டும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலம் 1985இல் முயன்றது. அதுபோலவே பல்வேறு தமிழ் ஆர்வலர்களால் வற்புறுத்தப்பட்டு தமிழ் சுருக்கெழுத்துப் புத்தகம் தயாரிக்கப்பட்டது. 1919ஆம் ஆண்டு தமிழ் சுருக்கெழுத்திற்கு வித்திட்டவர் எம். சீனிவாசராவ் என்பவராவார். பின்னர் ஆனந்த நாராயணன் என்பவர் அதனை நூலாக வெளியிட்டார்.

அதனை அரசு வாங்கி 1988இல் மூன்றாவது பதிப்பாக அச்சடித்து வெளியிட்டது (தமிழ்க்குடிமகன் , தமிழ் அச்சகம் புரிந்து பணிகள், 1.30, 1999). இந்நூல் 5000 படிகள் அச்சடிக்கப்பட்டு 2200 படிகள் விற்கப்பட்டதாகத் தெரிகிறது. அதுபோலவே 1985இல் உருவாக்கப்பட்ட தமிழ் - தமிழ் அகராதித் தொகுப்பும் அதிகம் விற்கப்படவில்லை என்பதை அரசுக் குறிப்பொன்றின் மூலம் அறிய முடிகிறது (முந்நூல்.ப. 30). இவைபோன்ற தமிழ்வளர்ச்சி நடவடிக்கைகளை 1989வரை காணமுடிகிறது.

1989இல் மீண்டும் ஆட்சிக்கு வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1985இல் 1ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் பாடமொழி ஆகும் என ஆணை பிறப்பித்திருந்த முந்தைய அரசின் அறிவிப்பை ரத்து செய்து 1963இல் இருந்த

தமிழ்வழிக்கல்வியே தொடரும் என உத்தரவிட்டது (இராஜேந்திர சோழன், தமிழே பயிற்று மொழி, நீதிமொழி, நிர்வாக மொழி, ப.29, 1992). மேலும் 30.10.1986இல் அப்போதைய அரசுத் தலைமைச் செயலகத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்கள், அரசுக் கழகங்கள் கூட்டுறவு இணையங்கள் போன்ற அனைத்து நிறுவனங்களிலும் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற ஆணையொன்றைப் பிறப்பித்தது (சுதர்சன் மற்றும் (பதிப்பு), தமிழ் ஆட்சிமொழி க.தொ., தமிழ் ஆட்சி மொழி செயலாக்கம் ஓர் இனிய கனவு இ.திருவள்ளுவன், ப.83, 1997r. அதனை 1989இல் வந்த புதிய அரசு அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்தது,

அதன்படி 21.07.1989இல் எல்லா நிலைகளிலும் தமிழ்மொழி பயிற்சிமொழியாக வேண்டுமென்ற அறிவிப்பை வெளியிட்டது. இவ்வறிவிப்பு வரும் சூழலில் தான் 13.01.1989இல் மத்திய அரசமைத்த "டாக்டர் ராதாகிருஷ்ணன்" மற்றும் டாக்டர் கோதாரி'' கல்விக்குழுவும் அந்தந்த மாநிலங்களில் உள்ள வட்டார மொழிகள் பயிற்சி மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று அப்போதைய ஜனதா அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தது (திருமலை. நா., தமிழ் முழக்கம், ப.21, 1999) இதனை அடிப்படையாகக் கொண்ட திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த முனைந்தது. மேலும் பல ஆண்டுகளாகச் செயல்படாமல் இருந்த சட்ட ஆட்சி மொழி ஆணையம் இவ்வரசினால் மீண்டும் செயல்படத் தொடங்கியது.

இது மா.சண்முக சுப்ரமணியத்தைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டது இதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ் - ஆங்கிலம் என்ற இருமொழிப் பதிப்பாகச் செய்யத் தலைப்பட்டது. ஆனால் 1991இல் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பின்பு ஏற்பட்ட புதிய அரசினால் சட்ட ஆட்சிமொழி ஆணையம் ஒரு சிறகமாகக் கருதப்பட்டு சட்ட ஆட்சிமொழிச் சிறகம''என்ற பெயர் மாற்றத்துடன் சட்டத் துறையினுள் இணைக்கப்பட்டது (சுதர்சன் (பதிப்), தமிழ் ஆட்சிமொழி, க.தொ., இந்திய அரசமைப்பின் தமிழாக்கம், ப.201, 1997

புதிய அரசு கொண்டு வரும் திட்டங்கள் எல்லாம் தமிழுக்கு ஆதரவாக இருந்தபோதும் சிலசமயம் எழுந்த எதிர்ப்புகளால் அத்திட்டங்கள் கைவிடப்பட்டதும் உண்டு. இதனால் அரசின் திட்டங்களில் தொய்வு ஏற்பட்டன. பல்கலைக் கழகத்தில் மருத்துவத் துறைகளில் தமிழ் ஆட்சிமொழியாவது பற்றிய கருத்துக்களை அன்றைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அரசின் ஆணையை மேற்கோள் காட்டி விளக்கியபோது துக்ளக் பத்திரிக்கை அதற்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டது (துக்ளக். டாக்டர்களே

உஷார், 10.01.1993) அதுபோலவே பொறியியல் கல்லூரிகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்றுமொழியாவதை ஆனந்தவிகடன் போன்ற சில பத்திரிக்கைகள் விமர்சித்தன (15.01.1993) எனவே இவ்வெதிர்ப்பைக் கண்டு அன்றைய ஆட்சியாளர்கள் பின்வாங்கினர்.

1996இல் தமிழ் வளர்ச்சி தொடர்பாக முந்தைய அரசு கொண்டு வந்த ஆணைகளை அதன்பின் வந்த அரசு ஓரளவு நிறைவேற்ற முயன்றதெனலாம். 1996ஆம் ஆண்டில் அன்றைய அரசு தமிழ் வளர்ச்சித்துறை என்ற புதிய துறையை உருவாக்கி அதற்கு மு.தமிழ்க்குடிமகன் என்பவரை அமைச்சராக்கியது. அப்போது அவர் பொறியியல் கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழியாகும் எனத் தெரிவித்தார். அவ்வறிவிப்பை துக்ளக் பத்திரிக்கை அயாய அறிவிப்பு “ என விமர்சித்தது. (துக்ளக் - அபாய அறிவிப்பு 03.10.1996)

1991இல் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக அரசு மொழி மாற்றம் குறித்து பேசும் தமிழ் வளர்ச்சி மன்றத்தைத் திருத்தி அமைத்திருந்தது வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும், தமிழைப் பயில்வோர்க்கு உறுதுணைபுரியும் வகையிலும் மன்றச் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்ற நோக்கில் தேவைப்பட்டதால் திருத்தி அமைக்கப்படுகிறது என்றும், இதுவரை மேற்கொள்ளப்பெற்ற தமிழ் எழுத்துச் சீரமைப்பினைவிடக் கூடுதலாக வேண்டப்படும் சீரமைப்பு குறித்தும் ஆராய்ந்து பரிந்துரை அளிக்க வேண்டும் என்பதற்காகவும் திருத்தத்தை மேற்கொண்டதாகக் கூறியது (முந்நூல். ப.39). அதன்படி 09.12.1995இல் தமிழ் வளர்ச்சி மன்றத்தின் கூட்டம் நடைபெற்று எழுத்துச் சீரமைப்பு தேவை என்ற தீர்மானத்தை இயற்றியது.

1996 ஆம் ஆண்டு மீண்டும் பொறுப்பேற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு , மார்ச் மாதம் வா. செ. குழந்தைசாமி தலைமையில் தமிழ் எழுத்துச் சீரமைப்புக் குழுவினை அமைத்தது. ஏற்கனவே 1978இல் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி எழுத்துச் சீர்திருத்தச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டிருந்தது. அதனையே சிங்கப்பூர் அரசும் 1983இல் ஏற்றுக் கொண்டு செயல்படுத்த முன்வந்தது. மேலும், 1984 முதல் தமிழக அரசு நவீன முறையில் எழுத்துக்களைக் குறைத்தும், கணிப்பொறிக்கு ஏற்றவகையில் எழுத்துச் சீர்திருத்தத்தைச் செய்தும், தமிழ் மொழி திருத்தி அமைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது. அதன்படி உருவான மொழி அமைப்பு முறையைத் தமிழ் வழங்கும் நாடுகளுக்குக் கொடுக்க முன்வந்தது என்பதையும் அரசின் செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

1996இல் தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறை உருவாக்கப்பட்ட பின்பு

அவ்வமைச்சகத்தின் கீழ் 1. அருங்காட்சியகம் 2. தமிழ்ப் பல்கலைக்கழகம் 3. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 4. தமிழ்வளர்ச்சி இயக்கம் 5. தொல்பொருள் ஆய்வுத்துறை 6. கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் 7. கலை பண்பாட்டு இயக்கம் (கலைத்தொழில் கல்லூரிகள் - 2, இயல் இசைக் கல்லூரிகள் - 3, சிற்பக்கல்லூரி - 1, சவகர் சிறுவர் இல்லம் -3, இயல், இசை நாடகமன்றம், விய நுண்கலைக் குழு) போன்ற எட்டுத் திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டன.

ஆட்சிமுடியும் தருவாயில் இருந்த அன்றைய தமிழக அரசு பிப்ரவரி மாதம் இரண்டாயிரத்திலிருந்து தமிழ்நாட்டில் இனி , தமிழ் கட்டாயப் பயிற்றுமொழி என்ற அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அவ்வறிவிப்பினைத் தமிழ் நாட்டின் சில பத்திரிக்கைகளும், தனியார் பள்ளிகளும் எதிர்த்தன. இந்த அறிவிப்பிற்கு எதிராகத் தமிழ் நாட்டின் தினசரிகளில் தலைப்புச் செய்திகள் பல தொடர்ந்து இடம் பெற்றன. அன்றையத் தமிழக அரசின் அவ்வறிவிப்பு தமிழ் ஆர்வலர்களிடையேயும் அறிஞர்களிடையேயும் வரவேற்பு பெற்றது எனலாம். திராவிடக் கட்சிகளில் ஒன்றான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இவ்வறிவிப்பை எதிர்த்தது அக்கட்சி தமிழ்வழிக் கல்வியைஅரசியலாக எதிர்த்தது. இச்சூழல் மொழி அரசியலிலிருந்து கட்சி மாறியிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது

தமிழ்வழிக் கல்வி வந்தால் இந்தி தமிழ்நாட்டில் புகுந்துவிடும், எனவே ஆங்கில வழிக் கல்வியே இருக்க வேண்டும் என அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான ஜெயலலிதா கூறியிருப்பதைக் காணும்போது, தமிழ் மொழி என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டு அரசியல் காரணங்கள் முன்னிற்பதை அறியலாம் தமிழ் பயிற்று மொழியாவதால் ஆங்கிலப் பள்ளிகளை நடத்தும் நிர்வாகங்கள் பாழ்படும் என்பதால் அரசுடன் பேச்சு நடத்தித் தீர்வுகாண வேண்டும் என்ற சமரசப் போக்கில் கருத்துக்களைத் தெரிவித்த "தமிழ்நாடு ஆங்கிலப் பள்ளிகளின் சங்கம்'' எதிர்க்கட்சித் தலைவரின் சட்டமன்ற உரையைத் தொடர்ந்து தமிழ்வழிக் கல்வியை எதிர்த்துத் தொடர் போராட்டங்களைத் தமிழ் நாடு முழுவதும் நடத்துவது எனத் தீர்மானம் நிறைவேற்றினா.

இதனால் 2004ஆம் ஆண்டு வரை தமிழ் பயிற்றுமொழி நடவடிக்கைகளில் தமிழக அரசு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதையும் ஏற்படுத்தவில்லை 2000ஆம் ஆண்டு வரை அன்றைய தமிழக அரசு கொண்டுவந்த பயிற்றுமொழி அரசாணையை எதிர்த்து தமிழ்நாடு மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தன

அவ்வழக்கு நிலுவையில் இருந்தபோதும் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

பின்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த போது 2003-2004ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரையில் 2ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்புவரை அறிவியல் தமிழ் அறிமுகப்படுத்தப்படும் என அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது.

கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்றப் பாராளுமன்றத் தேர்தலுக்கான அறிக்கையை எல்லா அரசியல் கட்சிகளும் வெளியிட்டன. இவை அனைத்திலும் தமிழ் மொழி வளர்ச்சித் திட்டங்கள் பல கூறப்பட்டிருந்தன. பாராளுமன்றத் தேர்தலில் முதன் முறையாகத் தமிழகம் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வென்றது. அதன் விளைவாகத் தமிழ் செம்மொழி“ என்ற அறிவிப்பு ஐக்கிய முன்னணி அரசின் குறைந்தபட்ட செயல்திட்டத்தில் இடம் பெற்றது.

ஒருசில மாதங்கள் கழித்து மனிதவள மேம்பாட்டுத்துறையின் சார்பாக, செம்மொழி என்ற தகுதியை தமிழுக்கு வழங்கி அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டது. மேலும் தமிழ்நாடு அரசின் சார்பில் அதனை அங்கீகாரம் செய்து செம்மொழித்திட்டத்தின் கீழ் தமிழில் சிறப்பாக ஆய்வுகள் நடைபெறவும் தமிழை மேம்படுத்தவும் அத்துடன் தமிழ்மொழியைப் பரப்பவும் தமிழக அரசு அறிவிப்பு ஒன்றினை வெளியிடத் தீர்மானித்தது. திராவிட இயக்க வரலாறுகள், தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ்ச் சமூக, அரசியல், பொருளாதாரம் ஆகியன பற்றி ஆராய்ந்திட ஆய்வு இருக்கைகள் உருவாக்கிய அரசு கருதியது.

இவ்வாறு சென்னை மாகாணமாக இருந்த தமிழ்நாடு விடுதலைக்கு முன்னர் செய்த தமிழ் வளர்ச்சித் திட்டங்களால் சரியான இலக்கை அடைய முடியவில்லை என்றாலும், விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் தமிழ்மொழி வளர்ச்சியில் புறவயக் கூறுகளில் வளர்ச்சிக்கான நிலைகளில் மேம்படுத்த திராவிட இயக்க அரசுகள் பல்வேறு திட்டங்களை அறிவித்தன. ஆயினும் அரசியல் மற்றும் தனிப்பட்ட காரணங்களால் எதிர்ப்புகள் அவ்வப்போது எழுந்ததால் முழுமையான அளவில் வெற்றிபெற முடியாத சூழல் தோன்றியதைச் சிற்சில சமயங்களில் காணமுடிகிறது.

## 12.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. தனிநாயக அடிகளார் மலேசிய அரசு தமிழ்ச் சமூகத்திற்கு அளித்தஆதரவின் துணையோடு பிரம்மாண்டமான முறையிலே முதல் 7 மாநாடு கோலாலம்பூரிலே 1966 ஏப்ரல் 16-23 தேதிகளில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் அன்று தமிழியல் ஆய்வில் பங்கெடுத்த பல்லின ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர்.

2. எம். பக்தவத்சலம் முன்பு கோலாலம்பூரிலே விடுத்த அழைப்பினை 1968 ஏற்றுச் சென்னையிலே திமுக இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்த முன்வந்தது. அது 1968 ஆம் ஆண்டு சனவரி 3-10ஆம் நாட்களில் சென்னையிலே நடந்தது. அதேகாலத்திலே பூம்புகார் பொதுமக்கள் விழாவும் முக்கியத்துவம் பெற்றது

3. பேராசிரியர் ஜீன் பிலியோசா பாரிசிலே மூன்றாவது அனைத்துலகத் 1970 தமிழாராய்ச்சி மாநாட்டினை 1970 இலே நடத்தினார். முன்னைய இரு மாநாடுகளுக்கும் பாரீஸ் மாநாட்டிற்கும் பெரும் வித்தியாசம். சலசலப்பின்றி வழமை போல் நடைபெறும் கருத்தரங்கு போன்று அது அமைந்திருந்தது. இம்மாநாடு 1970 சனவரி 15-18 காலப்பகுதியில் நடைபெற்றது.

**உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக**

1. முதல் மாநாடு
2. இரண்டாம் மாநாடு
3. மூன்றாம் மாநாடு

## 12.4 சுருக்கம்

சென்னை மாகாணமாக இருந்த தமிழ்நாடு விடுதலைக்கு முன்னர் செய்த தமிழ் வளர்ச்சித் திட்டங்களால் சரியான இலக்கை அடைய முடியவில்லை என்றாலும், விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் தமிழ்மொழி வளர்ச்சியில் புறவயக் கூறுகளில் வளர்ச்சிக்கான நிலைகளில் மேம்படுத்த திராவிட இயக்க அரசுகள் பல்வேறு திட்டங்களை அறிவித்தன. ஆயினும் அரசியல் மற்றும் தனிப்பட்ட காரணங்களால் எதிர்ப்புகள் அவ்வப்போது எழுந்ததால் முழுமையான அளவில் வெற்றிபெற முடியாத சூழல் தோன்றியதைச் சிற்சில சமயங்களில் காணமுடிகிறது.

## 12.5 முக்கிய கருத்துப்படிமங்கள்

1996இல் தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறை உருவாக்கப்பட்ட பின்பு அவ்வமைச்சகத்தின் கீழ் 1. அருங்காட்சியகம் 2. தமிழ்ப் பல்கலைக்கழகம் 3. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 4. தமிழ்வளர்ச்சி இயக்கம் 5. தொல்பொருள் ஆய்வுத்துறை 6. கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் 7. கலை பண்பாட்டு இயக்கம் (கலைத்தொழில் கல்லூரிகள் - 2, இயல் இசைக் கல்லூரிகள் - 3, சிற்பக்கல்லூரி - 1, சவகர் சிறுவர் இல்லம் -3, இயல், இசை நாடகமன்றம், விய நுண்கலைக் குழு) போன்ற எட்டுத் திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டன.

## 12.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. அரசின் மொழி வளர்ச்சிப் பணிகள்
2. நான்காவது உலகத் தமிழ்மாநாடு
3. பத்தாவது உலகத் தமிழ்மாநாடு

**நெடுவினா**

1. உலக தமிழ் மாநாடு
2. தமிழ் மொழியின் வளர்ச்சி

## 12.7 மேலும் படிக்க

1. Venkatesan. G-History of modern Tamilnadu From 1600-2011 A.D.
2. Natarajan.C- Social History of Modern Tamilnadu
3. Subramanian.N-Hhistory of Tamil Nadu 1336 -1984 A.D
4. Devanesan.A -History of Tamil Nadu upto1995 A.D

# அலகு-13 ஐந்தாண்டு திட்டங்கள்

**அமைப்பு**

13.0அறிமுகம்
13.1 ஐந்தாண்டுத் திட்டங்கள்
13.1.1 முதல் ஐந்தாண்டுத் திட்டம்
13.1.2 இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்
13.1.3 மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
13.1.4 நான்காவது ஐந்தாண்டு திட்டம்
13.1.5 ஐந்தாது ஐந்தாண்டு திட்டம்
13.1.6 ஆறாவது ஐந்தாண்டு திட்டம்
13.1.7 எழாவது ஐந்தாண்டு திட்டம்
13.1.8 எட்டாவது ஐந்தாண்டு திட்டம்
13.1.9 ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம்
13.1.10 பத்தாவது ஐந்தாண்டு திட்டம்
13.1.11 பதினொறாவது ஐந்தாண்டு திட்டம்
13.1.12 பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டம்
13.2 தமிழ்நாடு-நீர்ப்பாசனம்-விவசாயம்-தொழில்துறை வளர்ச்சி
13.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
13.4 சுருக்கம்
13.5 முக்கிய கருத்துப்படிமங்களை
13.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்
13.7 மேலும் படிக்க

## 13.0 அறிமுகம்

இந்தியா விடுதலை அடைந்தவுடன் நெருக்கடிக்கு மேல் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இனகலவரங்கள் அடக்கப்பட்டன. அகதிகள் பிரச்சனை தீர்க்கப்பட்டது. நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஏற்படுத்துவதற்கான அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து நேரு அரசாங்கம் அதன் கவனத்தைப் பொருளாதார வளர்ச்சி மீது திருப்பியது. புதிதாகப் பெற்ற சுதந்திரம் நிலைக்க வேண்டுமாயின் வளத்தை நோக்கி முன்னேறுவதை மக்கள் உணர வேண்டும். இல்லாவிடில் இந்தியா எந்த இலட்சியங்களுக்காகப் போராடியதோ அவை நீர்க்குமிழிகளாக மறைந்துவிடும். அதுமட்டுமல்ல சோவியத் யூனியனிலும், சீனாவிலும், கிழக்காசிய நாடுகளிலும் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியதன் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டியது. எனவே, நேரு அரசானம் இந்தியாவின் பொருளாதார உணர்வு

தேவைகளை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நிறைவேற்ற உறுதி பூண்டது.

## 13.1 ஐந்தாண்டுத் திட்டங்கள்

### 13.1.1 முதல் ஐந்தாண்டுத் திட்டம்(1951- 1956)

நோக்கம்

1951 ஜூலை மாதம் திட்டக் கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்டவரைவை சமர்ப்பித்தது. நேரு அரசாங்கம் பலதரப்பு விமர்சனங்களையும் பரிசீலித்த பின் 1952 டிசம்பர் மாதம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெளியிட்டது. முதல் திட்டம் சுதந்திர இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான "கன்னிமுயற்சி" ஆகும். அதன் மூல நோக்கங்கள் இரண்டு:

- உலகப் போர்களாலும், இந்தியப் பிரிவினையாலும் உருக்குலைந்து போயிருந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைத்தல்.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வளமிக்கப் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கல்.

திட்டம்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றப் பொருள் வளங்களைத் தொழில் நுட்ப ரீதியாகப் பெருக்கி, மனித வளத்தைச் செம்மைப்படுத்தி, மக்களின் தேவைகளையும் எதிர்ப்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. பொருள் உற்பத்தியைப் பெருக்கல், தேசிய வருவாயை உயர்த்தல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், நிலையான சொத்துக்களைச் சேர்த்தல் ஆகியவற்றுக்கிடையே சமநிலையை ஏற்படுத்துவது திட்டக் கமிஷனின் முன்னுரிமையாக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் அடுத்துவரும் திட்டங்களுக்கான முன்னோடியாகும். முதல் திட்டம் இந்தியப் பொருளாதார நிலத்தைச் சமன் செய்து அதன் மீது திட்டப் பொருளாதார மாளிகையைக் கட்டுவதற்கான முயற்சியாகும். அம்முயற்சி "மிகவும் மோசமாகத் தேக்கமுற்றிருந்த பொருளாதாரத்துக்குத் தேவையான குறைந்தபட்ச உந்துதலைக் கொடுத்தது" என்று குறிப்பிட்டுள்ளார் ஏ.எச்.ஹான்சன்.

மதிப்பீடு

முதல் ஐந்தாண்டுத் திட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் பொருளாதார, சமூக நோக்கங்களுக்குச் செயலுருவம் கொடுப்பதற்கான முயற்சியாகும். நடைமுறையில் இருந்த பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. முதல் திட்டம் தேசிய பொருளாதார அணுகுமுறையை அறிமுகப்படுத்தியது. விரைவான தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டுமானத்தைப் பலப்படுத்தியது. நம்பகமான புள்ளி

விவரங்கள் இல்லாத போதும் முதல் திட்டம் அறிவுப்பூர்வமாக தீட்டப்பட்டு முனைப்பார்வத்துடன் செயல்படுத்தப்பட்டது. விவசாயத்துக்கும், கிராம வளர்ச்சிக்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. உணவு அமைச்சராயிருந்த ஜெயராம் தாஸ், நேரு எதிர்பார்த்த அளவுக்குச் செயல்படவில்லை. நிதி அமைச்சர் ஜான் மத்தாய்க்கு திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியில் நம்பிக்கையில்லை. பல நடைமுறை இடர்ப்பாடுகள் இருந்தன. எனினும், நேரு பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து திட்டமிட்டப் பொருளாதார ஏற்றத்துக்காக விரைந்து செயல்பட்டார் என்று கூறியுள்ளார் எஸ்.கோபால்.

சமுதாய வளர்ச்சித் திட்டம் (1952)

“கிராம ராஜ்யம்” காந்தி கண்ட கனவு. அக்கனவை நனவாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டார் பிரதமர் நேரு. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மூலம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1952 அக்டோபர் 2 ஆம் தேதி காந்தி பிறந்த நாளன்று 17,000 கிராமங்களை உள்ளடக்கிய 55 சமூதாய வளர்ச்சித் திட்டங்கள் (Community Development projects) துவக்கப்பட்டன. இதை ‘அமைதியான ஆராவாரமற்ற புரட்சி’ என்று குறிப்பிட்டார் நேரு. சமூக வளர்ச்சித் திட்டத்தை ‘யக்ஞம்’ என்று வர்ணித்த குடியரசுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத் இத்திட்டத்தை ஒரு கைதேர்ந்த தோட்டக்காரரால் கவனமாக வளர்க்கப்பட்ட பழத்தோட்டத்தோடு ஒப்பிட்டார். சமூக நலத் திட்டத்தின் சிற்பியாகக் கருதப்பட்ட எஸ்.கே.டே. சமூக வளர்ச்சித் திட்டம் ‘கிராம மக்களின் மகிழ்ச்சிக்கான மாக்னா கார்டா’ ‘செயல்படும் இதிகாசம்’ என்றெல்லாம் புகழ்ந்தார்.

கிராமங்களில் சமூக - பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் என்று முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டது. “கிராம இந்தியாவின் முகத்தை மாற்றி இந்திய மக்களின் மிகப் பெரும்பான்மையோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இம்முயற்சியின் நோக்கம்’ என்று நேரு முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தில் அடிகோடிட்டுக் காட்டினார். கிராமப் புரமைப்பும், மக்கள் பங்கேற்பும் இத்திட்டத்தின் இரு கண்களாகும்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் சிறப்பியல்புகளாவன:

சமூக, பொருளாதார, கலாச்சார, பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட - பன்முகக் கிராம மறுச்சீரமைப்பு ஒருங்கிணைந்த திட்டம்இது கிராம மண்ணில் வேர்விட்டு வளரக்கூடிய, ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய உயிர்த்துடிப்புள்ள திட்டம் விவசாய உற்பத்தியை அதிகரித்தலும், விவசாயத்

தொடர்புடைய கைத்தொழில்களை ஊக்குவித்தலும்

இத்திட்டத்தின் முன்னுரிமைகள்

பொருளாதார வளர்ச்சி, சமூக மாற்றம், ஜனநாயக செயல்பாடு ஆகியவற்றுக்கான வழி.

சமுதாய வளர்ச்சித் திட்டம் துவக்கத்தில் நாடெங்கிலும் 55 இடங்களில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு திட்டமும் 3 இலட்சம் மக்களைக்கொண்ட 300 கிராமங்களை உள்ளடக்கிய, ரூபாய் 64 இலட்சம் வரவு-செலவு திட்டத்தைக் கொண்டது. மூன்றாண்டு கால செயல்பாட்டுக்குப் பின் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் பரப்பெல்லை குறைக்கப்பட்டு 65 ஆயிரம் மக்களைக் கொண்ட வளர்ச்சி வட்டாரங்களாக (Development Blocks) விரிவுபடுத்தப்பட்டன. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் மூன்றாண்டு காலத்துக்கு ரூபாய் 15 இலட்சம் வழங்கப்பட்டது.

தேசிய விரிவுப்பணித்திட்டம்(1953)

1953 ஆம் ஆண்டு தேசிய விரிவுப் பணித்திட்டம் (National Extension service Scheme) துவக்கப்பட்டது. கிராம வளர்ச்சித் திட்டம் கிராம சமூக மாற்றத்துக்கான முறை (method) என்றால் தேசிய விரிவுப் பணித் திட்டம் அதற்கான கருவி (instrument or Agency) ஆகும். இத்திட்டத்தைன் நோக்கங்களாவன:

- கிராமங்களில் சமூக வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோளைப் பரப்புதல்
- விவசாயம் மற்றும் விவசாயத் தொடர்பான தொழில்களைப்பற்றிய நவீன அறிவியல் முறைகளை அறிமுகப்படுத்தல் அவற்றில் பயிற்சி அளித்தல்
- வளர்ச்சித் திட்டங்களுக்கு மக்களை பங்கேற்பைப் பெறல். சுருங்கக் கூறின், தேசிய விரிவுப் பணித்திட்டம் சமூக வளர்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிர்வாகம் வாகனமாகும்.

தேசிய விரிவுப் பணித் திட்டம் என்பது கிராம் நிர்வாக வலைப் பின்னல் (Rural Administrative networks) ஆகும். சம்பிரதாய நிர்வாகத்தை (Status - quo Administration) மக்கள் நல நிர்வாக (People|s Welfare Adminsitration) மாற்றும் பொருட்டு நிர்வாக உட்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. வளர்ச்சி மைய நிலையில் வட்டார வளர்ச்சி அதிகாரி (Block Development Officer) நியமிக்கப்பட்டர். அவரது அணியில் விரிவுப் பணி அதிகாரிகளும் (நுஒவநளெழைெ ழுககைஉநசள), கிராம ஊழியர்களும் (Gram Sevaks or Village Level Workers) இடம் பெற்றனர்.

NOTES

மாவட்ட ஆட்சியர் (District Collectors ) வளர்ச்சி வட்டாரங்களின் வேலைகளை ஒருங்கிணைத்தார். மாநில அளவில் முதலமைச்சர் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்களைக் கொண்ட மாநிலக் குழு (State Committee) அமைக்கப்பட்டது. மத்திய அரசாங்க நிலையில் திட்டக்கமிஷன் உறுப்பினர்களைக் கொண்ட மையக்குழு(Central Committee) உருவாக்கப்பட்டது. அக்குழு சமூகத் திட்ட நிர்வாகத்தின் (Community Projects Administration) மூலம் சமூக வளர்ச்சித் திட்டக் கொள்கைகளைத் தீர்மானித்து, செயல் திட்டங்களை உருவாக்கி, நடைமுறைப்படுத்தி, நெறிப்படுத்தி, ஒருங்கிணைத்து, மதிப்பீடு செய்தது. ஒவ்வொரு நிலையிலும் மக்கள் பங்கேற்பை(People|s Participation)ஊக்குவிக்கவும், உறுதி செய்யவும் ஆலோசனைக் குழுக்கள் (Advisory Committees) அமைக்கப்பட்டன.

சமுதாய வளர்ச்சித் திட்டமும் தேசிய விரிவுப் பணித்திட்டமும் மிகுந்த எதிர்பார்ப்புடன் துவக்கப்பட்டன. தூரப் பார்வையுடன் துவக்கப்பட்ட இத்திட்டங்களைல் பயிற்சி பெற்ற ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தியா முழுவதுக்குமான சமூக வளர்ச்சி, விரிவுப் பணிக்கான அடிப்படை அமைக்கப்பட்டது. 1955- ல் 50 மைல்களுக்கு ஒரு சமூக வளர்ச்சித் திட்ட மையம் ஏற்படுத்தப்பட்டது. எனினும், இத்திட்டங்களின் குறைபாடுகள் அவற்றின் செயல்திறனைக் குறைத்து விட்டன.

- இரு திட்டங்களும் போதிய பூர்வாங்க ஏற்பாடுகளின்றி மத்திய அரசாங்கத்தால் அவசரமாக அறிமுகப்படுத்தப்பட்டவை
- வளர்ச்சி நிர்வாகம் அதிகாரவர்க்க வலைக்குள் சிக்கிக் கொண்டது.
- ஆலோசனைக் குழுக்களால் கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு மக்களின் பங்கேற்பைப் பெற முடியவில்லை
- கிராமப் புனரமைப்பில் உள்ளாட்சி நிறுவனனகளுக்குப் பங்கில்லாமல் போயிற்று. இருப்பினும் இத்திட்டங்கள் கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்பதில் ஐயமில்லை.

சோ‘லிச பாணி சமுதாயம் (Socialistic Pattern of Society1955)

சமூக வளர்ச்சித் திட்டம் - தேசிய விரிவுப் பணி அடித்தளத்தின் மீது சோலிச பாணி சமுதாய மாளிகையை எழுப்ப எண்ணினார் நேரு. அந்த

எண்ணத்துக்குத் தமிழ்நாட்டில் வடிவம் கொடுக்கப்பட்டது. 1955 ஜனவரி 21-லிருந்து 23-ஆம் தேதி வரை யு.என்.தேபரின் தலைமையில் ஆவடி 'சத்தியமூர்த்தி பவனில்' நடைபெற்ற 60வது இந்திய காங்கிரஸ் மாநாட்டில் 'சோஷலிச பாணி சமுதாயம்' பற்றிய வரலாற்று முக்கியத்துவமுடைய தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. நேரு முன்மொழிய அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த கே.காமராஜ் வழிமொழிந்தார்.

சோ'லிச பாணி சமுதாயம் என்றால் என்ன? பிரதான பொருள் உற்பத்திச் சாதனங்கள் சமூகத்துக்குச் சொந்தமாக அல்லது அதன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். பொருள் உற்பத்தி படிப்படியாகத் துரிதப்படுத்தப்படும். தேசிய செல்வம் மக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். தனியார் இலாபத்தை விட சமூகப் பலன் மேல்' என்பது சோலிச பாணி சமுதாயக் கொள்கையாகும். தேசிய வருமானத்தைப் பெருக்கி, வேலைவாய்ப்புகளை அதிகரித்து, வருவாய் சமத்துவத்தைத் திட்டமிட்ட பொருளாதார வழி ஏற்படுத்தல் ஆகியவை சோ'லிச பாணி சமுதாயத்தின் இலக்குகளாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரை, வழிகாட்டு விதிகள் மற்றும் முதல் ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்களுக்கு வடிவம் கொடுக்கும் முயற்சியே சோ'லிச பாணி சமுதாய ஏற்பாடாகும். ஏழைகளும் ஏற்றம் பெறத்தக்க கடையனுக்கு கடைத்தேற்றம்'(unto this last) என்ற சர்வோதயக் குறிக்கோளை சோ'லிச பாணி சமுதாய சித்தாந்தமாகும். சோ'லிச பாணி சமுதாயம் அறிவார்த்தமான கோட்பாடு என்பதை விடப் பொருளாதார சமூக மாற்றத்துக்கான முறை என்பதே பொருத்தமாகும்' என்ற கூறுகிறார் எஸ். கோபால். சே'லிச பாணி சமூக முயற்சி மக்கள் நல நாடு (Welfare State) உருவாவதற்கான உந்துதலைக் கொடுத்தது.

### 13.1.2 இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்(1956-1961)

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவதற்கு முன்பே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வரைவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கல்கத்தாவிலிருந்த இந்தியப் புள்ளி விவர நிறுவனத்தின் (India Statistical institutes) பேராசிரியர் டாக்டர் பி.சி.மகலாநோபிஸ் (P.C.Mahalanobis) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் தயாரித்த திட்ட வரைவு தக்க மாற்றங்களுடன் 1956 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. நாட்டின் பொருளாதார-சமூக மாற்றங்களை விரைவுபடுத்தும் வகையில் 'அமைப்பு மாற்றங்காள்'

(Structural Changes) மேற்கொள்ளப்பட்டன. சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. அதற்காக, எட்டாண்டுகளுக்கு முன் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் கொள்கை' (Industrial Policy,1948)-க்கு புதிய தொழில் கொள்கைத் தீர்மானம் (New Industrial Policy Resolution 1956) ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் விளைவே 'கூட்டுப் பொருளாதாரம்' ஆகும்.

கூட்டுப் பொருளாதாரம் (Mixed Economy)

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தலையாய நோக்கம் வளர்ச்சி உத்தி(Development strategy) - யை உருவாக்குவதேயாகும். முன்பே தேசிய வருவாயின் விரைவான வளர்ச்சி, வலைவாய்ப்பு அதிகரிப்பு, வருவாய் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், சேமிப்பு மற்றும் முதலீட்டுப் பெருக்கம், பொருள் உற்பத்தித் தொழில்நுட்ப அபிவிருத்தி, பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பெருக்கல், உற்பத்தியைப் பலவகைப்படுத்துதல் போன்றவை பொருளாதார வளர்ச்சியின் முன் தேவைகள் என்பது உணரப்பட்டிருந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் இவற்றின் மூலம் சோஷலிச பாணியில் சமுதாயத்தை அமைக்க விரும்பினார் நேரு. அதன் விளைவே வளர்ச்சி உத்தியாகும்.

வளர்ச்சி உத்தியின் மூலம் வளர்ச்சியடையாதிருந்த இந்தியாவை முற்போக்கு முன்னேற்ற நாடாக மாற்ற முடியும் என்று நம்பினார் நேரு. அதற்குக் குறைந்த முயற்சியால் நிறைந்த வளர்ச்சி விகிதத்தை எட்ட வேண்டும். அதுமட்டுமல்ல, பொருளாதார மாற்றத்துக்கான் கால இடைவேளி அதிகமாக இருத்தலாகாது. அதற்கு ஒரே வழி இந்தியாவை விரைந்து தொழில் மயமாக்குவதேயாகும். அடிப்படை கனரக பொருள் உற்பத்தி செய்யும் தொழில்கள் மூலமே இது சாத்தியமாகும். நுகர்வோர் பொருள்களை(Consumer Goods) உற்பத்தி செய்வதால் தேசத்தைத் தொழில்மயமாக்க முடியாது என்று கருதினார் நேரு. உண்மையான தொழில்மயமானால் இந்தியா வெளிநாடுகளுலிருந்து உற்பத்தியாளர் பொருள்களை (Producer Goods) இறக்குமதி செய்வதை வெகுவாகக் குறைத்துக் கொள்ளும்.

இந்தியா தொழில் மயமாவதற்கான முன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின் அதற்கு அதிகமான முதலீட்டு மூலதனம் (Investment Captial) தேவை. அதற்கேற்ற உட்கட்டுமான அமைப்பும் அவசியம். இவ்விரண்டையும் கொடுக்கும் நிலையில் தனியார் துறை (Private Sector) வளர்ந்திருக்கவில்லை. எனவே, அரசாங்கம் பொருளாதாரப் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. எனவே,

உற்பத்தியாளர் பொருள்களுக்கான கடமையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்வது தனியார் துறைக்கு விடப்பட்டது. இரும்பு, எ.்.கு, மின்சார உற்பத்தி, நிலக்கரி, கனரக இரசாயனத் தொழில் போன்ற அடிப்படைத் தொழில்களை மத்திய அரசாங்கம் தன்வசம் வைத்துக் கொண்டது. அரசாங்கத்தின் பொதுத்துறையும், தனியார் துறையும் இணைந்து பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்டதால் 'கூட்டுப் பொருளாதாரம்' என்று அழைக்கப் படுகிறது.

இந்தியக் கூட்டுப் பொருளாதாரம் சோவியத் ர்'யாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி பாணியை முன் மாதிரியாகக் கொண்டது. கூட்டுப் பொருளாதாரத்தின் சிறப்பியல்களாவன:

- பொதுத் துறையை அரசாங்கக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு விரைந்து விரிவுபடுத்தல்
- அடிப்படை கனரகத் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல்
- தனியார் துறை மேற்கொள்ள முடியாத அல்லது மேற்கொள்ள முன்வராத பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் சேவைப் பொறுப்புகளை அரசாங்கம் மேற்கொள்ளல். கூட்டுப் பொருளாதாரம்' இந்தியப் பொருளாதாரத்தின் தனிச் சிறப்பாகும்.

கூட்டுறவு விரிவாக்கம்

இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு விரிவாக்கத்துக்கு (Expansion of Cooperative Sector) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1956 - ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய தொழில் கொள்கைக் தீர்மானம்' பொது மற்றும் தனியார் துறைகளில் கூட்டுறவு முறையைக் கையாள வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டியது. குறிப்பாக விவசாயம், சிறுதொழில், வினியோகம், கட்டுமானம், அத்யாவசியப் பொருள்கள் வழங்கல் ஆகிய துறைகளில் கூட்டுறவு முறை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதில் நேரு அரசாங்கம் குறியாக இருந்தது. அரசாங்க வர்த்தகத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. கூட்டுறவுத் துறை (Co-operative Sector) யை ஊக்குவிப்பதற்கு எப்போதுமில்லாத அளவுக்கு முதலீடு செய்யப்பட்டது.

கூட்டுறவு முறை விவசாயம்

கூட்டுறவு மூலம் கிராம உயர்வுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கூட்டுறவு முறை விவசாய அறிமுகப்படுத்துப்பட்டது. நில உடைமைகள் சிதறிக் கிடந்தமையால் கூட்டுறவு விவசாயம் சிறந்ததாகக் கருதப்பட்டது. மேலும் இது

மீந்தாடி அல்லது அரசாங்க உடைமைக்கு நல்ல மாற்று முறையாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. முன்பே நடைமுறையில் இருந்த சமூக வளர்ச்சித் திட்டமும் தேசிய விரிவுப் பணியும் கூட்டுறவு விவசாயத்தைப் பலப்படுத்த முடுக்கிவிடப்பட்டன. கிராம் வாழ்க்கை

- பல் நோக்கு கூட்டுறவு சங்கம்
- கிராமப் பஞ்சாயத்து
- கிராமப் பள்ளி ஆகிய முப்பெரும் நிறுவனங்களைச் சுற்றிச் சுழல வேண்டும் என்பதே திட்டகர்த்தாக்களின் விருப்பம் ஆகும். இவற்றின் மூல இந்தியாவின் கூட்டுறவுக் காமன்வெல்த்தை (Co-operative Common Wealth)க் காண முடியும் என்று கனவு கண்டார் நேரு.

மதிப்பீடு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 'பெரிய முற்போக்குப் பாய்ச்சல்' (A Great Leap Forward ) என்று புகழப்பட்டது. இதன் சாதனைகள் பெருமைக்குரியவை:

- திட்ட முதலீடு ரூ,6,750 கோடியில் ரூ. 3,650 கோடி பொதுத்துறைக்காகச் செலவிடப்பட்டது; 2) தேசிய வருமானம் 20மூ ஆக உயர்ந்தது
- தனி நபர் வருமானம் ரூ.284லிருந்து ரூ.306 ஆதிகரித்தது
- விவசாய உற்பத்தி 40மூஆகப் பெருகியது. கிராம்க் கைத்தொழில்கள் புத்துயிர் பெற்றன
- பொருள் உற்பத்தி இரண்டு மடங்காகப் பெருகியது
- முதலீட்டு விகிதம் கணிசமாக அதிகரித்து.

குறைகள்

- ஊடகங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வகர்ச்சி மாதிரி (Growth Model) நடைமுறை சாத்தியமற்றது
- கிடைத்த நிதி ஆதார வசதிகளுக்கும் முதலீட்டுக் குறியீட்டுக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தது
- பொதுத்துறை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக இருந்தமையால் இந்தியாவின் அன்னியச் செலவாணி இருப்பை வெகுவாகக் குறைத்து விட்டது; 5) அதன் காரணமாக மத்திய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து பரவலாகக் கடன் வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு உட்பட்டது

- எதிர்பார்த்தபடி வேலை வாய்ப்பு அதிகரிக்கவில்லை; வருமான ஏற்றத்தாழ்வு குறையவில்லை; பொருளாதார வளம் சரியாகவும் பகிர்ந்தளிக்கப்படவில்லை சமூக வளர்ச்சித் திட்டம் திருப்திகரமாக செயல்படவில்லை; விவசாயம் மற்றும் சிறிதொழில்கள் பலம் பெறவில்லை.

சுருங்கக் கூறின், சோ'லிச பாணி சமுதாயமும், கூட்டுறவு காமன்வெல்த்தும் கற்பனைக் கோட்டைகளாகிவிட்டன. நேரு சோ'லிச சமுதாயம் பற்றிய துல்லியமான கருத்துருவாக்கம் செய்து அதற்கேற்ப செயல் திட்டம் தீட்டாமை அவர் சார்ந்த வகுப்புப் பின்னணி; பலவீனமான, தயங்கிய, முழுமையற்ற முயற்சி, சோ'லிச சமுதாயத் திட்டம் வெற்றி பொறாமைக்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதுகிறார் எஸ். கோபால். எனினும் நேருவின் சோஷலிச சமுதாய முயற்சி உலக வரலாறு காணாத பரிசோதனையாகும்.

ஜனநாயக அதிகாரப் பரவல் (Democratic Decentralisation - 1957) ஆய்வுக்குழு

1952-ஆம் ஆண்டு சமூக வளர்ச்சித் திட்டம்' துவக்கப்பட்டது. 1957- ல் தேசிய வளர்ச்சிக் குழு பல்வந்ரே மேத்தா(Balvantray Mehta) தலைமையில் ஒரு ஆய்வுக்குழு (ளுவரனல வுநயஅ)வை அமைத்தது. சமூக வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய விரிவுப் பணித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாட்டை மதிப்பீடு செய்வதே மேத்தா ஆய்வுக்குப் பின் வரும் முடிவுகளுக்கு வந்தது:

- சமூக வளர்ச்சி மற்றும் தேசிய விரிவுப் பணிப் திட்டங்கள் மக்களிடையே முனைப்பார்வத்தை ஏற்படுத்தி வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்கச் செய்யத் தவறிவிட்டன
- உள்ளாட்சி நிறுவனங்கள் சமூக நலத் திட்டங்களில் ஆர்வம் காட்டவில்லை
- கிராமப் பஞ்சாயத்துகளுக்கு சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. "கிராம் சமுதாயம் அதன் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு, அதன் பிரதிநிதிகள் மூலம் போதிய அதிகாரங்களைப் பிரயோகித்து, தல நிர்வாகத்தின் மீது தொடர்ந்து அக்கறை காட்டினால்தான் சமூக வளர்ச்சித் திட்டம் உண்மையானதாக இருக்கும்" என்ற முடிவுக்கு வந்தது பல்வந்ரே மேத்தா ஆய்வுக்குழு.

குழுவின் பரிந்துரைகள்

சமூக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பல்வந்ரே மேத்தா ஆய்வுக்குழு பின்வரும் பரிந்துரைகளைச்

செய்தது.

- வளர்ச்சித் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு அதிகார பரவல்(Democratic Decentralisation) அத்யாவிஸ்யம்
- பரவலாக்கப்படும் நிர்வாக முறை சட்டப்படி முறையாகத் தேர்ந்தெடுக்கப்படும் உள்ளாட்சி அமைப்புகளால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்
- அதிகாரப் பரவல் முறையில் அமைக்கப்ப்டும் நிறுவனங்களுக்குத் தேவையான அதிகாரம், நீதி, மற்றும் வள வசதிகள் உறுதி செய்யப்படுதல் வேண்டும்
- வளர்ச்சி வட்டாரம் (Development Block) ஜனநாயக அதிகாரப் பரவலின் அடிப்படை அமைப்பாக இருக்க வேண்டும்
- இவ்வதிகாரப்பரவல் எதிர்காலத்தில் தல சுயாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிக அதிகாரங்களையும், வளங்களையும், வாய்ப்புகளையும் அளிப்பதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இப்பரிந்துரைகள் ஜனநாயக அதிகாரப் பரவலுக்கான இலக்கு நோக்கிய உந்துகைகள் ஆகும்.

புதிய பஞ்சாயத்து ஆட்சி முறை

பல்வந்ரே மேத்தா ஆய்வுக்குழு மூன்றடுக்குப் பஞ்சாயத்து முறையை (Three tier panchayat System)-ப் பரிந்துரை செய்தது.

- கிராமப் பஞ்சாயத்து (Village Panchayat). இது கிராம நிலையில் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு. இதில் இரண்டு பெண் உறுப்பினர்களும் ெ்டியூல்டு மற்றும் பழங்குடியினர்க்குத் தலா ஒரு பிரதிநிதியும் ஒத்துத் தேர்ந்தெடுக்க(Co-opt)ப்பட்டோர் இடம் பெறுவர்
- பஞ்சாயத்து ஒன்றியம் (panchayat samiti or union) பஞ்சாயத்து ஒன்றியம் கிராம்ப் பஞ்சாயத்துக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக்கொண்ட அமைப்பாகும். இவர்களும் 5 ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பர். பஞ்சாயத்து ஒன்றியத்தின் ஆட்சி எல்லையும், சமூக வளர்ச்சி வட்டாரமும் ஒன்றாக இருக்கும்
- மாவட்ட வளர்ச்சி மன்றம் (zilla parishad or district Development council) இம்மன்றம் பஞ்சாயத்து ஒன்றியங்களின் தலைவர்களைக் கொண்டது. மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற

உறுப்பினர்கள் இதில் இடம் பெறுவர். மாவட்ட ஆட்சியர் தன் தலைவர். மாவட்ட வளர்ச்சி மன்றம் பல நிலைக் குழுக்கள் (Standing Committees) மூலம் செயல்படும்.

மேற்கண்ட மூன்றடுக்குப் புதிய பஞ்சாயத்து ஆட்சி முறையை மாநிலங்களின் சூழ்நிலைகளுக்கேற்ப தக்க மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்று மேத்தா ஆய்வுக்குழு பரிந்துரைத்து. 1958-ல் அப்பரிந்துரையை தேசிய வளர்ச்சிக் குழு ஏற்றுக் கொண்டது. மத்திய மாநில அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பட்ட இந்த ஜனநாயக அதிகாரப் பரவல் முறை இந்தியா முழுவதும் பஞ்சாயத்து ராஜ்யம்' (Panchayat raj)அல்லது புதிய பஞ்சாயத்து ஆட்சி என்று அழைக்கப்பட்டது.

### 13.1.3 மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்(1961 - 1966)

முதல் இரண்டு திட்டங்களின் சாதனைகளின் அடிப்படையில் முகுந்த எதிர்பார்ப்புக் கிடையே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 1961 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின் செயல் உத்தி, விவசாயம்-தொழில், பொருளாதார-சமூக வளர்ச்சி, உள்நாட்டு -வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவற்றுக்கிடையேயான பரஸ்பரச் சார்புடைமையை வலியுறுத்துவதாக இருந்தது. தற்சார்புப் பொருளாதாரமே (Self-relient Economy) இதன் குறிக்கோளாக இருந்தது. மூன்றாவது திட்டம் நீண்டகால வளர்ச்சி மாதிரியை (Long term growth model) வழிகாட்டியாகக் கொண்டது.

மூன்றாவது திட்டக் காலத்தின் முதல் நாங்கு ஆண்டுகளில் தேசிய வருவாய் 20 சதவிகிதமாக உயர்ந்தது. கனரகத் தொழில்களுக்கு, அதாவது பொதுத் துறைக்கு, தொடர்ந்து முன்னுரிமை கொடுக்கப்பட்டது. வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்ததால் கடன் பொறுப்புகள் பெருகின! சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து (international Monetary Fund)கடன்களைப் பெறவேண்டிய கட்டயம் ஏற்பட்டது. நிதிப் பற்றாக்குறை, சீன ஆக்கிரமிப்பு (1962) வெளிநாட்டு உதவித் தட்டுப்பாடு, பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு, பஞ்சம் போன்ற காரணங்களால் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. யாவற்றிற்கும் மேலாக நேருவின் மறைவு (1964 மே 27) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடக்கி விட்டது எனலாம்.

நேருவின் ஆட்சிக் காலத்தில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி (1951 - 1964)

ஜவகர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் “திட்டமிட்ட பொருளாதார

வளர்ச்சியின் தந்தை” என்று போற்றப்படுகிறார். நேருவின் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான உறுதியான அடிப்படையை அமைத்துக் கொடுத்தது. நாடு பல முனைகளிலும் முன்னேறுவதற்கான உந்துதலைத் தந்தது. திட்டச் சாதனைகள் வருமாறு

விவசாய வளர்ச்சி

‘‘விவசாயம் இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு” எனலாம். இந்தியா விடுதலை அடைந்த போது 83 விழுக்காடு விவசாய நிலம் நிலையற்ற மழையை நம்பியே இருந்தது. சில பகுதிகள் வெள்ளத்தாலும், வேறு சில பகுதிகள் வறட்சியாலும் வாடும் நிலை நீடித்தது. கிடைத்த நீர் வளத்திலும் 6 விழிக்காடு தான் பாசனத்துக்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்தப்பட்டது. எனவே, நேரு அரசாங்கம் நீர்பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தது. அதன் விளைவாகப் பல்வேறு பெரிய, மத்தியதர, சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக பக்ரா நங்கல் (பஞ்சாப்), ரிஹாண்ட் (உத்திரப்பிரதேசம்), தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் (பீகார் - மேற்கு வங்காளம்), ஹிராகுட்(ஒரிசா), கோசி(பீகார்), மயூரா (பீகார் - மேற்கு வங்காளாம்), நாகார்ஜுனா சாகர் (ஆந்திர பிரதேசம்), சம்பல் (ராஜஸ்தான் - மத்திய பிரதேசம்), கீழ் பவானி (தமிழ்நாடு), துங்கபத்ரா (ஆந்திர பிரதேசம் - கர்நாடகம்) ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றால் நீர்ப்பாசன விவசாயம் இருமடங்காக பெருகியது. 46 மில்லியன் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் விரிவுப்படுத்தப்பட்டது. அதன் விளைவாக விவசாயப் பொருள் உற்பத்தி 50.83 மில்லியன் டன்னிலிருந்து (1951) 88.40 மில்லியன் டன்னாக உயர்ந்தது(1965).

விவசாயப் பெருக்கத்தோடு கால்நடை அபிவிருத்தி, கோழிப் பண்ணை, மீன்பிடிப்பு, பால் உற்பத்தி போன்ற விவசாயத் துணைத் தொழில்களும் வளர்ந்தன. விவசாயக் கடன் வழங்கல், உணவுப் பொருள் பதனம் செய்தல், சந்தையிடுகை, விஞ்ஞான முறை போன்ற நடவடிக்கைகளில் கூட்டுறவு சங்கங்கள் முனைப்புடன் ஈடுப்பட்டன. 1951 ஆம் ஆண்டில் 1,00000 க்கும் மேற்பட்ட 4.4 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட ஆரம்ப விவசாய மற்றும் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப்பட்டன. 1964-ல் இவற்றின் எண்ணிக்கை இருமடங்காகவும், உறுப்பினர் எண்ணிக்கை ஐந்து மடங்காகவும் அதிகரித்தது. கூட்டுறவு விவசாயப் பரிசோதனைத் திட்டங்கள் (‘டைழவ ‘சழதநஉவள) அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் சிறு விவசாயிகள் கூட விவசாய வளங்களை ஒருங்கிணைத்து பயன்பெற்றனர்.

கிராம வளர்ச்சி

கிராம வளர்ச்சிக்காக விவசாயத்துக்கு அடுத்தபடியாக கிராமத்

தொழில்களுக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டது. கிராம மக்களின் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கத்தோடு கைத்தறி, கதர், பட்டு, கயிறு, கைவினைப் பொருள்கள் உற்பத்திக்காகக் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாகக் கைத்தறித் துணி உற்பத்தி 1951-ல் இருந்ததைவிட மூன்றாவது திட்டக் காலத்தில் மூன்று மடங்காகப் பெருகியது. அதுமட்டுமல்ல. கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் மின்சார வினியோகம் செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1951-ல் 3,687 கிராமங்கள் நகரங்கள் மட்டுமே மின்சார வசதி பெற்றிருந்தன. மூன்றாவது திட்டக்காலத்தில் இவற்றின் எண்ணிக்கை 55,000 ஆக அதிகரித்தது. இவற்றோடு கிராம சுகாதாரத்தைப் பாதுகாக்க 5,000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (ீசைஅயசல ர்நயடவா ஊநவெசநள) துவக்கப்பட்டன. இவை மருத்துவ வசதி, தாய் - சேய் நலம், சுகாதாரக் கல்வி, தொற்றுநோய்க் கட்டுப்பாடு, சூழ்நிலை சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தின.

### 13.1.4 நான்காவது ஐந்தாண்டு திட்டம் 1969-74

மக்களின் வாழ்க்கைத் தரத்தை குறிப்பாக பின்தங்கிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமின்றி ஈட்டப்பட்ட செல்வத்தை மக்கள் அனைவருக்கும் சமமாக பிரித்து வழங்குவது முதலிடத்தைப் பெற்றன நாட்டின் செல்வமும் பொருளாதார சக்தியும் சில இடங்களில் மட்டுமே குவிந்து இருக்காமல் அவற்றை பரவலாக்குவது தலையாய பணி ஆயிற்று.

### 13.1.5 ஐந்தாம் ஐந்தாண்டு திட்டம் 1974-79

உலக அளவில் உணவுப் பொருள்கள் உரம் போன்ற விவசாய இடுபொருட்கள் மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் பெரிதும் உயர்ந்தன பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது அவசரத் தேவையாக இருந்தது 1974-75 மத்தியில் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பிறநாடுகளில் கவனத்தை ஈர்த்தது.

### 13.1.6 ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் 1980-1985

வேலை இல்லா திண்டாட்டம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை கலைதல் ஆகியவை இந்த திட்டத்தில் முதலிடம் பெற்றன.

### 13.1.7 ஏழாம் ஐந்தாண்டு திட்டம் 1985-1989

உணவு தானிய உற்பத்தி வேலைவாய்ப்பை பெருக்குதல் மற்றும் மக்களின் உற்பத்தித் திறனை பெருக்குதல் போன்றவை முக்கியத்துவம் பெற்றன.

### 13.1.8 எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 1992-1997

உணவு உற்பத்தியில் இந்திய நாடு ஏறத்தாழ தன்னிறைவு

அடைந்துவிட்டது தொழில்துறை மற்றும் சேவை வழங்கும் துறைகளும் நன்கு முன்னேறி இருந்தன ஆனால் நிதிப்பற்றாக்குறை பொதுக்கடன் அழிந்துவரும் அந்நிய செலாவணி கையிருப்பு மற்றும் அதிகரித்துவரும் பணவீக்கம் ஆகியவற்றை எதிர்த்துப் போரிட வேண்டிய அவசியம் உருவாகிவிட்டது எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ் காண்பவை முன்னுரிமை பெற்றன ஒன்னு அதிகமான அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் மூலம் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள்

- முழு அளவு வேலைவாய்ப்பினை எட்டுதல்
- மக்களில் ஒத்துழைப்பின் மூலம் ஊக்கத் திட்டங்கள் மற்றும் ஊக்கத் தொகைகளை விலகிக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமும் மக்களின் தொகையை கட்டுப்படுத்துதல்
- அனைவருக்கும் ஆரம்ப கல்வி அளித்தல் மற்றும் 15 முதல் 35 வரை உள்ள மக்களிடத்து காணப்படும் எழுத்தறிவின்மையை போக்குதல்
- அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் அடிப்படை மருத்துவ வசதிகளை அளித்தல் நோய்த்தடுப்பு முறைகளை அழித்தல் மற்றும் தோட்டி பணிகளை அரவே ஒழித்தல்
- விவசாய வளர்ச்சி பல்வகைப் பயிர்களைப் பயிரிடல் மற்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு தானிய உற்பத்தியைப் பெருக்குதல்
- மின்னாற்றல் போக்குவரத்து தகவல் தொடர்பு மற்றும் பாசனம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பெருக்கி வளர்ச்சிப் பணிகளைத் தடையின்றி நீடிக்கச் செய்தல்.

**13.1.9 ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம் 1997-2002**

பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கும் இடையில் உள்ள ஒருங்கிணைந்த உறவை ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் அங்கீகரித்தது காலம்காலமாக நிலவி வரும் சமுதாய வேறுபாடுகளை களைந்து ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு ஆதரவு அளிக்கும் கொள்கைகளை உருவாக்குவதில் அரசு உறுதியாக உள்ளது சமூக நீதி மற்றும் சமத்துவத்திற்கான இத்திட்டத்தின் தாரகமந்திரம் தேசிய வளர்ச்சி குழு கீழ்கண்டவற்றை ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் என குறிப்பிட்டது.

- வேலை வாய்ப்பைப் பெருக்குதல் மற்றும் வறுமையை ஒழிப்பு ஆகியவற்றுக்காக விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தல்

- விலைவாசியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதே நேரத்தில் வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல்
- அனைவருக்கும் குறிப்பாக பின்தங்கிய சமூகத்தினருக்கு உணவு மற்றும் சத்துணவை உறுதி செய்தல்
- அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அடிப்படை சுகாதார வசதிகள் அடிப்படை கல்வி தங்குமிடம் ஆகியவற்றை குறித்த கால வரையறைக்குள் உறுதி செய்தல்
- மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
- அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பின் மூலம் வளர்ச்சிப் பணிகளின் காரணமாக சுற்றுச்சூழல் பாதிக்கப் படாமல் காத்தல்
- பெண்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய அட்டவணை இன மக்கள் பிற பின் தங்கிய இனத்தவர்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்குதல் 8 பஞ்சாயத்து ராஜ் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்க ஊக்கப்படுத்துதல்
- சுய சார்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துதல்.

### 13.1.10 பத்தாம் ஐந்தாண்டு திட்டம் 2002-2007

பத்து விழுக்காடு வேகத்தில் உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியப் பொருளாதாரத்தை மாற்றுவது இத்திட்டத்தின் நோக்கமாகும் முதலீட்டாளர்களுக்கு இணக்கமான சந்தை சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குதல். ஆகியவை முன்னுரிமை பெற்றன தனியார் துறையினர் பொருளாதார வளர்ச்சியில் துடிப்புடன் பங்கேற்பதையும் திரைத்துறையில் வெளிநாட்டினர் அதிக அளவில் பங்கேற்பதையும் அரசு வரவேற்றது வர்த்தக நிறுவனங்கள் வெளி படையுடன் செயல்படுவதற்கும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் அதிக ஊக்கம் அளிப்பது வறுமையை ஒழித்தல் கல்வியைப் பரப்புதல் ஆகியவை அதிக கவனம் பெற்றன 2007 ஆம் ஆண்டு வாக்கில் பரபரப்பை 25 விழுக்காடு அளவுக்கு உயர்த்துதல் அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.

### 13.1.11 பதினோராம் ஐந்தாண்டு திட்டம் 2007-2012

- மொத்த உள் நாட்டு உற்பத்தியை பத்து விழுக்காடு அளவுக்கு உயர்த்துதல்
- 700 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆரம்பப்

பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்துதல்

- குழந்தை இறப்பு விகிதத்தை 28 ஆக குறைத்தல் அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்குதல் வனப் பரப்பளவை ஐந்து விழுக்காடு அளவுக்கு உயர்த்துதல்.

### 13.1.12 பனிரெண்டாம் ஐந்தாண்டு திட்டம் 2012-17

12 ஆம் ஐந்தாண்டு திட்டம் விரைவில் தொடங்க உள்ளது இதற்கான கொள்கை வரைவினை இறுதி செய்யும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.

## 13.2 தமிழ்நாடு-நீர்ப்பாசனம்-விவசாயம்-தொழில்துறை வளர்ச்சி

தொழில் வளர்ச்சி

விவசாய வளர்ச்சியும் தொழில் வளர்ச்சியும் இந்தியப் பொருளாதாரத்தின் இரண்டு கண்கள் போன்றவை. இவை இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. விரைவான தொழில்மயமாதல் விவசாய வளர்ச்சியை விரைவுபடுத்தும். இருக்கும் தொழில்களை விரிவுப்படுத்தல் மற்றும் புதிய தொழில்களைத் துவங்குவதன் மூலம் விவசாய மூலப்பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களின் தேவை வெகுவாக அதிகரிக்கும். தொழில் விரிவாக்கத்தின் விளைவாக வர்த்தகம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு பெருகுவதால் விவசாய வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் கிடைக்கும். விவசாய இடுபொருள் தேவைகளையும் தொழிற்சாலைகள் பூர்த்தி செய்யும்.

இந்தியா விரைந்து தொழில்மயமாக வேண்டும் என்ற நோக்கத்தோடு இரும்பு, எ.்.கு, இயந்திர உற்பத்தி, சிமெண்ட், மின்சார உற்பத்தி போன்ற அடிப்படை கனரகத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. குறிப்பாக இந்தியாவின் எ.்.குத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. அதேபோன்று சித்தரஞ்சன் ரயில்பெட்டித் தொழிற்சாலை, சென்னை ஒருங்கிணைந்த ரயில்பெட்டித் தொழிற்சாலை, இந்துஸ்தான் மெஷின்டூல்ஸ் தொழிற்சாலை, இந்தியன் தொலைபேசி தொழிற்சாலை, கேபிள் தொழிற்சாலை ஆகியவை துவக்கப்பட்டன. விவசாயிகள் உரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சிந்திரி உரத் தொழிற்சாலை துவக்கப்பட்டது. பல சணல், சர்க்கரை, துணி மற்றும் நூற்பாலைகள் நவீனமயமாக்கப் பட்டன. ரயில் மற்றும் பாதைப் போக்குவரத்துத் தொழில் விரிவுபடுத்தப்பட்டது. பல்வேறு தனியார் துறைத் தொழில்களிலும் தொழில் முனைவோர்கள் முதலீடு செய்தனர். தொழிற்சாலைகளையும், அணைக்கட்டுகளையும் கோயில்களாகவும், மசூதிகளாகவும், தேவாலயங்களாகவும், குருத்துவாராக்களாகவும் பார்த்தார் நேரு.

நேருவின் ஆட்சிக்காலத்தில் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், வறுமையை ஒழிக்கவும், அறிவியல் தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் என்பதில் நேரு குறியாக இருந்தார். மக்களிடையே மூடநம்பிக்கைகள் மறைந்து, பத்தாம் பசலிப் பழமைவாதம் விலகி, அறிவியல் மனப்பான்மை (Scientific Temper) வளர வேண்டும் என்று விரும்பினார் நேரு. அந்த நோக்கத்தோடு அவர் மேற்கொண்ட மகத்தான முயற்சியே 1958 -ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அறிவியல் கொள்கைத் தீர்மானம் (Scientific Policy Resolution) ஆகும். அத்தீர்மானம் சுதந்திர இந்தியாவின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தது எனலாம். பொருத்தமான முறைகள் மூலம் அனைத்துத் துறைகளிலும் அறிவியல் -தொழில்னநுட்ப மனப்பான்மையயும் ஆராய்ச்சியையும் வளர்ப்பதே அறிவியல் கொள்கைத் தீர்மானத்தின் நோக்கமாகும். நேருவால் வரையப்பட்ட அத்தீர்மானம் இந்தியாவின் ஒருமைப்பாட்டை உறுதி செய்யும் பயனுள்ள ஆற்றல் மிக்க கருவியாகப் பயன்படும் என்று எதிர்ப்பார்த்தார் என்று குறிப்பிட்டுள்ளார் நூருல் ஹாசன்.

அறிவியல் கொள்கைத் தீர்மானத்தின் நேர் விளைவே அறிவியல் தொழில் ஆய்வுக் கழகம்(The Council of Science and industrial Research) பலப்படுத்தப்பட்டதாகும். 1942-ல் துவக்கப்பட்டு செயல்பட்டு வந்த இக்கழகத்துக்குப் பிரதமர் நேருவே தலைமை தாங்கி வழி நடத்தினார். இக்கழகம் இந்தியா முழுவதும் 28 தேசிய ஆய்வுக் கூடங்களை (National Laboratories) நிறுவியது. இவ்வாய்வுக் கூடங்களில் பல்வேறு தொழிழ்களுக்கு உதவக் கூடிய நடைமுறை சாத்தியமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அரசாங்க மானிய உதவி தாராளமாக வழங்கப்பட்டது. 1964-ல் 495 ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. திறமைமிக்க இளம் அறிவியல் ஆய்வாளர்களுக்கு உதவித் தொகைகள் (Junior Fellowships) வழங்கப்பட்டன.

அறிவியல் தொழில் ஆய்வுக் கழகம் பல்வேறு கூட்டுறவு ஆராய்ச்சி சங்கங்களை (Co-operative Associations) ஏற்படுத்தியது. இச்சங்கங்கள் ஆய்வுக் கழகத்திடமிருந்து மானிய உதவி, தொழிழ்நுட்ப ஆலோசனை, தொழில் திறன் பயிற்சி, ஆய்வு உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்று அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி எல்லையை விரிவுபடுத்தின.

தேசிய ஆய்வுக்கூடங்களில் தொடர்பு மையங்கள் (Liaison Units) அமைக்கப்பட்டன. இம்மையங்கள் தொழில் மற்றும் தொழிலாளர் சங்கங்கள், அரசாங்கத் துறைகள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்துவோர் ஆகியோருடன் தொடர்புப் பாலங்களாகச் செயல்பட்டன. புதுடில்லியில் ஒரு தொழில்தொடர்பு விரிவுப் பணி மையம் (An Industrial Liaison and Extension Service Unit) நிறுவப்பட்டது. அம்மையும் குறிப்பாகக் கிராம மக்களின் பொருளாதார வாழ்க்கை நிலை உயர்வடைவதற்காக அறிவியல் அறிவையும் ஆராய்ச்சியையும் பயன்படுத்த உதவி செய்தது.

அறிவியல் தொழில் ஆய்வுக் கழகத்தின் மற்றொரு சாதனை கிராமங்களில் விஞ்ஞானக் கூடங்களை (vigyan Mandirs) ஏற்படுத்தியதாகும். சமூக வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறையில் இருந்த பகுதிகளில் விஞ்ஞானக் கூடங்கள் துவக்கப்பட்டன. இவற்றின் மூலம் கிராம மக்களிடையே விஞ்ஞான விழிப்புணர்வு ஏற்படுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. விஞ்ஞான இலக்கியம் இந்திய மொழிகளில் எளிமையாக எழுதப்பட்டு வெளியிடப்பட்டன. விஞ்ஞான முறைகள் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுமாறு அறிமுகப்படுத்தப்பட்டன.

அணு ஆற்றல் ஆராய்ச்சி (Atomic Energy Research)

1948-ல் அணு சக்தி கமி'ன் (Atomic Energy Commission)நிறுவப்பட்டது. டாக்டர் ஹோமி ஜெ பாபா (Dr.Homi J. Bhabha) வின் தலைமையின் கீழ் இக்கழகம் சிறப்பாகச் செயல்பட்டது. அணுசக்தியை அமைதித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே அணுசக்தி கமி'னின் நோக்கமாகும். ஹோமி பாபாவைச் செயலராகக் கொண்ட அணுசக்தித் துறை (Department of Atomic Energy) விவசாயம், உயரியல், தொழில், மருத்துவம், மின்சார உற்பத்தி போன்றவற்றின் வளர்ச்சிக்கு அணுசக்தியைப் பயன்படுத்தி ஊக்குவிப்பதில் இத்துறை தனிக் கவனம் செலுத்தியது. நேருவின் ஆட்சிக் காலத்தில் பம்பாய்க்கு அருகேயுள்ள டிராம்பே (Trombay)யில் அமைக்கப்பட்ட அணுசக்தி நிறுவனம் (Atomic Energy Establishment)அணுசக்தி ஆராய்ச்சி வளர்ச்சிக்கான தேசிய மையமாகத் திகழ்ந்தது. அரிய சாதனைகளைச் செய்தது.

அணுசக்தி ஆய்வுக்காகப் பல பல்கலைக்கழக மற்றும் ஆராய்ச்சி

நிறுவனங்களுக்கு தாராளமாக அரசாங்க நிதி உதவி வழங்கப்பட்டது. உதாரணமாக, பம்பாயில் உள்ள டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (Tata Institute of Fundamental Research) அணுசக்தி அறிவியல் மற்றும் கணிதவியலில் தலை சிறந்த தேசிய உயராய்வு மையமாகத் திகழ்ந்தது. அதேபோன்று கல்கத்தாவில் உள்ள சாஹா அணுசக்தி இயற்பியல் நிறுவனம் (Saha Institute of Nuclear Physics) அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆய்வுக் கூடம் (Physical Research Laboratory), கர்‘மீரில் குல்மார்க்கிலும், தமிழ்நாட்டில் கொடைக்கானலிலும் நிறுவப்பட்ட ஆய்வுக் கூடங்கள், தாராப்பூர் அணுசக்திக் கூடம் ராஜஸ்தானில் ராணா பிரதாப் சாகரில் உள்ள அணுசக்திக் கூடங்கள், தமிழ்நாட்டில் கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவை மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடும் ஆதரவோடும் நன்கு வளர்ந்தன. இந்நிறுவனங்களின் பங்களிப்புகள் பெருமைக்குரியவை.

நேருவின் அணு ஆயுதக் கொள்கை

நேரு அணு ஆற்றலுக்கு நண்பன் ஆனால் அணு ஆயுதத்துக்கு எதிரி. அவர் அணு ஆற்றலை ஆக்கப்பூர்வமான அமைதியான வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதை ஆர்வத்துடன் ஆதரித்தார்.அதன் மூலம் ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கங்களை எளிதில் நிறைவேற்ற முடியும் என்று நம்பினார். அவர் மகாத்மா காந்தியின் அகிம்சை வழியிலிருந்து விலகிச் செல்லத் தயாராயில்லை. ஹோமி பாபா, சாந்தி சுவரூப் பட்நாகர், வி.கிரு‘ணன் போன்ற அணு விஞ்ஞானிகளின் தொழில்நுட்ப அறிவையும் திறமையையும் இந்திய அணு ஆற்றல் கொள்கையை வகுக்கவும் செயல்படுத்தவும் பயன்படுத்தினார்.

1954-1963க்கு இடைப்பட்ட காலத்தில் அணு சக்தியை அமைதி வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான உள்கட்டமைப்பை- ஆராய்ச்சி, பயிற்சி, பரிசோதனை, செயல்படுத்தல் - உறுதிப்படுத்தினார். நேரு மேலை உலகுக்கு வெளியே மிகச் சிறந்த அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி - பயிற்சி முறைகளில் ஒன்றை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார் ஸ்டீபன் கோகன்(Stephen P.Gohen).

நேரு அணு ஆயுதங்களை பயங்கர அழிவு இயந்திரங்களாக மனித குலத்தின் விரோதி’யாகக் கருதினார். மனித குலத்தை அழிக்கவல்ல ஆற்றல் கொண்ட இவ்வாயுதங்களை வெறுத்தார். இந்திய அணு ஆராய்ச்சியை சர்வதேச அணு ஆற்றல் முகமை (International Atomic Energy Agency) யின் மேம்பார்வைக்கு உட்படுத்த உடன்பட்டார். சீனா அணு ஆயுத நாடாக மாறக்கூடும் என்று எதிர்பார்த்த அமெரிக்கா, இந்தியாவும் அத்தகைய நாடாக

வேண்டும் என்ற யோசனையை நிராகரித்தார். அணு ஆயுதத்தைத் தயாரிக்கக்கூடிய ஆற்றல் இந்தியாவுக்கு இருந்தும், அப்பரிசோதனையைச் செய்ய நேரு மறுத்துவிட்டார்.

நேருவின் அணு ஆயுதக் கொள்கையின் சிறப்புக் கூறுகள் வருமாறு:

- அணு ஆற்றலை அமைதி வளர்ச்சித் திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்
- அணு ஆயுதமாக்கலையும் (ரேஉடநயச றுநயிழளையவழைெ) பேரழிவு ஆயுதங்களைத் (றுநயிழளெ ழக ஆயளள னநளவசரஉவழைெ) தயாரிப்பதையும் இந்தியா எதிர்க்கும்
- உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான அணு ஆய்தப் படிக்குறைப்பை இந்தியா ஆதரிக்கும்
- அணுத் தொழில்நுட்பத்தைப் பெறவும், பெருக்கவும், அமைதிக் காரணங்களுக்காகப் பயன்படுத்தவும் இந்தியா உறுதியோடு செயல்படும்
- இந்தியா ஆக்கப்பூர்வமான அணு சக்தி தொழில்நுட்பத்தில் தன்னிறைவு பெறும்
- அணு ஆற்றல் உற்பத்தி, கட்டுப்பாடு, பாதுகாப்பு, பயன்பாடு பற்றிய சர்வதேச மேற்பார்வைக்கு இந்தியா ஆதரவளிக்கும், 1963ன் ஐ.நா.அவை அமைதிக்கு அணுத் திட்டம்' (யுவழஅள கழச ‶நயஉந ‶சழபசயஅஅந) மற்றும் பகுதிப் பரிசோதனைத் தடை உடன்படிக்கை' (‶யசவயைட வுநளவ டீயெ வுசநயவல) யைக் கொண்டு வந்ததற்கு இந்தியாவும் காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நேருவின் வெளிப்படையான, தெளிவான, ஆக்கப்பூர்வமான அணு ஆய்தக் கொள்கை உலக நாடுகளால் பாராட்டப்பட்டது.

## விண்வெளி ஆராய்ச்சி (Outer Space Research)

நேருவின் ஆட்சிக் காலத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கான துவக்கமே விண்வெளி ஆராய்ச்சி இந்திய தேசியக் குழு (ஐனெயைெ யேவழையெட ஊழஅஅவைவநந ழெ ளுியஉந சுநளநயசஉா) ஆகும். அக்குழு விண்வெளியை அமைதித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவது பற்றிய கொள்கை முடிவெடுக்க மத்திய அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியது. கேரளாவில் விண்வெளி நிறுவனத்தின் (யேவழையெட யுநசழயெரவைஉயட யனெ ளுியஉந யுனஅைளைவசயவழைெ) துணையோடு ஒரு ஏவுகணை நிலையத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்க்கொள்ளப்பட்டது. செயற்கைக் கோள்களின் வழியாக செய்தித் தொடர்பு ஏற்படுத்துவதற்கான வசதிகளைப் பெருக்குவதற்கும் திட்டமிடப்பட்டது.

தொழில்நுட்பக் கல்வி(Technical Education)

தொழில்நுட்பக் கல்வி பெற்றோர் இன்றி இந்தியாவைத் தொழில்மயமான நாடாக்க முடியாது. எனவே, வெளிநாடுகளின் உதவியோடு காரக்பூர், பம்பாய், சென்னை, கான்பூர், டெல்லி நகரங்களில் இந்திய தொழில்நுட்பக் கல்லூரிகள் (ஐனெயைெ ஐளெவவைரவநள ழக வுநஉாழெடழபல) நிறுவப்பட்டன. இவையன்றி பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், தொழில் பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கானோர் தொழிற்கல்விப் பட்டம், பட்டயங்கள் பெற்றனர்.

**உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக**

1. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம்
2. இரண்டாவதுஐந்தாண்டுத் திட்டத்தின் கூட்டுறவு விரிவாக்கம்

## 13.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. 1951 ஜுலை மாதம் திட்டக் கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்டவரைவை சமர்ப்பித்தது. நேரு அரசாங்கம் பலதரப்பு விமர்சனங்களையும் பரிசீலித்த பின் 1952 டிசம்பர் மாதம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெளியிட்டது. முதல் திட்டம் சுதந்திர இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான "கன்னிமுயற்சி" ஆகும். அதன் மூல நோக்கங்கள் இரண்டு:

- உலகப் போர்களாலும், இந்தியப் பிரிவினையாலும் உருக்குலைந்து போயிருந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைத்தல்.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வளமிக்கப் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கல்.

2. இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு விரிவாக்கத்துக்கு (Expansion of Cooperative Sector) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1956 - ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய தொழில் கொள்கைக் தீர்மானம்' பொது மற்றும் தனியார் துறைகளில் கூட்டுறவு முறையைக் கையாள வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டியது. குறிப்பாக விவசாயம், சிறுதொழில், வினியோகம், கட்டுமானம், அத்யாவசியப் பொருள்கள் வழங்கல் ஆகிய துறைகளில் கூட்டுறவு முறை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதில் நேரு அரசாங்கம் குறியாக இருந்தது. அரசாங்க வர்த்தகத்துக்கு முன்னுரிமை

வழங்கப்பட்டது. கூட்டுறவுத் துறை (Co-operative Sector) யை ஊக்குவிப்பதற்கு எப்போதுமில்லாத அளவுக்கு முதலீடு செய்யப்பட்டது.

## 13.4 சுருக்கம்

அணுசக்தி ஆய்வுக்காகப் பல பல்கலைக்கழக மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு தாராளமாக அரசாங்க நிதி உதவி வழங்கப்பட்டது. உதாரணமாக, பம்பாயில் உள்ள டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (Tata Institute of Fundamental Research) அணுசக்தி அறிவியல் மற்றும் கணிதவியலில் தலை சிறந்த தேசிய உயராய்வு மையமாகத் திகழ்ந்தது. அதேபோன்று கல்கத்தாவில் உள்ள சாஹா அணுசக்தி இயற்பியல் நிறுவனம் (ளுயாய ஐளெவவைரவந ழக ரேஉடநயச ீாலளளைஉள) அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆய்வுக் கூடம் (Physical Research Laboratory)> காஷ்மீரில் குல்மார்க்கிலும், தமிழ்நாட்டில் கொடைக்கானலிலும் நிறுவப்பட்ட ஆய்வுக் கூடங்கள், தாராப்பூர் அணுசக்திக் கூடம் ராஜஸ்தானில் ராணா பிரதாப் சாகரில் உள்ள அணுசக்திக் கூடங்கள், தமிழ்நாட்டில் கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவை மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடும் ஆதரவோடும் நன்கு வளர்ந்தன

## 13.5 முக்கிய கருத்துப்படிமங்கள்

வேலை வாய்ப்பைப் பெருக்குதல் மற்றும் வறுமையை ஒழிப்பு ஆகியவற்றுக்காக விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தல். விலைவாசியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதே நேரத்தில் வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல் அனைவருக்கும் குறிப்பாக பின்தங்கிய சமூகத்தினருக்கு உணவு மற்றும் சத்துணவை உறுதி செய்தல். அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அடிப்படை சுகாதார வசதிகள் அடிப்படை கல்வி தங்குமிடம் ஆகியவற்றை குறித்த கால வரையறைக்குள் உறுதி செய்தல். மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்.அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பின் மூலம் வளர்ச்சிப் பணிகளின் காரணமாக சுற்றுச்சூழல் பாதிக்கப் படாமல் காத்தல். பெண்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய அட்டவணை இன மக்கள் பிற பின் தங்கிய இனத்தவர்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்குதல் 8 பஞ்சாயத்து ராஜ் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்க ஊக்கப்படுத்துதல். சுய சார்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துதல்.

## 13.6 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. புதிய பஞ்சாயத்து ஆட்சி முறை
2. கூட்டுறவு முறை விவசாயம்
3. சோ'லிச பாணி சமுதாயம்

**நெடுவினா**

1. நேருவின் அணு ஆயுதக் கொள்கை
2. ஐந்தாண்டு திட்டம் விவரி

## 13.7 மேலும் படிக்க


1. B.S Baliga, - Studies in Madras Administration, 2 Vols.
2. Edgar Thurston - Castes and Tribes in South India
3. Baker, C.J – The Politics of South India
4. Yesudhasan.V.S. Isaac & -History of Tamil society and culture, Since Jaya Dhas.R 1336 A.D.,10 John Gilbert.G – Contemporary History India.

# அலகு-14 இட ஒதுக்கூட்டு கொள்கை

**அமைப்பு**

14.0 அறிமுகம்

14.1 சமூகநீதி

14.1.1 சமூக நீதி இயக்கம்

14.1.2 நீதி கட்சியும் சமூக நீதியும்

14.1.3 அரசியலமைப்பு சட்டத்தின் சமூகநீதி

14.2 சமூக நலத் திட்டங்கள்

14.2.1 மாநில சமூக நல வாரியம்

14.3 நலத்திட்டங்கள்

14.3.1 பெண்கள் நலத்திட்டங்கள்

14.3.2 பெண்கள் முன்னேற்ற கழகம 1986

14.3.3 பெண்கள் காவல் நிலையங்கள்

14.3.4 பெண்களுக்கு சட்டங்கள் பாதுகாப்பு

14.4 முதியோர் சமுதாய பாதுகாப்பு

14.4.1 ஐவகை திட்டங்கள்

14.4.2 மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு திட்டம்

14.5 இட ஒதுக்கீடு கொள்கை நினைப்பும், நடைமுறையும்

14.5.1 இட ஒதுக்கீடு கொள்கை

14.6 தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு கொள்கை

14.6.1 தி.மு.க அரசு

14.6.2 அ.இ.அ.தி.மு.க அரசு

14.6.3 வன்னியர் போராட்டம்

14.6.4 பாலேடு அடுக்கு

14.7 இட ஒதுக்கீட்டுக் எதிர்ப்பு

14.7.1 இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவு

14.7.2 சாதிக் கட்சிகள்

14.8 சாதி ஒழிப்பா? தீண்டாமை ஒழிப்ா?

14.8.1 சாதி அரசியல்

14.8.2 சாதி ஒழிப்பு

14.8.3 தீண்டாமை ஒழிப்பு

14.9 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

14.10 சுருக்கம்

14.11 முக்கிய கருத்துப்படிமங்கள்

14.12 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

14.13 மேலும் படிக்க

## 14.0 அறிமுகம்

மனிதன் தன்னலம் மிக்கவன், அதேசமயம் கூடிவாழும் குணத்தீனன், சிந்திக்கத் தெரிந்தவன். பலதரப்பட்ட மக்கள் கூடிவாழும் அமைப்பே சமுதாயம் ஆகும். மக்களுக்கு நீதி வழங்குவதே சமூக நீதி. பொதுவாக சமூக நீதி என்ற சொற்றொடர் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், ஒற்றுமை ஆகிய அடிப்படையில் அமைக்கப்படும் சமுதாய அமைப்பையோ அல்லது நிறுவனத்தையோ குறிக்கும். இத்தகைய சமுதாயத்தில் மனித உரிமைகள் காப்பாற்றப்படும், மக்கள் மக்களாக மதிக்கப்படுவர், அனைவரும் சமமாக கருதப்படுவர், கருதப்பட வேண்டும். சமூக நீதியின் மற்றொரு பரிமாணம் பொருளாதார விடுதலை (நஉழழெஅஉை நஅயஉெியவழைெ)யும் பொருளாதார சமத்துவமும் ஆகும். சுருங்கக் கூறின், சமூக சகோதரத்துவமும், பொருளாதார சமத்துவமும் சமூக் நீதி என்ற நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

## 14.1 சமூக நீதி

### 14.1.1 சமூக நீதி இயக்கம்

சமூக நீதியை நிலைநாட்ட உலகில் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முக்கியமானது அமெரிக்காவில் தோன்றிய பசுமைக் கட்சி இயக்கம்**(புசநநெ ியசவல ஆழளநஅநவெ)**ஆகும் (1876). அந்த இயக்கம் மக்களின் சமூக-பொருளாதார- மனித உரிமைகள்-பொது சுகாதாரம்-உழவர் நலன் போன்றவற்றுக்கு நீதி கேட்டுப் போராடியது. இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த பத்திரிகையும், புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

### 14.1.2 நீதிக்கட்சியும், சமூக நீதியும்

தமிழ் நாட்டில் 1916 நவம்பர் 20 ஆம் தேதி தோற்றுவிக்கப்பட்டது தென்னிந்திய மக்கள் சங்கம்(ளுழரவா ஐனெயைெ டுடைநசயட குநனநசயவழைெ). அது வெளியிட்ட நீதி (துரளவஉைந)என்ற ஆங்கில பத்திரிக்கையின் பெயரால் நீதிக்கட்சி (துரளவஉைந ியசவல)என்று மக்கள் செல்வாக்கு பெற்றது. சமூக நீதியைக் குறிக்கோளாகக் கொண்ட இக்கட்சி பிராமணரல்லாதாருக்குக் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் கட்டாய இலவசத் தொடக்கக் கல்வி, மதிய உணவுத் திட்டம், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை, தொழிலாளர் நலன் பெண்களுக்கு வாக்குரிமை இந்து அறநிலையப் பாதுகாப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலப்பட்டா, பஞ்சமர்கள் என்று அழைக்கப்பட்டோரை ஆதி திராவிடர் எனப் பெயர் மாற்றம் செய்தது யாவற்றுக்கும் மேலாக சாதிவாரி இட ஒதுக்கீடு போன்ற பல புரட்சிகரமான முற்போக்கு சமூகநலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதாவது,

நீதிக்கட்சி சமூக நீதி குறிக்கோளுக்கு செயல்வடிவம் கொடுத்தது.

### 14.1.3 அரசியலமைப்புச் சட்டத்தில் சமூக நீதி

1950 ஜனவரி 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்த இந்திய அர்சியலமைப்புச் சட்டம் இந்திய மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகளை (குரனெயஅநவெயட சுபைாவள) வழங்கியது. இச்சட்டத்தின் வழிகாட்டு விதிகள்(னுசைநஉவளைந ீசைஉெிடநள)மக்கள் நல அரசை உருவாக்கல், வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் பொருளாதார உடைமைகளைப் பகிர்ந்து அளித்தல் ஆண்-பெண் வேறுபாடின்றி சம உழைப்புக்குச் சம ஊதியம் வழங்கல்,வேலை வாய்ப்புகளை உருவாக்கல், 14 வயது வரை குழந்தைகளுக்குக் கட்டாய கல்வி கொடுத்தல், முதியோருக்கும், நோயாளுக்கும் உதவி செய்தல் கலாச்சாட வசதிகளை மேம்படுத்தல் கிராமப் பஞ்சாயத்துக்களைப் புதுப்பித்தல், குடிசைத் தொழில்களை ஊக்குவித்தல் தாழ்த்தப் பட்டோர் நிலையை உயர்த்தல் போதைப் பொருட்களைத் தடை செய்தல் வரலாறு மற்றும் கலாச்சார முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாத்தல் போன்ற சமூக நலத் திட்டங்களை அடிக்கோடிட்டுக் காட்டின. மத்திய-மாநில அரசுகள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவை. வழிகாட்டு விதிகள் சமூக நலத் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான அளவுக்கோலாகும். இந்த அளவுகோலைக் கொண்டு தமிழக அரசின் சமூக நலத் திட்டங்களையும் அவற்றின் சிறப்பையும் கண்டறிய முடியும்.

## 14.2 சமூக நலத் திட்டங்கள்

### 14.2.1 மாநில சமூக நல வாரியம்

தமிழ் நாட்டில் சமூக நலத் திட்டங்கள் கட்சி வேறுபாடின்றி நிறைவேற்றப்படுகின்றன. இதைப் பொருத்துவரை கட்சி ஆட்சிகளிடையே ஆரோக்கியமான போட்டி நிலவுகின்றது என்றே கூற வேண்டும். இந்தியா விடுதலை பெற்ற பின் தமிழக அரசு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களில் சமுதாய சமத்துவத்துக்காகவும் இவர்களுக்கான சமூக நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதற்காகவும் பிரத்யேகமாக மாநில சமூக நல வாரியம் உருவாக்கப்பட்டது.(1953).

## 14.3 நலத் திட்டங்கள்

இவ்வாரியம் ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண்கள், குழந்தைகள், அனாதைகள் போன்றோருக்கான பல நலத் திட்டங்களை நிறைவேற்றியது. அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியமான சுகாதார நல வாழ்வுக்குத் திட்டமிடப்பட்டது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், நடமாடும் மருத்துவக் குழுவின் சுகாதார மையங்கள் நோய்த் தடுப்பு மற்றும் நோய் நீக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டன. கிராமப் பொது சுகாதாரத்துக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

துவக்கப்பட்டது(1956). ஆதி திராவிடர் துணைத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் நடைமுறையில் உள்ளன. அதேபோன்று, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (1982), மாநில சிறுபான்மையினர் ஆணையம் செயல்பட்டு வருகின்றன. பிறமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் அறிமுகப்படுத்திய சிறப்பு சமூக நலத் திட்டங்களாவன; ராஜாஜி பின்பற்றிய மதுவிலக்குத் திட்டம், கைத்தொழில் பாதுகாப்புத் திட்டம், புதிய வேலைவாய்ப்புக் கல்வித் திட்டம், காமராசர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டம், சீருடை வழங்கும் திட்டம், உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வித் திட்டம் அண்ணாதுரை அறிமுகப்படுத்திய விதவை மறுமண உதவித் திட்டம் கருணாநிதி நடைமுறைப்படுத்திய புகுமுக வகுப்பு வரை இலவசத் கல்வி, மதிய உணவில் முட்டை, சமத்துவபுரம், வருமுன் காப்போம் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், நமக்கு நாமே திட்டம், இரண்டு ஏக்கர் இலவச நிலத் திட்டம், படி அரிசித் திட்டம், வேலையில்லார் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், குடிசைகளுக்குப் பதில் காங்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், எம்.ஜி.ஆர் செயல்படுத்திய சத்துணவுத் திட்டம், மேல்நிலைப் பள்ளித் திட்டம், இலவச காலணி வழங்கும் திட்டம், சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், ஜெயலலிதா அறிமுகப்படுத்திய தொட்டி குழந்தை திட்டம், மாணவர்களுக்கு இலவச சைக்கிள் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், கோவில்களில் அன்னதான திட்டம்.

### 14.3.1 பெண்கள் நலத் திட்டங்கள்

ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பெண்கள் இலக்கியத்தில் போற்றப்பட்டு நடைமுறை வாழ்க்கையில் பல்வேறு கொடுமைகளுக்கும் அநீதிக்கும் ஆளாக்கப்படுகின்றனர். பெண்கள் பொருளாதாரத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆண்களை சார்ந்திருப்பது, பரம்பரை சொத்தில் பங்கின்மை, விதவை மறுமண மறுப்பு, வரதட்சணைக் கொடுமை, கல்வி மற்றும் மனித உரிமைகள் மறுக்கபடல் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்குப் பலியாகின்றனர்.

தமிழ் நாட்டு வரலாற்றில் அவ்வப்போது பெண்கள் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கணவனை இழந்த பெண் எரிக்கப்பட்ட பழக்கம் ஒழிக்கப்பட்டது (1829). விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது (1856). சாரதா சட்டம் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்தது (1929). பெண்களுக்கு மூதாதையர் சொத்தில் சம பங்கு உரிமை வழங்கப்பட்டது (1956). வரதட்சனை தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது(1961). தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது (1992).

பெண்களுக்கென பல சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இவையன்றி தமிழக அரசு பின்பற்றும் முக்கிய நலத் திட்டங்களாவன ஈ.வெ.ரா மணியம்மையார் நினைவு விதவைப் பெண்களின் மகளுக்கு திருமண உதவித் தொகை,டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைப் பெண் மறுமண உதவித் தொகை, அன்னை தெரசா நினைவு அனாதைப் பெண்களுக்கு உதவித் தொகை, கலப்புத் திருமண உதவித் திட்டம், மகப்பேறு உதவித் திட்டம், மகளிர் ஆணையம் மூலம் பெண்கள் உரிமைகள் பாதுகாப்பு, ஏழை விதவைகள், ஆதரவற்ற பெண்கள் பாதுகாப்புக்கான சேவை இல்லங்கள்.

**14.3.2 பெண்கள் முன்னேற்றக் கழகம்,1986**

தமிழ் நாட்டில் 1986-87 ஆம் ஆண்டு பெண்கள் முன்னேற்றக் கழகம் அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. இக்கழகம் அமைக்கப்பட்டதன் நோக்கம் சமுதாயத்தில் மிகவும் பிந்தங்கிய நிலையில் உள்ள பெண்கள் வாழ்க்கையில் முன்னேற வாய்ப்பளித்தலாகும். இந்த கழகத்தின் பணிகள்:

- பெண்களைத் தொழில் முனைவோர்களாக்குவது
- பெண்களுக்குத் தொழில் சம்மந்தப்பட்ட ஆலோசனைகளைக் கூறுவது
- பெண்கள் பொருட்களை சந்தையில் வாங்க, விற்க பயிற்சி அளித்தல்
- பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறுவதற்காக பயிற்சி முகாம்கள் அமைத்து பயிற்சி தொழில்திறன் பயிற்சி அளித்தல்
- கூட்டுறவு அமைப்புகள் நடத்துவதில் ஊக்கமளித்து ரே‘ன் கடைகள், சிறப்பு அங்காடி, துணிமணிக் கடைகள் போன்றவற்றைப் பெண்களே பொறுப்பேற்று நடத்த வாய்ப்பளித்தல்
- பெண் கல்வியை ஊக்குவித்தல் மற்றும் குடும்ப நலத் திட்டம், குழந்தைகளைப் பராமரிக்கும் முறை, கர்ப்பிணிகளுக்கு சத்துணவு போன்றவற்றுக்கு உதவி புரிதல்.

**14.3.3 பெண்கள் காவல் நிலையங்கள்**

**தனிச் சிறப்பு**

தமிழ் நாட்டு காவல்துறை 150 ஆண்டு கால பழமை வாய்ந்தது. இந்தியாவில் தமிழகத்தில் 5 வது பெரிய காவல்துறை செயல்படுகிறது. அதுமட்டுமல்ல. நாட்டிலேயே பெண் காவலர்கள் அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டில் தான் உள்ளனர். தமிழ் நாட்டில் தான் பெண் காவல் நிலையங்கள் அதிக எண்ணிக்கையில் செயல்படுகின்றன. அதேபோன்று, முதலாவது சிறப்பு பெண் பட்டாலியன் காவல் பிரிவும், முதல் பெண்

கமாண்டோ பிரிவும் உள்ள இடம் தமிழ்நாடு தான். இது தமிழ்நாட்டின் தனிச்சிறப்பாகும்.

**பணிகள்**

தமிழ்நாட்டுப் பெண் காவல் நிலையங்கள் மேற்கொள்ளும் பல்வேறு பணிகளாவன்

- பெண்கள், குழந்தைகள் தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடித்தல்
- பாதை தவறிய, காணாமல் போன பெண்களை மீட்பது
- பெண் குற்றாவாளிகளை கண்டுபிடித்து, கைது செய்து, சிறையிலடைத்தல்
- இளம் சிறார் பாலின குற்றங்களைக் கண்டுபிடித்தல்
- பெண்கள் கூட்டம், ஊர்வலம் நடத்தும் போது சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல்
- போராட்டம் நடத்தும் பெண்களுடன் பேசி தீர்வு காணல்
- பெண் பிரபலங்கள் வரும் போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்
- திருவிழாக்கள், கேளிக்கை இடங்கள், சுற்றுலா மையங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல்
- போக்குவரத்து சீரமைப்புப் பணிகளுக்கு உதவுதல்
- பரத்தையர் இல்லங்களில் உள்ள பெண்களை மீட்டு, அவர்களைப் பாதுகாப்பு இல்லங்களில் சேர்த்தல்.

### 14.3.4 பெண்களுக்கு சட்டப் பாதுகாப்பு

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்-பெண் சமத்துவத்தை நடைமுறைப்படுத்தவும், பாரம்பரியப் பிற்போக்கு நிலையிலிருந்து பெண்களை முற்போக்குப் பாதையில் பயணிக்கச் செய்யவும், அவர்களது சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் பல சட்டங்கள் உள்ளன. அவற்று: முக்கியமானவை:

- சிறப்புத் திருமண சட்டம் (1954)
- இந்து திருமணச் சட்டம் (1955)
- இந்து வாரிசுரிமைச் சட்டம் (1956)

- இந்து சுவீகாரம் மற்றும் பராமரிப்புச் சட்டம்(19565)
- குழந்தை திருமணத் தடுப்புச் சட்டம்(1956)
- மகப்பேறு சலுகைகள் சட்டம் (1961)
- வரதட்சணை தடுப்புச் சட்டம் (1961)
- மருத்துவ முறை கருகலைப்பு சட்டம்(1971)
- சம ஊதியச் சட்டம் (1976)
- குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் (1984)
- ஒழுக்கமற்ற செயல் தடுப்புச் சட்டம் (1986)
- கூடா உறவில் பெண்களை சித்தரிக்கும் தடுப்புச் சட்டம் (1986)
- உடன்கட்டை ஏறுதல் தடுப்புச் சட்டம்(1987).

## 14.4 முதியோர் சமுதாயப் பாதுகாப்பு

### 1.4.1 ஐவகைத் திட்டம்

முதியோர் தங்களது வாழ்நாள் முழுவதும் ஓயாது உழைத்து ஓய்ந்தவர்கள். வீட்டுக்காகவும், நாட்டுக்காகவும் பாடுபட்டவர்கள். இவர்களின் சமூக நலப் பாதுகாப்புக்கென கொண்டு வரப்பட்ட திட்டங்களாவன:

- முதியோர் ஓய்வூதிய பொதுத் திட்டம் (1962)
- உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம் (1974)
- ஆதரவற்ற விதவைகளுக்கான ஓய்வூதியம் (1975)
- ஆதரவற்ற விவசாய தொழிலாளார்களுக்கான ஓய்வூதியம் (1981)
- கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியம் (1986).

இந்த 5 வகையான சிறப்புத் திட்டங்களும் முதியோர்களை மையப்படுத்தியவையாகும்.

### 14.4.2 மாற்றுத்திறனாளிகாள் மறுவாழ்வுத் திட்டம்

தனி இயக்குநகரம்

1992 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளர்காளின் மறுவாழ்வுக்கான தனியே

ஒரு இயக்குநகரம் (னுசைநஉவழசயவந)உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் உடல் ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்காக தமிழ் நாட்டில் 25 பிரத்யேகப் பள்ளிகாள் துவக்கப்பட்டன. இப்பள்ளிகளில் இக்குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, உணவு, உறைவிடம், உடை, உதவித் தொகை வழங்கப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்காக கல்வி நிறுவனங்களிலும், அரசாங்க வேலை வாய்ப்புகளிலும் முழு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மத்திய அரசின் உதவியொடு இவர்களுக்கான மறுவாழ்வு திட்டம் நடைமுறையில் உள்ளது.

## 14.5 இட ஒதுக்கீட்டுக் கொள்கை: நினைப்பும், நடைமுறையும்

### 14.5.1 இட ஒதுக்கீட்டுக் கொள்கை

கடந்த 2500 ஆண்டு காலமாக இந்தியாவில் படிநிலை சாதி முறை ஆழமாக வேரூன்றி வளர்ந்து விட்டது! தீண்டாமை இச்சாதி முறையில் மனிதாபிமானமற்ற, அருவருக்கத்தக்க, காட்டு மிராண்டித்தனமான வெளிப்பாடாகும். இவ்வரலாற்றுக் கொடுமையிலிருந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டம் இவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்காக. இட ஒதுக்கீட்டுக் கொள்கையை (சுநளநசஎயவழைெ ீழடiஉல) அறிமுகப்படுத்தியது. அரசியலமைப்புச் சட்டகர்த்தாக்கள் இந்த இட ஒதுக்கீடு 10 ஆண்டு காலத்துக்கு மட்டுமே (1950-1960) பின்பற்றப்பட வேண்டும் என்று காலக்கெடு விதித்தனர். ஆனால் அரசியல்வாதிகள் அரசியல் ஆதாயத்துக்காக இக்காலக் கெடுவைப் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை பரிசீலித்து, புதுப்பித்து, விரிவுபடுத்தி, நிரந்தரமாக்கிவிட்டனர்! வெறுப்புக்குரிய, சமனற்ற, சமத்துவமற்ற சாகாவரம் பெற்றுவிட்டது.

## 14.6 தமிழ்நாட்டில் இடஒதிக்கீட்டுக் கொள்கை: சாதி அரசியல்

### 14.6.1 தி.மு.க அரசு

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு வரலாற்றோடு ஒன்றி நிற்கிறது. இந்தியா விடுதலை அடைவதற்கு முன் தமிழ் நாட்டை ஆட்சி செய்த நீதிக்கட்சி இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு அடிக்கல் நாட்டியது. விடுதலைக்குப் பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் தமிழ் நாட்டில் இட ஒதுக்கீடு 41% ஆக பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 16% பிற பிற்பட்ட வகுப்பாருக்கு 25% - இருந்தது. 1971 ஆம் ஆண்டு சட்டநாதன் கமி‘சன் (ளுயவவயயெவாயெ ஊழஅஅளைளழைெ) பரிந்துரைப்படி இட ஒதுக்கீட்டு சதவிகிதம் மாற்றப்பட்டு பிற்பட்ட வகுப்பாருக்கு 16% மிகவும் பிற்பட்ட வகுப்பாருக்கு 17% என்று பின்பற்றப்பட்டது. தி.மு.க் அரசு பிற பிற்பட்ட வகுப்பாருக்கான இட ஒதுக்கீட்டை 31% ஆகவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டை 18% ஆகவும் உயர்த்தி மொத்த

இட ஒதுக்கிட்டை 49மூ ஆக உயர்த்தியது.

### 14.6.2 அ.தி.மு.க அரசு

அதிமுகவின் எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் ஆண்டு வருமான அடிப்படையில் சாதிப் பாகுபாடின்றி அனைவருக்கும் சமூக நீதி வழங்கும் பொருட்டு இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வந்தது (1980). இப்புரட்சித் திட்டத்தைத் திமுகவினரும், பிற எதிர்க்கட்சியினரும் கடுமையாக எதிர்த்தனர். எதிர்ப்பை உறுதியுடன் எதிர்கொள்ள முடியாத அதிமுக அரசு அதன் புதிய இடஒதுக்கீட்டுக் கொள்கையை திரும்பப் பெற்றுக் கொண்டது! அதுமட்டுமல்ல. பிற பிற்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 50% ஆக அதிகரித்து மொத்த இட ஒதுக்கீட்டு 69% ஆக உயர்த்தியது.

### 14.6.3 வன்னியர் போராட்டம்

1989 ஆம் ஆண்டு சாதி அமைப்பான வன்னியர் சங்கம் மாநிலம் தழுவிய சாலை மறியல் போராட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டது. அவர்கள் வன்னியர்களுக்கென மாநில அரசாங்க வேலைகளில் 20மூ மற்றும் மத்திய அரசாங்கப் பணிகளில் 2மூ இட ஒதுக்கீடு கேட்டுப் போராடினர். இப்போராட்டத்துக்குப் பணிந்த திமுக அரசு பிற பிற்பட்ட வகுப்பாரை

- பிற பிற்பட்ட வகுப்பார் (ழுவாநச டீயஉமறயசன ஊடயளள)
- மிகவும் பிற்பட்ட வகுப்பார் (ஆழளவ டீயஉமறயசன ஊடயளள) என இரண்டாகப் பிரித்து முறையே 30மூ, 20மூ என்றும், பழங்குடியினருக்கு 1மூ எனவும் மொத்த இட ஒதுக்கீட்டை 69மூ ஆக அதிகரித்தது!.

### 14.6.4 பாலேடு அடுக்கு

1992 நவம்பர் 16 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் மண்டல் கமி‘சன் இட ஒதுக்கீடு பற்றிய வரலாற்று முக்கியத்துவமிக்க தீர்ப்பில்

- பிற்பட்ட வகுப்பாரிடையே சமூக, கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேறிய பாலேடு அடுக்கினரை (ஊசநயஅல டுயலநச) அதாவது இட ஒதுக்கீட்டின் பயனைப் பெற்றோரை விலக்கிவிட வேண்டும்
- அவ்வாறு ஒதுக்கப் பட்டோரைத் தவிர மீதமுள்ள பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்
- இட ஒதுக்கீடு 50மூ க்கு மேல் இருக்கக் கூடாது
- பிற்பட்ட வகுப்புகள் பட்டியலில் சேர்க்கப்படும் அல்லது விலக்கப்படும் வகுப்புகள் பற்றிய புகார்களை விசாரிக்க மாநில அரசாங்கம் ஒரு

அமைப்பை ஏற்படுத்த வேண்டும். இட ஒதுக்கீட்டின் அடிப்படை நோக்கம் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்பட்ட வகுப்பார் இட ஒதுக்கீட்டுப் பயனைப் பெற்று, சாதி வேறுபாடுகளைக் கடந்து சாதிகளற்ற சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்துவதாகும். இதறு மாறாக, பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்பட்ட வகுப்பினரில் இட ஒதுக்கீட்டின் முழுப் பயனையும் பெற்றுக் கொண்டு, கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நிலையில் உயர்ந்த பின்னரும் இட ஒதுக்கீட்டுப் பலன்களைத் தொடர்ந்து பெறுவதால் அவர்களைவுட மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளோர் அவ்வாய்ப்பினைப் பெற முடியாமல் போகின்றது. அதன் விளைவாக, முன்னேறியோர் மேலும் முன்னேற, பிற்பட்டோர் பிற்பட்ட நிலையிலேயே தேக்கமுற்றிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது சமூக அநீதி ஆகும். எனவே, பிற்பட்டோரில் முற்பட்டோர் விலகிக் கொண்டு எஞ்சிய பிற்பட்டோர் முன்னேற வழிவிட வேண்டும் என்பதற்காக உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பே, காட்டிய வழி, சமூக நீதிக்குக் காட்டிய வழியே பாலேடு அடுக்கு அளவுகோல் ஆகும். ஆனால் தமிழக அரசு உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

## 14.7 இடஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பு

1994 ஆம் ஆண்டு வாய்ஸ் (ஏழுஐஊநு) என்ற நுகர்வோர் மன்றத்தின் சார்பாக கே.எம்.விஜயன் தமிழக அரசின் 69மூ இடஒதுக்கீட்டுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த் உச்ச நீதிமன்றம் தமிழக அரசு 50மூ இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியது. தமிழக அரசு 69மூ இட ஒதுக்கீட்டை அரசியலமைப்புச் சட்டத்தின் 9வது அட்டவணையில் (9வுர் ளுஉாநனரடந ழக வாந உழளெவவைரவழைெ)சேர்த்து விட்டது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்வதற்காக புதுடெல்லி சென்ற கே.எம்.விஜயன் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்! அவர் தொடுத்த வழக்கு இன்னும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 2006 ஆம் ஆணு உச்ச நீதிமன்றம் மீண்டும் தமிழக அரசை இடஒதுக்கீட்டுப் பயங்களிலிருந்து பாலேடு அடுக்குப் பிரிவினரை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. தமிழ்நாடு அரசாங்கத்தின் 69மூ இடஒதுக்கீடு பற்றிய இறுதி முடிவு உச்ச நீதிமன்றத்தின் 9 உறுப்பினர்களைக் கொண்டது அரசியலமைப்புச் சட்ட பெஞ்சின் தீர்ப்பைப் பொறுத்தே உள்ளது.

### 14.7.1 இடஒதுக்கீட்டுக்கு ஆதரவு

பிறப்பு அல்லது வர்ண அடிப்படையிலான சாதிமுறை சங்க காலத் திட்டங்கள் சமுதாய அமைப்பு அல்ல. அது சமயம் சாரா இயற்கையானம் இயல்பான திணைவாரியான வகுப்பு முறை. படிமுறை சாதி அமிப்பு

(ர்நைசயசஉாைஉயட ஊயளவந ளுலளவநஅ)செயற்கையானது, போலியானது, தமிழ்ச் சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட ஒன்று. இந்திய விடுதலைக்காகப் போராடிய தலைவர்கள் சாதிகள் அற்ற சமத்துவ சமுதாயத்தைக் காண விரும்பினர். அவர்களும், சமூக சீர்திருத்தவாதிகளும், இயக்கங்களும் சாதியை சமுதாய ஒற்றுமைக்குத் தடையாகவே கருதினார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நீதிக்கட்சி சமூக நீதியைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டது. பெரியார் ஈ.வெ.ராமசாமி மக்களிடையே பகுத்தறிவைப் பரப்பி சுயமரியாதை உணர்வை உருவாக்கி, நாத்திகத்தை வளர்த்து, சமதர்ம சமத்துவ சமுதாயத்தைக் காண்பதற்காகத் தனியே ஒரு இயக்கத்தையே நடத்தினர். நீதிக்கட்சியைக் கைப்பற்றி, அதைத் திராவிடக் கழகமாக உருமாற்றம் செய்து சமூக சீர்திருத்தத்துக்காக உழைத்தார்.

பெரியார் போட்டுக் கொடுத்த சமூக சீர்திருத்தப் பாதையில் பயணித்த திராவிடக் கட்சிகள்- திமுக, அதிமுக - அப் பாதையிலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டன. முதலமைச்சர்கள் அண்ணாதுரையும், எம்.ஜி.ஆரும் இதற்கு விதிவிலக்கு. அண்ணா சாதி முறைக்கு எதிரானவர். சாதிப் பாகுபாட்டைக் களைவதி அக்கறை கொண்டவர். ஆனால் சாதிபேதமற்ற சமுதாயம் என்ற கனவை நனவாக்குவதற்கு முன் அவர் இயற்கை எய்தினார். எம்.ஜி.ஆர் அவரது ஆட்சிக் காலத்தில் அரசாங்க வேலைகளுக்கும், கல்வி வாய்ப்புகளுக்கும் சாதிக்குப் பதில் ஆண்டு வருவாயை அளவுகோலாகக் கொள்ள வேண்டும் என்று அறிவித்தார். அவருக்கு முன்பும் பின்பும் ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள் அரசியல் ஆதாயத்துக்காக சாதிக் கட்சிகளை ஆதரித்து, தேர்தலில் அக்கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொண்டு ஆட்சி அமைத்து, சாதியின் அடிப்படையில் அமைந்துள்ள இடஒதுக்கீட்டுக் கொள்கையை முடிந்த அளவுக்கு விரிவுபடுத்தி சாதி அமைப்பு முறையை மேலும் பலப்படுத்தி சாசுவதமாக்கி விட்டனர்! இவ்விருவருமே உச்சநீதிமன்றம் உருவாக்கிக் கொடுத்த பாலேடு அடுக்கு அளவுகோலை ஏற்றுக் கொண்டு சமூக நீதியை நிலைநாட்டத் தயாராக இல்லை.

### 14.7.2 சாதிக் கட்சிகள்

தமிழ்நாட்டில் சாதிக் கட்சிகளின் முன்னோடியாகத் திகழ்பவர் பாட்டாளி மக்கள் கட்சியைத் தோற்றுவித்த மருத்துவர் ராமதாஸ். இவர் போட்டுக் கொடுத்த சாதிப் பாதையில் பயணிக்கும் கட்சிகள் தான் புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், மக்கள் தமிழ் தேசம், தேசிய நீதிக்கட்சி, தமிழ்நாடு முத்தரையர் சங்கம், கொங்கு நாடு மக்கள் கட்சி, அகில இந்திய சமத்துவக் கட்சி போன்ற சாதிக் கட்சி ∴ அமைப்புகள். இவை சாதியை சாகாமல் தாங்கிப் பிடிக்கும் தூண்கள்.

## 14.8 சாதி ஒழிப்பா ? தீண்டாமை ஒழிப்பா?

### 14.8.1 சாதிய அரசியல்

சங்க காலத்தில் மக்கள் நில இயல்பு மற்றும் தொழிலைச் சார்ந்து வகுப்புகளாக் பிரிந்திருந்தனர். பிறப்பின் அடிப்படையிலான செயற்கையான சாதிமுறை தமிழைகள் மீது திணிக்கப்பட்ட அமைப்பாகும். கி.பி.500 முதல் 900 வரை இச்செயற்கையான, சமனற்ற சாதிமுறை இருக்கமடந்தது; சாதி வேற்றுமை அதிகரித்தது; பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர் காலங்களில் இச்சாதிமுறை வேரூன்றி வளர்ந்து விருட்சமாயிற்று! வலங்கை-இடங்கை சாதிப் பூசல்களும், போராட்டங்களும் வன்முறை நிகழ்ச்சிகளாயின. 19 ஆம் நூற்றாண்டில் இருக்கமாக இருந்த சாதி முறை 20 ஆம் நூற்றாண்டில் தளர்ச்சி அடைந்தது. எனினும் சாதிமுறை இடஒதுக்கீட்டுக் கொள்கையால் புத்துயிர் பெற்று புதுவீரியத்துடன் பார்த்தீனியம் நச்சுச் செடிகளாக தமிழகம் முழுவதும் பரவிவிட்டது! சாதீய அரசியல் கட்சித் தலைவர்களையும், தொண்டர்களையும், மக்களையும் ஆட்கொண்டு விட்டது.

### 14.8.2 சாதி ஒழிப்பு

தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு பக்கம் சாதிமுறை வளர்வதையும், மறுபக்கம் சாதி ஒழிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதையும் காணலாம். சமத்துவமற்ற சாதிமுறை ஒழிப்புக்கு உரக்கக் குரல் கொடுத்தார் திருவள்ளுவர். அவர் கல்வியும், ஒழுக்கமும் மட்டுமே ஒருவரது சமுதாய நிலையைத் தீர்மானிக்கிறது, பிறப்பு அல்ல என்று எடுத்துரைத்தார். ஒழுக்கமில்லாதவர்கள் மேற்குடியில் பிறந்தாலும் இழிந்தவர்களாகக் கருதப்படுவர். உயர்ந்த பண்பில்லாதவர்கள் தாழ்ந்தோர் என்பது வள்ளுவரின் உறுதியான கருத்தாகும். செய்கின்ற தொழிலால் மக்களிடையே உயர்வு தாழ்வு வேறுபாடுகள் இருக்கலாமேயன்றி, நிச்சயமாக பிறப்பால் அல்ல எனக் கூறி சாதி ஒழிப்புக்குத் தமிழ் நாட்டில் முதல் குரல் கொடுத்தவர் திருவள்ளுவர்தான்.

திருவள்ளுவரைத் தொடர்ந்து நாலடியாரும் சமணர்களும் சாதி ஒழிப்பு முயற்சியை முன் கொண்டு சென்றனர். தமிழகத்தில் பக்தி இயக்கம் பலம் பெற்று நல்லொழுக்கம் என்பது இறையன்பே என்று தமிழர்களின் சிந்தனையை கற்பனைக் கடவுள் உலகு பக்கம் திசை திருப்பிய போது சித்தர்கள் வெகுண்டெழுந்தனர். ‘‘காணப்பா சாதிகுலம் எங்கட்கில்லை” என்று முழங்கினார் சிவவாக்கியர். :பறைச்சியாவதேதடா பணத்தியாவ தேதடா?’ ‘‘சாதிப் பிரிவினிலே தீ மூட்டுவோம்”; ‘‘சாதி பேதங்கள் சமயத் தோர்க்கே யல்லாது சற்சாதுக்களுக்கோ”; ”சாதி பேதம் இல்லை அகப்பேய் தானாக நின்றவர்க்கு” என்று கூறிப் பாய்ந்தனர் சித்தர்கள். சித்தர்களுக்கெல்லாம் சித்தராய்த் திகழ்ந்த வடலூர் வள்ளலார் ராமலிங்க அடிகளார் ‘‘நால் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா நவின்ற கலைச் சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே”

என்று எள்ளி நகையாடினார். அதுமட்டுமல்ல. வள்ளலார் ஒருபடி மேல் சென்று "இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை" என்றும் " சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திர சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்" எனக் கூறி சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சன்மார்க்கத்தில் சேர அழைப்பு விடுத்தார். வள்ளகார் சாஹி ஒழிப்புக்காகப் போராடினார்; உயிர்த் தியாகம் செய்தார்.

### 14.8.3 தீண்டாமை ஒழிப்பு

தமிழ்நாடு ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இந்தியாவை ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்கான போராட்டம் காட்டுத்தீ போல் பரவிற்று, போராட்டத் தலைவர்கள் தீண்டாமை ஒழிப்பின் மூலம் சாதி முறையை ஒழித்துவிடலாம் என்று நம்பினர். அவர்களது கவனம் சாதி ஒழிப்பிலிருந்து தீண்டாமை ஒழிப்பின் மீது நிலை கொண்டது. அவர்கக் நோயை ஒழிப்பதற்குப் பதில் நோயின் அறிகுறிகளைப் பற்றிக் கவலைப்பட்டனர். நோயைப் புணுகு பூசி குணப்படுத்திவிடலாம் என்ற மாயையில் தங்களை இழந்தனர். தமிழ் நாட்டில் தேச விடுதலைக்காகப் போராடிய தலைவர்களும் தீண்டாமை ஒழிப்புப் பாதையில் செல்வது சுலபமாக இருந்தது!

தேசத் தலைவர்களும், தமிழகத் தலைவர்களும் தீண்டாமை ஒழிப்பு என்ற குறுக்கு வழியில் சென்று சாதி முறையை ஒழித்து சமத்துவ சமுதாயத்தைக் காண முற்பட்ட போது சுப்பிரமணிய பாரதியார், சாதி ஒழிப்புக் கொடியை உயர்த்திப் பிடித்தார். சாதிகள் இலையடி என்று குழந்தைகளுக்கு அறிவுறுத்தினார். தடம் மாறிச் சென்ற பெரியவர்களுக்கு எதிராக "வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில் மானுடர் வேற்றுமை இல்லை; எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு யாவர்க்கும் ஒன்றெனக் காணீர்" என்று முரசு கொட்டினார். "சாதிப் பிரிவுகள் செய்வார் அங்கு தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்; நீதிப் பிரிவுகள் செய்வார் அங்கு நித்தமும் சண்டைகள் செய்வார் சாதிக் கொடுமைகள் வேண்டாம்: என்று எச்சரித்தார். "சூத்திரனுக்கொரு நீதி தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி" என்பது சாத்திரமல்ல சதி என்று முழங்கினார். சாதி ஒழிப்பால் மட்டுமே தீண்டாமையை அகற்ற முடியும் என்ற உண்மையைப் பாடிப் புரிய வைத்தார் பாரதி. பாரதி வழிச் சென்ற பாரதிதாசனும் " இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே" என்று மனம் குமுறிச் சாடினார்.

தமிழ் நாட்டில் இயக்க ரீதியாக சாதி வேறுபாட்டை எதிர்த்த ஈ.வெ.ராமசாமி பெரியார் கூட தீண்டாமை ஒழிப்பின் மூலம் சாதி எதிர்ப்பைக்

காட்டினாரேயன்றி சாதி ஒழிப்புக்காகப் போராடவில்லை. ராஜாஜி பெரியாரின் அணுக்க நண்பராகவும், தோன்றாத் துணைவராகவும் இருந்தார். பெரியார் காலத்தில் சாதி வேறுபாடுகள் அதிகரித்தனவேயன்றி கொஞ்சமும் குறையவில்லை.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1) சமூகநீதி இயக்கம்
2) பெண்களின் பாதுகாப்பு சட்டங்கள்
3) முதியோர் திட்டங்கள்

## 14.9 உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்

1. சமூகநீதியை நிலைநாட்ட உலகில் பல இயக்கங்கள் தோன்றி உள்ளன அவற்றில் முக்கியமானது அமெரிக்காவில் தோன்றிய பசுமை கட்சி இயக்கம் 1876 ஆம் ஆண்டு அந்த இயக்கம் மக்களின் சமூக பொருளாதார மனித உரிமைகள் பொது சுகாதாரம் உழவர் போன்றவற்றுக்கு நீதி கேட்டுப் போராடியது இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திய பத்திரிகையும் புத்தகங்களும் வெளியிட்டன.

2. பெண்களின் பாதுகாப்பு சட்டங்கள்
   - சிறப்பு திருமணச் சட்டம் 1954
   - இந்து திருமண சட்டம் 1955
   - இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956
   - குழந்தைத் திருமணச் சட்டம் 1956
   - மகப்பேறு சலுகை சட்டம் 1961

3. முதியோருக்கான திட்டங்கள்
   - முதியோர் ஓய்வூதியம் திட்டம் 1962
   - உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் 1974
   - ஆதரவற்ற விதவைகளுக்கு ஓய்வூதியத் திட்டம் 1975
   - ஆதரவற்ற விவசாய தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய திட்டம் 1981
   - கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் 1986

## 14.10 சுருக்கம்

இன்றைய தமிழ் நாட்டில் எந்தக் கட்சியும் சாதிவாரி இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல. எந்த தலைவரும் சாதி ஒழிப்புக்காகப் போராட முன்வரவில்லை. சாதி ஒழிப்பு கற்பனைக் கோட்டையாகிவிட்டது. சமத்துவ சமுதாயம் சத்தற்ற கரும்புச் சக்கையாகிவிட்டது. ஏமாறுபவர்கள் இருக்கும் வரி ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அறிவியல் மனப்பான்மையோடு, மனிதாபிமான உள்ளத்தோடு, உலகக் கண்ணோட்டத்தோடு உருவாகிவரும் இளைய சமுதாயம் இந்த நீண்ட நெடுங்கால சமூகப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

## 14.11 முக்கிய கருத்துப்படிமங்கள்

சமூக நீதியை நிலைநாட்ட உலகில் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முக்கியமானது அமெரிக்காவில் தோன்றிய பசுமைக் கட்சி இயக்கம்**(Green party Movement)**ஆகும் (1876). அந்த இயக்கம் மக்களின் சமூக-பொருளாதார- மனித உரிமைகள்-பொது சுகாதாரம்-உழவர் நலன் போன்றவற்றுக்கு நீதி கேட்டுப் போராடியது. இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த பத்திரிகையும், புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

## 14.12 தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள்

**குறுவினாக்கள்**

1) சாதி கட்சிகள்

2) இட ஒதுக்கீடு கொள்கை

**நெடுவினாக்கள்**

1) அரசியலமைப்புச் சட்டத்தில் சமூகநீதி

2) தமிழ்நாட்டில் திமுக அரசு மற்றும் அதிமுக அரசு இட ஒதுக்கீடு கொள்கை

## 14.13 மேலும் படிக்க

1. Natarajan.C- Social History of Modern Tamilnadu
2. Subramanian.N-Hhistory of Tamil Nadu 1336 -1984 A.D
3. Devanesan.A -History of Tamil Nadu upto1995 A.D
4. Balasundaram.M - Kamaraj and his secrets of Success